

# தமிழரசு

1-5-1980. 50 காசு






தமிழரசு
மலர் 10 1-5-80 இதழ் 21

**அட்டைப் படக் கருத்துரைகள்:**

இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்!

—திருவள்ளுவர்.

ஒரு நல்ல தொழிலும், போதுமான வருமானமும், எதிர்காலத்துக்குக் கொஞ்சம் மீத்துவைக்க வசதியும், தன் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட அறிவும், பிறருக்கு உதவிடும் எண்ணமும் உடையவன் எவனோ—அவனே உண்மையான மகிழ்ச்சி உள்ளவனாவான்!

—இங்கர்சால்.

கடினமான நிலத்தில் ஏர்கட்டி உழுவோரிடமும், சாலை அமைக்கச் சரளைக்கல் உடைப்போரிடமும் அவன் இருக்கின்றான். அவர்களோடு அவன் மழையில் நனைகின்றான். வெயிலில் உலர்கின்றான். அவனைப் போல நீங்களும் புழுதியில் இறங்கி வாருங்கள். நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து உங்கள் இறைவனைக் கண்டு கொள்ளுங்கள்!

—தாகூர்.

உழைத்து வாழ்பவனே வணங்கத் தக்கவன்; வாழ்த்துக்குரியவன்! அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்.

—பேரறிஞர் அண்ணா.

மனிதன் தானாக உழைத்துப் பழகிக் காய்த்துப் போயிருக்க வேண்டும். இன்ப நுகர்ச்சியிலும், மகிழ்ச்சியிலுமே ஆழ்ந்திருக்கக்கூடாது. அவை உடலுக்கும் நன்மை செய்வதில்லை; அறிவுக்கும் உதவுவதில்லை!

—சாக்ரடீஸ்.

தான் வாழ்வதற்காக மற்றவர்களை உழைக்கச் செய்துவிட்டுத் தான் மட்டும் உழைக்காமல் வாழ முடியும் என்கிற நிலை படைத்த மனிதன் எங்கே இருக்கிறானோ அங்கே அடிமைத்தனம் நிச்சமாய் இருக்கும்.

—டால்ஸ்டாய்.

**உழைப்போம்! உயர்வோம்!**

மனிதன் தானாக நிமிர்ந்து நிற்கவேண்டும். மற்றவர்கள் அவனை அப்படி நிறுத்தி வைக்கக்கூடாது.

—மார்க் ஔரேலியர்

உழைப்பை விற்கலாம்; தவறில்லை. ஆனால் ஆன்மாவை விற்கக்கூடாது; அது மாபெரும் தவறு!

—ரஸ்கின்.

உழைக்கும்போது நீங்கள் உலகின் பண்டைய நெடுங்கனவின் ஒரு பகுதியை நிறைவேற்றியவராவீர்கள். அக்கனவு என்று பிறந்ததோ, அன்றே உங்களுக்குரிய பங்கும் ஒதுக்கி வைக்கப்பட்டுவிட்டது. உழைப்போடு கலந்த வாழ்வே உண்மையான வாழ்வு. இவ்வாறு உழைப்பால் வாழ்வைக் காதலிப்பது வாழ்வின் அந்தரங்க ரகசியங்களை நெருங்கி அறிந்து கொள்வதாகும்!

—கலில் கிப்ரான்.

தொழில் எத்தனைக் கீழ்த்தரமானதானாலும், அதைச் செய்வதில் அவமானம் ஒன்றுமில்லை. சோம்பல் ஒன்றுதான் அவமானம்!

—லியோ டால்ஸ்டாய்.




# வளர்ச்சிப்பணியில் தமிழகம்

"வளர்ச்சித் திட்டங்கள் மூலமே, சமுதாயத்தில் மக்கள் முன்னேற்றமும், நல்வாழ்வும் பெறமுடியும். இத்திட்டங்களில் பொதுமக்கள் காட்டும் ஆர்வமும் ஒத்துழைப்பும் இவற்றை வெற்றி பெறச் செய்கின்றன" என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தமிழ்ப் புத்தாண்டு 13-4-80ஆம் நாளன்று "வளர்ச்சிப்பணி வார விழா" என்ற பெயரில் தமிழக அரசு ஒரு வார விழாவை நடத்தியது. இந்த விழா சென்னையில் மட்டும் அல்லாது தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டது.

விழாக்களில் மக்கள் கலந்து கொண்ட ஆர்வத்தைப் பார்த்தால், விழாவின் அவசியத்தைப் பொதுமக்களும் உணரத் தலைப்பட்டு விட்டார்கள் என்பதை விளக்கியது.

சென்னை இராஜாஜி மண்டபத்தில் தமிழ்ப் புத்தாண்டு நாளான 13-4-80 அன்று "உழைப்புக்கான விழா" வைத் தமிழக அரசு, மக்கள் விழாவாகக் கொண்டாடியது.

**நம்பிக்கையின் மறுமலர்ச்சி**

தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்தார். அவர் பேசுகையில்: "ஏழை எளிய மற்றும் சமுதாயத்தில் தாழ்ந்து கிடக்கும் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையும், மறுமலர்ச்சியும் இந்த வளர்ச்சிப்பணிகள் ஊட்டும். உழைப்புத்தானம் மக்களுக்குப் பேருதவியாக அமையும். வளர்ச்சிப் பணியில் மக்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வார்கள்" என்று குறிப்பிட்டார்.

தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி, கேரள ஆளுநர் மேதகு ஜோதி வெங்கடாசலம், தமிழக ஆளுநரின் ஆலோசகர்-திரு டி. என். லட்சுமி நாராயணன் ஆகியோர் விழாவையொட்டி மரங்களை நட்டனர்.

ஆளுநரின் ஆலோசகர் திரு டி. என். லட்சுமி நாராயணன் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், இந்த ஆண்டு இரண்டாயிரம் மரங்கள் நடப்படும் என்றார்.

விழாவில் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு வெங்கடசுப்பிரமணியம், கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு இராமச்சந்திரன், தமிழ்நாடு புதுவை தேசிய மாணவர் படை



இயக்குநர் திரு. ஆண்டர்சன், கல்வித்துறைச் செயலாளர் திரு இ. சி. பி. பிரபாகர் ஆகியோர் பங்கேற்றனர். விளையாட்டுப் பயிற்சித் துறை இயக்குநர் திரு யு.எஸ். நடராசன் நன்றி கூறினார்.

டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாளை அரிசன மலைவாழ் மக்களின் நல்வாழ்வு நாளாகத் தமிழக அரசு கொண்டாடி விழா எடுத்தது. சென்னை கலைவாணர் அரங்கில் 14-ந் தேதி நடைபெற்ற இந்த விழாவுக்கு தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி மலைவாழ் மக்கள்-அரிசன மக்களுக்குத் தொழில் கருவிகளை வழங்கினார். கலப்பு மண தம்பதியர்களுக்குப் பதக்கமும், மாணவர்களுக்குத் உதவித் தொகையும் வழங்கப்பட்டது. விழாவுக்கு மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் தலைமை வகித்துப் பேசுகையில், தாழ்த்தப்பட்ட மக்கள் நல்வாழ்வுக்காக டாக்டர் அம்பேத்கார் பாடுபட்டவர் என்றார்.

அம்பேத்கார் பிறந்தநாளையொட்டி, மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி ஏழைசமுதாயத்திலுள்ள அரிசன-மலைவாழ் மக்களுடன் சரிசமமாக இருந்து உணவு அருந்தினார். ஆளுநர் அவர்களே தமது கரத்தால் விருந்து படைத்தார். விழாவில் மத்திய நிதியமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன், ஆளுநரின் ஆலோசகர்கள் திரு டி. என். லட்சுமிநாராயணன், ஐ. ஜே. நாயுடு, தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**ஏப்ரல் 15-ந் தேதி கதர் கிராமத் தொழில்கள் தினமாகக்**





கொண்டாடப்பட்டது. கதர்—கிராமத் தொழில்களின் மூலம் தயாரிக்கப்பட்ட சோப்பு, தீப்பெட்டி, உணவுப் பண்டகங்கள் ஆகியவற்றைத் தங்கள் இல்லங்களில் வாங்கி, இத்தொழிலை நம்பி இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பு நல்கிட-உதவிட வேண்டும் என்ற இலட்சியப் பிடிப்போடு விழா துவங்கியது.

சென்னை, இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற விழாவுக்குத் தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு டி. என். லட்சுமிநாராயணன் தலைமை வகித்தார்.

பொருட்காட்சியைத் திறந்து வைத்த தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி பேசுகையில் "இந்தக் கண்காட்சியில் கதர்-கிராமத் தொழில் வளர்ச்சியைக் காண்கிறோம். இந்தியா விவசாய நாடு மட்டுமல்ல ஏராளமான கிராமங்களைக் கொண்டு விளங்கும் நாடாகும். கிராம மக்களின் வாழ்வில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டால் தான் காந்தியின் கனவு நிறைவேறும். 80 சதவீத கிராம மக்களின் குறைகளையும் விரைவாக முழுமையாகப் போக்கிவிட முடியாது" என்று குறிப்பிட்டார்.

விழாவில் தொழிற் துறை ஆணையாளர் திரு கே. பி. கீதாகிருஷ்ணன், தொழிற்துறை செயலாளர் திரு சி. ராமச்சந்திரன் ஆகியோர் பேசினார்கள். கண்காட்சியில் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், கைத்தறி மற்றும் நெசவுத்துறை கதர்-கிராமத் தொழில் வாரியம், பீங்கான் நிறுவனம், ஆகிய துறைகளின் தயாரிப்புப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. இதனைப் பொதுமக்கள் பார்த்துப் பயனடைந்தனர்.

**மரம் நடு விழா**

சென்னை கலைவாணர் அரங்கில் 16-4-80 அன்று மரம் நடு விழா கொண்டாடப்பட்டது. கலைவாணர் அரங்கத்திற்கு முன்புள்ள இடத்தில் வேப்பஞ் செடியை நட்டு, தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி விழாவைத் துவக்கிவைத்தார். ஆளுநர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"மரங்கள் பெருகுவதனால் நாட்டின் வளத்திற்கு ஏற்படக்கூடிய நன்மைகளைக் கருதி ஒவ்வொருவரும் ஒரு செடியை நடுவதுடன், அதனைப் பேணியும் பாதுகாக்க முன்வர வேண்டும். நாடு முழுவதும் மரம் நடுவதை மக்கள் இயக்கமாகவே ஆக்கிவிட வேண்டும். மரம் வெட்டுவதைப் பாப காரியமாகக் கருதுவதுடன் சமூக விரோதச் செயலாகவும் கருத வேண்டும்".

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு எம். எம். இஸ்மாயில் அவர்கள் காடுகளைப் பாதுகாத்து நம்முடைய செல்வத்தை வளர்க்க வேண்டும். காடுகளைப் பாதுகாப்பதன் மூலம், மலேசியா போன்ற வெளிநாடுகளில் அன்னியச் செலாவணி கிடைக்க வழி ஏற்படுகிறது. நாமும் நமது வனத்துறையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்" என்று வற்புறுத்தினார்.

விழாவில் தமிழ்நாடு கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு. இராமச்சந்திரன், வனத்துறைத் தலைவர் திரு ஆர். பசுபதி, கலாசேத்திரா தலைவி திருமதி. ருக்மணி அருண்டேல் ஆகியோர் பேசினர். வனப் பாதுகாப்பு அலுவலர் திரு டி. அச்சையா நன்றி கூறினார்.

**குடும்ப நல்வாழ்வு நாள்**

ஏப்ரல் 17-ஆம் நாள் 'இரத்த தானம்' குடும்பநல்வாழ்வு' தினமாகும். தேசிய குடும்பநல விழாவையொட்டி தமிழக அரசு குடும்பநல நாள் விழா கொண்டாடியது சென்னை, சீரணி அரங்கில் நடைபெற்ற இந்த விழாவுக்குத் தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ஐ.ஜே. நாயுடு தலைமை வகித்தார்.



விழாவை மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி துவக்கி வைத்தார். அவர், பேசுகையில் "குடும்பநலப் பிரச்சாரம், கிராமங்களிலும், சிறிய கிராமங்களிலும் வசிக்கிற ஏழை எளிய மக்களுக்கு இன்னும் சரியாக எட்டவில்லை என்ற குறை இருக்கிறது. குழந்தையை ஆண்டவன்தானே கொடுக்கிறான், அவனே காப்பாற்றுவான் என்ற பாமர எண்ணமும் இன்னமும் கிராமப் பகுதி மக்களிடம் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட மக்களுக்குக் குடும்பநலத்தின் அவசியத்தை வற்புறுத்த வேண்டும்" என்றார்.

ஆளுநரின் ஆலோசகர் திரு ஐ.ஜே. நாயுடு பேசுகையில், "ஒவ்வொரு ஆண்டும் மக்கள் தொகை பெருகிக் கொண்டே போகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதன் மூலம் அரசின் நல்லதிட்டங்கள் பரவலாக அனைவருக்கும் கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. மக்களின் நன்மையை அரசு கருத்தில் கொண்டு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமே தவிர, இதில் கட்டாயத்திற்கு இடம் இல்லை." என்று குறிப்பிட்டார்.

அரசு நல்வாழ்வுத்துறை செயலாளர் திரு பி. முராரி பரிசுகளை வழங்கினார். மருத்துவ, குடும்ப நலத்துறை இயக்குநர் திரு எர்னஸ்ட் ஜே. டேவிட் வரவேற்றார். துணை இயக்குநர் திரு நாமதேவன் நன்றி கூறினார்.

**கிராம ஏற்பு நாள்**

ஏப்ரல் 18-4-'80-ஆம் நாள் 'கிராம ஏற்பு'த் தினமாகும். இதனையொட்டி சென்னை கலைவாணர் அரங்கில் விழா நடைபெற்றது.

விழாவைத் தொடங்கி வைத்த தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி பேசுகையில், ''தமிழ்நாட்டில் குறைந்தது ஆயிரம் கிராமங்களை ஏற்று அவற்றின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வழி வகுக்கப்படும். இக் கிராம ஏற்புத் திட்டத்தில் பல்வேறு சமூகப் பணிகளும் ஆற்றப்படும். கிராம ஏற்புத் திட்டத்தில் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, அக்கிராமத்திற்கு உங்கள் நன்கொடையை அனுப்பலாம்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில் ஆளுநரின் ஆலோசகர் திரு. ஐ. ஜே. நாயுடு பங்கேற்று உரையாற்றினார்.

கிராமங்களைத் தத்து எடுத்து அந்தக் கிராமங்களில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து வரும் சமூக நிறுவனங்கள்,





வங்கிகள், கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள் சார்பில் பலர் பேசினார்கள்.

கிராம வளர்ச்சித்துறைச் செயலாளர் டி. வி. வாசுதேவன் வரவேற்றார். இயக்குநர் திரு. டி. டி. சுந்தரராஜ் நன்றி கூறினார்.

**மருத்துவப் பணி விழா**

தமிழ்ப்புத்தாண்டு நாளான 13-4-80 அன்று தொடங்கிய இவ் வாரவிழா 19-4-80 அன்று முடிவடைந்தது. கடைசி நாளன்று மருத்துவப்பணி விழா.

சென்னையை யொட்டியுள்ள பூந்தமல்லியில் இவ்விழா நடைபெற்றது. தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் கிராமப்புற மக்கள் நலனுக்கான நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தைத் துவக்கி வைத்தார். அவர் பேசுகையில், ''பொதுமக்களிடம் குறிப்பாக, இளம் வயது குழந்தைகளிடம் சுற்றுப்புறச் சுகாதாரத்தை வலியுறுத்தத் தக்க முயற்சிகள் மேற் கொள்ள வேண்டும். கிராம மக்களிடம் ஏற்படும் பல்வேறுநோய்களுக்குத் தனியாக மருத்துவ நிபுணர்கள் தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட மருத்துவ நிபுணர்கள் கிராமப்பகுதிகளுக்குச் சென்று அவர்களுக்கு உதவிட முன்வர வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர் திரு பி. முராரி, மாவட்ட ஆட்சித் தலைவர் சி. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் செயலாளர் எம். வைத்தியலிங்கம் மற்றும் இயக்குநர் திரு கபாலி ஆகியோர் பங்கேற்றனர்.

டாக்டர் மச்சவல்லபன் நன்றி கூறினார்.





# பொதுமக்களிடம் காட்டவேண்டிய மரியாதை

**வே. கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ்.**

**அரசு தலைமைச்செயலாளர்**



அரசு ஊழியர் என்றாலே அதிகார ஆணவம், இரக்கமின்மை, சிடுசிடுப்பு இவற்றின் முழு வடிவந்தான் என்று படித்தவர், படிக்காதவரிடையே பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறது. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் கூட தங்களுடைய முன்னாள் சக ஊழியர்களின் மனப்பான்மை கண்டு மனம் வெதும்புகின்றனர். எனவே, ஒரு ஜனநாயக நாட்டில் பொதுப்பணி என்பது அரசுக்குச் செய்யும் பணி மட்டுமல்ல. குடிமக்களுக்கு ஆற்றும் தொண்டும் ஆகும் என்பதை அவர்கள் உணரும்படி செய்வது இன்றியமையாததாகும்.

ஒரு குடிமகன் தான் அரசுக்கு அளிக்கும் வேண்டுகோள் கவனமாகவும், விருப்பு வெறுப்பின்றியும், விதிமுறைகள், சட்டம் இவற்றையொட்டியும் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அரசு ஊழியரை எதிர்பார்க்கிறார். தம்மை மரியாதையுடனும், நட்புறவோடும் அரசு ஊழியர் நடத்த வேண்டுமென்றும் அவர் எதிர்பார்க்கிறார். அனுபவமிக்க, சிந்தித்துச் செயலாற்றுகின்ற அரசு ஊழியர் ஒருவர் நடைமுறையில் கடைப்பிடிக்கும் வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவை அரசுப் பணியில் புதிதாகச் சேரும் இளைஞர்கள் பொதுமக்களிடம் அன்றாடம் தொடர்பு கொள்ளும் போது அவர்களால் பின்பற்றப் படுவதற்கு வழிகாட்டியாக அமையும்.

**அடிப்படைக் கோட்பாடு**

அரசு ஊழியர் ஒரு குடிமகனிடம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்கிற அடிப்படைக் கோட்பாட்டினைப் பின்வரும் வரிகளில் சுருக்கமாகச் சொல்லி விடலாம்: ''நீங்கள் பொதுமக்களாயிருந்தால் உங்களை எவ்வாறு நடத்த வேண்டுமென்று விரும்புவீர்களோ அவ்வாறே பொதுமக்களை நீங்கள் நடத்துங்கள்''. பொதுமக்களுடைய இடத்தில் நீங்கள் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்த நிலையில் நீங்கள் எவற்றை எதிர்பார்ப்பீர்கள் என்பதையும் நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்வதை அரசு ஊழியர் கனிவுடனும், பணிவுடனும், அமைதியாகவும், அக்கறையுடனும் கேட்க வேண்டுமென்று நீங்கள் விரும்புவீர்கள். உங்களுடைய வேண்டுகோளுக்குச் சரியான பதில் நியாயத்தின் அடிப்படையில் உடனடியாகவும், முழுமையாகவும் கிடைக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்ப்பீர்கள், இல்லையா? அப்படியானால், அதே போன்று நீங்கள் பொதுமக்களுக்கு உரிய மதிப்பை அளித்து அவர்களது பிரச்சினையை அணுகுங்கள். நீங்கள் இன்று நடந்து கொள்ளும் முறையைப் பொறுத்துத் தான் அரசுப் பணி பற்றி பொதுமக்கள் நல்ல கருத்து கொள்ள முடியும் என்பதை நினைவில் நிறுத்தி, அவரது பிரச்சினையைப் பரிவுடனும், கனிவுடனும் கவனியுங்கள். முக்கியமானவராக இருப்பது நல்லதுதான்; ஆனால், நல்லவராக இருப்பது அதனினும் முக்கியமானது.

**தாமதத்தைத் தவிர்க்கவும்**

அரசு ஊழியர்கள் சிலருக்குப் பணிச்சுமை அதிகமாயுள்ளது, அதனால் தாமதத்தைத் தவிர்க்க இயலாது என்பது பொது மக்களுக்குத் தெரிந்துதான் உள்ளது. ஆனாலும்.....



(அ) குடிமகன் மனு கொடுத்து நீண்ட காலம் கழித்து அந்த மனுவைக் கவனிக்க தாம் உரிய அதிகாரி அல்லவன்றோ, மனுதாரர் தனது மனுவுடன் முக்கியமான ஆவணங்களைக் கொடுக்கத் தவறி விட்டார் என்றோ (இதனை உடனடியாகக் கவனித்திருக்க வேண்டும்) அதிகாரி ஒருவர் தனக்குக் கடிதம் எழுதுவதும்;

(ஆ) குறிப்பிட்ட நேரத்தில் தம்மை வந்து காணும்படி அதிகாரி தமக்குக் கடிதம் எழுதியிருந்தும், மனுதாரர் குறிப்பிட்ட அந்த நேரத்தில் வந்திருந்த போதிலும், நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவல நிலை ஏற்படுவதும்;

(இ) அலுவலக நேரத்தில் அதிகாரி நீண்ட நேரமாகத் தமது இருக்கையில் இல்லை என்பதும் அவ்வாறு அவர் இல்லாத சமயத்தில் அது பற்றித் தனக்குப் பதிலாக யாரை அணுகலாம் என்பது குறித்து எவ்விதத் தகவலும் அளித்துச் செல்லவில்லை என்பதும்;

(ஈ) அதிகாரி அவரை கவுண்டரில் அல்லது அலுவலக அறையில் காக்க வைத்து விட்டு அவரைக் கவனிக்காமலேயே தொடர்ந்து தமது கோப்பின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருப்பதும் அல்லது வேறு அலுவலருடன் அரட்டை அடித்துக் கொண்டிருப்பதும் ஏன் என்று அவருக்குப் புரியவில்லை!

## இடைக்காலத் தகவல்

ஒரு மனு அல்லது வேண்டுகோள் மீது நீங்கள் இன்னொருவரின் கருத்தைப் பெற வேண்டியுள்ளதால் அதைக் கவனித்து இறுதி முடிவெடுக்க உங்களால் முடியவில்லையென்றால், அப்போது அந்த விண்ணப்பத்தை அல்லது வேண்டுகோளை விரைந்து ஒரு தடவை பார்க்கவாவது செய்து, அது உங்கள் அதிகார வரம்பிற்குள் வருகிறதா என்பதையும் தேவையான ஆவணங்கள் அனைத்தும் அத்துடன் அனுப்பப்பட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்து அதுபற்றிய முடிவைப் பெறுவதற்கு அவர் ஏன் கொஞ்ச காலம் காத்திருக்க வேண்டுமென்பதை அவருக்குத் தெரிவியுங்கள்.



இத்தகைய 'இடைக்காலத் தகவல்' அளிப்பதால், உங்களுக்கு பெருந் தொல்லை ஏற்பட்டு விடாது. அது குறித்து நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதையே புலப்படுத்தும். அதனால், மனுதாரர் உங்களுக்கு நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்புவது மிச்சமாவதோடு அவரது தொல்லையும் மிச்சமாகும்.



## வழிகாட்டுதல்

ஒன்றைக் கவனிக்க அரசின். எந்தத் துறையில், யார், எது குறித்து அதிகாரம் பெற்றவர் என்பதை எல்லாம் சாதாரணக் குடிமகன் ஒருவர் தெரிந்து வைத்திருப்பார் என்று நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது. அது தொடர்பான அதிகாரி யார், அதற்குரிய வழிமுறை யாது என்பதைக் கண்டறிய அவருக்கு நீங்கள் உடனடியாக உதவ வேண்டும். உரிய அதிகாரி யார் என்பதைக் கண்டறிய உங்கள் அலுவலக வராந்தாக்களில் அலைந்து திரியும் பொதுமக்களுக்கு நீங்கள் உதவுங்கள். ஒரு குடிமகனுக்குக் கடிதம் எழுதும்போது உங்கள் தொலைபேசி எண், உங்கள் அறை எண், இவற்றைக் குறித்து அனுப்புங்கள். உங்களை நேரில் வந்து காணும்படி அவருக்கு எழுதியிருந்தால், உங்களை எப்படி வந்து சந்திக்கலாம் என்பதையும் அவருக்கு எடுத்துக் கூறுங்கள்.




## கடிதம் எழுதும் முறை

சாதாரணக் குடிமகன் ஒருவருக்குப் புரியும் வகையில் எளிய முறையில் தெளிவாகப் பேசப் பழகிக் கொள்ளுங்கள். பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் கடிதங்களை எழுதுங்கள். நுட்பமான சொற்றொடர்களை அவருக்கு விளக்கிக் கூறுங்கள். சுருக்க எழுத்துக்களைச் சாதாரணமாகப் பயன்படுத்தும் இடங்களில் மட்டுமே பயன்படுத்துங்கள். நீங்கள் எழுதும் கடிதங்கள் குடிமகன் உங்களைக் கேட்கிற எல்லா கேள்விகளுக்கும் பதில் அளிப்பவையாகவும், அல்லது உங்கள் முடிவிற்கான இன்றியமையாதத் தகவலைத் தருபவையாகவும் விரிவாக அமைய வேண்டும். நீங்கள் தரும் விளக்கங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும் அமைய வேண்டும். குறிப்பாக, ஒருவருக்குப் பாதகமான அல்லது அவருடைய உரிமைகளை ஆக்கிரமிக்கும் முடிவு உங்கள் கடிதத்தில் அடங்கியிருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது, நீங்கள் எழுதும் கடிதத்தில் கடுமையான சொற்களைப் பயன்படுத்தவேண்டியதில்லை. நிலைமையைத் தெளிவு படுத்தும் வகையில் அக்கடிதத்தை எழுத வேண்டும். ''உங்கள் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது'' என்று எழுதாதீர்கள். பதிலாக, ''கீழ்க்காணும்.............. காரணங்களை முன்னிட்டு உங்கள் வேண்டுகோளை ஏற்க இயலாத நிலையில் உள்ளேன் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று எழுதுங்கள். என்றாலும், சட்டப்படி பின்பற்ற வேண்டிய நியதிகளையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

## சிக்கலான பேர்வழிகள்

நீங்கள் இயன்றவரையில் நட்புறவோடும் பிறரை மதித்தும் நடப்பவராயிருந்தாலும், சில சமயங்களில் சிக்கலான பேர்வழி ஒருவரை,' அதாவது வசை பாடி அச்சுறுத்துகிற ஒருவரை நீங்கள் எதிர்பாராது சந்திக்க நேரலாம். அப்போது நீங்கள் பொறுமையையும் நிதானத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். அத்தகையோரிடம், உள்ள நிலையை எடுத்துக் கூறி அவரிடம் சரியான முறையில் நடந்து கொள்ளுங்கள். அவருக்குக் கடிதம் எழுதும் போதும் அவ்வாறே உள்ள நிலையை எடுத்துக் கூறி நிலைமையை விளக்குங்கள். அவர் தவறிழைத்தாலும் நீங்கள் பொறுமையாக இருங்கள். இத்தகைய சமயங்களில் உங்கள் அலுவலக நண்பர் ஒருவரைத் துணைக்கு அழைத்துக் கொள்வது நல்லது. முடிவில் நீங்களே தவறு செய்திருந்தால், அதற்காக மன்னிப்புக் கேளுங்கள். ஏனென்றால், ''யானைக்கும் அடி சறுக்கும்'' என்பதால், எவரும் தவறு செய்வது இயல்புதான்.

அரசிற்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவு நீடிக்க வேண்டுமானால், அந்த அரசின் சட்ட திட்டங்களாலும், ஆணைகளாலும் அந்த நல்லுறவை ஏற்படுத்திவிட முடியாது; அந்த அரசின் அங்கமாயுள்ள அரசு ஊழியர்கள் பொதுமக்களிடம் மரியாதையுடனும், கனிவோடும், பரிவோடும், நட்புறவோடும் நடந்து கொண்டால் மட்டுமே அந்த நல்லுறவை நிலைநாட்ட முடியும். இந்த நோக்கத்தை ஈடேற்றவேண்டுமானால், ஒரு ஜனநாயக நாட்டில் பொதுப்பணி என்பது அந்நாட்டில் பொதுமக்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய தொண்டு என்பதை அரசு ஊழியர்கள் மனத்தில் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.



# தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புப் பகுதிகளிலேயே பொதுநிறுவனக் கட்டடங்கள்!



தாழ்த்தப்பட்டோர் நல்வாழ்விற்கென மத்திய அரசும், மாநில அரசும் எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அரசு செயல்படுத்தும் எல்லா திட்டங்களின்போது அதனால் விளைகின்ற பயன் ஓரளவு நலிவுற்ற மக்களுக்குக் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களை அடைய வேண்டும் என்று எண்ணப்படுகிறது.

தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் பகுதிகளின் நிலையை உயர்த்தவும், பொது வாழ்க்கை அமைப்புக்குள் தாழ்த்தப்பட்டோரைக் கொண்டு வரவும் தமிழ்நாடு அரசு ஆணையொன்று பிறப்பித்துள்ளது.

இதன்படி வருங்காலத்தில் கிராமப் புறங்களில் கூட்டுறவுச் சங்கங்கள், ஆரம்ப, உயர்தரப் பள்ளிகள், பால்வாடிகள், கால்நடை மருத்துவமனைகள், நியாயவிலைக் கடைகள், காவல் நிலையங்கள் போன்ற பொது அலுவலகங்கள், பொது நிறுவனங்கள் திறக்கப்படும்போது அவை கூடியவரை தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பின் பக்கமே இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், மேலும், பொது அத்தியாவசியத் தேவைகளான குடி தண்ணீர், மின்சாரம், கழிவு நீர் வடிகால் போன்றவை கிராமத்தின் தாழ்த்தப்பட்டோர் பகுதிகளை இணைப்பதாக இருக்க வேண்டும்.



அதற்கேற்ப, இனி கிராமப் புறங்களில் திறக்கப்பட இருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள், ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகள், பால்வாடிகள், மருத்துவ மனைகள், மருந்தகங்கள், நியாய விலைக் கடைகள் போன்றவை கூடியவரை தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பின் பக்கமே அமைக்கப்பட வேண்டும்.

தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் இதற்கான இடவசதி இல்லையென்றால், அமைக்கப்படும் இந்த நிறுவனங்கள், நிலையங்கள் தாழ்த்தப்பட்டோர் எளிதில் சென்று வரக்கூடிய இடங்களில் அருகாமையில் அமையுமாறு அந்தந்தத் துறைகள் இடங்களைத் தேர்வு செய்ய வேண்டும். சமயக் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட இடங்களைப் பொது நிறுவனங்களுக்கான கட்டடங்கள் அமைக்கலாம்.

பல்வேறு துறைகளின் அலுவலர்கள் உள்ளூர் ஜாதி இந்துக்கள் துணையின்றித் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பைப் பார்வையிட்டு அவர்களின் குறைகளைக் களைய வகை செய்ய வேண்டும்.

தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புக்களைப் பார்வையிடுவது குறித்தான விவரங்களை டைரிகளில் பதிவு செய்ய வேண்டும். இந்த டைரிகள் மேலதிகாரிகளால் தகுந்த இடைவெளிகளில் ஆய்வு செய்யப்படும்.

## ஓர் அஞ்சல்தலையின் விலை

# ரூ. 21,00,000

ஒரு செண்ட் பிரிட்டிஷ் கயானா அஞ்சல் தலை ஒன்று பத்தாண்டுகளுக்கு முன்னர் விற்பனையாயிற்று. அப்பொழுது அதன் விலை எவ்வளவு தெரியுமா? 2,80,000 பவுன். அதாவது 21,00,000 ரூபாய்!

தற்போது, அதே அஞ்சல்தலை 8,50,000 பவுனுக்கு விற்பனையாகி, ஒரு புதிய சாதனையை உருவாக்கியுள்ளது. உலகத்திலேயே, ஓர் அஞ்சல் தலைக்குக் கொடுக்கப்பட்ட அதிக விலை இதுதான்!

முன் காலத்தில், பிரிட்டிஷ் கயானாவின் அஞ்சல் தலைகளை, வாட்டர்லோ அண்ட் சன்ஸ் என்ற பிரிட்டிஷ் அச்சகத்தார் அச்சிட்டு வந்தனர். 1856இல் ஒரு சமயம் கியானாவில் ஸ்டாம்புகளின் இருப்பு தீர்ந்துவிட்டது. பிரிட்டனிலிருந்து புதிய ஸ்டாம்புகள் இன்னும் வரவில்லை. எனவே, அஞ்சல் அதிகாரி அவசரமாக 4 செண்ட் ஸ்டாம்புகளை உள்ளூரிலேயே அச்சிட்டார்.

காலனியின் முத்திரையான ஒரு கப்பலும், 'நாம் கொடுக்கிறோம், பதிலுக்கு நாம் கோருகிறோம்' என்ற கயானா நாட்டின் அதிகாரப் பூர்வமான உறுதிமொழியும் அதில் அச்சிடப்பட்டிருந்தன. மஜெண்டா காகிதத்தில் கருப்பு மையில் இந்த அஞ்சல் தலைகள் அச்சிடப்பட்டன; ஆனால், இவற்றின் தரம் அவ்வளவு நன்றாக அமையாததால் போலி ஸ்டாம்புகள் வெளியாவதைத் தடுப்பதற்காக, விற்பனைக்கு முன், இந்த ஸ்டாம்புகள் ஒவ்வொன்றிலும் கையெழுத்திட்டுக் கொடுக்குமாறு, தபால் அதிகாரிகளை, போஸ்ட் மாஸ்டர் கேட்டுக் கொண்டார்.

பதினேழு ஆண்டுகளுக்குப் பிறகு, பழைய அஞ்சல் தலைகளைச் சேமிக்க அப்போதுதான் துவங்கியிருந்த கியானா இளைஞன் எல்வெர்னன் வான் என்பவன் தமது குடும்பத்துப் பழங்காலத்துக் கடிதங்களில் ஈ.டி.வைட் என்ற கையெழுத்துடன் 'ஒரு செண்ட்' ஸ்டாம்பு ஒன்று இருப்பதைக் கண்டான்.

1856-ல் வெளியிடப்பட்ட 4 செண்ட் ஸ்டாம்புகளில் ஒன்று, 'ஒரு செண்ட்' விலையுடன் தவறாக அச்சாகியிருந்தது. அந்த அதிசய ஸ்டாம்பும் அவனிடம் இருந்தது அந்த இளைஞனுக்குத் தெரியாது. அந்த ஸ்டாம்பைத் தண்ணீரில் நனைத்துச் சுத்தம் செய்து தனது ஆல்பத்தில் மற்ற ஸ்டாம்புகளுடன் வைத்துக் கொண்டான். அந்த ஸ்டாம்பு, எட்டுக்கோண வடிவில் அமைந்திருந்தது; அத்துடன் மிகவும் அழுக்கேறியும் இருந்தது.

அதே ஊரில் ஸ்டாம்பு திரட்டுவதில் உற்சாகம் கொண்ட என்.ஆர். மெக்கின்னன் என்பவரை இந்த ஸ்டாம்பை 6 ஷில்லிங் (ரூ.5.40)க்கு வாங்க இசையச் செய்தான் அந்த இளைஞன். இவ்வளவு குறைந்த தொகைக்குத் தான் விற்ற இந்த அஞ்சல்தலை, ஒரு நாள் உலகிலேயே விலை மதிப்புமிக்க அஞ்சல்தலையாக விளங்கும் என்று, அவன் கனவில்கூட நினைத்திருக்க மாட்டான்!



## உறுதி ஏற்போம்!

ஒவ்வொரு பொழுதையும் கடப்பதற்குப் போராடிக்
கொண்டிருக்கும் மக்கள் இன்னமும் நம் நாட்டில்
உள்ளனர். எனவே சமுதாயத்தில் இப்படி உள்ள ஏற்றத்
தாழ்வுகளை அகற்றுவதற்கு எந்தவிதமான
ஊசலாட்டமும் இல்லாமல் பணியாற்ற முதலில் நாம்
உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்!

— பிரதமர் இந்திரா காந்தி





# உழவுப் பழமொழிகள்

டாக்டர் ந. வீ. செயராமன்,
இணைப் பேராசிரியர்,
தமிழ்த் துறைத் தலைவர்,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், கோவை-3.

இலக்கியங்கள், வாழ்க்கையை உள்ளவாறு எடுத்துக் காட்டும் காலக் கண்ணாடிகள் என்பர் ஒரு சாரார். பெரும்பாலும், வாழ்க்கை எம்முறையில் அமையவேண்டும் என்பதையே இலட்சிய நோக்கில் இலக்கியங்கள் வடித்துக் காட்டுகின்றன என்பர் பிறிதொரு சாரார்.

பழமொழிகளும் கூட இலக்கியங்களே. பழமொழிகள் என வரும் பெயரே இவ்விலக்கிய வகையில் தொன்மையைப் புலப்படுத்தும். தொல்காப்பியர், அடிவரையில்லா இலக்கிய வகை எனக் கூறும் ஆறனுள் ஒன்றாகிய 'முது சொல்' என்னும் பெயரால் 'பழமொழி' என்னும் இவ்விலக்கிய வகையைக் குறிப்பிட்டுள்ளார் என்பது அறியத்தக்கது. 'முதுசொல்' என்பதை 'முதுமொழி' என்னும் பெயராலும் கூறுவர்.

ஒரு நாட்டின் குறிப்பிட்ட காலத்திய பழக்க வழக்கங்கள், பண்பாடு, காதல், வீரம், வாழ்வியல் கோட்பாடுகள் முதலிய அனைத்தையும் அளந்தறிந்தற்கேற்ற அளவைக் கருவியாகவும் பழமொழிகள் பயன்படுகின்றன.

சமுதாயவியல், தத்துவவியல், மெய்ப்பொருளியல், மொழியியல், பொருளியல், வரலாற்றியல், தாவரவியல், விலங்கியல், வேதியியல், பொறியியல், வேளாண்மையியல் முதலாய இன்றைய அறிவியல் கூறுகள் அனைத்தையும் உள்ளடக்கிப் பழமொழிகள் எழுந்துள்ளன. தமிழில் வழங்கும் வேளாண்பழமொழிகளின் துணைகொண்டு, வேளாண் அறிவியல் வரலாற்றையும், வேளாண் சமுதாய வரலாற்றையும் நாம் எளிதில் அறியலாம்.

உழவின் சிறப்பும் உழுவோர் உயர்வும் குறித்தெழுந்த பழமொழிகள் பலவுள. 'மேழிச்செல்வம் கோழை படாது' என்பது அவற்றுள் ஒன்று. ஏரினால் உழுதுண்டு வாழும் வாழ்க்கைச் செல்வம் 'கோழைபடாது' என் அறுதியிட்டுரைக்கும்போது அதன் பின்னணியில் அமைந்த அனுபவக் கருத்து நமக்குத் தெற்றெனப் புலனாகும்.

இக்கருத்தையே 'உழவின் மிகுந்த ஊதியம் இல்லை!' 'தொழுதூண் சுவை இனிது' எனவரும் பழமொழிகளும் வலியுறுத்துகின்றன. 'வீட்டுக்கு அலங்காரம் வேளாண்மை' என்பது வேளாண் தொழிலால் வீடும், அதனால் நாடும் பெற்றிருந்த சிறப்பு நிலைகளைச் சீர்மையுடன் சுட்டுகின்றன.

இலமென்று சோம்பி இருப்போர்க்கு வள்ளுவம் போலப் பழமொழியும் வழிகாட்டுகின்றது. 'பூமிதிருத்தி உண்' என்பது இலமென்று சோம்பி இருப்பார்க்குரிய வாழ்வுரை.





### தினையும் வினையும்

பண்ணோடு இயைந்த பாடல் போல மண்ணோடு இயைந்த மாண்புமிகு வாழ்வினர் பண்டைத்தமிழர். 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற உயரிய கோட்பாட்டினர். பெருமைக்கும் சிறுமைக்கும், தத்தம் கருத்தையே கட்டளைக் கல்லாகக் கொண்டவர். தாம்தாம் செய்த இனியனவும் இன்னாதனவுமே நமக்கும் பின்னர் விளையும் என்னும் விதியியல் கோட்பாட்டில் தமிழர் பெருநம்பிக்கை கொண்டிருந்தனர். அதனால் வேளாண் தொழிலோடு விதியியலை இணைத்த பழமொழிகள் அவர்தம் வாழ்வில் முகிழ்த்தன. 'தினை விதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான்' என்பது இம்முறையில் எழுந்தது.

''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' 'விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா' என வரும் பழமொழிகளும் மேற்கண்ட கருத்தினவேயாகும்.

விளைக்கின்ற பயிரின் விளைவு அவரவர் தம் வினைப்பயனுக்கேற்ப இருக்கும். அறஞ்செய்தவன் நிலத்தில் அலகு பெருகும். அறஞ்செய்யான் நிலத்தில் விளையுள் குன்றும். ஒருவனது அறிவியல்பை அறியத் துணை செய்யும் ஆடியாக விளங்குவது அவன் வயலின் விளைவோம்.

'தமிழ்ச் சமுதாயத்தின் இந்த மன இயல்பு பண்ணிய பயிரிலே அவரவர் புண்ணியம் தெரியும்' என்னும் பழமொழியாக மலர்ந்துள்ளது.

பேறுபெற்றவன் நிலம் பொன்னாகப்பூத்துக்குலுங்கும், 'அதிர்ஷ்டவான் மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும்' என்ற பழமொழி இதனை விளக்கும்.

### ஏரோட்டம்

நிலத்தைப் பண்படுத்த ஏர்கள் பயன்படுத்தப்பட்டன. ஏர்கள் நிலத்தைப் பண்படுத்துங்கால்,

வரிசையாக ஏர்கள் பூட்டி ஒன்றன்பின் ஒன்றாகப் செலுத்திப் பண்படுத்துவர். முதலில் உள்ள ஏர் சென்றவழியே பின்னுள்ள ஏர்களும் சென்று உழுதலே சிறந்த முறை என்பதைத் தெரிவிக்கும் வகையில் 'முன் ஏர் போனவழிப் பின் ஏர்' என்னும் பழமொழி எழுந்தது. சமுதாயவியற்கண்ணும் இப்பழமொழி பொருந்தும். முன்னோர் நெறியையே பின்னோர் போற்றுதல் இதனால் புலனாகும்.

'உழுவானுக்கு ஏற்ற கொழு, ஊராருக்கு ஏற்றதொழு' என்னும் பழமொழியினால் கொழும் என்னும் உறுப்பு உழுக்கருவியாகிய ஏரில் சிறப்புறப் பொருந்தியிருத்தல் வேண்டும் என்று விளக்கப்பட்டது. நிலச் சொந்தக்காரர்கள் சொந்தமான ஏர் ஓட்டுதலேயன்றிக் கூலிக்கு ஆள் வைத்தும் ஏரோட்டினர் என்பதும், இவ்வாட்களுக்குக் கூலியாகக் குடிப்பதற்குக் கூழ் தரப்பட்டது என்பதும் 'அடித்த ஏருக்கும் குடித்த கூழுக்கும் சரி' எனவரும் பழமொழியால் பெறப்படும்.

**மாரியும் பட்டமும்**

பண்டைக் காலத்தில் வேளாண்மை, பெரும்பாலும் மழையை நம்பியே இருந்தது. பருவமழை பொய்த்துவிட்டால் அனைத்துவகை உழவுச் செயல்களும் செயலற்று நின்று விடும். உழவுச் செயல்களுக்குக் கைம்மாறு வேண்டாத கடப்பாட்டு மாரியே பெரிதும் வேண்டப்பட்டது. இன்றியமையாமையைக் கருத்தில் கொண்டு 'மாரியல்லது காரியமில்லை' என்ற பழமொழி எழுந்தது.

பருவகாலத்தில் பயிர் செய்தாலே பயனைத்தரும் என்று உணர்ந்த தமிழ்ச் சமுதாயம் 'பருவத்தே பயிர் செய்', 'ஆடிப்பட்டம் தேடி விதை', 'ஆடிவிதை தேடிப்போடு' என்ற பழமொழிகளை வழங்கியது.

பக்குவப்படுத்தப்பட்ட நிலத்தில் பயிர் விளைவு சிறக்கிறது. நிலத்தைப் பண்படுத்த பல சால் உழவு செய்தல் வேண்டும் என்பதை விளக்கும் வகையில், 'அதிர அடித்தால் உதிர விளையும்' என்ற பழமொழி எழுந்தது. உதிர விளைதல் என்பது விளையுங்காலத்தில் நெல் மணிகளின் மிகுதியைச் சுட்டும். அதிர அடித்தல் என்பது பல சால் உழவு ஓட்டுதலைக் குறிப்பிடும்.

**களை நீக்கல்**

'நெல்லுக்குப் பாய்கிற நீர் புல்லுக்கும் பாயும்' என்றும்,



'கோரை குடியைக் கெடுக்கும்' என்றும் களைமொழிகள் எழுந்துள. புல், கோரை என்பவை இங்கு களைகளாக உள்ளவை. களை, விளை நிலத்தை விளைவு குன்றச் செய்து, அதனால் குடிமக்களின் வாழ்க்கைக்கும் ஊறு விளைக்கிறது.

எனவே, களையாகிய காரணத்தையும் குடி கெடுத்தல் என்னும் காரியத்தையும் இணைத்துப் பழமொழி உருவாயிற்று.

எரு இடுதலே பயிர் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதைக் குறிப்பிடும் வகையில் 'குப்பையின்றிப் பயிர் விளையாது' என்னும் பழமொழி எழுந்துள்ளது. குப்பையென்பது எருவைச் சுட்டும்.

பயிரின் இயல்பு, அமைப்பு, ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால நுட்பவுணர்வோடு அதன் வளர்ச்சியைக் கணித்தறிந்தனர் தமிழர். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' 'அருங்காய் பிஞ்சிலே தெரியும்' 'வளருங்காய் பிஞ்சிலே தெரியும்' எனவரும் பழமொழிகள் இம்முறையிலெழுந்தவைகளாகும்.

எவ்வகையிலும் பாழாகாமல் தடுப்பதற்கு ஒவ்வொரு கட்டத்திலும் தக்கப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செம்மையாகச் செய்தல் பயிர்ப்பாதுகாப்புக்கு மிக முக்கிய நடவடிக்கையாகும்.

உரிய காலத்தில் நிலத்திற்குச் சென்று பயிரைப் பேணிக் காக்காவிடில் பயிர் விளையுள் கெட்டுப் பாழாகும் என்னும் கருத்தை,

## பப்பயின் தயாரிப்பது எப்படி?

'கன்று நட்ட 5 மாதங்களில் பப்பாளி பூக்கத் தொடங்கி, 10 முதல் 11 மாதங்களில் முழுவதுமாகப் பழுக்க ஆரம்பிக்கும்.

பப்பயின் எடுப்பதற்கு, முக்கால் பங்கு முற்றிய காய்களைத் தேர்ந்தெடுத்து, கூர்மையான எவர்சில்வர் பிளேடினால் 1 மில்லி மீட்டர் ஆழத்திற்கு நீளவாக்கில் கீறி விடவேண்டும். இவ்விதம் ஒரு பழத்தின் மீது 3 செ. மீ. இடைவெளி விட்டு 4 இடத்தில் கீறிவிடவேண்டும். பின்னர் கீறிவிட்ட இடத்திலிருந்து வெளிவரும் பால் போன்ற சாற்றினை மரத்தின் தண்டுப்பாகத்தில் பொருத்தப்பட்ட அலுமினியத் தட்டுகளில் சேகரிக்க வேண்டும்.

இவ்வாறு காய்களில் கீறி விடுவதற்கு அதிகாலை நேரம் மிகவும் ஏற்றது.

இந்தச் சாற்றினை அலுமினியத் தட்டுகளிலிருந்து சுரண்டி எடுத்து சூரிய ஒளியில் உலர்த்தி, தூளாக்கி 'பட்டர் பேப்பர்' உறைகளில் சேமித்து வைக்கவேண்டும். மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு முறையாக மூன்று நான்கு தடவைகள் திரும்பத் திரும்பச் செய்யலாம்.

சாற்றை செயற்கை முறையில் சூட்டுப்பெட்டிகளில் வைத்தும் உலர வைக்கலாம். சாறு அலுமினியத் தட்டுகளிலே மட்டுமே சேகரிக்கப்பட வேண்டும்.

ஏனெனில், அலுமினியத்தில் மட்டுமே சாற்றில் உள்ள என்சைம் செயல் பிரியாது. எனவே மற்ற உலோகக் கருவிகளோ, தட்டுகளோ காய்களைக் கீறி விடுவதற்கோ, சாற்றினைச் சேகரிப்பதற்கோ பயன் படுத்தப்படக் கூடாது.

தகவல்:

**டாக்டர் வி. என். மாதவ ராவ்**
**பேராசிரியர்,**
**தோட்டக் கலைத்துறை,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை-3.**






'மாடு மேய்க்காமல் கெட்டது, பயிர் பார்க்காமல் கெட்டது' எனவரும் பழமொழி இயம்புகின்றது.

'உழுத எருதானாலும் ஒரு முடி நாற்றைத் தின்ன வொட்டார்' எனவரும் பழமொழியும் கூட, பயிர்ப்பாதுகாப்புச் சிறப்பை விளக்கியே எழுந்தது.

நெல் வரப்புக்களில் எல்லாம் கரும்பு முதலாகிய பயிர்களை விளைத்து வேலியாக்கிப் பயிரைக் காத்தனர், என்பது போன்ற செய்திகளை புலவர் பெருமக்கள் தங்கள் காப்பியங்களில் கற்பனைச் சுவையோடு பாடுவர். பயிருக்கு வேலிகட்டி, கால்நடை முதலியவற்றின் தாக்குதலிலிருந்து காத்தலும் பயிர்ப்பாதுகாப்பில் இன்றியமையாததே.

'இனம் இனத்தைக் காக்கும்; வேலி பயிரைக் காக்கும்' என்றும், 'வேலிக்குப் போட்ட முள், காலுக்கு வினையாயிற்று' என்றும் வரும் பழமொழிகள் பயிர்க்காப்பினை விளக்கியெழுந்தனவாகும்.

முற்றிய கதிர்கள் தலைசாய்த்துக் கிடக்கும். முற்றாத கதிர்கள் வானோக்கி வணங்காமுடியாய் உயர்ந்திருக்கும். நிறைந்த அறிவு பெற்ற சான்றோர் அடங்கியிருப்பர் என்றும், கல்வி கேள்விச் செல்வத்தால் நிரம்பாதவர் தலை தூக்கித் திரிவர் என்றும் உலகியல்பும் கதிர்நிலையும் கவினுறச் சுட்டப்படுகின்றன. 'காய்ந்த கொம்பு பணியும்' என்றும், 'தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி' என்றும் வரும் பழமொழிகள் இக்கருத்தை விளக்குகின்றது.

**விதைப்பவனும் அறுப்பவனும்**

உழுது விதைக்க வேண்டிய காலத்தில் ஊர் சுற்றிவிட்டு இருந்தவன், அறுக்கின்ற காலத்தில் பயன் கிட்டவில்லையே என்று ஏங்கிக் கிடக்க நேரும். உழுது விதைத்துக் காத்தவனுக்குப் பலன் உண்டு.

'பட்டவர்க்கே உண்டு பலன்' என்ற புதுமொழி இதனைச் சுட்டும்.

'உழுகின்ற காலத்தில் ஊர் சுற்றிவிட்டு அறுக்கின்ற காலத்தில் அரிவாள் எடுத்துக்கொண்டு புறப்பட்டால்!' என்றும் 'உழுகிற நாளில் ஊருக்குப் போய் அறுக்கின்ற நாளில் அரிவாள் கொண்டுவந்தாற்போல', என்றும், 'உழுகிற நாளில் ஊருக்குப் போனால் அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை' என்றும் வரும் பழமொழிகள் மூன்றும் ஒரே கருத்தைச் சிற்சில மாறுபாடுகளுடன் விளக்குபவைகளாகும்.

உழுகின்ற நாள் முதல் அறுக்கின்ற காலம் வரை பயிரைப் பாதுகாத்தற்குரியன் உழவன்தன் கடமையைச் செவ்வனே செய்யாவிடின் பலன் கிட்டாது என்றும் இப்பழமொழிகள் கருத்துரைக்கின்றன.

நல்லவரிடமிருந்து சமுதாயப் பதராகிய பயினில் சொல் பாராட்டுவாரைப் பிரித்தல் இன்றியமையாதது. அதுபோல நெல்லோடு கலந்த பதரையும் பிரித்தெடுக்க வேண்டும். நெல்லையும் பதரையும் பிரிக்க இயற்கை வழங்கும் காற்றையே கருவியாகக் கொண்டனர் தமிழக வேளாண் மக்கள். காற்று மிகுந்திருக்கும் வேளையில் நெல்லைத் தூற்றிப் பதரைத் தனியே பிரித்தெடுத்தலை ஒருவகை உழவு செயல் முறையாகப் போற்றினர். பதரின் கலப்பால் நெல்லின் தன்மையும் தரமும் சிறக்காது. இதனை விளக்க 'நூற்றைக் கலப்பால் நெல்லின் தன்மையும் கெடுத்தது குறுணி' எனவரும் பழமொழியைக் காணலாம். நூறு என்பது நெல்லின் மிகுதியளவையும், குறுணியென்பது பதரின் குறையளவையும் குறித்து நின்றன. மிகுதியான நெல்லில் குறைந்த அளவு பதர் சேர்ந்தாலும் பாழ்! 'ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்' என வரும் பழமொழியும் இவண் ஒப்புநோக்கத்தக்கது.

நெல்லையும் பதரையும் பிரித்தெடுப்பதற்குக் காற்றுக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைக் 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள், கதவுள்ள போதே சாத்திக்கொள்' என்றும் 'அலைமோதும்போது தலைமுழுகு, காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்றும் 'அடிக்கும் காற்றிலே எடுத்துத் தூற்றவேண்டும்' என்றும் வரும் பழமொழிகள் விளக்குகின்றன.

**நெல் சேமிப்பு**

அறுவடைக்குப் பின்னர், அறுத்துத் தூற்றியெடுத்த நெல்லைக் குதிரில் போட்டுச் சேமித்து வைப்பர். குதிர் என்பதற்குக் களஞ்சியம், பத்தாயம், குலுக்கை என்றெல்லாம் வட்டார வேறுபாடுகள் வழங்குகின்றன. சேமித்து வைக்கும் நெல்லிலும் பூச்சித்தாக்குதல் இன்றிக் காக்க வேண்டும். அந்துப்பூச்சி, சேமித்த நெல்லில் சேர்ந்துவிட்டால் நெல்லின் பெரும்பகுதியைத் தின்று உமியாக்கிப் பாழாக்கிவிடும்.

'ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்துப் பூச்சி' எனவரும் பழமொழி சேமித்த நெல்லும் ஏற்படும் அந்துப்பூச்சித் தாக்குதலை விளக்குகின்றது. இத்தகைய தாக்குதலுக்கு இடமின்றி நெல்லைச் சேமிக்கவேண்டிய இன்றியமையாமையும் இதனால் குறிப்பாக உணர்த்தப்பட்டது.

இங்ஙனம், வேளாண் தொழிலின் பல்வகைக் கோணங்களையும் விளக்குவனவாகப் பழமொழிகள் நம் பல தமிழகத்திலே எழுந்துள்ளன. இவற்றின் மூலமாகப் பண்டைய சமுதாயத்தில் பின்பற்றப்பட்ட வேளாண் செயல் முறைகளையும், வேளாண் பெரு மக்களின் கூர்த்த மதி நலத்தையும் நாம் உணர முடிகின்றது.

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்





ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**
  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.
- **கிராம ஏற்புத் திட்டம்:**
  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.
- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**
  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.
- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**
  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.


மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**




மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111

# மதுரச் சர்க்கரை

'நிலத்துக்கு அணி என்ப நெல்லும் கரும்பும்' - என்கிறது நான் மணிக்கடிகை,

இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிடும் மாவட்டங்களிலே ஒன்று செங்கற்பட்டு மாவட்டம். ஏறத்தாழ நெல்லும், கரும்பும் இங்கே சரிக்குச் சரியாக விளைவிக்கப்படுகின்றன என்றே கூறலாம்.

நெல் விளைச்சலுக்கு ஏற்ற மண் வாகுதான் என்றாலும், கரும்புக்குத் தக்கவாறும் நிலம் திருத்தியமைக்கப்பட்டு வியத்தகு விளைச்சல் காணப்படுகிறது. அதிலும், குறிப்பிட்டுச் சொல்லத் தக்க விதத்திலே அமைந்திருக்கிறது, படாளத்தில் உள்ள 'மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை'யின் சுற்றுப் பகுதிகள்.

சர்க்கரை ஆலை அமைப்பதென்பது, கரும்பு விளையும் பகுதியாக இருக்குமானால் தான் இலாபகரமாக இயங்க முடியும். ஆனால் இந்தச் சர்க்கரை ஆலை அப்படி அமைக்கப்பட்டதல்ல.

1955-ல், இந்த ஆலை இங்கே அமைக்கப்பட்டபோது சுற்றுப்புற நிலங்கள் நெல்விளை கழனியாகத்தான் இருந்தனவே தவிர, கரும்பென்றால், பொங்கலுக்கு யாராவது, எங்கிருந்தாவது வாங்கிவந்தால் தான் உண்டு என்கிற நிலைதான் இருந்தது! அப்படிப்பட்ட இடத்தில் அரும்பாடுபட்டுக் கரும்பு விளைச்சல் கண்ட பிறகுதான் 1961 ஜூலை 6ஆம் தேதியன்று இந்த ஆலை தனது கோலாகலமான சர்க்கரை உற்பத்தியினைத் தொடங்கியது.

### கரும்பு விளைச்சல்

இப்போது, மதுராந்தகம் சர்க்கரை ஆலைக்கு அருகிலுள்ள 32 ஏக்கர் நிலத்தில், ஆலை சார்பிலே கரும்பு விளைவிக்கப்படுகிறது. இந்நிலத்தில், ஒரு ஏக்கருக்கு 50 முதல் 60 டன் வரை கரும்பு விளைகிறது.

''திருவாரூர் சர்க்கரை ஆலைச் சுற்றுப்புறக் கரும்பு விளைச்சல் இதைவிட அதிகம் போலத் தெரிகிறதே?'' என்றபோது, கரும்புப் பண்ணையை நிர்வகிக்கும் அதிகாரியொருவர் கூறியதாவது:

''நானும் அங்கே கொஞ்சகாலம் பணியாற்றிவிட்டு இங்கே வந்தவன்தான். திருவாரூரில் விளைச்சல் சிறிது அதிகம் தான். காரணம் அங்கே காவிரிப்பாசனம் இருக்கிறது. இங்கே நீர்ப்பாசன வசதி இல்லை. பாலாறு தான் இருக்கிறது பக்கத்தில். அதில் தண்ணீர் வருமென்று நம்பி விளைச்சல் காணமுடியாது. கடலோரம் வேறு. ஆகவே, மதுராந்தகம் சர்க்கரை ஆலைக் கரும்புப் பண்ணைக்காக என்று ஒரு ராட்சதக் கிணறு வெட்டியிருக்கிறோம். அந்தக் கிணற்று நீர்தான் ஆலைக்கும் பயன்படுகிறது; கரும்பு விளைச்சலுக்கும் உபயோகமாகிறது. இன்னும் ஒரு கிணறோ; இரண்டு கிணறோ வெட்டினால் நாங்களும் திருவாரூருக்கு மேல் கரும்பு விளைச்சல் காணமுடியும். அப்படிக் கிணறு வெட்ட நாங்கள் வருவாய்த் துறையில் அனுமதிபெற வேண்டியிருக்கிறது. பல வருஷமாகக் கேட்டும் வருகிறோம். அனுமதி கிட்டவில்லை.''

### சாறின் மகத்துவம்

கரும்பின் வயது 10 மாதம் அல்லது ஒரு வருஷம்.



கருப்பஞ்சாறு சர்க்கரைத் தயாரிப்புக்கு முக்கியமானதாகப் பயன்பட்டாலும்-இந்தச் சாறு ஆஸ்த்துமாவுக்கும், இரைப்பு நோய், காமாலை, இருதய நோய்க்கும் கூட மருந்துபோலப் பயன்படுகிறது. ஒவ்வொரு நாளும் தொடர்ந்து கருப்பஞ் சாறு குடித்துவந்தால், அந்நோய்கள் அண்டாதாம்!


''ஒரு கிளாஸ் கருப்பஞ்சாறு ஒரு கிளாஸ் ஆப்பிள் சாறுக்கு மேல் சத்துள்ளது'' என்றே கூறுகிறார்கள் அவர்கள்.

சுற்றுப்பகுதி விவசாயிகளுக்கு கரும்பு விளைச்சலில் ஆர்வம் உண்டாக்கும் பொருட்டு உரக் கடன், கரணைக் கடன் போன்ற பலவகைக் கடன்கள் அளிக்கப் படுகின்றன.

கரும்பு விளைச்சலை மிகுதிப் படுத்திடத் தகுந்தவாறு 'ஸ்பெஷல் மிக்சர்' என்றொரு உரம் மதுராந்தகம் சர்க்கரை ஆலையிலேயே தயாரிக்கப்படுகிறது. அங்கீகாரம் பெற்ற இந்த உரம் பலன் மிக்கதாகவே இருக்கிறது.

கரும்பின் இடையே, ஊடுபயிராக டி.9 உளுந்து, அஞ்சுகம் பச்சைப் பயிறு, வெங்காயம், கொத்துமல்லி ஆகியவை போடப் படுகின்றன. கரும்புக்கு அனுசரணையாகக் கழனியைச்சுற்றிலும் வாழை போடப்பட்டிருக்கிறது. இப்பகுதி மண்ணில் எல்லாமே நல்லபடி விளைகின்றன.

வெப்பக் காற்றுப் பாதுகாப்புச் சிகிச்சை முறை மூலம் கரும்புத் தண்டுக் கரணையைப் பிடிக்கும் தண்டு நோய், செவ்வழுகல்நோய், மருதாம்புக் குன்றல் நோய் ஆகியவை தவிர்க்கப்படுகின்றன.






கரும்பு நடவில் பிரித்து நடும் நூதன முறை ஒன்று இந்த ஆலை பண்ணையில் கடைப்பிடிக்கப் படுகிறது. இந்தச் சீரிய முறை நடவுக்கு 'மதுராந்தகம் நடவு முறை' என்றே பெயரிட்டிருக்கிறார்கள்.

## 'இயர்விக்'

கரும்புப் பயிரைப் பாதிக்கின்ற குருத்துப்புழு, நுனிக் குருத்துப் புழு, தண்டுப் புழு ஆகியவற்றை அழிப்பதற்காக இந்த ஆலையின் பூச்சி இயலார்கள் 'இயர்விக்' என்றொரு பூச்சியையே கண்டு பிடித்துள்ளார்கள், மதுராந்தகம் சர்க்கரை ஆலையில்!

இதுபற்றிய விவரம் சுவையானது!

'பிலாப்பூர் என்கிற கிராமத்தில், கரும்பைச் சீரழிக்கின்ற தண்டுப்புழு எண்ணிக்கையைக் கணக்கெடுக்கச் சென்றிருக்கிறார்கள் ஒரு சமயம். அப்போது ஒரு வேடிக்கையைப் பார்த்திருக்கிறார் அரு. சோலையப்பன் என்கிற பூச்சி இயலார்.

முன்பக்கம் தலையும், பின்பக்கம் கத்தரிபோல் அமைப்பும் உள்ள 'இயர்விக்' என்கிற எதிரிப் பூச்சியொன்று ஒரு தண்டுப் புழுவைப் பிடித்து வதம் பண்ணிக் கொண்டிருந்திருக்கிறது. அந்தப் பூச்சியைப்பிடித்துவந்து தண்டுப் புழுவோடு விட்டு ஆராய்ச்சிசெய்திருக்கிறார் அவர்.

அந்த 'இயர்விக்' எதிரிப் பூச்சியைக் கொண்டே தண்டுப் புழுவை அழித்துவிடமுடியும் என்பது தெரிந்திருக்கிறது.

அவ்வளவுதான்—

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பூச்சி இயல் துறைக்கு இந்த ஆராய்ச்சி முறை பற்றி முறைப்படி எழுதியிருக்கிறார் அரு. சோலையப்பன். அவர்களும் பரிசோதித்த பின் அங்கீகாரம் கிடைத்துவிட்டிருக்கிறது.

ஐவகை 'இயர்விக்' பூச்சிகள் இருக்கின்றன. எல்லாம் ஆராயப்பட்டிருக்கின்றன.

இப்போது, டிரைகோகிரம்மா என்ற ஒட்டுண்ணிப் பூச்சியோடு இந்த 'இயர்விக்' எதிர்ப்பூச்சியும் விருத்தி செய்யப்பட்டு கரும்புப் பயிர் பாதுகாக்கப்படுகிறது மதுராந்தகத்தில்!

## ஆலைக்குள் அழகுதமிழ்!

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நுழைவோமானால், சர்க்கரை மணம் நம்மை வரவேற்கும். சற்று உள்ளே நுழைந்தால் தமிழ்மணம் கமழும் நான்கு வரிப் பலகை ஒன்று தென்படுகிறது. அதில்—

'மறைவாக நமக்குள்ளே
பழங்கதைகள் சொல்வதிலோர்
மகிமை இல்லை!
திறமான ஆலையெனில்
பிறஆலை இதைப்போற்றிப்
புகழ வேண்டும்!'

—என்று எழுதப்பட்டிருக்கிறது.




24 மணி நேரமும் ஷிஃப்ட் முறையில் வேலை நடக்கும் இந்த ஆலையில் தொழிலாளர்கள் சுறுசுறுப்போடு பணியாற்றுகிறார்கள். இரவு பகல் வேலையாதலால் பெண் தொழிலாளர் கிடையாது.

1250 டன் கரும்பில், ஆயிரம் சர்க்கரை மூட்டை தயாராகிறது.

இப்படிப் பட்ட சர்க்கரை ஆலைகள் இந்தியா முழுவதும் 300 இருக்கின்றன. தமிழகத்தில் மட்டும் 20 இருக்கிறது.

## விலை ஏற்றம் ஏன்?

''ஆலை இப்படி இரவு பகலா இயங்கியும், சர்க்கரைத் தட்டுப்பாடும் விலையேற்றமும் ஏன் உண்டாகிறது?'' என்று மதுராந்தகம் சர்க்கரை ஆலையின் தனி அலுவலர் திரு. கிருஷ்ணசாமியைக் கேட்டோம்.

''கரும்பு விளைச்சல் குறைகிற போது, சர்க்கரை உற்பத்தியும் குறைகிறது. இதுதான் தட்டுப்பாட்டிற்கும் விலையேற்றத்திற்கும் காரணம். உப்பு, புளி, மிளகாய் விலையெல்லாம் ஏறும் போது இதன் விலை மட்டும் ஏறாமலிருக்கும் என்று எதிர் பார்ப்பதே தவறு. சர்க்கரை விலை ஏற்றப்பட்டால்தான் கரும்பின் விலையை விவசாயிக்கு ஏற்றித்தரமுடியும். அப்போதுதான் கரும்பைப் பயிர் செய்வதில் விவசாயிகளும் ஆர்வத்தோடு ஈடுபடுவார்கள். கரும்பு விளைச்சல் அதிகரிக்கும்போது, சர்க்கரை விலை, தன்னால் குறைந்துவிடும்!'' என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார் அவர்.

## காகித ஆலை

கருப்பஞ்சக்கையை மூலாதாரமாகக் கொண்டுதான் காகிதம் செய்யப்படுகிறது.

ஆகவே, அடுத்த ஆண்டில் இரண்டரைக் கோடிருபாய்திட்ட மதிப்பீட்டில் மதுராந்தகம் சர்க்கரை ஆலையை ஒட்டினாற் போல காகித ஆலை ஒன்றும் நிறுவப்படவிருக்கிறது.

இதன் திட்ட மதிப்பீடு இரண்டரைக் கோடி ரூபாய்!

மத்திய அரசு இதற்காக 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

அமையப்போகிற காகிதஆலையானது நாளொன்றுக்கு 12-டன், ஆண்டொன்றுக்குச் சுமார் 4,500 டன் காகிதம் உற்பத்தி செய்வதாக இருக்கும்.

சர்க்கரை ஆலையில் உள்ள ஆயிரம் தொழிலாளர்களில்600 பேர் தான் நிரந்தரத் தொழிலாளர்கள். 400 பேர் தற்காலிகம். ஆனால், காகித ஆலையில் அனைவரும் நிரந்தரத் தொழிலாளர்களாகவே அமர்த்தப்படுவார்கள்.

## தொழிலாளர் நலன்

இது ஒரு கூட்டுறவு ஆலையே தவிர, தனியார் ஆலையல்ல.




இங்கு பணியாற்றும் தற்காலிகத் தொழிலாளர்கள் உட்பட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்கப்படுகிறது.

குடியிருப்பு வசதி, மருத்துவ வசதி, பாத அணி வழங்கல், சீருடை அளித்தல், கல்விச் சுற்றுலா, கூட்டுறவு நாணயச் சங்கங்கள், கூட்டுறவுப் பண்டகசாலை, குறைந்தவிலையில்உணவு -சிற்றுண்டி, வேலை நேரத்தில் இலவசத் தேனீர், சைக்கிள் வழங்கல், கூட்டுறவுப் பால் பண்ணை, கோழி வளர்க்கக் கடனுதவி, தொழிலாளர் குழந்தைகளுக்கான ஆரம்பப் பள்ளிகள் -உயர்நிலைப் பள்ளிகள், இலவசத் திரைப்படம், டெலிவிஷன், குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்துகொண்டால் தனிச் சலுகை, இறந்த தொழிலாளியின் குடும்பத்தார் ஒருவருக்கு உடனடியாக ஆலையில் வேலை, இறந்தவரின் இறுதிச்சடங்கிற்கு உதவிப்பணம், வேலையிலிருந்து ஓய்வு பெற்றால் சேரவேண்டிய. தொகை உடனடியாக வழங்கப்படல் முதலான பல்வேறு சலுகைகள் இங்கு பணியாற்றும் தொழிலாளர்களுக்கு உண்டு!

விளையாட்டுத் திடல், பிள்ளையார் கோயில் எல்லாம் கூட ஆலைக்குள்ளேயே அமைக்கப் பட்டிருக்கின்றன.

சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்த 'மதுரக் கலையரங்கம்' என்றொன்று கட்டப்பட்டிருக்கிறது.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை தொடர்பான அவ்வப்போதைய விவரங்களை உலகுக்கறிவித்திட - 'மதுரக் கரும்பு' என்கிற திங்களிதழ் ஒன்றும் நடத்தப்படுகிறது!

## கிராம ஏற்பு

ஆலைக்கு அண்மையில் உள்ள பழையனூர் கிராமத்தை, ஆலை நிர்வாகம் கிராம ஏற்புத் திட்டத்தின்கீழ் தத்து எடுத்துக் கொண்டிருக்கிறது.

அக்கிராமத்திலுள்ள பள்ளிகளெல்லாம் இப்போது புதுப் பொலிவோடு விளங்குகின்றன. மாணவ - மாணவிகளுக்கெல்லாம் சீருடை வழங்கப்பட்டிருக்கிறது.

குடிநீர்த் திட்டமொன்று இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கிராம மக்களின் பொருளாதார நலன் கருதி, மாடுகள் வாங்கக் கடன் அளிக்கப்படுகிறது.

—பி.எல்.ஆர்.

# புதுவகைப் பேருந்து




பேருந்துகளில் இடம் கிடைப்பது என்பது பெரும்பாடாகி விடுகிறது. அதுவும் காலை-மாலை வேளைகளில் சொல்லவும் வேண்டுமோ?

சென்னை நகரிலுள்ள நெரிசலைப் போக்கப் பல்லவன் போக்குவரத்துக் கழகம் பல வழி முறைகளைக் கையாண்டு, மக்களுக்குப் பேருந்துகளை அதிகம் விட்டு வசதிகளைச் செய்துத் தருகிறது.

பயணிகளின் வசதிக்காகப் பல்லவன் போக்குவரத்துக் கழகம், மூன்று வ்ழிகள் கொண்ட-நவீன வசதிகள் கொண்ட பெரிய பேருந்துகளை வாங்கியிருக்கிறது.

பயணிகளின் நெருக்கடியைச் சமாளிப்பதற்காகப் பல்லவன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டில்மேலும் 280 பேருந்துகளைவிட முடிவு செய்துள்ளது. சென்னை-சைதாப்பேட்டை-பாரிமுனை, அடையாறு - பாரிமுனை, அண்ணாநகர் - பாரிமுனை ஆகிய மூன்று வழித்தடங்களில் இந்தப் பேருந்துகள் ஓடும். ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குக் குறைந்த விலையில் இந்தப் பேருந்துகளை வழங்கியிருக்கின்றன.



இந்தப் புதிய பேருந்துகள் சாதாரணப் பேருந்துகளைவிட நீளத்தில் 3 அடி அதிகமாக இருக்கும். பேருந்தின் நீளம் மூன்று அடி அதிகரித்த போதிலும் ஓட்டுவதிலோ அல்லது திருப்புவதிலோ எந்தவிதச் சிரமங்கள் இதனால் இருக்காது. மொத்தம் 48 இருக்கைகள் உள்ள இந்தப் பேருந்துகளின் குறுக்கே கம்பித் தடுப்புப் போடப்பட்டு இரண்டாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

ஓட்டுநர் இருக்கையிலிருந்து 18 இருக்கைகள் வரையிலும் பெண்களுக்குத் தனியாக இருக்கைகள் ஒதுக்கப் பட்டுள்ளன. பெண்கள் இருக்கைகள் முடிந்ததும், அங்குத் தடுக்கப்பட்டுள்ள கம்பி வேலிக்குப் பின்புறம் உள்ள 28 இருக்கைகளும் ஆண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பேருந்துகளில் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் மூன்று வழிகள் இருப்பதால், ஒவ்வொரு 'ஸ்டாப்பிங்'கிலும் மிகவும் துரிதமாகப் பயணிகள் ஏறவும் இறங்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பேருந்துகள் ஒவ்வொன்றிற்கும் மூன்று நடத்துனர்கள் இருப்பார்கள். நின்றுகொண்டிருக்கும் பயணிகள்கூட நெருக்கி அடித்துக் கொண்டு சிரமத்துடன் நிற்க வேண்டிய நிலை ஏற்படாத வகையில், இந்தப் பேருந்துகளின் உடல் கட்டுமான அமைப்புகள் அமைந்துள்ளன.

சென்னையில் மட்டும் 24 இலட்சம் பயணிகள் தினசரி பயணம் செய்கிறார்கள். பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகள் ஒரு நாளைக்கு 3,75,000 கிலோ மீட்டர் தூரம் ஓடுகின்றன. பல்லவன் போக்குவரத்தில் 1,682 பேருந்துகள் உள்ளன. 4,800 ஓட்டுநர்கள் இதில் பணியாற்றுகிறார்கள். புதிதாக வரும் பேருந்துகள் மூலம் பயணிகளுக்கு மேலும் அதிக வசதிகளைச் செய்து கொடுப்பதாக இந்த ஏற்பாடு இருக்கும்.

—ஆனந்தன்

# திருவேற்காடு திருக்கோயில்

ஆலயம் ஆற்றும் அரும் பணிகள்:



வல்லி நகர், கும்பநகர், ஜோதி நகர் என்று புகழப்படும் ஊர் எது?

அடிக்கடி 1008 சங்காபிஷேகம் நடக்கின்ற ஆலயம் எது?

வெளிநாட்டினரும் வேண்டிக் கொண்டு, நன்கொடைகளை அனுப்புகின்ற தமிழ்நாட்டுக் கோயில் எது?

இந்த வினாக்களுக்கு எல்லாம் விடையாக நிற்பது திருவேற்காட்டுத் திருக்கோயில்! ஆம். அருள்திரு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலே அது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ளது திருவேற்காடு. சென்னையிலிருந்து வடமேற்கில், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் சுமார் 16 கிலோ மீட்டர் தொலைவில்-வேலப்பன் சாவடி என்னும் கிராமத்திலிருந்து வடக்கே 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது இது.

**தொண்டை வளநாட்டில்....**

தொண்டை நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் 'திருவேற்காடு' சிறப்புடையதாகும். திருஞான சம்பந்தர் தமது தேவாரத் திருப்பதிகத்தில் இத்திருத்தலத்தை மிகவும் புகழ்ந்து பாடியுள்ளார்.

தொண்டை வளநாட்டு முப்பத்திரண்டு சிவத் தலங்களுள் ஒன்றான திருவேற்காட்டில், அன்னை கருமாரி அகிலத்தில் அளவிலாப் பெருங்கருணையால் பற்பல அற்புதங்களைப் புரிந்து வருகிறாள்.

**தங்க ரதமும், வெள்ளி ரதமும்:**

திருவேற்காட்டுத் திருக்கோயில் சீரும் சிறப்பும் பெற உழைத்தவர்களில் முதல்வராக விளங்கியவர் தவத்திரு சுவாமி இராமதாசர் அவர்கள்.

இவரது பெருமுயற்சியின் காரணமாக தங்கரதமும், வெள்ளி ரதமும் உருவாக்குகின்ற பணியில் கோயில் நிருவாகத்தினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதில் ரூ. 13 இலட்சம் செலவில் தங்க ரதம் செய்யப்பட்டு வருகிறது. வெள்ளிரதம் ரூபாய் 7,60,000 செலவில் உருவாகிக் கொண்டிருக்கிறது.

'வடவேதாரண்யம்' என்று புகழப்படும் இத்தலத்துக்கு, அன்னை கருமாரியைத் தரிசிக்க ஆயிரமாயிரம் அன்பர்கள் வந்த வண்ணமிருக்கின்றார்கள். செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் மக்கள் வெள்ளம் அலைமோதுவதைப் பார்க்கலாம். இந்நாட்களில் மட்டும் ஒரு நாளைக்கு 50 ஆயிரம் பேர் வருகின்றனர். எல்லாப் பகுதிகளிலிருந்தும் சுமார் 45-க்கும் மேற்பட்ட பேருந்துகள் விடப்படுகின்றன. கோயிலைச் சுற்றி ஆடவர், பெண்டிர், குழந்தைகள் இப்படி நெற்றியில் திருநீறணிந்து அன்பு வெள்ளம் பெருகிட அன்னையை வழிபடுகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

**20 ஆயிரம் மாலைகள் !**

திருக்கோயில் காலை 4 மணி முதல் இரவு 10 மணி வரையும், ஞாயிற்றுக்கிழமை மட்டும் காலை 4 மணி முதல் இரவு 12 மணி வரையும் இடைவேளை இல்லாமல் திறந்திருக்கிறது.

ஒரு நாளக்கு 15 அபிஷேகங்கள் நடக்கின்றன. இக்கோயிலில் மட்டுமே 1008 சங்கு அபிஷேகம் அவ்வப்போது நடக்கின்றது.

> அன்பு எப்போதும் தொல்லைக்கு ஆளாகிறது. ஆனால், அதற்காக அது வருந்துவதில்லை; பழிக்குப் பழி வாங்குவதில்லை.
>
> —காந்தியடிகள்

மற்ற கோயில்களில் இது அபூர்வமாக நடக்கின்றது. ஞாயிற்றுக்கிழமை மட்டும் அம்மனுக்கு மலர் மாலைகள் மலைபோலக் குவிந்து விடுவதைக் காணலாம். அன்று சுமார் 20 ஆயிரம் மாலைகள் வரை வருமாம்!

அம்மன் சந்நிதி, மெருகேற்றப்பட்ட கருங்கற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கோயிலினுள்ளே நிறுவப்பட்ட ஆறுமுக சுவாமியின் 'கண்ணாடி மாளிகை' கண் கொள்ளாக் காட்சியாகும்.

## திருக்கோயிலின் உடகோயில்கள்!

இத் திருக்கோயிலிலிருந்து மேற்கே 1 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள அருள்மிகு வேற்கண்ணியம்மை சமேத வேதபுரீஸ்வரர் ஆலயம் பழமையும், பைந்தமிழ்ப் பாக்களால் பாடப்பெற்ற சிறப்பும் வாய்ந்தது. அகத்தியருக்குத் திருமணக் கோலத்துடன் காட்சியளித்த சிறப்பு வாய்ந்த வடவேதாரண்யம் இந்தலமேயாகும்.

திருவேற்காட்டிலிருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பூண்டி அருள்மிகு ஊன்றீஸ்வரர் ஆலயமும் இத்திருக்கோயிலுடன் இணைந்த சிறப்புமிக்க ஆலயமாகும்.


சமய சம்பந்தப்பட்ட வெளியீடுகளும் கோயிலில் விற்பனை செய்யப்படுகின்றது. திருப்பாவை, திருவெம்பாவை நூல்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அவை பள்ளிகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

## அன்பு இல்லம்:

ஆலயங்கள் வழிபடும் தலங்களாக மட்டுமல்லாமல், அவற்றின் மூலம் வருகின்ற வருமானத்தில் நல்ல பல காரியங்களும் நாளும் நடந்து வருகின்றன. அன்பர்கள் வாரி வழங்குகின்ற காணிக்கைகள் மூலம் பல சமுதாயப் பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

அதோ! அந்தச் சின்ன அரும்புகள் சிரித்த முகத்துடன் இருப்பதையும், கோயில் ஆரவாரத்தையும் மறந்து வெளியே துள்ளி ஆடிக்கொண்டிருப்பதையும், கல்வியிலே கண்ணும் கருத்துமாய் இருந்து பயில்வதையும் பார்க்கும்போது, நாளையத் தலைமுறைகளான இன்றைய குழந்தைகளைத் தயார்ப்படுத்தும் பாசறையாக விளங்குகிறது அந்த இல்லம் என்று தோன்றுகிறது. அதுதான், அன்னையின் பெயரால் விளங்கிடும் 'அன்பு இல்லம்!'

துவக்கப்பள்ளி, மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் இந்த இல்லத்திலே பராமரிக்கப்படுகிறார்கள். ஆண்டுதோறும் இம்மாணவர்களுக்கு இரண்டு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன. புத்தகங்கள், உணவு எல்லாம் இலவசமாக வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வியோடு



உலா வரும் திருத்தேர்

அவர்களுக்குச் சமயக் கல்வியும் சேர்த்துப் புகட்டப்புடுகிறது. தற்போது 'அன்பு இல்லம்' ரூபாய் 12,200 செலவில் பழுது பார்க்கப்பட இருக்கிறது. எங்கேயோ பிறந்து, வளர்ந்த இந்தக் குழந்தைகள் பெற்றோர்களை இழந்த நிலையில், உறவினர்களின் அரவணைப்பின்றி அல்லலுற்ற சூழ்நிலையில், 'உங்களுக்கு அன்னையும் பிதாவுமாக நானிருக்கிறேன்' என்று அன்னை கருமாரி அபயம் தந்து அருளுகின்ற வகையில் இந்த 'அன்பு இல்லம்' அன்பு மழை பொழிந்து வருகின்றது.

## சாந்தி நிகேதனம்:

ஜீவரத்தினம்மாள் அறக்கட்டளையின் சார்பில் துவக்கப் பள்ளி ஒன்றும், உயர்நிலைப் பள்ளி ஒன்றும் இங்கே இருக்கின்றது. இந்த இரண்டு பள்ளிகளிலும் சுமார் 1,000 மாணவர்கள் பயிலுகின்றனர். 'அருள்தேவி கருமாரியம்மன் தேவஸ்தானம் ஜீவரத்தினம்மாள் உயர்நிலைப் பள்ளி' நிருவாகத்தின் சார்பில் கோபி சின்னசாமி நாயுடு துவக்கப்பள்ளி 1973-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

பசுமையான வயல்வெளிகளும், மரஞ்செடி கொடிகள் சூழ்ந்த இயற்கை எழிலுக்கும் மத்தியில் இப்பள்ளி அமைந்துள்ளது. இங்குப் பயிலும் பிள்ளைகளில் 75 சதவிகிதம் பேர் பக்கத்தில் உள்ள செங்கற் சூளைகளில் வேலைசெய்பவர்களின் குழந்தைகளும், ஏழை விவசாயிகளின் குழந்தைகளுமாவர்.

மாணவர்கள் கல்வி கற்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் உள்ள இப்பள்ளியை, செங்கை மாவட்டத்தின் 'சாந்தி நிகேதன' மாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மேல்நிலைப் பள்ளி:

'தேவி கருமாரி அம்மன் தேவஸ்தானம் திருமதி ஜீவரத்தினம்மாள் மேல் நிலைப் பள்ளி' 1961-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பண்டைய குருகுலம் போன்று ஆசிரியரும் மாணவரும் ஒழுங்குடன் இருக்கவும், இங்கே இலவச மாணவர் இல்லம் ஒன்று பள்ளி துவங்கிய நாள் முதல் இருந்து வருகின்றது.

ஏட்டுக் கல்வியுடன் இம்மாணவர்களுக்குச் சமயக் கல்வியும், பசியின் வாட்டம் போக்கும் உழவியலும் கற்பிக்கப்படுகின்றது. உழவியல், இம்மாணவர்களுக்கு ஓர் கைத்தொழிலாகும். அதற்கென 3 ஏக்கர் நிலமும், ஒரு நீர்ப்பொறியும், கிணறும் உள்ளன.

அறிவியலில் நன்கு பயிற்சிபெற 'அறிவியல் கழகம்' ஒன்றும் பள்ளியில் செயல்பட்டு வருகிறது. 'செய்து கற்றல்' என்பதற்கேற்ப தாமாகவே அறிவியல் துணைக் கருவிகள் பலவற்றைச் செய்து கற்கின்றனர், இம்மாணவர்கள்!

## முத்தமிழ் வளர்ந்திட...

முத்தமிழிலும் தம் திறமையை வெளிப்படுத்திட இங்கே 'கருமாரி மாணவர் இலக்கிய மன்றம்' ஒன்று உள்ளது. இங்கு திங்கள் தோறும் சிறப்புக் கூட்டம் நடக்கின்றது. இதனால் பேச்சாற்றல் வளர்கிறது. திங்கள்தோறும் 'மலர்' என்றும் கையெழுத்துப் பத்திரிகை ஒன்றும் மலர்கின்றது. அதனால் எழுத்தாற்றல் வளர்கின்றது.

சுமார் 7,000 நூல்கள் உள்ள சிறந்த நூலகம் ஒன்றும், மாணவர்களின் பொது அறிவை வளர்க்கத் துணைபுரிகின்றது.

இங்கு ஒரு கல்லூரி ஒன்றை அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கல்லூரி அமைக்கப்பட்டால், சுற்று வட்டாரத்தில் கல்லூரி இல்லாத குறையை இது நீக்கும்.



அன்பு இல்லத்தில் அரும்புகள்....

## மான்கள் சரணாலயம்:

தற்போது இக்கோயிலில், நான்கு மான்கள் துள்ளித் திரிகின்றன. கோயிலுக்கு வரும் அன்பர்கள் பலர், மான்களை அன்பளிப்பாகத் தருவதாகக் கூறி வருகிறார்களாம், ஆகையால் ஆலயத்துக்கு அருகே உள்ள தோப்பில் ரூ. 15,000 செலவில் ஒரு 'மான்கள் சரணாலயம்' அமைப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

## சீரான சிறுகுடில்கள்:

பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் அன்பர்கள் தங்கியிருந்து அம்மனைத் தரிசிக்க, சிறு குடில்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது, பத்து ரூபாய் கட்டணத்தில் ஐந்து குடில்கள் உள்ளன. பெருகிவரும் அன்பர் கூட்டத்தைச் சமாளிக்க மேற்கொண்டு 108 அறைகள் கொண்ட விடுதி அமைக்கத் திட்டமிட்டு, அவை துரிதமாகக் கட்டப்பட்டு வருகின்றன. அவற்றுள் இப்போது ரூ. 8 இலட்சம் செலவில் 36 அறைகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

திருக்கோயிலில் பணிபுரியும் அலுவலர்கள், துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோருக்கு வீடுகள் தரவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

அம்மனை வேண்டிக் கொண்டு வருவோர் பொங்கலிட வசதியாக ரூ. 1.50 இலட்சம் செலவில் ஒரு நிரந்தர பெரிய தகரக் கொட்டகை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது.

திருவேற்காடு என்னும் இச்சிற்றூர், இப்போதுதான் நகரியமாக்கப்பட்டு வருகிறது. இங்குத் தண்ணீர் வசதி இல்லை. ரூபாய் 2.50 இலட்சம் செலவில் குடிநீர் வசதி திட்டமொன்று தீட்டப்பட்டு, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்பட்டு வருகின்றது. வேலை முடியுந்தறுவாயில் இருக்கின்றது. கோலடி என்னும் கிராமத்திலிருந்து, ராட்சசக் கிணறு மூலம் இந்தத் தண்ணீர் வசதி, மிக விரைவில் கிடைக்கப் போகிறது!

## கவின்மிகு நகரமாக...

இன்னொரு அருமையான திட்டமும் தீட்டப்பட்டுள்ளது. உதவி ஆணையரும், செயல் அலுவலருமான திரு ந. நாகராசன் அவர்கள் அதனை விளக்கினார்:

''கருமாரியம்மன் திருக்கோயிலை மையமாக வைத்து, ரூ. 80 இலட்சம் செலவில், கிராமிய சூழ்நிலை கெடாத வகையில், இவ்வூரை நகரியமாக்கும் திட்டம் ஒன்றை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் (MMDA) பரிசீலனைக்கு அனுப்பியுள்ளோம். அது அங்கீகாரம் பெற்றுவிட்டால், திருவேற்காடு பெரிய அளவில் கவின்மிகு நகரமாகக் காட்சியளிக்கும்''.


## வெளிநாட்டினரும் வருகின்றனர்!


இத்திருக்கோயிலுக்குத் தமிழர் மட்டுமா வருகின்றனர்?

இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் அன்பர்கள் வந்தவண்ணமிருக்கின்றனர். அதுமட்டுமல்ல, ஆண்டுதோறும் வழக்கமாக இரண்டு அமெரிக்கர்கள் இத்தலத்துக்கு வருகை தருகின்றனரென்றால், அம்மன் மீது அவர்களுக்கிருக்கும் ஆழ்ந்த அன்புதான் என்னே!

இங்கே எல்லாத் திறத்தாரும் வந்து அம்மன் அருளைப் பெறுகின்றனர். முகம்மதியர்கள்கூட இங்கே வரத் தவறுவதில்லை. அவர்கள் இங்கே அம்மனுக்கு அபிஷேகம்கூட செய்கின்றனர்!

திருக்கோயிலும் கட்டப்பட்டு வரும் திருக்குளமும்.





தங்க ரதம்

ஒரு சீன டாக்டர் ஞாயிறுதோறும் இங்கு வந்து அம்மனைத் தரிசிப்பாராம்!

**வருமானம் பெருகுகிறது:**

அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலின் வருமானம் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்திய மக்கள் மட்டுமின்றி, வெளிநாட்டினரும்கூட இக்கோயிலுக்குக் காணிக்கை செலுத்தி வருகின்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, மலேசியா, அரேபியா ஆகிய நாடுகளிலிருந்து அன்பர்கள் மூலம் காசோலைகள் இங்கு வந்த வண்ணமிருக்கின்றன.

ஒரு ஞாயிற்றுக்கிழமை (9-3-80) மட்டும் கோயில் அனுமதிச் சீட்டு மூலம் கிடைத்த வருவாய் ரூ. 17 ஆயிரம்! ஒரு நாளைக்குச் சுமார் 150 மணியார்டர்கள் வருகின்றன. மாதந்தோறும் உண்டியல் திறப்பு நடக்கிறது. அதில் ரூபாய் ஒரு இலட்சத்துக்கு மேல் வருமானம் கிடைக்கிறது. 1978-79-ஆம் ஆண்டு வருமானம் ரூ.43,76,973. இவ்வாண்டில் இத்தொகை ரூ.50 இலட்சத்தை எட்டிவிடும்.

**சாலை வசதிகள்**

திருவேற்காட்டில் நல்ல சாலை வசதிகள் செய்யும் ஏற்பாடும் நடந்து வருகின்றது. இப்போது அதனை நெடுஞ்சாலைத் துறை ஏற்றுக் கொண்டுள்ளது. அதைக் கோயில் வசம் ஒப்படைக்கக் கோரப்பட்டுள்ளதாம்.

தனியார் நிலங்கள் பல உள்ளன. அவற்றை முற்போக்குத் திட்டங்களுக்குப் பயன்படுத்தும் எண்ணம் உள்ளது. தற்போது அவற்றையெல்லாம் கையகப்படுத்தும் பணியில் கோயில் நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.


**திருமண மண்டபம்**

ரூ. 60,000 செலவில் திருமண மண்டபம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வழிபடுவோருக்கான உணவுக்கூடம் ஒன்று ரூபாய் 52,000 செலவில் கட்டப்பட்டுள்ளது. மூன்று இடங்களில் ரூபாய் 45,000 செலவில் கழிவறையும் கட்டப்பட்டுள்ளது.

திருக்குளம் மற்றும் நீராழி மண்டபம் ரூ. 6 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. 64 கால் மண்டபம் ஒன்றும் அழகிய முறையில் ரூ.4 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது.

இங்கு வருகின்ற மக்கள் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது. பேருந்துகள், ஸ்கூட்டர்கள், மற்ற மற்ற வாகனங்கள், ஞாயிற்றுக்கிழமைகளில் இக்குறுகிய பாதையில் வெகுவாக மொய்த்து, மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

போக்குவரத்தைச் சௌகரியமாக்கவும், நெரிசலைப் போக்கவும் வேண்டி, மக்கள் நலனுக்காக இப்பாதைக்குச் சற்று தொலைவில் பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையையும், இக்கோயிலையும் இணைக்கும் வகையில் பல இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலம் சில ஆண்டுகளுக்கு முன்பு அரசினால் கட்டப்பட்டது. ஆனால், இப்பாலத்தின் வழியாகப் போக்குவரத்து இது வரையில் துவங்கப்படவில்லை.



கட்டப்பட்டு வரும் சிறு குடில்கள்.

வருகின்ற அன்பர்க்கெல்லாம் அருள்மாரி பொழியும் அருள்திரு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலின் சார்பில், சமுதாயப் பணிகளும் செவ்வனே நடைபெற்று வருவதை நாம் பெருமிதத்துடன் குறிப்பிட வேண்டும்.

பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையிலிருந்து இக்கோயிலுக்குச் செல்லும் பாதை மிகவும் குறுகலாகவும், வளைந்து வளைந்தும் செல்கிறது. நாளுக்கு நாள்

நில ஆர்ஜிதப் பிரச்னைகள் சில குறுக்கே நிற்பதாகத் தெரிகிறது. என்ன இருந்தாலும், இந்தப் புதிய பாலம் வழியாகப் போக்குவரத்து நடைபெறச் செய்தால்- அதற்காகத்தானே பாலமே கட்டப்பட்டது - பொதுமக்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும்; சாலை விபத்துக்களும் குறையும் என்று இங்கு வருவோர் பலர் கூறுகிறார்கள்.

—பி. வி. கிரி.



# இலக்கியத்தில் மலர்கள்!

'நல்லாசிரியர் பூவைப் போன்றவர்' என்று கூறும் நன்னூல் ஆசிரியர் பவணந்தியார், ''பூ,மங்கலக் காரியங்களுக்கு உரியது. அணி செய்யும் எல்லாச் செய்கைக்கும் இன்றியமையாதது, எல்லாராலும் விரும்பிச் சூடிக்கொள்ளப்படுவது, மென்மையானது, உரிய காலத்தில் முகமலர்தலை உடையது'' என்று பூவின் இயல்புக்கு இலக்கணம் கூறுகின்றார்.

மலரை, அகவிதழ் புறவிதழ்—சீலம், சீலாக்ரம், அண்டகோசம்,மகரந்தத்தாள், மகரந்தப் பை என்றெல்லாம் வேறு வேறாகக் கூறுபடுத்திப் பார்ப்பது அறிவியல் ஆய்வு; ஆனால் அதே மலரின் வண்ணத்தையும், வடிவத்தையும், மணத்தையும், மென்மையையும் எண்ணத்திற்கேற்ப நுகர்ந்து வெளிப்படுத்துவது இலக்கிய நோக்கு.

''பொழுது எப்போ விடியும், பூ எப்போ மலரும்,
சிவனார் எப்போ வருவார், வரமே எப்போ
தருவார்''

எனச் சின்னஞ்சிறுவர் பாடும் பாட்டு முதல், இயற்கை இயல்பினைச் செயற்கை புனைவில்லாமல் வெளிப்படுத்தும் ஈராயிரமாண்டுகளுக்கு முன்னுள்ள சங்கப் பாடல்கள் வரையுள்ள இலக்கியங்களில்—கொடிப்பூ, கோட்டுப் பூ, நிலப்பூ, நீர்ப்பூ என்னும் நான்கு வகைப்பூக்களும்—விடுபூவும் தொடு பூவுமாகி கண்ணியும் கோதையுமாக, தாரும் மாலையுமாக, தொடையலும் பிணையலுமாக மலர்ந்து மணம் பரப்புகின்றன.

பூங்கண்ணன், பூங்கண் உத்திரையார் போன்ற சங்கப் புலவர்கள், தம் பாக்களால் மட்டுமின்றிப் பெயர்களிலே பூவையும் சூடி மணக்கின்றனர்.

ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற்காகக் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டில், காந்தப்பூ முதலாக மலை எருக்கு ஈறாக 99 பூக்களைக் குறிப்பிடுகின்றார்.

இறைவன் புகழைப் பாடிக்கொண்டே பூக்கொய்வதைத் 'திருப்பூவல்லி' என்று திருவாசகம் சிறப்பிக்கும்.



ஆத்தி சூடி, கொன்றைவேந்தன் என்னும் நூல்கள் ஆத்திப் பூவையும், கொன்றை மலரையும் அணிந்தவரால் பெயர் பெற்றவை.

நன்றாகப் பூத்த வேங்கை, புலியைப் போல் தோன்றும். அவ்வாறுள்ள ஒரு வேங்கை மரத்தைப் புலி எனக் கருதிய களிறு அதை முட்டி மோதிக் குத்திப் பெயர்த்து அதன் கிளையைத் தன் தலை மீது வெற்றி தோன்றத் தாங்கி வரும் செய்தியைச் சிறப்பிக்கும் பதிற்றுப்பத்துப் பாட்டு ஒன்று,'சுடர்வீ வேங்கை' என்னும் தலைப்பைக் கொண்டது.

சோழன் கரிகாற் பெருவளத்தான், தன்னைப் பாடி வந்த பொருநரின் வருத்தம் தீருமாறு பற்பல பரிசில்களை வழங்கினான்; அவற்றுள் ஒன்று தாமரை. அது ''எரி அணகந்தன்ன ஏடுஇல் தாமரை''. அந்தத் தாமரை நெருப்புப் போல் ஒளிர்ந்தது. இயற்கையான இதழ்கள் அதற்கு இல்லை; ஏனென்றால், அது ஒரு பொற்றாமரை.

பூவால் செய்த சுமட்டின் மேல் மோர்ப் பானையை வைத்துத் தலையிலே தாங்கிச் செல்லும் ஆயமகளைப் பெரும்பாணாற்றுப் படையும்-பிச்சிப் பூ பகற்பொழுது கடந்த அந்திக் காலத்தில் மலர்ந்தது, அந்தப் பூவின் மலர்ச்சியினால் பொழுதினை அறிந்தனர் என்று நெடுநல்வாடையும் குறிக்கின்றன.

மலைப்பல செறிந்த குறிஞ்சி, காடுகள் தொடர்ந்த முல்லை, கழனிகள் நிறைந்த மருதம், கடல் பரந்த நெய்தல் ஆகிய நான்கு நிலங்களைக் கொண்டுள்ளமையால் உலகிற்கு நானிலம் என்னும் பெயரும் உண்டு. ஒரு நிலத்தில் பல மலர்கள் மலர்ந்தாலும் தலைமையும் சிறப்பும் கருதி, குறிஞ்சி, முல்லை, மருதம்,நெய்தல் மலர்களாலாயே அந்தந்த நிலங்கள் பெயர்களைப் பெற்றன.

மாபெருந் தானையராகிய மூவேந்தருள், சேரர் பனம்பூவையும், சோழர் ஆத்திப்பூவையும், பாண்டியர் வேப்பம்பூவையும் அடையாளப் பூக்களாக அணிந்தனர் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

போரிலும் கூடப் பழந்தமிழர் அறத்துடன் பொருந்திய மறத்தினையே மேற்கொண்டனர். ஆநிரை கவர்வோர் வெட்சிப்பூவையும், அதனை மீட்போர் கரந்தைப் பூவையும், நாட்டாசையால் போர் தொடுக்கும் மன்னனின் வீறழிப்போர் வஞ்சிப் பூவையும், மதிலைத் தாக்குவோர் உழிஞை பூவையும்,அதனைக் காப்போர் நொச்சிப் பூவையும், வலிமை கருதி வந்த மன்னரின் ஆற்றலைக் குலைப்போர் தும்பைப் பூவையும், வெற்றி பெறுவோர் வாகைப் பூவையும் அடையாளப் பூக்களாகச் சூடிப் போர் புரிந்தனர்.

பேராசிரியர்
**க.சிவமணி**

பூவைப் பூவாகிய காயாம்பூ நிறத்தனாகிய திருமாலுடன் வீரரை ஒப்பிட்டுப் பேசும் புறத்திணை பூவைநிலை என்று பெயர் பெறும். எனவே, பழந்தமிழர் தம் அகத்திணைப் புறத்திணை ஒழுக்கங்கள் மலர்களாலேயே பெயர்களைப் பெறுகின்றன.

காதல் வாழ்வுக்கும் மலர்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அழகும் மென்மையும் கருதி மலர்களுடன் மகளிரை ஒப்பிடுதல் உலக வழக்கு.

மகளிரால் பத்து வகையான மரங்கள் நன்றாகச் செழித்து வளரும் என்னும் செய்தி நம்மிலே பலர் அறியாதது.

மகளிர், சுவைக்க மகிழ மரமும், நட்புக் கொள்ள ஏழிலம் பாலை மரமும், நிந்திக்கப் பாதிரி மரமும், சிரிக்க முல்லையும், ஆடப் புன்னை மரமும், அணைக்கக் குராமரமும், தைக்க அசோக மரமும், பாடக் குருக்கத்தி மரமும், பார்க்க மரா மரமும், நிழல்படச் சண்பகமரமும் நன்கு தளிர்த்துப் பூக்கும் என்பர்.

''வாழ்க்கை மலர் சொரிகின்ற இன்பத்தேனை
மனிதன் தன் தனிமையினால் நுகர்வதில்லை''

என்று பாரதிதாசன் வாழ்க்கையையே மலராகவும், அந்த மலர் தரும் தேனைச் சுவைக்கத் துணை தேவை என்றும் தெரிவிக்கின்றார். அந்தத் துணையைப் பற்றித் திருவள்ளுவரால் சுட்டப் பெறும் காதல் தலைவன்,

முறிமேனி, முத்தம் முறுவல், வெறிநாற்றம்,
வேல்உண்கண், வேய்த்தோள் அவட்கு''

என்று சுருங்கச் சொல்லி அவளியல்பை விளங்க வைக்கிறான்.

அவள் அனிச்சப் பூவை விட மென்மையானவள். அனிச்சப்பூ அவள் கால்களுக்கு நெருஞ்சிப் பழமாகக் குத்துகின்றது. அனிச்சப் பூவைக் காம்பு கிள்ளாமல் தலையில் சூடிக் கொண்டமையால், அந்தச் சுமை தாங்காமல் இடுப்பொடிந்து இறப்பாள்; அவள் கண்களுக்கு ஒப்பாகமாட்டோம் என்று நாணிக் குவளை மலர்கள் நிலத்தை நோக்குகின்றன. அவள் என்னைப் பார்த்துச் சிரிக்கும் சிரிப்பில், மலராத மொட்டுக்குள் இருக்கும் மணம்போல் ஒரு குறிப்பு உண்டு. நான் கோட்டுப் பூவைச் சூடினும் ஒருத்திக்குக் காட்டுவதற்காகச் சூடினீர் என்று ஊடல் கொள்வாள் என்றெல்லாம் பலவாறாக அவள் மெல்லியல்பையும் நல்லியல்பையும் கூறி வள்ளுவர் காட்டும் காதலன் மகிழ்கிறான்.

பரவை நாச்சியாரைத் திருவாரூர்க் கோவிலில் கண்ட பெரிய புராணச் சுந்தரரின் காதல் வெளிப்பாடு, மற்றவரைவிட வேறுபட்டது.

''கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன்
பெருவாழ்வோ
பெரீற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ,
புயல் சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்தவிரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்று அதிசயித்தார்''

''மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்''

என்று காதல் இயல்புடன் காதலையும்,

''காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்''



என்று காதல் மலர்ச்சியையும் திருவள்ளுவர் காட்டுகின்றார்.

தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலோற்பலம் ஆகிய சிறிய மலரம்புகளாலே பெரிய உலகை ஆட்டிப்படைக்கும் மன்மதன், கோவலனைப் பிரிந்த மாதவிக்குக் காதல் துன்பத்தை மிகுவித்தமையால், அவள் எழுதும் மலர் மடல் மணக்கின்றது.


''சண்பகம், மாதவி, பச்சிலை, பித்திகை, வெண்பூ மல்லிகை என்னும் மலர்களாலும், வெட்டிவேராலும், அழகிய செங்கழுநீரின் இதழ்களாலும தொகுக்கப் பெற்ற பூக்களின் மணம் மாறுபடும் மாலையின் நடுவிடத்தே தொடுத்த—முதிர்தாழை வெண் தோட்டிலே, அதற்கு மயலதாக உள்ள பித்திகை மலரின் கொழுமுகையாகிய எழுத்தாணியைக் கைக் கொண்டு, அதனைச் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து, 64 கலைகளும் வழிபடுமாறு பண்களும், திறங்களும் புறங்கூறு நாவில், கட்டவிழ்ந்த காதலால் மழலையால் பேசிப்பேசி மாதவி



காதல் கடிதம் எழுதினாள் என்று சிலம்பு மடலும் மணக்கிறது, மனமும் மயங்குகிறது.

மணிப்பூ ஆடை போர்த்தி நடக்கும் காவிரியின் நடையழகும், கண்ணகிக்கு வரும் துன்பத்தை அறிந்து கண்ணீரை அடக்கிப் புண்ணிய நறுமலராடை போர்த்துச் செல்லும் வையையாற்றின் கவினும் நெஞ்சிலே நிலைபெறுகின்றன.

கண்ணைத் தாமரைக் கண்ணாக உவமித்தல் இயல்பு. இருப்பினும், சிந்தாமணித் தலைவன் இவகனைக், ''காமனேயெனக் கன்னி மங்கையர் தாமரைக் கணாற்பருக''ச் செய்யும் திருத்தக்கதேவரின், சிலேடை நயம் அறியத்தக்கது—மங்கையர் தாமரை போன்ற கண்களால் பருகினர். இது ஒரு பொருள்—தாமரை—தாவுகின்ற மான் போலும் மருண்ட கண்ணினால் பருகினர். இது இரண்டாவது பொருள். மங்கையர் தாம் அரைக்கண்ணினால் (அதாவது கடைக் கண்ணினால்) பருகினர். இது மற்றொரு பொருள்.



கூந்தலில் மலர் முடித்தல் இயல்பு. ஆயினும் கலிங்கத்துப்பரணி மடவார்கள் முருகிற் சிவந்த கழுநீரைத் தம் கூந்தலில் செருகுகின்ற போதே முதிரா இளைஞர் ஆருயிரையும் திருகிச் செருகுவதிலே தேர்ந்தவர்களாக இருக்கின்றனர்!.

நாட்டுப் பாடலில் வரும் தலைவி ஒருத்தி,

''அந்தியிலே பாரம்போட்டு அடுத்த ஊரு
போற மச்சான்!
சந்தையிலே மருக்கொழுந்தும் சவுந்திப்பூவும்
வாங்கியாங்க''

என்று கேட்கின்றாள். அதற்கு அவன் நயமாகவும் நளினமாகவும்,

''பூவாலே உடம்பெடுத்து பூப்போலவே வளர்ந்து
பூப்பூவா பூத்து நிற்கும் பூங்காவனமே மச்சி!
மல்லிகைப் பூ உன்சிரிப்பு, மருக்கொழுந்து உன்மேனி
சந்தைப்பூ வாங்கிவாறேன், சாமிக்கு என்னதாறே?'

என்று அவளே ஒரு பூவாக இருப்பதைச் சுட்டுகிறான்.

மலரின இயல்புகளைக் கொண்டு சில உண்மைகளை இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

அனிச்சப்பூ முகர்வதனால் வாடும் விருந்தினர் முகம் மாறுபட்டுப் பார்ப்பதனாலே வாடுவர் என்று விருந்தினர் இயல்பையும், மலரின் நீட்சி தானிருக்கும் நீரின் அளவை ஒத்தது, அதுபோல் ஒருவரது உயர்ச்சி அவரது உள்ளத்தைப் பொறுத்தது என்று உள்ளத்தின் உயர்வையும்—தாம் கற்றவற்றை விரித்துரைக்காதவர் மலர்ந்தும் மணம் வீசாத மலருக்கு ஒப்பாவர் என்றும், முன்னே மலர்தலும் பின்னே கூம்புதலும் இல்லாதது அறிவு என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். அரசப் பதவியைப் பெற்றபோதும் பின்னர் அதை இழந்த போதும் எப்போதும் மலர்ந்திருக்கும் சித்திரச் செந்தாமரையை இராமனது முகம் ஒத்திருந்தது என்று கம்பர் தெரிவிக்கின்றார்.

நன்று அறிவார், பூக்காமலே காய்க்கும் மரம் என்றும், நன்று அறியார், பூத்தாலும் காய்க்காத மரம் என்றும் சிறுபஞ்சமூலம் செப்புகின்றது.

தமிழ்நாட்டுச் சித்தர்களில் ஒருவரான கொங்கணச்சித்தர், 'பெண்ணில்லாமல் ஆணில்லை' என்பதை விளக்க, ''மண்ணும் இல்லாமே விண்ணும் இல்லை. கொஞ்சம் வாசம் இல்லாமே பூவும் இல்லை, பெண்ணும் இல்லாமே ஆணும் இல்லை, அது பேணிபாரடி வாலைப்பெண்ணே!'' என்று பாடுகின்றார்.

தம்ழச்சித்த மருத்துவர் மருந்தாகப் பயன்படும் மலர்களையும் மரங்களையும் பற்றித் தாவர வர்க்கத்தில் விரிவாக விளக்குகிறது. கோரக்கரின் ஏக மூலிகை மருத்துவமும், காலாங்கிநாதரின் 'கொல்லிமலை ரகசியம்' என்னும் நூலும் பிறவும் வியத்தகு செயல்திறனைத் தெரிவிக்கின்றன.

மலர்கள் புலவர்களின் கற்பனைக்கும் கை கொடுத்துள்ளன. சிவந்த காந்தள் மலரில் கருவண்டு இருந்ததைப் பார்த்தது குரங்கு. வண்டு தீயல் மூழ்கியது என்று கை நெரிக்கும் செய்தி ஈங்கோய்மலை எழுபதில் கூறப்படுகிறது.

முல்லைப் பூவின் மலர்ச்சி புறநானூற்றுப் புலவர் ஒருவருக்கு இரங்கற் குறிப்பைத் தோற்றுவிக்கின்றது.

மலர் தூவித் தெய்வங்களை வழிபடுதல் பழைய மரபு என்பதை அகநானூறும் முதலிய சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இத்தகைய மலர் வழிபாட்டைப் பற்றி,

''சலம் பூவோடு தூய மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்'' என்று அப்பரும்,

'பூநாளும் தலை சுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நலின்றேத்துப் பெறலாமே நல்வினையே'

என்று சம்பந்தரும் சிறப்பித்துப் பாடியுள்ளார்கள்.

பூவினுக் கருங்கலமாகப் பொங்கு தாமரை இருப்பதைப் போல நாவினுக் கருங்கலமாக இருப்பது நமச்சிவாய மந்திரம் என்பது அப்பரின் அசைக்க முடியாத கொள்கை.

மலர்மாலை தொடுத்து இறைவனை வழிபட்டு முத்தி அடைந்தவர் பெரியபுராண முருகநாயனார். தான் போட்டு அழகு பார்த்த மாலையைத் திருமாலுக்கு அணிவித்துச் சூடிக் கொடுத்த 'சுடர்க்கொடி' என்னும் பெயர் பெற்றவள் ஆண்டாள். அருட்பாடல்கள் அனைத்தும் ஆண்டவனுக்குச் சார்த்தப்படும் பெரும்புகழ் மாலைகள்.

"இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே
சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது''

என்னும் பூதத்தாழ்வாரின் பாசுரம் போற்றுதற்குரியது.

உலகத் தோட்டத்திலே மனித மலர்கள் பூக்கின்றன. சில மணம் வீசுகின்றன. பல வாடி உலர்கின்றன என்னும் தத்துவத்தை,

''புலர்ந்து விடியும் பொழுதினிலே பொய்கைக்
கரையஞ்சோலையிலே
மலர்ந்து நல்ல மணம் வீசி மகிழும் மலர்களை
ஆயிரமாம்
கலந்த உலக வாழ்வையிதில் கண்ணாற் கண்டு
தெளிவாயே''

என்று பாடிய உமர்கய்யாம் பாடல் சிந்தனைக்குரியது.

எனவே, மனிதருடைய அகவாழ்விலும், புறவாழ்விலும் ஆன்மீக வாழ்விலும் மலர்கள், அரும்பாக, போதாக, மலராகப் பிணைந்தும் இணைந்தும் மணம் வீசுகின்றன.

—நன்றி: சென்னை வானொலி நிலையம்.



1978-79 ஆம் ஆண்டு சிறந்த திரைப்படங்கள்-கலைஞர்கள்
விருது வழங்கு விழா
காட்சிகள் (13-4-1980)



# உங்களுக்குச் சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

பெரிய நகரங்களில், ஏன் எல்லா நகரங்களிலுமே எல்லாமே ஒரே அவசரம்! எது நடந்தாலும் நமக்கென்ன என்ற ஒரு மெத்தனப் போக்கு. போதாதற்கு எங்கு பார்த்தாலும் முண்டியடித்துக்கொண்டு மக்கள் நெரிசல் வேறு! இந்தச் சூழ்நிலையில் மக்கள் மனப்போக்கும் சமூக விரோதிகளுக்குச் சாதகமாகிவிடுகிறது. முன் எச்சரிக்கையின்றி பொதுமக்கள் இருப்பதை வெகுலாவகமாகத் தங்கள் அக்கிரமச் செயல்களுக்கும் அதனைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் சமூக விரோதிகள்!

சற்று முன் எச்சரிக்கையோடு அன்றாட வாழ்வில் சில நடை



முறைகளைப பொதுமக்கள் கடைப்பிடித்தால், எத்தனையோ கொள்ளைகள். சமூக விரோதச் செயல்கள் நிகழாமல் நிச்சயம் தவிர்க்க முடியும். சமூக நலன் கருதுவதுடன் மட்டுமல்லாமல்-தன் சொந்தப் பாதுகாப்புக்காவது வேண்டி - கீழ்க்கண்ட நடைமுறைகளைப்பொதுமக்கள் கடைப்பிடிக்க முற்படுவது மிகவும் அவசியம்.

### விளக்கை எரியவிடுங்கள்!

நீங்கள் இரவில் வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியில் செல்லும்போது, வீட்டில் சிறிது கூட வெளிச்சமே இல்லாமல் வெளியே செல்ல வேண்டாம். ஒரு சிறிய விளக்கையாவது எரிய விட்டுச் செல்லுங்கள். விளக்கு எரியும் வீடுகளிலிருந்து திருடர்கள் ஒதுங்கியே இருப்பார்கள். எனவே, சினிமா, கோவில், கடைகள் அல்லது அருகேயுள்ள நண்பர்கள் வீடு எதற்காவது செல்லும்போது, மறக்காமல் ஒரு சிறு விளக்கையாவது எரியவிட்டுச் செல்லுங்கள். போகும்போது சாவியைப் பிறர் எளிதில் எடுக்கக் கூடிய வெளியிடங்களில் வைத்து விட்டுச் செல்லவேண்டாம். ஒருக்கால் திருடர்கள் அதை கவனிக்கக்கூடும்.

* வீட்டிற்குத் திரும்பியவுடன் ஒவ்வொரு கதவு, ஜன்னல்களை நன்கு சோதித்துப் பாருங்கள். மூடப்படாத கதவு, ஜன்னல்கள் தான் திருடர்களுக்குத் திருடுவதற்கு நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்றன.

### அடுத்த வீட்டாருடன் நல்லுறவு வேண்டும்!

* அண்டை வீட்டுக்காரர்களுடன் நல்லுறவு கொண்டு ஒருவர் இல்லத்தினை மற்றவரும் நன்கு கவனித்துக் கொள்வது அவசியமாகும். இரவு நேரங்களில் உங்கள் வீட்டிலோ அல்லது பக்கத்து வீட்டிலோ சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் ஏதாவது சப்தம் கேட்டால் அலட்சியத்துடன் சும்மா இருக்க வேண்டாம். வீட்டின் அருகில் சந்தேகத்திற்குரிய புதிய நபர்கள் திரிந்தால் உடனடியாகக் காவல்துறைக்குத் தெரிவிக்க வேண்டும்.

* நாட்கணக்கில் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியிடங்களுக்குச் செல்ல நேரிட்டால், அருகிலுள்ள காவல் நிலையத்தில் தெரிவித்துவிட்டுச் செல்வது நல்லது. அத்தகைய சமயங்களில் உங்கள் வீடுகளைப் போலீசார் தனிக் கவனம் செலுத்திக் கண்காணிப்பார்கள்

### திருடர்களுக்கு வசதி உருவாக்காதீர்!

* உங்களிடம் உள்ள நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை வங்கிகளில் உள்ள பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கலாம். அல்லது வீட்டிலேயே வைப்பதானால் திருடர்கள் கைப்பற்ற முடியாத வகையில் இரும்புப் பெட்டிகளில் வைப்பது நலம்.

* கைக் கடிகாரங்கள், துணிமணிகள், பேனாக்கள் போன்ற விலையுயர்ந்த பொருட்களைத் திறந்த ஜன்னல்களுக்கு அருகில் வைக்காதீர்கள். அப்படிப்பட்ட திறந்த ஜன்னல்கள் மூலம் திருடர்கள் தமது கைகளையோ அல்லது நீண்ட குச்சிகளையோ விட்டு பொருட்களை எடுத்துச் சென்றுவிடக்கூடும்.

* உங்கள் வீட்டு மாடியிலிருந்து வரும் நீர்க்குழாய்களின் மேல் முட்கம்பிகளைக் சுற்றி வையுங்கள். திருடர்கள் குழாய்களைப் பிடித்துக் கொண்டு மாடிக்கு ஏற முயலுவதை இது தவிர்க்கும்.

### யார் அவர் யார்?

* வீட்டிற்கு மின்சார மீட்டர்கள், தொலைபேசிகள், தண்ணீர் மீட்டர்கள் இவற்றைச் சோதனையிட வருவதைப் போல அல்லது வேறு ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களைச் சொல்லிக் கொண்டு பல திருடர்கள் வரக் கூடும். எனவே, இவ்வாறு வரும் முன்பின் அறியாத நபர்கள்பற்றி நீங்கள் எச்சரிக்கையோடு, அவர்கள் அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்கள்தானா என்பதை உறுதிசெய்து கொண்ட பின்னரே அவர்களை வீட்டிற்குள் அனுமதிக்க வேண்டும்.

* புதிய நபர்களை வேலைக்காரர்களாக அமர்த்திக் கொள்வதற்கு முன்னால் அவர்களைப் பற்றி நன்கு விசாரித்துத் தெரிந்து கொள்ளுங்கள். ஏனெனில், ஒரு ஏமாற்று வேலைக்காரன் ஒரு பெரிய குற்றவாளியாகவும் இருக்கக்கூடும். அப்படிப்பட்ட நபர்கள் வேலையில் சேர்ந்து உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, வீட்டின் உள்ளேயே பாதுகாப்புடன் திருட்டைச் சாதித்துக் கொள்ள முடியும்.

### ஆசைகாட்டி ஏமாற்றும்...

இரவு நேரங்களில் 11 மணிக்கு மேல் 12 மணிக்குள் உங்கள் பங்களாக்களின் காம்பவுண்டை உங்கள் காவலாளியை விட்டு நன்றாகச் சோதனையிடச் சொல்லுங்கள். ஏனென்றால், இருட்டுப் பகுதியில் திருடர்கள் ஒளிந்து கொண்டு இருக்கத் தக்க நேரம் கனிவதற்காகக் காத்திருக்கக்கூடும்.

முன் பின் அறியாத நபர்கள் கெட்ட நோக்கத்துடன் மிட்டாய் போன்ற இனிப்புப் பண்டங்களைக் குழந்தைகளுக்குக் கொடுத்து ஆசை காட்டி அவர்கள் அணிந்திருக்கும் விலை உயர்ந்த நகைகள் போன்றவற்றை திருடிச் செல்லக்கூடும். எனவே, உங்கள் குழந்தைகளுக்கு ரிக்கை செய்யுங்கள். முடியுமானால குழந்தைகளுக்கு அத்தகைய இதுபற்றி அறிவுரை கூறி, எச்ச விலையுயர் நகைகளை அணிவிக்காமல் இருப்பது நல்லது.

தெருக்களில் உங்கள் சைக்கிள்களைப் பாதுகாப்பின்றி விட்டுச் செல்லாதீர்கள். உங்கள் அலுவல் காரணமாக ஏதாவது ஒரு கட்டடத்திற்குள் செல்ல நேரிட்டால், கூடியவரை, உங்கள் சைக்கிள்களை சைக்கிள் ஸ்டாண்டில் விட்டு பூட்டிச் செல்லுங்கள்.

பஸ்கள் குறிப்பாக நெரிசல் மிக்க பஸ்கள் மற்றும் மின்சார ரயில்கள் இங்கெல்லாம் ஜேப்படி (பிக் பாக்கெட்) திருடர்கள் சுறுசுறுப்பாக இயங்குவதால், அவற்றில் பயணம் செய்யும்போது கவனமாய் இருங்கள்.

### தொலைபேசி 100க்கும் தெரிவியுங்கள்:

குற்றம் ஏதாவது நடந்திருந்தால், அப்பகுதியில் தடயங்கள்



அல்லது வேறு அடையாளங்கள் அழியாமல், அகற்றாமல், பார்த்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் கைரேகை நிபுணர்களும், விஞ்ஞான குற்றவியல் நிபுணர்களும் தங்கள் பணியினைச் சுலபமாகச் செய்து, இத்தடங்களிலிருந்து குற்றவாளிகளைப்பிடிக்க தக்க சாட்சியங்களைக் கண்டு பிடிக்க முடியும்.

குற்றம் ஏதேனும் நடந்திருப்பதாக உங்களுக்குத் தெரியவந்தால் உடனடியாக தொலைபேசி எண் 100-க்குத் தெரிவியுங்கள். உடனே தகவல் கிடைத்தால்தான் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் துப்பறியும் நாயுடன் அங்கு வந்து சூட்டோடு சூடாகத் துப்பறிந்து குற்றவாளியைக் கண்டுபிடிக்க ஏதுவாக இருக்கும்.

இறுதியாக, உங்கள் சுற்றுப்புறங்கள் பற்றிய உணர்வுடன் இருந்து எங்களுக்கு உதவி புரிவதன் மூலம் உங்களுக்கும் உதவி புரிந்து கொள்ளுங்கள். தயவு செய்து உங்களுக்குச் சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்!



## மனம்போல் வாழ்வு

அன்று மாலைவரை பத்துப் பைசாக்கூட கிடைக்கவில்லை. இரண்டு சாமியார்கள் அசதியோடு போய்க்கொண்டிருந்தார்கள்.

"எனக்குக் கிடைத்திருந்தாலாவது ஒனக்கு டீ யாவது வாங்கிக் குடுத்திருப்பேன்!" என்றான் ஒருவன்.

"நானும்தான்!" என்றான் மற்றவன்.

இப்படிப் பேசிக்கொண்டே போகும்போது கீழே ஒரு ரூபாய் நாணயம் கிடப்பதைப் பார்த்த ஒரு சாமியார், அதன் மீது காலை வைத்து மறைத்துக் கொண்டார். "நீ போய்கிட்டே இருண்ணே! கொஞ்சம் பொறுத்து நான் வர்றேன்!" என்று கூறி மற்றவரை அனுப்பிவிட்டார்.

பணத்தைக் கண்டதும் அவர் மனம் மாறிவிட்டது! அவன் போனதும், சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு, லாவகமாகக் குனிந்து மண்ணோடு அந்த நாணயத்தை வாரினார். நிமிர்ந்த போது, எதிரே இருந்த திரைப் படக் கொட்டகை கண்ணில் பட்டது. ஒரு டீ குடிச்சிக்கலாம். இப்ப ஒரு சினிமா பார்க்கலாம்!' என்றெண்ணியது அவர் மனம்.

நேரே 'கவுன்டரி'ல் போய் காசை வைத்து "எண்பத்து நாலு பைசா டிக்கட் ஒன்று" என்று கனஜோராகச் சொன்னார் அவர்.

உள்ளே இருந்தவன் கத்தினான்— "யார்ராவன் சோடா மூடியை வெச்சிட்டு டிக்கட் கேட்கறது?"

உள்ளபடியே அந்தச் சாமியார் கீழே கிடந்து எடுத்தது ஒரு ரூபாய் நாணயம்தான்.


ஆனால், பசித்திருந்தபோது தன் சகாவுக்கும் உதவ நினைத்த அவர் மனம், பணம் வந்ததும் அடியோடு மாறிவிட்டதல்லவா அப்படியே அந்தப் பணமும் மாறிவிட்டது!

மனம்போல் வாழ்வு என்பது இதைத்தான்!

(வாரியார் சொன்னது).




# சொல் விளையாட்டு



நாம் எத்தனையோ வகையான விளையாட்டை விளையாடுகிறோம். கிரிக்கெட், கால் பந்து, சடுகுடு இப்படிப் பல விளையாட்டுகள், இதிலே புதியதாக ஒரு விளையாட்டை, நம்முடைய அறிவைக் கொண்டு விளையாடலாமா? ஆம். அதுதான் 'சொல் விளையாட்டு!'

தமிழ்நாட்டிலே பல மாவட்டங்கள் இருக்கிறதென்று உங்களுக்கெல்லாம் தெரியும். மதுரை, சேலம், கோயம்புத்தூர் இப்படிப் பல மாவட்டங்கள் உள்ளன. 'அறஞ்செய விரும்பு' என்பது ஔவையார் வாக்கு இல்லையா? அதைச் சொல்லாமல் சொல்கிறது ஒரு மாவட்டம். அதாவது 'தருமம் செய்' என்கிற பொருளில் அது வருகிறது. அந்த மாவட்டத்தின் பெயர் என்ன என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?

அந்த மாவட்டம்தான் தருமபுரி. இதைப் பிரித்து எழுதினால், தருமம்+புரி — 'தருமம் செய்' என்ற பொருளில் வருகிறதல்லவா?

அடுத்து, ஒரு குட்டிக்கதை!

ஒரு ஊரிலே ஒரு 'கோட்டை' இருந்தது. அந்தக் கோட்டையிலே ஒரு ராஜா இருந்தார். இப்பொழுது இந்தக் 'கோட்டை'யை விடாமல் நாம் பிடித்துக்கொண்டால் - அதாவது 'கோட்டை விடாம' இருந்தால், பல சொல் கோட்டைகளை நாம் கட்டலாம்!

'கோட்டை' இதற்குள்ளே ராஜா இருக்கிறார். முதல் எழுத்து 'கோ' தான் அந்த ராஜா. ஆம். 'கோ' என்றால் அரசன். இப்பொழுது சொல்லுங்கள், கோட்டைக்குள்ளே ராஜா இருக்கிறாரா இல்லையா?

இந்தக் 'கோட்டை' என்ற சொல்லிலுள்ள முதல்'கொம்பை' (ே) எடுத்துவிட்டால் 'காட்டை' என்று வரும். பிறகு கொம்பையும், துணை எழுத்தையும் (ா) எடுத்துவிட்டால் 'கட்டை' என்று வரும். இந்தக் 'கட்டை'யில் 'ட்'டை எடுத்துவிட்டால் 'கடை' வரும். இந்தக் 'கடை'யில் முதல் எழுத்தை எடுத்தால், கடைசியில் 'டை'தான் மிஞ்சும். அதை நாம் கழுத்தில் கட்டிக் கொள்ளலாம்!

அடுத்தது, பூவை. இந்தப் பூவை-அதாவது ரோஜா, மல்லி, கனகாம்பரம் இப்படி எல்லாப் பூவையும் உங்களுக்குப் பிடிக்கும் இல்லையா?

பூவை என்ற இந்தச் சொல், 'பூ' 'வை' அதாவது என் தலையிலே அல்லது அந்தப் படத்திலே பூ, வை- என்ற ஒரு அர்த்தத்தைத் தரும். இந்தச் சொல்லைத் திருப்பிப் படித்தாலும் இதே அர்த்தம்தான் வரும். சொல்லிப் பாருங்கள்.......

'வை பூ'

சரி. 'பூவை' என்பதற்குப் பெண் என்ற பொருளும் உண்டு. அதுமட்டுமல்ல, 'பூவை' என்ற சொல் சென்னைக்கு அருகே உள்ள 'பூவிருந்தவல்லி'யையும் குறிக்கும்.

'ஒண்ணும் ஒண்ணும் இரண்டு' என்று சொல்கிறோம். இது கூட்டல் கணக்கு. இப்படித் தமிழிலே இருக்கிற ஒரு எழுத்தை மட்டும் ஒன்றோடு ஒன்று சேர்த்துக் கூட்டினால் அது ஒரு பொருளைத் தரவேண்டும். அது மட்டுமல்ல, அந்த ஒவ்வொரு எழுத்துக்கும் பொருள் இருக்கவேண்டும்.

உதாரணமாக, 'தீ' என்கிறோம். இது தீயை, நெருப்பைக் குறிக்கிறது இல்லையா? 'பா' என்கிறோம். இதற்குப் 'பாட்டு' என்று பொருள். இது போல ஒற்றை எழுத்துக்களை மட்டும் கூட்டி ஒரு சொல்லாக்க வேண்டும். அது முடியுமா?

'கோமாதா' —இந்தச் சொல்லிலே கோ-மா-தா என்ற மூன்று எழுத்துக்கள் இருக்கின்றன. 'கோமாதா' என்பது பசுவைக் குறிக்கிறது. இதிலுள்ள ஒவ்வொரு எழுத்தையும் பார்ப்போம். கோ-என்றால் அரசன், பசு, மா-என்றால் மாம்பழம், பெரிய. தா-என்றால் கொடு.

அடுத்து, ஒரு சுலபமான சொல் விளையாட்டு!

ஒரு ரப்பர் பந்தைச் சுவற்றிலே வீசி எறிகிறோம். அது திரும்பி நம்மிடமே வருகிறது இல்லையா? அதைப்போல ஒரு சொல்லை முன்னும் பின்னும் படித்தாலும் அதே மாதிரி வர வேண்டும்.

உதாரணமாக, 'மாமா' இதைப் பின்னே இருந்து படித்தாலும், 'மாமா' என்று தான் வரும். இதைப்போல இன்னும் நாம் சொல்லலாம்:

'பாப்பா'!
'தாத்தா'

பி. வி. கிரி

## மாணவர் பக்கம்



# ஆனைக் கொம்பன்



கோவை, வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், பூச்சி இயல் துறையில் பூச்சி நோய் கண்காணிப்புத் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் நடத்திய கண்காணிப்பில், அவினாசிப் பகுதியில் ஆனைக்கொம்பன் பூச்சியால் ஏற்படும் நோய் 30 சதம் வரை காணப்படுகின்றது. அந்தியூர், கோபி, சத்தியமங்கலம் பகுதிகளில் இப்பூச்சியின் தாக்குதல், பரவி வருகின்றது. இப்பூச்சியின் தாக்குதல் அதிகத் தழைச் சத்திட்ட பயிரிலும், களர்நிலத்தில் போடப்பட்ட பயிரிலும்தான் தோன்றுகின்றன.

நெற்பயிர் மட்டுமின்றி, அருகம்புல், திப்பராகி, கினியாப் புல் வகைகள், வரகு ஆகியவற்றையும் இந்தப் பூச்சி தாக்குகின்றது. பொதுவாக இப்பூச்சியின் தாக்குதல் நட்ட ஒரு மாதம் முதல் 1½ மாதம் வரை காணப்படும். இதைப்போல் கோவை, சேலம், பெரியார் மாவட்டங்களின் மற்ற பகுதிகளிலும் ஆனைக்கொம்பன் தர்க்குதல் காணப்படுகிறது.

நெற்பயிர்கள் ஒருவித ஈயின் மேகப் புழுவினால் தாக்கப்படுகின்றன. தாக்கப்பட்ட பயிரில் கொம்பு போன்ற கிளைகள் ஏற்படுகின்றன. இக்கிளைகள் முதலில் வெண்மையாகவும், பிறகு இளம் பசுமைநிறம் அல்லது ஊதா நிறத்தில் குழல் போன்ற அமைப்புடனும் தோன்றும்.

இந்தக் குழல், யானைத் தந்தத்தைப் போன்று காணப்படுவதால், இதனை ஆனைக்கொம்பன் நோய் என்றும் கூறலாம். தூர்களில் இம்மாதிரி நீண்டகுழல்கள் தோன்றினால், அவைகளே இப்பூச்சியின் சேதத்தின் அறிகுறியாகும்.

இம்மாதிரி தாக்கப்பட்ட தூர்களில் சரியான வளர்ச்சி ஏற்படாது. கதிர்களும் தோன்றாது.

'ஆனைக் கொம்பன்' நோயை உண்டாக்கும் ஈக்கள், பழுப்பும் மஞ்சளும் கலந்த நிறம் உடையவை. கொசுவைப்போல் இவை தோற்றமளிக்கும். இரவில் இவைகள் சுறுசுறுப்பாகப் பறக்கும். தாய்ப்பூச்சி, நீண்ட, சிவப்பு நிறமான முட்டைகளைத் தனித்தனியாகவும், அல்லது 2 முதல் 6 முட்டைகள் வரை கூட்டமாகவும், சுமார் 300 முட்டைகள் வரை இலையின் தாளின்மேலும், செதிள்களிலும் இடும். முட்டையிலிருந்து 3 அல்லது 4 நாட்களுக்குள் புழுக்கள் வெளிவரும்.

அப்படி வெளியில் வந்ததும், முதலில் புழு பயிரின் கிளையைத் துளைத்து, நடுக்குருத்தை அடையும். பிறகு உண்டு, சேதப்படுத்தும். இதனால் குழல் போன்ற அநேகக் கிளைகள் ஏற்படுகின்றன.

வளர்ச்சியடைந்த புழுக்கள் இளம் சிவப்பு நிறத்துடன் இருக்கும். கொம்பு போன்ற குழலின் உள்ளே, கூட்டுப் புழுவாக இவை மாறும். இக்கூட்டுப் புழுவின் முன் பாகத்தில் 2 அல்லது 3 முட்கள் வரையிருக்கும். இவற்றின் உதவியால் கூட்டுப்புழு குழலின் நுனிப் பகுதிக்கு வந்து சேரும். பிறகு குழலைத் துளைத்துப் பூச்சியாக வெளவரும்.

இப்பூச்சியின் வாழ்க்கைப் பருவம் 15 முதல் 20 நாட்கள் வரை நீடிக்கும்.

இந்தப் பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்தா விட்டால், 50 சதம் வரையில் மகசூல் குறையும். எனவே, ஆனைக்கொம்பன் சேதத்தைக் கட்டுப்படுத்த சில வழி முறைகளைக் கையாள்வது நல்லது. அவை வருமாறு:

அருகம்புல்லில் இப்பூச்சி வளர்வதால், வயலில் உள்ள அருகம் புல்லை அகற்ற வேண்டும்.

ஒரு லிட்டர் தண்ணீரில் லெபாசிட் ஒரு மில்லி லிட்டர் அல்லது ரோகார் 1 மில்லி லிட்டர், அல்லது தயோடான் 3 மில்லி லிட்டர், அல்லது செவின் 2 கிராம் மருந்துகளில் ஏதாவது ஒன்றைக் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

**உதவிப் பேராசிரியர்**
**ஜி. பாலசுப்பிரமணியன்**

**பேராசிரியர்**
**எம். பாலசுப்பிரமணியம்,**
**பூச்சி இயல் துறை,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோவை-3.**

# நூல்நயம்



## பாவேந்தர் பாரதிதாசன் பெருமை

[தொகுப்பாசிரியர் முல்லை பி.எல். முத்தையா. பதிப்பித்தோர்: அபிராமி பப்ளிகேஷன்ஸ், 307, லிங்கி செட்டி தெரு, சென்னை-600001. விலை ரூ. 10]

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பற்றி, அவரோடு பழகி அறிந்த -அவரை நன்கறிந்த 54 அறிஞர் பெருமக்கள் எழுதிய கட்டுரைகள், கவிதைகளின் தொகுப்பு நூலாகும் இது.

பாவேந்தரின் எழுத்து, பேச்சு, சிற்றம் மிகுந்த செயல்முறை நடவடிக்கைகள், பண்பு, குணநலன் ஆகியவற்றைப் பற்றி அவரவரும் தாங்கள் அறிந்த வரையிலே விரித்தும் குறைத்தும் எழுதியிருக்கிறார்கள். பாரதியார், திரு.வி.க., மறைமலையடிகள், கவிமணி, பெரியார், அண்ணா, ஜீவா, சுரதா போன்றோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

அழகிய முகப்போவியம்.

186 பக்கங்கள் உள்ள இந்த நூல் புரட்சிக் கவிஞரைப் படம் பிடித்துக் காட்டுவதாகச் சிறப்புற அமைந்துள்ளது. பாவேந்தரின் வரலாறு அறிய முனைவாருக்குப் பெரிதும் உதவக்கூடியது.

**— ராஜு**

[இப்பகுதிக்கு நூலனுப்புவோர் ஒவ்வோர் தலைப்பின் கீழான நூற்கள் இரண்டிரண்டு படிகள் அனுப்பிட வேண்டும்].



# பார்த்தோம் படித்தோம்




இந்த ஏட்டின் மூலம் தமிழக அரசின் பல புதிய திட்டங்களையும், தொழில் வளர்ச்சிகளையும், விவசாயிகளுக்கான செய்திகளையும், கால்நடைப் பராமரிப்பையும், தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. தமிழகக் குடிமகன் ஒவ்வொருவரும் அவசியம் படித்துப் பயனடைய வேண்டிய இதழ் தமிழரசு!

**—இளைஞர் நற்பணி மன்றம்,**
**கரையூர்,**
**விழுப்புரம் வட்டம்.**

மாணவர் முன்னேற்றம், மாணவர்க்கான சிறுதொழில்கள், மாணவர்களின் தொழிற்கல்வி, மாணவர்களின் வேலைவாய்ப்பு ஆகியவை பற்றியும் மாணவர் பகுதியில் விளக்க விவரங்கள் தொடர்ந்து இடம் பெறச் செய்யலாமே?

**—எஸ். ரவிச்சந்திரன்,**
**பெரியகரகப்பட்டி.**

'தமிழரசி'ல் எதை மாற்றினாலும் ஒவ்வொரு துறை பற்றியும் அந்தந்தத்துறை அதிகாரிகள் மூலம் எழுதச் செய்வதை மாற்றிவிடாதீர்கள். மிகச் சாதாரண மக்களும் வாங்கிப் படிப்பதாக மாற்றுங்கள்.

**—எஸ். பட்டுசாமி,**
**ஆசிரியர்,**
**சேந்திரக்கிள்ளை.**

திருபுவனம் பட்டுப் புடவையைக் கண்டு ரஷ்யத் தலைவர் பிரஷ்னேவ் அவர்களே பாராட்டினார் என்ற செய்தி எங்களை மகிழ்வித்தது. 'முதுமை ஒரு சுமையல்ல' கட்டுரை நன்றாக இருந்தது. அதுசரி, ஏப்ரல் இதழில் மேலட்டை பற்றிப் போடவில்லையே, ஏன்? ஏப்ரல் வேலையா?

**—ஆ. முனுசாமி,**
**திருவண்ணாமலை.**

தமிழரசு இதழில், சோழவரம் ஒன்றியம் பற்றி வெளியான கட்டுரை படித்தேன். அதில்-சோழபுரம் என்கிற பெயர், சென்னைக்கருகில் உள்ள ஊருக்கும், குடந்தைக்கருகில் உள்ள ஊருக்கும் மட்டுமே இருப்பதாக எழுதப்பட்டுள்ளது. சோழபுரம் என்ற பெயர், பாண்டிய நாட்டு மதுரைக்கும் இருந்தது. மதுரையைக் கைப்பற்றிய மூன்றாம் குலோத்துங்கன், அந்நகருக்கு இட்ட பெயர் முடித்தலை கொண்ட சோழபுரம். வழக்கில் அப்போது அதுவும் சோழபுரமே!

**—எம்.டி. கௌரியம்மாள்,**
**ஆர்க்காடு.**

ஒன்றிய, வட்டார, மாவட்ட வரைவுப் படங்களை அவ்வப்போது வெளியிட்டு அதைப் பற்றிய விளக்க-சாதனைக் கட்டுரைகள் எழுதலாம். இன்னும் பக்கங்களை அதிகரிக்கலாம். 'விவசாயக் கேள்வி-பதில் பகுதி' துவக்கினால் நல்லது.

**—ஆர். ஆண்முத்து,**
**கூத்தூர், திருச்சி.**

புதிய பொலிவோடு வெளிவரும் 'தமிழரசுக்கு எங்கள் வாழ்த்துக்கள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் படத்தை இன்னும் தெளிவாக அச்சிட்டிருக்கலாம் என்பது என் அபிப்பிராயம்.

**—கே. ஆர். நடராசன்,**
**நீர்முள்ளிக் குட்டை, சேலம்.**

'இன்னிசை வளர்த்து வரும் சென்னைப் பல்கலைக் கழகம்' 'நெருப்பும் பொறுப்பும்' கைத்தறித்துறை பற்றிய கட்டுரைகளெல்லாம் பயனுள்ளவைகளாகும்.

**—ஆர். அமுதா,**
**வடுகவிருட்சியூர்.**

கிண்டித் தொழிற்பேட்டை பற்றிய கட்டுரை அற்புதம்.

**—பாப்பித்தன்,**
**ஆர்ப்பாக்கம்.**

'தமிழரசில்' வெளிவரும் விவசாயக் கட்டுரைகள் எல்லாமே பயன்மிக்கவைகளாக இருக்கின்றன. வளரட்டும், தங்கள் வேளாண்மைப் பணி.

**—நெ.மு. சேகுஅப்துல்காதர்,**
**புதுமடம், இராமநாதபுரம்.**

புற்றுநோய் மருத்துவமனை, மூலிகைப் பண்ணை, புகை நமக்குப் பகை கட்டுரைகள் மிகவும் பயன்மிக்கவை. இப்படி உபயோகரமான கட்டுரைகளை அடிக்கடி வெளியிடுங்கள். 'நம்பிக்கை ஒளி ஏற்றுவோம்' கவிதை இனிப்பாக இருந்தது. அம்மாதிரிக் கவிதைகளும்தொடர்ந்து இடம் பெறச் செய்ய வேண்டுகிறேன்.

**—உ. தீபா,**
**செங்கற்பட்டு.**

# சகாராவில் மரம் வெட்டியவன்



மரம்வெட்டும் வேலைக்கு ஆள் எடுப்பதற்கான நேர்முகத் தேர்வு நடந்து கொண்டிருந்தது.

அதிகாரி, ஒருவனைக் கேட்டார்:

''ஒரு நாளைக்கு உன்னால் எத்தனை மரங்களை வெட்டிச்சாய்க்க முடியும்?''

அவன் சட்டென்று சொன்னான்:

''குறைந்தது இருபத்தைந்து!''

''உன்னைப் பார்த்தால் அவ்வளவு அதிகம் வெட்டமுடியும் என்று தெரியவில்லையே! இதற்கு முன் எங்கே வேலை பார்த்தாய்?''

''சகாராவில்!''

''சகாரா, பாலைவனமல்லவா?''

''ஆமாம், நான் அப்படி வெட்டியதால் தான் அது பாலைவனமாயிற்று!''

# புதிர் அல்ல, பொது அறிவுப் புதர்!



கல்லும் முள்ளும் நிறைந்த புதர் காலைப் பதம் பார்க்கும். ஆனால், பொது அறிவுத் தகவல்கள் நிறைந்த புதரோ அறிவுக்கு வளம் சேர்க்கும்.

பெற்றோர்களிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் திணற அடிக்கும் உங்களுக்கா, கீழ்க்காணும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது?

எதற்கும் உங்கள் பதிலைச் சரி பார்த்துக் கொள்ள விடைகள் கீழே;

1. 'தனித் தமிழின் தந்தை' என்று யாரை அழைக்கிறோம்?
2. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் யார்?
3. தமிழ்நாட்டில் உள்ள பழமையான ஒரு பெரிய கோயிலுக்கு, அண்மையில் கும்பாபிஷேகம் நடந்தது. அது எந்தக் கோயில்?
4. நம் தேசியச் சின்னமான அசோக ஸ்தூபியில் உள்ள வாசகம் என்ன?
5. சாய்வுக் கோபுரம் எங்குள்ளது? அதன் உயரம் என்ன?
6. அண்மையில் முழு சூரிய கிரகணம் தெரிந்தது. எந்தத் தேதியில்?
7. தமிழில் முதல் எழுத்துச் சான்று எனக் காட்டப்படுவது எது?
8. முதன்முதல் தமிழ் நூல்களை அச்சடித்து வெளியிட்டவர்கள் யார்?

விடைகள்:

1. மறைமலை அடிகளாரை.
2. இராசேந்திரபிரசாத்
3. தஞ்சையிலுள்ள பிரகதீசுவரர் ஆலயம்.
4. 'சத்தியமேவ ஜெயதே!' (உண்மையே வெற்றி பெறும்)
5. இத்தாலியில் உள்ள பைசா என்ற நகரில், 181 அடி.
6. இவ்வாண்டு பிப்ரவரி 16-ஆம் நாள்.
7. தொல்காப்பியம்.
8. ஐரோப்பியர்கள்.

## குழந்தை நூலகங்கள்

சோவியத் நாட்டில், புத்தகம் படிப்பவர்கள் அதிகம். புத்தக ஆசை குழந்தைப் பருவத்திலிருந்தே ஏற்படுமாறு செய்யப்படுகிறது. குழந்தைகளுக்கென்றே நிறுவப்பட்டுள்ள நூல் நிலையங்கள், அதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

இங்கு 1,70,000 பள்ளி நூலகங்கள் தவிர, குழந்தைகளுக்கென்றே 7,700 குழந்தை நூலகங்கள் அனைத்தும் அரசால் நிறுவப்பட்டவையே. சோவியத் ஆட்சி அமைக்கப்பட்டதிலிருந்து 800 கோடிப் புதிய புத்தகங்கள் குழந்தைகளுக்கென்றே வெளியிடப்பட்டுள்ளன. 70க்கு மேற்பட்ட பதிப்பகங்கள் குழந்தைகளுக்கென்றே நூல்களை வெளியிடுவதில் ஈடுபட்டுள்ளன. தவிர இளம் சிறார்களுக்கென்று ஏறக்குறைய 100 செய்திப் பத்திரிகைகளும், இதழ்களும் வெளிவருகின்றன.

இங்கு கீவ் நகரில் உள்ள குழந்தைகள் நூலகமே, நாட்டிலுள்ள மிகச் சிறந்த நூலகம் என்று கருதப்படுகிறது. இது மொத்தம் 2,00,000 நூல்களைக் கொண்டது. இங்கு சிறு குழந்தைகளுக்கான ''தேவதைக் கதைகள்'' கொண்ட அறை, பல வண்ண ஓவியங்களால் அலங்கரிக்கப்படுள்ளது.

எல்லா நூலகங்களிலுமே, பள்ளி செல்லுமுன் உள்ள பருவத்தினருக்கென்று, குழந்தைத் திரைப்படங்கள் திரையிடப்படுவதற்கான வசதி உண்டு.



விளையும் பயிர்!

# இளம் பாடகி

பள்ளிப் படிப்பு முடிந்ததும், இசைக் கல்லூரியில் சேர்ந்து சிறந்த பாடகியாக வரப் போகிறேன்!" என்று இளம் பாடகி டி. எம். ஞானாம்பாள் ஆர்வத்துடன் கூறுகிறாள்.

பதினொன்றே வயதான இம் மாணவி, சென்னை இராயப்பேட்டை, அவ்வை தி. க. சண்முகம் சாலையில் உள்ள ஸ்ரீவெங்கடேசுவரா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 7-வது வகுப்பில் படிக்கிறாள்.

இசையில் இவருக்கு ஆர்வம் எப்படி வந்தது?

காலஞ்சென்ற இவரது தந்தை திரு பி. ஆர். மணி அவர்கள் சென்னை வானொலியில் இசையமைப்பாளராகப் பணியாற்றியவர். அவர் ஓய்வு நேரங்களில் தம் மகளுக்குப் பாட்டு சொல்லிக் கொடுப்பாராம். அதுவே படிப்படியாக வளர்ந்ததாம்.

அதுமட்டுமல்ல, இம்மாணவியின் குடும்பத்தில் எல்லாருமே இசைத்துறையில் ஈடுபாடு கொண்டவர்களாக விளங்குகிறார்கள். இம்மாணவியின் தமக்கை நன்றாகப் பாடுவாராம். இம்மாணவியின் இரு சகோதரர்கள் சென்னை வானொலியில் ஒருவரும், பாண்டிச்சேரி வானொலியில் ஒருவரும் இசைப் பிரிவில் பணியாற்றுகின்றனராம். பிறகு கேட்க வேண்டுமா, ஞானாம்பாளின் இசைஞானத்துக்கு?

மாணவி ஞானாம்பாள் கர்நாடகம், மெல்லிசைப் பாடல்களை மிக நன்றாகப் பாடுகிறார். பள்ளி விழாக்களில் பாடிப் பரிசுகள் பல பெற்றுள்ள இம்மாணவியை ஆசிரியர்கள் ''நீ வருங்காலத்தில் சிறந்த பாடகியாக வருவாய்'' என்று வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்களாம்.

சென்னை வானொலி சிறுவர் நிகழ்ச்சிகளில் பாடிப் பாராட்டுதல்கள் பெற்றுள்ள ஞானாம்பாள்பேச்சுப் போட்டியிலும் முதல் பரிசு பெற்றுள்ளார்.

அன்பைப் பொழிவாளாம்—நல்ல
அறிவுரை சொல்வாளாம்
பண்பைத் தருவாளாம்—நாளும்
பாசம் கொள்வாளாம்!

துன்பம் வந்தாலும்—அதனைத்
துளியும் காட்டாமல்
என்றும் குடும்பத்திலே—இன்பம்
இருந்திட நினைப்பாளாம்!

கடமை செய்திடவே—நமக்குக்
கண்ணாய் இருப்பாளாம்
மடமை போக்கிடவே—நல்ல
மருந்தாய்த் திகழ்வாளாம்!

தம்மை அர்ப்பணித்தே—குடும்பம்
தழைக்க உழைப்பாளாம்
'அம்மா' என்றுலகம்—அழைக்கும்
அருளின் இருப்பிடமாம்!

'பூங்கொடி'

# அம்மா



இவர்தம் அரிய முயற்சியினாலேயே தமிழ் வித்துவான் தேர்வு நிலை உண்டாயிற்று; அன்று அந்த வித்தினை இட்டதன் பயனாகத்தான் இன்று பலர் புலவர் பெருமக்களாக விளங்குகின்றனர்.

தமிழ் வித்துவான் பாட அமைப்புக் குழுவிலும் - தேர்வாளர் குழுவிலும் இருந்து சிறந்த பணிகள் ஆற்றினார்; அக் குழுக்களில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக ஆக்க நெறிகள் பல கண்டனர்.

தமிழ் நெறிக்கு மாறாக நடக்க ஒருபோதும் நினைக்கமாட்டார்.

தமிழ் ஆசிரியர்களின் வருவாய் உயரவேண்டும் என அயராது பாடுபட்டார்.

நல்ல ஆளுமைச் சக்தி உடையவர் நமச்சிவாயர், இவரது ஓயாத உழைப்பையும், ஊக்கத்தையும் கண்ட சிலரது முயற்சியால், சென்னைத் தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளி ஆட்சிக் குழுவின் துணைச் செயலாளராய் இறுதி நாள் வரை இருந்து பணியாற்றினார். இது மட்டுமன்று; பல கல்வி நிலையங்களோடும் தொடர்புடையவராய் இருந்தார்.

அக்காலத்தில் சிறந்து விளங்கிய குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் உரிமையாளர் திரு கன்னையா அவர்கள், இவருடன் உடன் பிறந்தவர்போல் பழகியவர். அவரது துணையுடன் 1905-ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மாணவர்களுக்கு வேண்டிய பல நூல்களை எழுதி வெளியிட்டார்; இவர்தம் முயற்சியில் பங்கேற்றுத் தொடர்ந்து இவரது நூல்களை வெளியிட்டு வந்தனர், திரு. கன்னையா அவர்கள்.

அசசு வார்க்கும் உலைக்கூடமாக விளங்கிய 'நெல்சன் அண்டு கம்பெனி'யில் புதியபுதிய வடிவில் தமிழ் எழுத்துக்களை உண்டாக்கச் செய்தார், அதற்கு நன்றி செலுத்துவது போன்று இன்றும் நெல்சன் கம்பெனியில், சில வகை அச்சுக்கு 'நமச்சிவாயம் வரிசை' என்றே பெயரிட்டு வழங்குகின்றனர்!

அத்துடன் நில்லாது, தாமே 'தமிழ்க் கடல் அச்சகம்' என்ற ஒன்றை நிறுவினார்; தாமே பல நூல்களை வெளியிட்டார்.

குழந்தைகள், மாணவர் ஆகியவரின் உளவியல் ஆற்றலை அறிவதில் சிறந்தவர் கா. நமச்சிவாயர்.

முதல் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்புவரை பாடப் புத்தகங்கள் எழுதி முதன் முதலாக வழிகாட்டிய அறிஞர்!

இவரது பாடப் புத்தகங்கள் மாணவரின் தமிழ்க் கல்விக்கு அரண் செய்தன; படிப்படியாக மாணவரது அறிவை வளர்க்கும் முறையை இவரது பாடப் புத்தகங்களைக் கொண்டு நன்கு அறியலாம்.

இவரைப் போல அத்துறையில் அதாவது மாணவர்கள் படிப்படியாக அறிவுபெற உழைத்தவர் எவருமிலர் எனத் துணிவுடன் கூறலாம். ஏன், தமிழ்ப் பாடப் புத்தகங்கள் எழுதுவதற்கே மற்ற ஆசிரியர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்த பெரியார் இவரே ஆவர்!

பேராசிரியர் கா. நமச்சிவாயர் பாட நூல்களை மட்டும் எழுதினார் இல்லை, ஆத்திசூடி-வாக்குண்டாம்-நல்வழி ஆகிய நூல்களுக்கும் உரை எழுதிப் பதிப்பித்தார்.

இப்படி உரையாசிரியராய் மட்டும் விளங்கினாரில்லை; சிறந்த பதிப்பாசிரியராகவும் திகழ்ந்தார். தணிகைப் புராணம், தஞ்சைவாணன் கோவை, இறையனார் களவியல், கல்லாடம் முதலிய நூல்கள் சிறந்த எடுத்துக்காட்டு!

சிறந்த குழந்தைக் கவிஞர் என்பதற்கும்-இன்றைய குழந்தைக் கவிஞர்களுக்கு ஒரு முன்னோடியாய் விளங்கினார் என்பதற்கும் அந்தக் காலத்தில் அவரது குழந்தைப் பாடல்கள் பலவற்றைப் படித்த அறிஞர் பலர், இன்றும் தமது செவிகளில் நமச்சிவாயர் பாடல்கள் இனித்துக் கொண்டிருக்கின்றன என்று கூறுதலைக் கேட்ட இவர் 'நல்லாசிரியன்' என்ற திங்கள் இதழினைக் கொண்டு அதனைப் பதினைந்தாண்டுகள் நடத்தி-பள்ளி ஆசிரியர்களின் அறிவுக்கு ஆக்கமுண்டாக்கினார்.

இப்பேராசிரியரின் பெருமை இம் மட்டோடு நிற்கவில்லை; அவர் ஒரு சிறந்த நாடக ஆசிரியராகவும் திகழ்ந்தார்; 'கீசன்'— "பிருதிவிராசன்' ஆகிய நாடக நூல்கள் பாட நூல்களாகவும். மாணவர்கள் அரங்கிலேயும் - பிற அரங்கிலேயும் நடிக்கப்பெறும் நாடகங்களாகவும் திகழ்ந்தன!

அன்பினால் ஊக்கப்பெறுவது, அறிவினால் நடத்தப்பெறுவது எதுவோ அதுதான் வாழ்க்கை.

பெட்ரண்டு ரஸ்ஸல்.

இவரது விருந்தோம்பலில் பங்கேற்று, கணவர் சொல் தட்டாது இன்முகம் காட்டி விருந்து பேணு தலை மாண்புடையதாக்கிய பெருமை, வள்ளல் நமச்சிவாயரின் வீட்டரசியார் சுந்தரம்மாளைச் சாரும்.

இவ் வம்மையார், கணவர் கருத்தே தம் கருத்தெனக் கொண்டு, பதி சொல் தவறாதவராகவும் திகழ்ந்தார், இவர், சான்றான்மை மிக்க புனிதவதியார், இவர்கட்கு இரண்டு ஆண் மக்களும், இரண்டு பெண் மக்களும் உண்டு.

**தமிழ் மக்களுக்குப் பல விழாக்கள் இருக்கின்றன; இந்த விழாக்கள் எல்லாவற்றிலும் சிறந்த விழாவாகத் தமிழ் மொழிக்கு என ஒரு விழாத் தோற்றுவித்து, தைத் திங்கள் முதல் நாள் பொங்கல் விழாவினைத் 'தமிழ்த் திருநாளாகக்' கொண்டாடக் கற்றுத் தந்தவர்!**

அவர் கொண்டாடிய முதல் தமிழ்த் திருநாள் கூட்டத்திற்கு வருகை தந்த மக்கள் அனைவருக்கும் ஆப்பிள் பழம், வெற்றிலை பாக்கு, சந்தனம், பன்னீர் ஆகியவை தரப்பட்டன. தொடர்ந்து அவர் மறையும் நாள் வரை ஒவ்வோர் ஆண்டும் கமலாப் பழம் தந்து வந்தார் என்பது குறிப்பிடத்தகுந்த ஒரு செய்தியாகும்.

மேலும், தமிழ்த் திருநாளில் நகரத்தில் உள்ள எல்லாத் தமிழ்ப் புலவர்களும் அன்று ஒருங்கு கூடுதல் வேண்டும் எனவும் விழைந்து, தமது உந்து வண்டியை அனுப்பி எல்லாரையும் அழைத்துவரச் சொல்லுவார். அவரது வள்ளல் தன்மைக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

தமிழக வரலாற்றிலே அவர் செய்த சிறந்த செயல், திருவள்ளுவர் திருநாள் தோற்றுவித்தது. அதனை ஆசிரியர் மறைமலை அடிகளார் டாக்டர். உ. வே சாமிநாதய்யர் முதலியவர்கள் தலைமையில் சிறக்கக் கொண்டாடி, அத்திருநாள் நிகழ்ச்சியினை உலகத்தில் பல்வேறு கண்டங்களில் உள்ள அறிஞர்களுக்கும் தெரிவித்து அவர்களெல்லாம் தமிழகத்தில் கொண்டாடப்பெறும் வள்ளுவர் திருநாளுக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பி வைக்க ஊக்கிய பெருமையும், அவற்றை நூல் வடிவில் ஒரு சிறந்த நினைவு மலராக ஆக்கித் தந்த பெருமையும் அவரைச் சார்ந்தவையாகும்.

வள்ளல் நமச்சிவாயர் 13.3.36ல் தமிழகத்தையும் தமிழ் மக்களையும் நீங்காத் துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்தார். நமச்சிவாயர் நற்குணச் செல்வர்; தீமைக்கும் நன்மை செய்யும் நல்லியல்பு வாய்ந்தவர், குணசீலர், தங்குறை தீர்வுள்ளவர்.



# சோனார்


—அரு. தாணுமாலையன்

ஒலி மனித வாழ்வில் முக்கியமான பங்கினை வகிக்கிறது. இன்னிசையில் மயங்காத மனிதரில்லை. இடியின் ஓசையைக் கேட்டு மக்கள் நடுக்கமுறுகின்றனர். நமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் ஒலி மிகவும் அவசியமாகிறது (கொடிய நச்சினையுடைய கருநாகத்தினை, மகுடியின் இசையால் மயங்க வைக்க முடிகிறது) இவ்வைகள் அன்றாட நிகழ்ச்சிகளாகும்.

ஒலி நமக்கு எத்தனையோ பயனுள்ள கருவிகளைத் தந்து இருக்கிறது. அவற்றுள் ஒன்று கடல் பயணத்தின்போது நமக்குப் பயன்படும் 'சோனார்' என்னும் கருவியாகும். Sound Navigation and Ranging என்ற ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்துக்களை இணைத்து, சோனார் என்று இக் கருவியினைப் பெயரிட்டு அழைக்கிறார்கள். ஒலி அலைகளைப் பயன்படுத்தி, கடலின் அடியிலுள்ள பொருட்களைக் கண்டுகொள்ளவும் அப்பொருட்கள் எவ்வளவு தொலைவிலுள்ளன என்பதனைத் தெரிந்து கொள்ளவும், இவ்வகைக் குறிப்புக்களுடன் தடங்கலின்றிப் பயணம் செய்யவும் இக்கருவி பெரிதும் உதவுகிறது.

மின்காந்த அலைகள் எப்படி, வானில் வெகு தொலைவிலுள்ள பொருட்களை - அதாவது விமானங்கள் பெருமுகிற் கூட்டங்கள்- இவைகளைக் கண்டுகொள்ள பயன்படுகிறதோ, அதேபோன்று நீரின் அடிப்பகுதியில் பயன்படுமாறு, அதே தத்துவத்தினைப் பயன்படுத்தி ஆக்கப்பட்டது தான் சோனார். மின் காந்த அலைகளைப் பயன்படுத்தும் கருவிரேடார் Radar எனப்படும்.

மின்காந்த அலைகளால்-குறிப்பாக ஒளி அலைகளால் . நீரில் வெகுதூரம் செல்ல முடியாது. அவைகள் நீர்மப் பொருட்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதே இதற்குக் காரணம். ஆனால், ஒலி அலைகள், அவ்வாறின்றி, நீரில் தடங்



## அறிவியல் அரங்கம்

கலின்றி ஊடுருவிச் செல்கின்றன. ஒலி அலைகள் நீரில் ஊடுருவிச் செல்லும் போது, அவன் வழியிலுள்ள தடங்களில் மோதி, எதிரொலிக்கப்படவும் செய்கின்றன. இப்பண்பே சோனாரில் கையாளப்படுகிறது.

குவார்ட்சு, டர்மலின், இந்துப்பு என்பன படிகக் கற்களாகும். இவ் வகைக் கற்களில் சிற்சில நிலைகளில் திசைமாறு மின்சாரம் பாயுமாறு அமைக்கப்பட்டால், அக் கற்களில் ஒருவகை அழுத்த அலைகள் - அதாவது Pressure Waves தோற்றுவிக்கப்படுகின்றன. இவ்வலைகள், ஒலி அலைகளைப் போன்று செயல்படுகின்றன. மின் ஆற்றலை அழுத்த ஆற்றலாக - அழுத்த அலைகளாக மாற்றும் படிகக் கற்கள் Transducers என அழைக்கப்படுகின்றன.

உலகப் போர் நடந்த நாட்களில் தோன்றிய Radar Sonar முதலிய கருவிகள், அப்போது எதிரிகளின் விமானங்கள், நீர் மூழ்கிக்கப்பல்கள் இவைகளின் நடமாட்டத்தைத் தெரிந்து கொள்ள பெரிதும் பயன்படுத்கப்பட்டன. இப்போது இக் —கருவிகள் ஆக்கப்பூர்வமான செயல்களுக்கு -பயன்படுத்தப்படுகின்றன.

சோனார், கடலில் - மறைந்து கிடக்கும் பொருட்களைக் கண்டு தெரிவிக்கிறது. கப்பல் பயணத்தினை எளிதாக்குகிறது, கடலில் மீன்களின் கூட்டத்தின் இயக்கத்தினைக் காட்டுகிறது. இதனால் மீன்பிடிப்புத் தொழில் வளர்ச்சி அடைய உதவுகிறது. கடலின் ஆழத்தினைக் கண்டு கொள்ள உதவுகிறது. ஆரம்ப நாட்களில் சோனாரில், சாதாரண ஒலிஅலைகள் தாம் உபயோகிக்கப்பட்டது. என்றாலும், இன்று பெரும்பாலும் மிகை ஒலி அலைக்ள்தான் பயன்படுத்தப்படுகின்றன.


சோனார் இருவகைப்படும். முதல் வகை சோனாரில், அதுவே மிகைஒலி அலைகளைத் தோற்றுவித்து, நீரில் பரப்புகின்றது. இவ்வகை ஒலி அலைகள் எதிர்ப்படும் தடங்கலில் மோதி, எதிரொலிக்கப்பட்டு, திரும்பி வருகின்றன. இந்த எதிரொலியை, அதே Transducer-ரே ஏற்று, பொருட்களின் திசையையும் தொலைவையும், தொலைக்காட்சித் திரை T V Screen போன்ற ஒரு திரையில் காட்டுகின்றது, இந்த இனத்தைச் சேர்ந்த சோனார்கள் Active Sonars என அழைக்கப்படுகின்றன.

இரண்டாவது வகையைச் சேர்ந்த சோனாரில், ஒலி அலைகளை உண்டாக்கும் Transducer கள் இருப்பது இல்லை. இவைகள் கடலில், நீர் மூழ்கிக் கப்பல்கள் ஏற்படுத்தும் ஒலி ஆற்றலைப் பதிவு செய்ய உதவுகின்றன. இதிலுள்ள Transducer கள் அவைகளில் வந்து சேரும், ஒலி அலைகளை ஏற்று, பொருட்கள் கடலின் நீர் மட்டத்திற்குக் கீழ் இருப்பதை மட்டுமே காட்டுகின்றன. நீர்மூழ்கிக் கப்பல்கள் எவ்வளவு தொலைவில் உள்ளன என்பதைத் தெரிவிக்க இவ்வகை சோனார்களால் முடியாது. இந்த வகையைச் சேர்ந்த சோனார்கள் Passive Sonars என அழைக்கப்படுகின்றன.

உன் சொற்கள் எப்படி இருக்கின்றனவோ, அந்த அளவுக்கு உன் அன்பு மதிக்கப்பெறும்; உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி உன் செயல்கள் இருக்கும். உன் செயல்களுக்கு ஏற்றபடி உன் வாழ்க்கை இருக்கும்.

—சாக்ரட்டீஸ்

## வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
## உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
## அத்தேவைகளைச்சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
## டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்! உயர்ந்த தரம்! நியாயமான விலை! இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்—படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7456 TNSI


**தமிழ் வளர்த்த பெரியார்கள் :**

# தமிழர் திருநாளை அறிவித்த வள்ளல் கா. நமச்சிவாயர்

—சிறுவை நச்சினார்க்கினியன்

அவர் ஒரு நாள் தன்னிடமுள்ள பல்நாள் கடந்துவிட்ட 'புரோ நோட்' பத்திரங்களைச் (கடன் பத்திரங்களை) சேர்த்துப் பார்த்தார். ரூ. 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொகைக்கு அவை இருந்தன. 50 ஆண்டுகளுக்கு முன் 35 ஆயிரம் ரூபாய் என்றால், அதன் மதிப்பு இன்று பன்மடங்கு உயர்ந்து இருக்கும்! 'சிலரிடமிருந்தாவது வசூல் செய்யலாமே!' என்று ஒரு நண்பர் அறிவுரை கூறினார் அவரிடம். கடன் கொடுத்தவர் அமைதியாகச் சிரித்துக் கொண்டே சொன்ன பதில்:

'நான் இந்தத் தொகையைக் கடன் பட்டவர்களிடமிருந்து வசூல் செய்தால் அவர்கள் தம் வசம் உள்ள தட்டுமுட்டுச்சாமான்களையும் இழக்க நேரிடும். நான் பணம் கொடுக்கும்போதே மீண்டும் திருப்பிப் பெறவேண்டும் என்ற நினைப்பில் கொடுக்கவில்லை. இந்தப் பத்திரங்களையெல்லாம் கிழித்துப் போட்டு விடுங்கள்!''

இந்த அற்புத மனிதரிடம் தனி நபர்கள்தான் கடன் பட்டார்கள் என்பதில்லை! தமிழ் கூறும் நல்லுலகமே கடன்பட்டிருக்கிறது அவருக்கு. அவ்வளவு அதியற்புதத் தொண்டாற்றியுள்ளார் அவர் தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும்!

அவர்தான் வள்ளல் கா. நமச்சிவாயர்!


'வள்ளல் கா. நமச்சிவாயர்' என்ற பெயரைக் கேள்விப்பட்டதும் தமிழ் உள்ளங்கள் அவரைத் தாயினும் சாலப் பரிந்தூட்டும் தயாளனுக்கே ஒப்பிடுவர்! நமச்சிவாயர் 1876ஆம் ஆண்டு பிப்ரவரி 20ஆம் நாள் வெள்ளி இரவு 10-30 மணிக்கு வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள காவேரிப்பாக்கம் எனும் ஊரில் பிறந்தார்; இவர் தந்தையார் பெயர் இராமசாமி முதலியார்; தாய் அகிலாண்டவல்லி அம்மை.

தந்தை ஒரு திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்; வள்ளல் அவர்கள், தம் தொடக்கக் கல்வியைத் தம் தந்தையாரிடமே பயின்றார். எளிய குடும்பத்தினராகிய இவர், வேலை தேடிச் சென்னை வந்து முதலில் ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியராக அமர்ந்தார்.

ஒரு நல்லாசிரியர் மகன் ஒரு சாதாரண ஆசிரியராக இல்லாமல் பேராசிரியராக்த் திகழ வேண்டும் என்ற ஆவல் மேலீட்டினாலும், இயற்கையிலேயே தமிழ்க் கல்வியில் ஆர்வமும்நாட்டமும் உடையவராய் விளங்கியதாலும், பல தமிழ் நூல்களை விரும்பிக் கற்றார். சிறந்த தமிழ் ஆசிரியர் ஒருவரை நாடி முறையாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்க விரும்பினார்.

இந்தக் காலத்தில் தமிழ்ப் புலமையில் சிறந்தவராகவும் - புகழ் வாய்ந்தவராகவும் திகழ்ந்த சென்னைத் தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப்புலமை நடாத்திய மயிலை மகாவித்துவான் திரு. சண்முகம் பிள்ளை அவர்களிடம் பன்னிரண்டு ஆண்டுகள் தமிழ் பயின்று, சிறந்த தமிழ்ப் புலவரானார்.

1891-ல் தொடக்கப் பள்ளியில் ஆசிரியராய் அமர்ந்தார்; பின்னர் 1895-ஆம் ஆண்டில் ஓராண்டுக் காலம் சென்னை உயர்நீதிமன்ற அலுவலகத்தில் பணியாற்றினார்.



தமிழோடு இணைந்த உள்ளமுடைய இவர் அதனைவிட்டு செயிண்ட் சேவியர் உயர்நிலைப் பள்ளியில் நான்கு ஆண்டுக்காலமும், பின்னர் நார்த்விக் மகளிர் உயர்நிலைப் பள்ளியிலும், அதன் பிறகு இப்பொழுது நேஷனல் பாங்கு இருக்கும் கட்டடத்தில் இருந்த சிங்கலர்ஸ் கல்லூரியிலும் தமிழ்ப்புலமை நடத்தினார்.

1902-ஆம் ஆண்டு முதல் 1914-ஆம் ஆண்டுவரை சென்னை வேப்பேரி எஸ்.பி.ஜி. உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராய்ச் சிறக்கப் பணிபுரிந்தார்.

அக்காலத்தில் பல எதிர்ப்புகளுக்கிடையே பெண்களுக்கு எனத் தோற்றுவித்த அரசிமேரிக் கல்லூரியில் தமிழ்ப்புலமை நடாத்த இவரைத் தேர்ந்தெடுத்தார்கள், பாடம் சொல்லுவதில் பிறவிலேயே திறம் படைத்தவர் நமச்சிவாயர்.

அரசி மேரிக் கல்லூரியை நிலைபெறச் செய்ய அந்தகாலத்தில் அதன்முதல்வர் மிஸ்டலாஹே என்பவருடன் சேர்ந்து அரும்பாடுபட்டார். இந்த முதல்வர் வள்ளல் நமச்சிவாயரின் அறிவு-குண நலம் முதலியவற்றைப் பாராட்டி இவர்தம் மணிவிழா மலரில் குறிப்பிட்டுள்ளார்.

திரு நமச்சிவாயர் ஓய்வு பெறு முன், சிறிது காலம் மாநிலக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராய் இருந்தார்.

பேராசிரியர் நமச்சிவாயர் அவர்களின் புலமை நலம் அறிந்த சென்னைப் பல்கலைக் கழகத்தினர், 1917-ஆம் ஆண்டு தமிழ்த் தேர்வுக் குழுவின் ஆசிரியராய் நியமித்தனர்.

1920 முதல் 1934-ஆம் ஆண்டு வரை அரசினர் தமிழ்க் கல்விக் குழுவின் தலைவராய் இருந்தார்.

# சேமிக்கும் குடும்பமே செழிக்கும் குடும்பம் !

**அனைவருக்கும் ஏற்ற சிறுசேமிப்புத் திட்டங்கள் !!**

| திட்டத்தின் பெயர் | வட்டி விகிதம் | சிறப்பு அம்சங்கள் |
|---|---|---|
| **தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள் அலுவலகப் பணியாளர்கள்:** | | |
| 5 வருட வளரும் மாதச் சேமிப்புத் திட்டம் (Recurring Deposit) | 10.5% கூட்டு வட்டி | * அதிகப்படியான வட்டிவிகிதம் ஈட்டுறுதிச் சலுகை<br>* சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தின் மூலமாக முதலீடு செய்யும் வாய்ப்பு<br>• கடன் பெற வசதிகள். |
| **வருமான வரி செலுத்துவோர்:** | | |
| 15 வருட பொதுமக்கள் வருங்கால வைப்பு நிதி (Public Provident Fund) | 7.5% கூட்டு வட்டி | * வருமானவரிச் சட்டம் 80-சி பிரிவின் கீழ் வரி விலக்கு<br>* முதலீட்டை எந்த நீதி மன்றமும் ஜப்தி செய்ய முடியாது<br>* கடன் பெறவும் வசதிஉண்டு. வசதிக்கேற்றவாறு முதலீட்டை கூட்டியோ அல்லது குறைத்தோ செலுத்தலாம் (ஆண்டிற்கு ரூ. 100 முதல் ரூ. 30,000 வரை) |
| 10 வருடத் தொடர் வைப்புத் திட்டம் (Cummulative Time Deposit) | 6.75% கூட்டு வட்டி | * வருமான வரிச்சட்டம் 80-சி பிரிவின் கீழ் வரி விலக்கு சம்பளச் சேமிப்புத் திட்டத்தின் மூலமாகச் சேரலாம்.<br>* கடன் பெற வசதிகள். |
| **அதிகப்படியான பணம் திரும்பப் பெற விரும்புவோர்:** | | |
| 7 வருட தேசிய சேமிப்புப் பத்திரம் 5வது வெளியீடு (National Savings certificate Vth Issue) | 10.75% கூட்டுவட்டி | * ரூ. 100- ஏழே ஆண்டுகளில் 204.50 ஆக பெருகுகிறது. |

**விவரங்களுக்கு:**

| | | |
|---|---|---|
| சிறு சேமிப்பு இயக்குநர், நெ. 143, அண்ணாசாலை, சென்னை–600 002. | மண்டல தேசிய சேமிப்பு இயக்குநர் 92, அண்ணா சாலை சென்னை. 600 002. | எல்லா மாவட்ட ஆட்சியர்களும் மற்றும் ஆணையாளர், சென்னை மாநகராட்சி, உங்களுக்கு அருகாமையிலுள்ள அஞ்சல் அலுவலகம். |

ADVT


# மேடையில் பூத்த மலர்கள்

மேடையில் பேசும் சொற்பொழிவாளர்கள் சொல்லும் செய்திகளில் சில எப்பொழுதும் பசுமையாக நினைவில் நிற்கும். அந்த நகைச்சுவை செய்திகளில் சில இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**முத்தமிழ்க்காவலர்**
**கி. ஆ. பெ. விசுவநாதம்**

பள்ளிக்கூடத்துக்கு இன்ஸ்பெக்ஷனுக்கு வந்திருந்த கல்வி அதிகாரி ஒரு மாணவனைப் படிக்கச் சொன்னார்.

அந்த மாணவனோ, 'வாழைப் பழம்' என்பதை 'வாயைப்பயம்' என்று படித்தான்.

மீண்டும் படிக்கச் சொன்னார். அவன் 'வாயைப் பயம்' என்றுதான் படித்தான்.

அதிகாரிக்குக் கோபம் வந்தது. ஆசிரியரைத் தனியாக அழைத்து 'என்ன ஐயா பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறீர்?'' என்று கேட்டார்.

''இங்கே பயக்க வயக்கம் எல்லாம் இப்படித்தாங்க'' என்று சொன்னார் ஆசிரியர்.

**ஆட்சிமொழிக் காவலர்**
**கீ. இராமலிங்கனார்.**

காரைக்குடியில் நடைபெற்ற கம்பராமாயண மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ரசிகமணி டி.கே. சிதம்பரநாதமுதலியாரும், கம்பனிடம் மிகவும் ஈடுபாடு கொண்ட தூத்துக்குடி வழக்கறிஞரும் ஆபிரகாம் பண்டிதர் மருமகனுமான பால் நாடார் அவர்களும் காரைக்குடிக்கு வந்திருந்தனர்.

அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு எதிரே ஒரு ஓட்டல் இருந்தது. அதிகாலையில் காபி சாப்பிட விரும்பிய பால் நாடார், அந்த ஓட்டலிலிருந்து காபி வாங்கி வரச் சொன்னார். அந்தக் காபி ஒரே கறுப்பாக இருந்தது.

பால் நாடார் ''காபி, இப்படி கறுப்பாக இருக்கிறதே!'' என்றார்,

அருகிலிருந்த நண்பர் சொன்னார்: ''காபி வாங்கிவரச் சொன்னது பால் நாடாராச்சே.. அவர் 'பாலை நாடார்' என்று கறுப்பாகக் காபியைக் கொடுத்திருப்பான்'' என்றார்.

ரசிகமணி டி.கே.சி. அதற்கு ஒரு திருத்தம் சொன்னார்: ''அதுவல்ல காரணம், அந்த ஓட்டல்காரன் பாலக் காட்டான். அதனாலே பாலைக் காட்டான் ஐயா!''

**சாலமன் பாப்பையா**

சிவகாசிக்கு அரசுப்போக்குவரத்துக் கழகப் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தேன். பஸ்ஸில் திருவள்ளுவர் படம் மாட்டப்பட்டிருந்தது. ஆனால், பக்கத்தில் எழுதிவைக்கப்பட்டிருந்த குறளைக் காணோம்.

என் இருக்கைக்கு முன்னால் அமர்ந்திருந்த நடுத்தர வயதுப்பெண்கள் இருவர் பஸ்ஸில் மாட்டியிருந்த திருவள்ளுவர் படத்தைப் பார்த்துப் பேசிக்கொண்டு வந்தார்கள்.

ஒரு பெண் கேட்டாள்: ''அந்தப் படம் யாருடைய படம்?''

பக்கத்திலிருந்தவள் பதில் சொன்னாள். ''பஸ்ஸில் மாட்டியிருந்தா யாருடைய படமா இருக்கும்? பஸ் முதலாளி படமாதான் இருக்கும்''

''அவர் தாடியெல்லாம் வச்சிருக்காரே''

''ஒருவேளை நொடிச்சிப் போயிருப்பாரு.... பாவம்''

—அவர்களின் இந்தப் பேச்சைக் கேட்டு சிரிப்பதா - அழுவதா என்று எனக்குத் தெரியவில்லை.

**சிலம்பொலி சு. செல்லப்பன்.**

சில சொற்களைச் சிலரால்தான் சொல்லமுடியும். மற்றவர்கள் சொன்னால் பொருள் வேறாகிவிடும். வயதான பெண்கள் துணிக்கடையில் துணி வாங்கும்பொழுது ''வாழ்த்திக் கொடு'' என்று கேட்பார்கள். கடைக்காரரும், ''இந்தச் சேலை நீண்டநாள் இருக்கும். சாயம் போகாது'' என்று வாழ்த்துவார்.

தஞ்சை மாவட்டத்தில் கதிரறுக்கும் அரிவாளை, கொல்லன் பட்டறையிலிருந்து வாங்கும் பொழுது பெண்கள், கொல்லனிடம் வாழ்த்திக் கொடுங்கள் என்பார்கள்.

அவரும், ''நீ அறுக்க... உன் மகள் அறுக்க, ...பேத்தி அறுக்க.. இது உதவும்'' என்று வாழ்த்துவார்.

—இப்படி வேறு யாராவது பேச முடியுமா?

தொகுப்பு: மாமூலன்.



# தங்கப்பதக்கம் பெற்ற தமிழகக் காவலர்

பாகிஸ்தானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் திருச்சியைச் சேர்ந்த காவலர் திரு சுப்பிரமணியம் 200 மீட்டர் தூர ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்டு முதலாவதாக வந்து தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

கராச்சியில் சென்ற மார்ச் திங்கள் 19 முதல் 21ந் தேதி வரை தேசீய விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் விளையாட்டு வீரர்களுடன் இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும் கலந்துகொண்டனர்.

இதில் 200 மீட்டர் ஓட்டப் போட்டியில் தமிழ்நாடு காவலர் திரு சுப்பிரமணியம் முதல் பரிசாக தங்கப்பதக்கம் பெற்றார். 21.8 செகண்டில் அவர் 200 மீட்டர் ஓடினார். 100 மீட்டர் ஓட்டத்தில் இரண்டாவதாக வந்தார். (நேரம் 10.7 செகண்டு)

இவரது விளையாட்டு ஆற்றலைப் பாராட்டி காவல்துறை டைரக்டர் ஜெனரல் திரு கே. ஆர். ஷெனாய் இவருக்கு ரூ. 500/- ரொக்கப்பரிசு வழங்கினார். அத்துடன் முதல் நிலை காவல்காரரான இவருக்கு உதவி சப்-இன்ஸ்பெக்டர் பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது.

1955 ஆகஸ்ட் 12ல் தஞ்சை மாவட்டம் பேராவூரணியில் பிறந்தவர், திரு சுப்பிரமணியம். பள்ளி நாட்களில் சடுகுடு விளையாட்டில் தீவிரமாக ஈடுபட்டார். 1976ல் திருச்சி மாவட்டத்தில் இரண்டாவது நிலை காவலராக பணியில் சேர்ந்தார்.

1977ல் சென்னையில் மாநில போலீஸ் விளையாட்டுப் போட்டி நடைபெற்றபோது இவரது திறமை வெளிப்பட்டது. அப்போது 100 மீட்டர் ஓட்டத்தினை 11.2 செகண்டில் ஓடி மூன்றாவதாக வந்தார். ஆனால் 1979ல் நடைபெற்ற இதே விளையாட்டுப் போட்டியில் 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர் ஆகிய போட்டிகளில் முதலாவதாக வந்தார். இதில் 200 மீட்டர் ஓட்டத்திலும், 400 மீட்டர் ஓட்டத்திலும் 22 ஆண்டுகளாக இருந்துவந்த ரெக்கார்டை சுப்பிரமணியம் உடைத்தது குறிப்பிடத்தக்கது. பின்னர் லக்னோ, திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொண்டு வெற்றி பெற்றார்.

1980ல் சென்னையில் தமிழ்நாடு அமெச்சூர் சங்கத்தினர் நடத்திய விளையாட்டுப் போட்டியில் இவர், ஆசிய தங்கப்பதக்கம் பெற்ற திரு குணசேகரனை 200 மீட்டர் ஓட்டத்தில் தோற்கடித்து முதலாவதாக வந்தார். இதனைப் பாராட்டி காவல்துறை டைரக்டர் ஜெனரல் இவருக்கு அப்போது ரூ. 200/- ரொக்கப்பரிசு வழங்கினார்.

பாகிஸ்தானில் நடைபெற்ற தேசீய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட விளையாட்டுக் குழு நிதியிலிருந்து திரு சுப்பிரமணியத்திற்கு ரூ500/- நிதி வழங்கினார்.



# அம்மாதான்!

''அப்பா?''

''என்னம்மா?''


''அடுப்படியில் கண்ணாடி ஜாடி உடையும் சப்தம் கேட்டதே, அக்கா உடைத்திருப்பாளோ?

''நிச்சயம் இருக்காது. உன் அம்மா தான் உடைத்திருப்பாள்!''

''அதெப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள் அப்பா?''

''உன் அக்கா உடைத்திருந்தால் இந்நேரம் பாத்திரம் பண்டங்களையெல்லாம் தூக்கி வீசி உன் அம்மா அமளிதுமளி செய்திருப்பாளே! அப்படி எதுவும் இல்லாததால் தான் சொல்கிறேன்—உடைத்தது உன் அம்மாவாகத்தானிருக்கும்!





# சிறந்த திரைப் படங்கள் கலைஞர்கள்



தமிழ்நாடு அரசின் சார்பில் 1978-79ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப் படங்கள், கலைஞர்கள்-விருது வழங்கும் விழாவும், சிறந்த திரைப்படங்களுக்கு உதவித் தொகை வழங்கும் விழாவும் 13.4.1980 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு வருகை தந்திருந்த அனைவரையும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எம்.எஸ்.கோபால் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆளுநரின் ஆலோசகர் திரு டி. என். லட்சுமிநாராயணன் அவர்கள் தலைமையுரையாற்றினார்.

மாண்புமிகு நீதிபதி திரு. பி. ஆர். கோகுல கிருஷ்ணன் அவர்கள் தேர்வுக்குழுவின் அறிவிப்பையும், பாராட்டுரையையும் வழங்கினார்.

தென்னிந்திய திரைப்பட வர்த்தகச் சங்கத் தலைவர் திரு எம். பக்தவத்சலா அவர்கள், தென்னிந்திய திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் திரு. பி. புல்லையா அவர்கள், தென்னிந்தியத் திரைப்படக்கலைஞர்கள் சங்கத் தலைவர் நடிகர் திலகம் திரு சிவாஜி கணேசன் ஆகியோர் பாராட்டுரை வழங்கியபின், மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பி.பட்வாரி அவர்கள் கலைஞர்களுக்கு விருது - உதவித்தொகை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார்.

விழாவின் நிகழ்ச்சிகளை திருமதி ஸ்ரீவித்யா அவர்கள் தொகுத்தளித்தார்.

விழா இறுதியில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி அவர்கள் நன்றி நவின்றார்.

1978-79ஆம் ஆண்டு விருது பெறும் திரைப்படங்கள், கலைஞர்கள் விவரம் வருமாறு:

முதல் பரிசு
—சிறந்த படம்...'முள்ளும் மலரும்'

இரண்டாவது பரிசு
—சிறந்த படம்...'அவள் அப்படித்தான்'

மூன்றாவது பரிசு
—சிறந்த படம்...'இளமை ஊஞ்சலாடுகிறது'

சிறப்புப் பரிசு-படம் ...'வருவான் வடிவேலன்'

சிறந்த நடிகர் ...திரு ஸ்ரீகாந்த்

சிறந்த நடிகை ...திருமதி லட்சுமி

சிறப்புப் பரிசு-நடிகர்...திரு ரஜினிகாந்த்

சிறப்புப் பரிசு-நடிகை..செல்வி ஸ்ரீப்ரியா

சிறந்த இயக்குநர் ...திரு துரை

சிறந்த கதாசிரியர் ...திரு ஜெயகாந்தன்

சிறந்த உரையாடல் ஆசிரியர் ...திரு கே. பாலசந்தர்

சிறந்த இசையமைப்பாளர்..திரு எம். எஸ். விஸ்வநாதன்

சிறந்த பின்னணிப் பாடகர் ...திரு மலேசியா வாசுதேவன்

சிறந்த பின்னணிப் பாடகி ...திருமதி வாணி ஜெயராம்

சிறந்த பாடலாசிரியர் ...கவிஞர் திரு. முத்துலிங்கம்

சிறந்த ஒளிப்பதிவாளர் (வண்ணப் படம்) ...திரு திவ்ாரி

சிறந்த ஒளிப்பதிவாளர் (கறுப்பு-வெண்மை படம்) திரு யு.ஆர். நல்லுசாமி ...திரு ஞானசேகரன்

சிறந்த குழந்தை நடிகை ...சிறுமி சுதா

**உதவித் தொகை பெறும் திரைப்படங்கள்:**

1. ஒரு வீடு ஒரு உலகம்
2. சதுரங்கம்
3. தேவைகள்
4. பேர் சொல்ல ஒரு பிள்ளை



# ஏதடி சாதி மதம்?



குடைக்கம்பின் பிடிவளைவுப் புருவத் தோடும்
குறுகுறுக்கும் கருநாவற் பழக்கண் ணோடும்,
படைவீரர் அணிகாட்டி வரிசை யாகப்
பனைநிற்கும் வரப்பின்மேல் உடல் குலுங்க
நடைபோட்டுக் கண்ணம்மாள் வந்தாள்; நல்லான்
நினைவிழந்தான்; அந்தப்பொற் சிலையை நோக்கி
மடைதிறந்தும் குறையாத அன்பு வெள்ளம்
மனந்தேக்கி மாமரத்து நிழலில் நின்றான்!

தடியூன்றும் முதுகிழவன் உடலே போன்ற
தன்மையிலே வளைந்தகருக் கரிவாள் தன்னைப்
பிடித்தவளாய் வயலுக்குள் இறங்கி, மின்னும்
பொன்வண்ணத் திருமேனிக் கதிர்கள் தம்மின்
அடிபிடித்துச் சரசரென அக்கண் ணம்மாள்
அறுப்பவள்போல் குனிவதையும், ஓரக் கண்ணால்
நொடிக்குநொடி தானிருக்கும் பக்கந் தன்னை
நோக்கலையும் அவன்கண்டான்; மனம்பூரித்தான்!

கதிரறுப்பு முடிந்தது; தம் கூலிக் காகக்
காத்திருந்த ஆட்கள்தமை அனுப்பிப் பின்னர்
எதிரிருந்த கண்ணம்மாள் தன்னை நோக்கி
''உன்றனுக்குக் கூலியில்லை; ஆமாம்!'' என்றான்.
''இதுநல்ல கதைஆண்டே! வேலை செய்தால்
எவரேனும் கூலிதர மறுப்ப துண்டோ?
எதற்காகக் கூலிஎனக் கில்லை? ஐயே!
எவரிடத்தில் இதைச்சொல்வேன்?'' என்றாள் பேதை!

இத்தனைக்கும் பதிலாக நல்லான் ''பெண்ணே!
இருநாளாய் நான்உன்னைக் கவனிக் கின்றேன்:
சத்தான தென்பாங்கைப் பாடிக் கொண்டே.
சிரிப்புடன்ஓர் மாதிரியாய் என்னைப் பார்த்துப்
பித்தேறச் செய்கின்றாய் கள்ளி! ஏதும்
புரியாத பெண்ணாநீ? கூலி கேட்டுக்
கத்தாதே! அருகில்வா! வயற்காட் டுக்குள்
கொண்டாலும் கொடுத்தாலும் காண்பா ரில்லை!''



என்றுக்ளிப் பாக்குநிறத் தோள்மேல் மெல்ல
இருகையின் விரல்பத்தைத் தவழ விட்டான்!
ஒன்றிரண்டு மூன்றென்னும் கணக்கே இன்றி
உதட்டுமுத்தம் வைத்திடவும் விருப்பங் கொண்டான்!
''நன்றல்ல இச்செய்கை!'' என்றே மங்கை
நழுவுதல்போல் மேலுக்குக் காட்டிக் கொண்டாள்!
''என்னஆண்டே, நானோஓர் நடவுக் காரி!
என்மேலே ஆசைவைத்தீர்!'' என்றாள், நல்லான்...

''பிறையேஉன் இதழென்ன வேம்பா? எட்டிப்
பழமா'' என் றுரைத்தபடி அடி நகர்த்திக்
கறைபடிந்த இதழுக்குள் காவி வண்ணம்
காட்டுகின்ற பல்தெரிய அவள் சிரிக்கும்
முறைவியந்து, கையிரண்டை வளையாய் வீசி
மங்கைநல்லாள் அங்குமிங்கும் ஓடா வண்ணம்
சிறைசெய்தான்! இதழ்சேர்த்தான்! ''உயர்வும் தாழ்வும்
சிலர்மெச்சப் பலர்தூற்றும் ஒன்றே'' என்றான்!

ஒருவழியாய்க் கதைமுடிய நிலவும் தோன்றி
ஒளிமுத்துச் சிரிப்புதிர்க்கும். அவளோ, ''ஆண்டே!
எருமைவால் போல்நீட்டி நுனி பிரித்த
எழிலான சடைபோடக் கற்றே னாநான்?
சருகான இதழின்மேல் சிவப்புச் சாயம்
சேர்க்கத்தான் கற்றேனா ? நீங்கள் பெற்ற
பெருஞ்செல்வம் பெற்றேனா? நாம் மணக்கப்
பேரெதிர்ப்புக் காட்டிடுவார் ஊரார்!'' என்றாள்.

''கண்ணம்மா இன்னும் நீ ஆண்டே என்றா
கூறுகிறாய்? அச்சொல்லை மறப்பாய்! நாளும்
உண்ணாமல் உறங்காமல் உழைக்கும் ஏழை
உரமாகச் செழித்ததுதான் ஆண்டைக் கூட்டம்!
வெண்ணெய்நிறம் கறுப்பென்பார் ஊரார்; காணும்
விழியிருந்தும் அதை ஒப்பி ஏற்றால் நன்றா?
எண்ணத்தால் ஒன்றானோம்; ஊரார்க் கஞ்சும்
இயல்பைவிடு; மணப்போம்நாம்!'' என்றான் நல்லான்.



பட்டுக்கோட்டை இராசேந்திரன்

பொன்விழா நினைவு

# உப்புச் சத்தியாக்கிரகம்

'சோமலெ'

**1930** ஏப்ரல் 30-ஆம் நாள் காலை 6.00 மணிக்கு, வேதாரண்யத்தில், ஆங்கிலேய அரசின் சட்டங்களை மீறி மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தலைமையில் தொண்டர்கள் உப்புக்காய்ச்சினார்கள். அந்த நிகழ்ச்சியின் ''பொன்விழா'' கொண்டாடப்பெறும் இந்த நேரத்தில், அந்த ஊரைப்பற்றியும், உப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்ற முறையைப்பற்றியும், விளைவுகளைப் பற்றியும் சிறிது நினைவு கூர்வோம்.

வேதாரண்யம், தமிழ்நாட்டின் கடற்கரையில் தஞ்சை மாவட்டத்தின் தென் கிழக்குக் கோடியில் அமைந்த ஒரு சிறு நகரம். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடிய தேவாரப் பதி. சப்தவிடங்கத் தலம். அர்த்தோதயம், மகோதயம் என்ற திருவிழாக்களும் கொண்டாடப் பெறும் சிறப்பை உடையது.

பரஞ்சோதி முனிவர், அகோர தேவர், தாயுமானவர் மற்றும் புகழ்பெற்ற பல ஓதுவார்கள் ஆகியோர் பிறந்தது வேதாரண்யம் எனப்படும் இந்தத் திருமறைக்காட்டில் தான்.

கடலோரமாக அமைந்த இவ்வூர் உப்பளத் தொழிலுக்குப் புகழ் பெற்றது. இப்பகுதியில் 30-35 சதுர மைல் பரப்பில் பளிங்கு போன்று வெள்ளை வெளேரென இயற்கையாக உப்புப் படிந்திருக்கும்.

**உப்புச் சத்தியாக்கிரகம்**

ஆங்கிலேயருடைய ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்ற காந்தியடிகள் பல போராட்டங்களை நடத்தினார். சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களைக் கவரும் வகையிலும் பொருளாதாரக் கண்ணோட்டத்துடனும் ஒவ்வொரு இயக்கத்தையும் காந்திமகான் உருவாக்கினார். இவ்வாறு அவர் நடத்திய பல இயக்கங்களில் உப்புச்சத்தியாக்கிரகமே மிகவும் முக்கியமானது என்று இந்திய அரசியல் விடுதலைப் போராட்டத்தைப்பற்றி ஆராய்ந்தவர்கள் கருதுகிறார்கள்.

உப்பு, கடலில் விளைகிறது. அது, இயற்கையாகக் கிடைக்கிற ஒரு பொருள். அரசன் முதல் ஆண்டி வரை ஒவ்வொருவனுக்கும் கட்டாயமாகத் தேவைப்படுகிற ஒரு பொருளுக்கு வரிவிதிக்கக் கூடாது என்பது காந்தியடிகளின் கொள்கை.

கோடிக்கணக்கான இந்தியரில் ஒருவர் தவறாமல் உபயோகிக்கும் பொருளாக இருப்பதால் இந்த இயக்கம் சாதாரண மக்களுடைய கவனத்தையும் ஈர்த்தது.

கடலில் இலவசமாக அள்ளக் கூடியதாக இருந்தும் ஆங்கிலேய அரசாங்கம் விதித்த வரிகளால் உப்பு ஒரு படி இரண்டு ரூபாய் வரை விற்றது.

இந்தியர் செய்துவந்த உப்பு வியாபாரத்தை ஆங்கிலேயர் செய்வதையும், வெளிநாடுகளிலிருந்து உப்பை இறக்குமதி செய்து ஆங்கிலேயர் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டதையும், இந்திய உப்பளங்கள் மூடப்பட்டு வருவதையும் மகாத்மா சுட்டிக் காட்டினார்.

**உப்பு வந்த காரணம்**

இங்கிலாந்துக்குத் தேவையான மூலப் பொருள்களெல்லாம் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டன. அவற்றை எடுத்துக் கொண்டு போவதற்கு இங்கிலாந்திலிருந்து வரும் கப்பல்களில் சரக்குகள் ஒன்றும் இராது. கப்பல்கள் தண்ணீரில் போதுமான அளவுக்கு அமுங்க, பாரம் ( BALLAST ) தேவைப்பட்டது. பிரிட்டனிலிருந்து வரும்போது இந்த அடிபாரத்திற்காக மணல் மூட்டைகளை ஏற்றிவந்தார்கள். மணல் மூட்டைகளுக்குப் பதில் உப்பு மூட்டைகளை ஏற்றிவந்தால் அவற்றை இங்கே விற்றுப் பணம் பண்ணலாமே என்று கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு யோசனை உதித்தது. ஆகவே, சீமையிலிருந்து மூட்டை மூட்டையாக உப்பு வர ஆரம்பித்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் மகாத்மா உறுதி கொண்டார்.

குஜராத்திலுள்ள 'டாண்டி' என்ற இடத்துக் கடற்கரையில் உப்புச் சட்டங்களை மீறப்போவதாக அண்ணல் காந்தியடிகள் அறிவித்தார். அவர் விரும்பியவாறு அந்தத் தலத்தில் எல்லா ஏற்பாடுகளையும் சர்தார் வல்லபாய்படேல் செய்தார். அதே மாதிரியான ஒரு போராட்டம் தமிழ் நாட்டிலும் நடந்தது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் உப்புச்சத்தியாக்கிரகம் நடைபெறவில்லை.

*1930ஆம் ஆண்டு, வேதாரண்யம் மேல வீதியில் தொண்டர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த உப்புச் சத்தியாக்கிரக முகாம்.*







*1930ல், வேதாரண்யம்—அகஸ்தியம் பள்ளி உப்பளத்தில், உப்புச் சத்தியாக்கிரகம் நடந்து உப்பு அள்ளிய இடத்தில் அமைந்திருக்கும் நினைவு ஸ்தூபி.*

**காந்தியாரும் வேதரத்தினமும்**

டாண்டியில் மகாத்மா தலைமையில் சர்தார் வல்லபாய் படேலைத்தளபதியாகக்கொண்டு உப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. வேதாரண்யத்தில் இராஜாஜியின் தலைமையில் சர்தார் வேத ரத்தினத்தைத் தளபதியாக கொண்டு உப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்றது.

அமெரிக்க நாடுகளின் சுதந்திரப் போருக்கு, பாஸ்டன் நகரில் தேயிலை ஒரு சாதனமாக உதவியது. இந்திய விடுதலைப்போரில் அந்தத் தேயிலையின் இடத்தைப் பெற்றது, உப்பு. சுருங்கச் சொன்னால் பிரிட்டிஷ் பேரரசின் அடிப்படையைத் தகர்த்தது மகாத்மா காந்திஜியின் உப்புப் போர்.

உப்புச்சத்தியாக்கிரகம்நடத்துவதற்கு வேதாரண்யம் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டது என்பது, ஒரு சுவையான வரலாறு. இவ்வூரைச் சேர்ந்த திரு வேதரத்தினம் 19 வயதிலேயே (1916-ஆம் ஆண்டில்) கதர் உடை உடுத்தும் பழக்கத்தை மேற்கொண்டு நாட்டுப்பணிகளில் ஈடுபட்டார். 1927- இல் அவ்வூரில் தஞ்சை மாவட்டம் அரசியல் மாநாட்டை, மாகாண மாநாடு போல நடத்தினார். அதைத் தொடர்ந்து, தமிழ் மாகாண அரசியல் மாநாடு 1929 இல் வேதாரண்யத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதனால் சர்தார் வேதரத்தினத்தின் புகழ், இந்திய நாடெங்கும் பரவி அவருடைய செயல்திறனைஅனைவரும்போற்றினர். அந்த மாநாட்டின் விளைவாகத் தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியின் தலைமையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. பல்லாண்டுகளாக அரசியல் வானில் கொடி கட்டிப்பறந்த புகழ்பெற்ற வழக்கறிஞர் திரு எஸ். சீனிவாச ஐயங்கார் தம் செல்வாக்கை இழந்து, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்தும் விலகிக் கொண்டார்.

**திருப்பு முனை**

திருச்செங்கோடு ஆசிரமத்தில் இருந்தவாறே இவற்றையெல்லாம் கவனித்த இராஜாஜி, சர்தார் வேதரத்தினத்தைத் தளபதியாக வைத்துத்தான் தமிழ்நாட்டின் அரசியல் போக்கில் ஒரு திருப்பு முனையைத் தம்மால் ஏற்படுத்த இயலும் என்று நினைத்தார். காந்தியடிகளிடம் இசைவு பெற்றுத் தமிழ்நாட்டில் உப்புச் சத்தியாகிரகத்தை மேற்கொண்டார்.

தூத்துக்குடியிலும் அதிராமபட்டிணத்திலும் உள்ளவர்கள் தங்கள் ஊர்களில் உப்புச் சத்தியாக்கிரகத்தை நடத்தும்படி வேண்டிக் கொண்ட போதிலும் இராஜாஜி வேதாரண்யத்திலே அதை நடத்த முடிவு செய்தார். மக்களிடம் செல்வாக்குப் பெற்று உறுதியாக இயக்கத்தை நடத்தி வெற்றி காணக் கூடிய தளபதியான ஒருவர் வேதாரண்யத்தில் மட்டுமே இருந்ததை இராஜாஜி உணர்ந்தார்.

திருச்சியிலிருந்து பாத யாத்திரையாக 100 தொண்டர்களுடன் இராஜாஜி வேதாரணியத்திற்கு தமிழ்ப் புத்தாண்டுநாளில் புறப்பட்டார்.. ''கத்தியின்றி— இரத்தமின்றி, யுத்தமொன்று வருகுதே'' என்ற நாமக்கல் கவிஞரின் பாடலைப் பாடிக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 100 தொண்டர்கள், சுகபோகங்களையெல்லாம் துறந்து கடும் வெயிலில் நடந்தனர். எல்லா வகையான இடர்களையும் பொறுத்தனர். தலைவர் விதித்த கடும் கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொண்டு முன்முறுவலுடன் இயக்கத்தில் ஈடுபட்டனர்.

தஞ்சை மாவட்டத்துக்குள் தொண்டர்கள் நுழைந்ததும் ஆங்கிலேய கலெக்டர் இந்த இயக்கத்திற்கு எவ்வளவோ இடையூறுகள் செய்தார். சத்தியாகிரகிகளுக்குச் சோறு போடுபவர்களுக்குச் சிறை என்று அரசு செய்த அறிவிப்பை வேதரத்தினம் பிள்ளை அலட்சியப்படுத்தினார். அவருடைய செல்வாக்கால் அயல் நாட்டு அரசின் சூழ்ச்சி முறியடிக்கப்பட்டது.

தலைமுறை தலைமுறையாகச் சோறுபடைத்த சோழவள நாட்டில், சத்திரம் கட்டிய பரம்பரையில் வந்த மக்கள் இந்தச் சவாலை ஏற்கத் துணிந்தனர். இரவில் சோறு சமைத்து, சாப்பாட்

டுப் பொட்டலங்களைக் காடுகளில் மரங்களில் கட்டித் தொங்கவிடலாம் என்று சர்தார் கூறினார். அவ்வாறே தஞ்சைத் தரணி மக்கள் செய்து காட்டினர்.

மாவட்டம் முழுவதும் - குறிப்பாக, யாத்திரை வழித்தடம் எங்கும் - அ.வே. (சர்தார் அ. வேதரத்தினம்) சென்று மக்களை உற்சாகப்படுத்தி வந்தார். எல்லா ஊர்களிலும் தொண்டர்களை வரவேற்கவும் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கவும் விருந்து படைக்கவும், அ.வே. அனைத்து ஏற்பாடுகளையும் செம்மையாகச் செய்துவிட்டார். ஒவ்வொரு ஊரிலும் அவர் குறிப்பிட்டிருந்த ஆட்களை அரசு அலுவலர் விரட்டித்தடுத்துவிட்டால் அந்தப் பொறுப்புகளை நிறைவேற்ற மாற்று ஏற்பாடுகளையும் சர்தார் வேதரத்தினம் செய்திருந்தார். கூட்டங்களுக்கு வருபவர்களைப் போலீசார் அடிப்பார்கள். காலில் கயிறு கட்டி இழுப்பார்கள்!

### வேதாரண்யத்தில்

வேதாரண்யம் தான், உப்பு அள்ளுவதற்குக் குறிக்கப்பட்ட களம். ஆகையால் அந்த ஊரில் ஆங்கிலேய அரசின் அட்டூழியம் அளவு கடந்ததாக இருந்தது. இரண்டு மாதம், ஊரே அல்லோல கல்லோலப்பட்டது.

அ.வே.வின் குடும்பத்தாரும் நண்பர்களும் அவருடன் பழகிய தொண்டர்களும் பட்டபாடு சொல்லத்தக்கதன்று, எழுதவும் இயலாது. அவற்றை இன்று யாரும் நம்பவும் மாட்டார்கள். அந்த அளவுக்குக் கொடுமைகள் நடந்தன.

சந்து பொந்து மூலை முடுக்குகளிலெல்லாம் இரவு பகலாகப் போலீசார் நிறுத்தி வைக்கப்படடிருந்தார்கள். நினைத்தவர்களை நினைத்த மாத்திரத்தில் சிறையில் அடைத்து, ஊரிலுள்ள அனைவருக்கும் அச்சம் உண்டாகச் செய்தனர்.

சத்தியாக்கிரகிகள் தங்குவதற்குப் போடப்பட்ட கொட்டகையைப் பிரிக்கும்படி போலீசார் யாரையாவது ஏவி விடுவார்கள். புளியங்காயாலும் விளாமிச்சை வேராலும் தொண்டர்களை அடிக்க ஏற்பாடு செய்தார்கள்.

28.4.1930 அன்று பிற்பகலில் உப்புச் சத்தியாக்கிரக விரர்கள் வேதாரண்யத்திற்கு வந்தார்கள். அன்று முதல் 14.6.1930 வரை போலீசாரின் அத்துமீறலும் அடாவடித்தனமும் எல்லை மீறிய அளவில் இருந்தன.

உப்பளங்களை நோக்கிப் போக முடியாதபடி தொண்டர்கள் தடுக்கப்பட்டார்கள். முள் கம்பி போட்டு போலீஸ் காவல் இருந்தது. ஆனால், அதிகாரிகள் கவனிக்கத்தவறிய சிறு பகுதிகளைப் பார்த்து சர்தார் இரவோடு இரவாக ஆலோசனை செய்து குறிப்பிட்ட நேரத்தில் இராஜாஜியையும் 10 தொண்டர்களையும் கொண்டு ஓர் இடத்தில் உப்புக் காய்ச்சிவிட்டார்!

### வயிரப்பனின் வீரம்

நாவிதர், வண்ணார், கூலி வேலை செய்யும் பெண்கள் உள்பட வேதாரண்யம் மக்கள் அனைவரும் அ.வே.வின் உள்ளத்தை உணர்ந்து, வீரச் செயல் புரிந்தனர்.

இராமகாதையில் சுந்தரகாண்டத்தின் நாயகன் அநுமன் என்பது போல, நம்நாட்டின் சுதந்திரப் போரில் வேதாரண்யக் காண்டத்தின் நாயகன் அ.வே. (சர்தார் அ. வேதரத்தினம் பிள்ளை என்று சொல்லலாம்) அவர்தயாரித்த ஒரு நாவிதனின் கதையைக் கூறுவோம்:

நாவிதர் வயிரப்பனுக்கு இப்போது (1980) வயது 76. இராஜாஜிக்கும் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரக வீரர்களுக்கும் இவர் சவரம் செய்து கொண்டிருந்தார். நாவிதர் அனைவரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தனர். போலீசுக்கும் ஆங்கிலேய அரசுக்கு ஆதரவாக இருக்கும் ஏனையோருக்கும் சவரம் செய்வதோ முடிவெட்டுவதோ இல்லை என்பதே அந்த ஒப்பந்தம். அதனால் தியாகிகளுக்கு வேலை செய்து கொண்டிருந்த



உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத் தலைவர் ராஜாஜி அவர்களும்; தளபதி சர்தார் வேதரத்தினம் அவர்களும்.



நேரம் பார்த்து ஒரு போலீசுக்காரர் உட்கார்ந்துவிட்டார். அவருக்கு வயிரப்பன் சவரம் செய்யத் தொடங்கியதும், அவர் போலீசார் என்பதை யாரோ சொல்லிவிட்டார்கள். உடனே வயிரப்பன் வேலை செய்வதை நிறுத்திவிட்டார்.

போலீசார் சிலர் வந்து வயிரப்பனை அழைத்துச் சென்று விசாரித்தனர். 'என் கையை வெட்டினாலும் போலீசாருக்கு வேலை செய்ய மாட்டேன்' என்று வயிரப்பன் சொல்லிவிட்டார்.

இராஜாஜி, அ.வே. ஆகிய இருவருக்கும் அடுத்தபடி உப்புச் சத்தியாக்கிரகத்தில் சிறை செல்லும் பேறு, வயிரப்பனுக்குக் கிடைத்தது. அவருக்கு ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. சுதந்திர இந்திய அரசு வயிரப்பனுக்கு ஐந்து ஏக்கர் நிலமும் மாதம் 200 ரூபாய் ஓய்வு ஊதியமும் வழங்கியுள்ளது.

### வேதரத்தினத்திற்கு ஏற்பட்ட இன்னல்கள்:

உப்புச் சத்தியாகிரகத்தின் போது அதிகாரிகளை எதிர்த்ததற்காகவும், அரசு ஊழியர்களுக்கு வேண்டிய உணவு முதலிய வசதிகளை உள்ளூர்வாசிகள் கொடுக்காதிருக்கத் தூண்டியதாகவும் சர்தார் வேதரத்தினத்தின் மீது குற்றம் சாட்டப்பட்டது. அவருக்கு 6 மாதம் கடுங்காவல் சிறைத்தண்டனையும், 200 ரூபாய் அபராதமும் விதித்தனர். அவருக்குச் சொந்தமாக இருந்த உப்பளங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சத்தியாகிரகிகளுக்கு உணவு தயாரிக்க, வேதரத்தினத்திற்குச் சொந்தமான முகாமில் சமையல் சாமான்கள் பயன்படுத்தப்பட்டதால் அவற்றை அரசாங்கம் ஏலம் போட்டது.

### இயக்கத்தின் விளைவுகள்:

காந்தி - இர்வின் ஒப்பந்தத்தின் விளைவாக இயற்கையாகப் படிந்திருக்கும் உப்பைச் சேகரித்து தலையில் சுமந்து விற்கும் உரிமையை மக்கள் பெற்றனர். 10ஏக்கர் வரை லைசென்ஸ் இல்லாமல் உப்பு உற்பத்தி செய்து கொள்ள 1946-இல் இந்திய அரசாங்கம் ஆணை பிறப்பித்தது.

உப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்றபோது வேதாரண்யம் பகுதியில் 250 ஏக்கர் பரப்பில் மட்டுமே உப்பளங்கள் இருந்தன. இப்போது (1980-இல்) உரிமம் பெற்ற உப்பளங்கள் 1,000 ஏக்கரிலும் தன்பாடு உப்பளங்கள் ஏறத்தாழ 600 ஏக்கரிலும் மேட்டூர் கெமிக்கல்ஸ் 3,500 ஏக்கரிலும் விம்கோ 5,000 ஏக்கரிலும் உற்பத்தி செய்கின்றனர். மொத்த உற்பத்தி 10,000 ஏக்கருக்கு மேல் உள்ளது. இது உப்புச் சத்தியாக்கிர்கத்திற்கு முன்னர் இருந்ததைப் போல் 40 பங்கு ஆகும். உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழில்களும் ஏற்பட இருக்கின்றன.

மூலையில் இருக்கும் வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தின் விளைவாக முழு உலகிலும் புகழ் பெற்றிருக்கிறது. இந்த இயக்கத்துக்கு வழி காட்டிய மகாத்மாவையும் தமிழ்நாட்டில் அதற்குத் தலைமை தாங்கிய மூதறிஞர் இராஜாஜியையும் ஈடும் இணையுமில்லாத தளபதி சர்தார் வேதரத்தினத்தையும், பங்கு கொண்ட தொண்டர்களையும், ஆதரவு கொடுத்த பொதுமக்களையும் இந்தப் பொன்னாளில் நினைத்து உணர்ச்சி பெறுவோமாக!

## நில்-கவனி-செல்!

* சாலை ஒழுக்கம் சாவினைத் தவிர்க்கிறது.
* வாகனங்களை ஓட்டுகையில் வழிநடப்போரை நண்பராகவும் உறவினராகவும் கருதவும்.
* மோட்டார் வாகனங்கள் ஏற்றி வர வேண்டியது பயணிகளைத் தான்—துக்கச் செய்திகளை அல்ல!
* வழி உரிமையிருந்தாலும் சாலையில் மரியாதையைக் கடைப்பிடித்தல் வேண்டும். ஏனெனில், அது இறைவன் அளித்த வரம் அல்ல.
* "உங்களுக்குப் பின்" என்பதே வாகனங்களை ஓட்டுனரின் இலட்சியம்.

### மோட்டார் வாகனங்கள்

* நெருங்கிப் பின்தொடர்வதைத் தவிர்க்கவும்.
* அசுரவேகமாக ஓட்டுவது கூடாது.
* 'நின்று—செல்' விதியினை உதாசீனம் செய்யாது இருக்கவும்.
* வலப்புறம் திரும்பும்போது நேர் வழி செல்வோர்க்கு முதலில் வழி விடவும்.
* அதிக வேகம் ஆபத்துக்குள்ளாக்கும்.
* குடிபோதையில் வண்டி ஓட்டுவது விபத்துக்கு 'வித்தாகும்'.
* வாகனங்களின் தடைகளை (Brake) நன்றாக இயங்கும் தன்மையில் வைப்பது நலம்.
* விளக்கினைச் சரிபார்த்து விதிப்படி விளக்கு முகப்பு மையத்தில் குறியிடவும்.
* சைக்கிளுக்கென ஒதுக்கிய பாதையிலேயே சைக்கிள் செல்லவும்
* திடீரெனச் சைக்கிளைத் திருப்புவது ஆபத்து.
* சைக்கிளில் இணைந்து செல்லுதல் ஆபத்தானது.
* முன்னால் ஒளிவிளக்கும், பின்னால் சிவப்பு விளக்கும் அமைத்தே செல்லவும்.
* அதிக பாரம் உங்களை அவதிக்குள்ளாக்கும்.
* 'தடையை' (Brake) நல்ல நிலையிலேயே பராமரித்துப் பயணம் செய்யவும்.
* மோட்டார் வாகனங்களை முந்தாதீர்.
* வலது புறம் திரும்பும்போது மோட்டார் வர்கனங்களுக்கு முதலிடம் தரவும்
* இடது பக்கம் நடைபாதையை ஒட்டிச் செல்லவும்.



அரிசன மலை வாழ் மக்கள் நல விழாவையொட்டி தமிழக ஆளுநர், இந்திய அரசு நிதி அமைச்சர் மற்றும் ஆளுநரின் ஆலோசகர்கள் ஆகியோர் கிண்டி ஆளுநர் மாளிகையில் 14--4—1980 அன்று அரிசன மக்களுடன் சமமாக அமர்ந்து உணவு உண்டனர்.




# தமிழரசு

16-5-1980 50 காசு


தமிழ் நாடு சட்டப்பேரவைத் தேர்தல் மே 28, 31

# மகளிர் - மழலையர் நலம்!

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சிப்பணிகள் பல வகைப்பட நிறைவேற்றப் பட்டுவருகின்றன.

அவற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவைகளாக விளங்குபவை மகளிர் நலமும், குழந்தைகளுக்கான ஊட்டச் சத்துணவுத் திட்டமும் ஆகும். இந்த இரண்டு பற்றிய திட்டங்களும் சிறப்புறச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன இந்த ஒன்றியத்தில்.

இங்கே 30 மகளிர் மன்றங்கள் இருக்கின்றன.

இந்த மகளிர் மன்ற நிர்வாகிகளுக்கெல்லாம் ஒருசேர ரூ1,800 மான்யம் வழங்குதல், மகளிர் பயிற்சி முகாம் நடத்த ரூ.1,200 செலவிடுதல், குழந்தைகள் கண்காட்சிகள் இரண்டுக்கென ரூ200 மகளிர் சுற்றுலாவுக்கான அரசு மான்யம் ரூ. 440, மகளிர் மன்றங்களுக்குப் புத்தகங்கள் வழங்குதல் ஆகியவை தொடர்பாக - நடப்பு நிதியாண்டிலே ஏறத்தாழ ரூ. 4000 க்கும் மேல் செலவிடப் பட்டிருக்கிறது.

சோழவரம் ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றிடும் ஆசிரியப் பெருமக்களுக்கென ஆட்டன் தாங்கண், பழைய எருமை வெட்டி பாளையம், ஓரக்காடு, விச்சூர், புதூர் ஆகிய ஐந்திடங்களில் குடியிருப்பு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இதிலும் மகளிர்க்குத் தனிச் சலுகை. ஆசிரியைகள் குடியிருக்கும் இல்லங்களுக்கு வாடகை இல்லை என்பதே அது!

சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலே, ஊட்டச் சத்துணவுத் திட்ட அரவணைப்பின் கீழ் 19 குழந்தைகள் காப்பகங்கள் இயங்கிவருகின்றன. வரும் நிதியாண்டில் இந்த எண்ணிக்கை முப்பதாக விரிவடையும்.

இந்தக் காப்பகங்களில் 6 மாதம் முதல் 5 வயதுவரையிலான குழந்தைகள், படிக்கும்வயதுப்பிள்ளைகள். கர்ப்பிணித் தாயமார்கள், பாலூட்டும் தாய் மார்கள் ஆகிய 120 பேர்களுக்கு.'கேர்' உதவியோடு மதிய உணவு அளிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கெல்லாம் முட்டைகள் வழங்கப்படுகிறது.

குழந்தைகள் காப்பகங்களில் உள்ள பிள்ளைகளுக்குச் சத்தான காய்கறிகளும், பழ வகைகளும் இலவசமாக வழங்கிட — காரனோடை, கன்னியம்பாளையம் ஆகிய இரு கிராமங்களில் 5ஏகர் அளவில் சமுதாயத் தோட்டங்கள் அமைக்கப்பட்டு, ஒன்றியத்தின் சார்பிலேயே விளைச்சல் காணப்பட்டு வருகிறது.

ஒன்றிய மக்கள் தாங்கள் தங்கள் வீட்டுத் தோட்டங்களில் சத்து மிக்க காய்கறிகளை விளைவிக்கும் பொருட்டு, இலவசமாக விதைகள், முருங்கைச செடிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிராம மக்கள், ஊட்டச்சத்துணவுபற்றிய கல்வியறிவு பெற சமையல் முறை கற்க ஒவ்வொரு மகளிர் மன்றத்திலும் மாதம் 2 செயல் விளக்க முறை வகுப்புகள் நடாத்தப்படுகின்றன என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது. ஆண்டுதோறும் இதே குறிக்கோளோடு, ஒன்றியத்தில் 10 இடங்களில் ஊட்டச்சத்துணவுத் திட்ட விளக்கக் கண்காட்சியும் நடைபெறுகிறது.

—மகுதம்




**இந்த இதழ் உங்கள் கையில்...**

பார்த்தோம்! படித்தோம்! மாணவர் பக்கம், நூல் நயம் போன்ற புதிய பல அம்சங்கள் இதிலே இடம் பெற்றுள்ளதை அறிவீர்கள். இந்தப் பகுதிகளை நீங்களும் எழுதலாம். உங்கள் எழுத்தோவியத்தை எங்களுக்கு அனுப்புங்கள், முழு முகவரியுடன். அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர், "தமிழரசு" அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை,
சென்னை—600 002.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





வாக்காளர் ட ...ல்கள் மு... முறையாக ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் ...த்தனியா... ...ச்சடிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் வாக்காளர்கள் தாங்கள் எந்த இடத்தில் வாக்குப் பதிவு ... வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வசதி... ...ருக்கும். மேலும் வாக்குச் சாவடியில் தேர்தல் நடக்கும் சில தினங்களுக்கு முன்பு வாக்காளர் பட்டியல் பார்வைக்கு வைக்கப்படும். இவ்வாறு செய்வது இதுவே முதல் முறையாகும்.

சென்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது இருந்ததை விட இப்பொழுது 61 வாக்குச்சாவடிகள் கூடுதலாக அமைக்கப்படுகின்றன. வாக்குச் சாவடிகள் ஜனவரி 80ல் இருந்த இடங்களிலேயே அமைக்கப்பட்டு இருக்கின்றன. கூடுதலாக அமைக்கப்பட்டிருக்கும் வாக்குச் சாவடிகள் அதே கட்டிடங்களில்தான் இருக்கும். இடங்கள் மாற்றப்பட வில்லை. இனிமேலும் வாக்குச் சாவடிகள் அநேகமாக இதே இடங்களில்தான் இருக்கும். ஒவ்வொரு தேர்தலுக்கும் வெவ்வேறு இடங்களில் வாக்குச் சாவடிகள் அமைக்கும் முறை இனிமேல் கடைப்பிடிக்கப்படமாட்டாது.



சில திசைமாறிச் சென்று ஆட்சிமுறையில் தடுமாறிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.


நமது நாடோ, ஜனநாயக வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கி, உலகிலுள்ள மாபெரும் ஜனநாயக நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இதற்கு இந்திய மக்கள் அனைவரும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

ஜனநாயகப் பணியில் நமது கடமையை ஆற்றும் வாய்ப்பாகவே தேர்தல்கள் வருகின்றன.

தேர்தலில் நமது வாக்குகளை அளிப்பது நமது பெரும் பொறுப்பாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு என்னென்ன தகுதிகள் தேவை என்பது விளக்கப் பட்டிருக்கிறது. மக்கள் பிரதிநிதித்துவச்சட்டத்திலும் தேர்தலில் போட்டியிடுபவர் தகுதியும் தேர்தல் முறையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால்வாக்காளரின் உரிமைகள் விளக்கமாகக் கூறப்படவில்லை. வயது வந்தவர்கள் வாக்காளர் என்பதே கூறப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் என்ன? வாக்காளர்களாகிய நாம் நமது உரிமைகளைப் பற்றி நன்கு தெரிந்தவர்கள் என்பதால்தான்! நமக்கு விருப்பமான ஆட்சியை அமைக்க நமக்கு ஒருவாய்ப்பாகும் தேர்தலில். அந்தத் தேர்தலில் நமது வாக்கைப் பயன்படுத்தினால்தான் நாம் நல்லாட்சி அமைக்கமுடியும்.

ஆகவே, வாக்குரிமையை நாம் கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும்.



அதிகமான பேர்கள் போட்டியிடும் தொகுதிகள் சென்னையிலுள்ள டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, இராமநாதபுரத்திலுள்ள சிவகாசி சட்டப் பேரவைத் தொகுதியாகும். இந்த இரண்டு தொகுதிகளிலும் முறையே 11 பேர்கள் போட்டியிடுகிறார்கள்.

1977ல் நடந்த சட்டமன்றப் பேரவைத் தேர்தலின்போது 1390 பேர்கள் போட்டியிட்டார்கள். ஆனால் வரப்போகும் தேர்தலில் 1029 பேர்கள்தான் போட்டியிடுகிறார்கள். இதில் 31 தொகுதிகளில் நேரடிப் போட்டியும் 41 தொகுதிகளில் மும்முனைப் போட்டியும், மற்றத் தொகுதிகளில் அதற்கு மேலும் உள்ளன.





''இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?'' என்று கதை பேசி காலங்கழிக்கும் நாட்களில் நாம் வாழவில்லை.

நம்மை நாமே ஆண்டுகொள்ளும் காலம் இது.

ஆகவே, வாக்குரிமையைப் பயன்படுத்தி நமது உரிமையை நிலைநாட்ட வேண்டியது நமது கடமையாகும்.

யாருக்கும் நாம் அஞ்சவேண்டியதில்லை; அலட்சியமாக இருக்க வேண்டியதில்லை.

வாக்குரிமை நமது உரிமையை நிலைநாட்டக் கிடைத்தது.

அந்த உரிமையைப் பயன்படுத்தத் தவறினால் நமது கடமையைச் செய்யத் தவறியவர்கள் ஆவோம்.

ஆதலினால் தேர்தலில் நமது கடமையை நிறைவேற்ற வாக்களிப்போம்.

வாக்குரிமையைப் பயன்படுத்தி நாம் இந்நாட்டு மன்னர் என்பதை நிலை நிறுத்துவோம்.

நாம் விரும்பும் ஆட்சியை அமைக்க வாக்களிப்போம்.

''வாக்களிக்காமல் இருக்க மாட்டோம்! வாக்குரிமையைப் பயன்படுத்துவோம்'' என்று நமக்கு நாமே வாக்களித்துக் கொள்ளுவோம். அதன்படியே நடந்து கொள்ளுவோம்.

அதுதான் இந்தியக் குடிமகனின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும்!

# அன்னியச் செலாவணிக்கு அழகிய மாலை

தமிழகத்தின் நெல் களஞ்சியம் என்று தஞ்சை மாவட்டத்தைக் கூறுவதுண்டு. அந்த நிலையில் தற்போது மாற்றம் காணும் வகையில், ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் பல மாவட்டங்களில் நெல் உற்பத்தி தீவிரமாக்கப்பட்டுள்ளது. ஆனால் தஞ்சை மாவட்டம் கைவினைக் கலைஞர்களுக்குச் சிறப்பு வாய்ந்த மாவட்டம் என்கிற நிலைமை இன்னும் நீடிக்கவே செய்கிறது.

தஞ்சைத் தட்டு, தஞ்சை நெல், ஜவ்வாது சந்தன மாலைகள் வெளி நாட்டுப் பிரமுகர்களை வெகுவாக கவர்ந்துள்ளன என்றால் மிகை இல்லை. குறிப்பாக, நெல் ஜவ்வாது, சந்தன மாலைகள் தயாரிப்பு என்பது குடும்ப பரம்பரைத் தொழிலாகவே இருந்து வருகின்றன.

நெல், சந்தன ஜவ்வாது மாலைகள் தயாரிப்பதில் கைதேர்ந்தவரான திரு. கோதண்டபாணியைப் பேட்டி கண்டதில் சில சுவையான தகவல்கள் கிடைத்தன.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய எளிதான முறையில் அனுமதி வழங்கப்பட்டால் மேலும் இத் தொழிலை விரிவுபடுத்த முடியும். அன்னியச் செலாவணி மூலம் நல்ல வருவாயும் ஏற்பட வழியும் உண்டு. மலேசியா, சிங்கப்பூர், பினாங்கு, துபாய் முதலான நாடுகளிலிருந்து நெல் சந்தன ஜவ்வாது மாலைகள் தேவைக்கு ஆர்டர்கள் வந்தாலும், ஏற்றுமதி பிரச்சனையால், வெளி நாட்டவர்களை திருப்தி படுத்த முடியவில்லை. தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள் கடன் வழங்க முன்வந்தாலும், தேவையான அளவு கடன் கிடைப்பதில்லை. மூலப்பொருள்கள் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை வாங்க வேண்டிய நிலைமை இருப்பதால், கடன் வழங்குவதிலும் தனிச் சலுகைகள் இருப்பது நல்லது.



தஞ்சையில் தயாராகும் நெல், சந்தன ஜவ்வாது மாலைகள் மேலை நாட்டினரை வெகுவாகக் கவர்கின்றன. பூமபுகார் நிறுவனத்தின் மூலம் இந்த மாலைகள் தருவிக்கப்பட்டு அணிவிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

—தஞ்சை கைவல்யதாசன்

தமிழரசு
மலர்:10 இதழ்:22
16-5-1980

# வாக்கு

**ஆர். கல்யாணசுந்தரம்**

''எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்-நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்-ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்-வாழ்க''


என்று பாட்டுக்கொரு புலவன் பாரதியார் அன்று பாடினார்.

அவருடைய கனவை நனவாக்கி, நமக்குப் பெருமை அளித்திருப்பது வாக்குரிமை. வாக்குரிமை - பாரத குடிமக்கள் அனைவரும் சமம் என்பதைக் காட்டும் பட்டயம்.

என்ற தவறான எண்ணங்கள் வேரொடு களையப்பட்டு, இன்று ஜனநாயகத்தைப் [illegible] செயல்படுகிறது.

'எல்லாரும் சமம்' - என்னும் உரிமையைப் பெற ஒவ்வொரு நாட்டுமக்களும் பல போராட்டங்களைச் சந்தித்திருக்கின்றனர்.

'பாராளுமன்றங்களின் தொட்டில்' என வழங்கப்படும் நாடுகளில் கூட, முதலில் ஆண்களுக்கு மட்டும் தான் வாக்குரிமை இருந்துள்ளது. பெண்களுக்கு வாக்குரிமை வேண்டும் என்று போராடியே, பின்னர் பெற்றனர். ஒவ்வொரு நாட்டின் வரலாற்றிலும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் உண்டு. இவ்வாறு 'வாராது வந்து தித்த மாமணி'யாக வந்ததே வாக்குரிமை.




| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 2.92 கோடி |
| ஆண் வாக்காளர்கள் | 1.48 கோடி |
| பெண் வாக்காளர்கள் | 1.44 கோடி |
| 1980 நாடாளுமன்றத் தேர்தலில் போது மொத்த வாக்காளர்கள் | 2.81 கோடி |
| இப்பொழுது கூடுதல் வாக்காளர்கள் | 11 இலட்சம் |

எந்தவித ஏற்றத்தாழ்வுக்கும் இடமில்லாமல், வயது வந்த அனைவரும் வாக்குரிமை படைத்தவர்களாகத் திகழ்கிறோம். இந்தப் பெருமையை நமது அரசமைப்புச் சட்டம் நமக்கு வழங்கியுள்ளது. இதனால் உலகின் மாபெரும் மக்களாட்சி நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்குகிறது.


உலக வரலாற்றில் முடியாட்சி காலந்தொட்டு, இன்றைய குடியாட்சி முறை மலர்ந்துள்ள வரையில் ஆட்சிமுறை அமைப்புக்காக எத்தனையோ போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

'ஆளப்பிறந்தவர் சிலர், அவர்களுக்கு அடிமைகளாக இருக்கப் பிறந்தவர் பலர்'

அதனாலேயே எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற பெருமையைப் பெறுகின்றோம். குடியாட்சி முறையிலும் சில குறைகள் உண்டு என்று கூறுபவர்கள் கூட, குடியாட்சி முறையிலும் சிறந்த ஆட்சிமுறை என்று வரையறுத்து எந்த ஆட்சிமுறையையும் சொல்ல இயலாது. நாகரிகமடைந்த மனித சமுதாயத்தின் மிக உயர்வான ஆட்சிமுறையாகக் குடியாட்சி முறை கருதப்படுகிறது.

இந்தியா விடுதலை அடைந்த பொழுதும் அதன் பின்னரும் விடுதலை அடைந்த நாடுகள் பல. அவை ஜனநாயக முறையில் இயங்கத் தொடங்கின. ஆனால், அந்நாடுகளில்

**சென்ற நாடாளுமன்றத் தேர்தலைவிட இப்பொழுது வாக்குப் பதிவு நேரம் 1 மணி நேரம் அதிகமாக இருக்கும். அதாவது காலை $7\frac{1}{2}$ மணி முதல் மாலை $4\frac{1}{2}$ மணி வரை இடைவெளி இல்லாமல் நடைபெறும்.**





அட்டை சொல்லும் செய்தி

# நமது கடமை


**எஸ். கணேசன்**
**தமிழ்நாடு துணைத் தலைமைத் தேர்தல் அலுவலர்.**


**1980** புத்தாண்டு தொடங்கியவுடன் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. மே மாதக் கடைசியில் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்கான தேர்தல் நடைபெற இருக்கிறது.

மே மாதம் 28-ஆம் தேதி புதன்கிழமை அன்று 114 சட்ட மன்றப் பேரவைத் தொகுதிகளுக்கும், மே மாதம் 31-ஆம் தேதி சனிக்கிழமை அன்று 120 சட்ட மன்றப் பேரவைத்தொகுதிகளுக்கும் வாக்குப் பதிவு நடைபெறும்.

இப்பொழுது தமிழகத்தில் 2,91,96,627 வாக்காளர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 1,47,72,519 ஆண் வாக்காளர்கள்; 1,44,24,108 பெண் வாக்காளர்கள். சமீபத்தில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது 2,81,06,096 வாக்காளர்கள் இருந்தார்கள். இப்பொழுது 10,90,531 வாக்காளர்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு வாக்காளரும் தமக்கு விருப்பமான ஒருவரைச் சட்ட மன்றப் பேரவைக்குத் தமது பிரதிநிதியாகத் தாமாகத் தேர்ந்தெடுக்கும் கடமையைச் சமீபத்தில் செய்ய வேண்டியிருக்கிறது. வாக்காளர்கள் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்பது தான்அடிப்படைப்பொறுப்பாகும். தமிழக ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்படவேண்டி எந்தவேட்பாளரை தமது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்க விரும்புகிறார் என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டிய சட்ட பூர்வமான பொறுப்பு ஒவ்வொரு வாக்காளரிடத்தும் உள்ளது. அந்தப்பொறுப்பைஅவர்கள் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும்.

வாக்காளர் எவரும் **"எனக்கு இருப்பது ஒரு வாக்குத் தானே? நான் வாக்களிக்காவிட்டால் என்ன குடியா முழுகிப்போகும்? நான் வாக்களிக்கும் வேட்பாளர் வெற்றி பெறுவார் என்று எப்படிச் சொல்ல முடியும்''** என்று வேண்டாத வெறுப்பாக இருத்தல் கூடாது. சிறு துளி பெரு வெள்ளம் என்பதுபோல் வாக்காளர்கள் அளிக்கின்ற ஒவ்வொரு வாக்கும் சேர்ந்துதான் ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க உதவுகிறது. ஒரு தொகுதியில் உள்ள எல்லா வாக்காளர்களும் தங்களுடைய வாக்குரிமையைப் பயன்படுத்தினால்தான் அந்தத் தொகுதியில் உண்மையிலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று கூற முடியும்.

வாக்குப்பதிவு நடக்கும் இடத்துக்கு வாக்காளர்களுக்கு இலவச வாகன வசதி செய்து கொடுக்க முன்வருவது தவறு. கொஞ்ச தூரம் நடந்து சென்று வாக்குரிமையைப் பயன்படுத்த வாக்காளர்கள் தயங்கக்கூடாது.

வன்முறை, அச்சுறுத்தல் ஏற்படாமல், அமைதியான தேர்தல் பணிக்குச் சமூக விரோதச் சக்திகள் ஊறு விளைவிப்பதைத் தடுக்கவும் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

ஒரு வாக்காளர் யாருக்கு வாக்களித்திருக்கிறார் என்பதை யாரும் கண்டுகொள்ள முடியாது. ஆகையால், வாக்காளர்கள் எவ்விதப் பயமும் இன்றி தங்களுக்கு விருப்பமான வேட்பாளருக்கு வாக்களிக்கலாம்.

**அண்மையில்** நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது 32,600 வாக்குச் சாவடிகள்அமைக்கப்பட்டிருந்தன. வரப்போகும் சட்டமன்றப் பேரவைத் தேர்தலின்போது வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை சற்று அதிகமாக இருக்கும். ஆனால், ஒரு வாக்காளர் சமீபத்தில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது எந்த இடத்தில் தனது வாக்கைப் பதிவு செய்தாரோ அதே இடத்தில்தான் சட்ட மன்றப் பேரவைக்கும் வாக்குப் பதிவு செய்ய வேண்டியிருக்கும், அதாவது வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை ஓரளவு அதிகமாக்கப்பட்டிருந்தாலும்முன்பு வாக்குச் சாவடிகள் அமைந்திருந்த இடங்கள் மாற்றப்படவில்லை. இதனால் வாக்காளர்கள் எளிதாக வாக்குப்பதிவு செய்ய முடியும்.


சென்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது 100-க்கு 67 பேர்கள் தான் வாக்குப்பதிவு செய்துள்ளனர். இதைக் குறைந்த சதவிகிதம் என்றே சொல்லலாம். ஏறத்தாழ மூன்றில் ஒருவர் தனது வாக்கைப் பதிவு செய்யவில்லை என்றால் அது உண்மையிலேயே வருந்தத் தக்கது ஆகும். ஆகையால், வரப்போகும் சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் 100-க்கு 100 பேர் தமிழகத்தில் வாக்களித்தார்கள் என்னும் சாதனையை அடைய எல்லா வாக்காளர்களும் ஒத்துழைத்துத் தங்கள் வாக்குகளை தவறாமல் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குறியிடும் முறையைப் புகுத்திய பிறகு செல்லாத வாக்குகள் மூன்றிலிருந்து 5 சதவிகிதம் வரை இருந்தன. ஆனால், சமீபத்தில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது செல்லாத வாக்குகளின் சதவிகிதம் 1.89தான். இந்தக் குறைவான சதவிகிதம் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் இதை இன்னும் குறைக்க வேண்டும். அதற்காக வாக்காளர்கள் பின்பற்ற வேண்டிய விதிகள் என்ன என்பதைப்பற்றி ஒரு வெளியீடு வெளியிட்டிருக்கிறோம். செல்லுபடியாகும் வாக்குச் சீட்டுகளும், செல்லுபடியாகாத மாதிரி வாக்குச்சீட்டுகளும் அவைகள் ஏன் செல்லத்தகாதவை என்ற விளக்கங்களும் காட்டி வெளியிடப்பட்டிருக்கின்றன. வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் இவற்றை வாங்கி வாக்காளர்களுக்கு, சரியான முறையில் எப்படி வாக்களிக்க வேண்டும் என்பது பற்றி விளக்கலாம். வாக்குப்பதிவு காலை 7.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை இடைவெளி இல்லாமல் நடைபெறும். சென்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது கொடுக்கப்பட்ட நேரத்தைவிட இது ஒரு மணி நேரம் அதிகமாகும். ஒரு மணி நேரம் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருப்பதால் எல்லோரும் கடைசி நேரத்தில் போகலாம் என்று இருக்காமல், எவ்வளவு கூடிய விரைவில் தங்களது வாக்கைப் பதிவு செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மீண்டும் வாக்காளர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். உங்கள் வாக்குரிமையைக் கட்டாயம் பயன்படுத்தி உங்களுக்கு விருப்பமான வேட்பாளருக்கு வாக்களித்து ஜனநாயகம் நல்ல முறையில் இயங்க ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம். ●




# வாக்களிப்பது உங்கள் உரிமை




## அதனைத் தவறாது பயன் படுத்துங்கள்

1980ம் ஆண்டு மே மாதம் 28, 31ம் தேதிகளில் தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. உங்கள் வாக்கு மதிப்புமிக்கது. அச்சமின்றி வாக்களியுங்கள்.




### வாக்களிப்பது எப்படி?

- வாக்குச் சீட்டில் வேட்பாளர்களின் பெயர்கள் இடது பக்கத்திலும் அவர்களுக்குரிய சின்னங்கள் வலது பக்கத்திலும் அச்சிடப்பட்டுள்ளன. (வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒன்பதுக்குமேல் இருந்தால், அவர்களின் பெயர்கள் இரண்டு வரிசைகளில் இருக்கும்.)
- நீங்கள் விரும்பும் வேட்பாளரின் பெயரின் மீதோ அவருக்குரிய சின்னத்தின் மீதோ முத்திரையிடுங்கள்.
- தேர்தல் அதிகாரியின் முன்னிலையில் வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டியில் வாக்குச் சீட்டை மடித்துப் போடவும்.
- உங்கள் வாக்கு இரகசியமானது.
- எந்த வேட்பாளரிடமிருந்தோ கட்சியிடமிருந்தோ எவ்விதமான அன்பளிப்பினையோ இலவச வாகன வசதிகளையோ நீங்கள் பெறாதீர்கள்.
- இந்தத் தேர்தலில் உங்கள் இடது கை ஆள்காட்டி விரலின்மேல் அடையாள மை இடப்படும்.



வாக்குப் பதிவு காலை 7-30 மணிக்கு தொடங்கி மாலை 4-30 மணிக்கு முடிவடையும்.

### செல்லுபடியாகும் வகையில் உங்கள் வாக்கு அமையட்டும்.

இயக்குநர்: செய்தி—மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு

m88 DIPR 147




# பாவேந்தர் விழா

என்று முப்பதைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தேசியக் கவிஞர் பாரதியாரைப் பாராட்டிப் பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அப்படித் தாம் பாடிய பாட்டுக்குத் தாமே விளக்கமாக விளங்கிய பெருமையும் பாவேந்தர்க்கு உண்டு.

அத்தகு புகழ் படைத்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்களின் பிறந்த நாளான ஏப்ரல் 29-ஆம் நாளன்று சென்னை கலைவாணர் அரங்கில் 'பாவேந்தர் பாரதிதாசன் விழா' நடைபெற்றது. விழா நாயன இசையுடன் தொடங்கியது. விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு எம்.எஸ். கோபால் வரவேற்றார். அவர்தமது வரவேற்பு உரையில்,"தேர்தல் முடிந்த பின்னர் அமையவிருக்கும் புதிய அரசு பாரதிதாசன் பரம்பரைக் கவிஞருக்கு அளிக்கப்பட்டுவரும் 'பாவேந்தர் பாரதிதாசன் விருதை வழங்கும்'' என்று தெரிவித்தார்.

விழாவை டாக்டர் ச.வே. சுப்பிரமணியம் அவர்கள் துவக்கிவைத்தார். அவர் தமது தொடக்க உரையில்,"புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் நூல்கள் உலக மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு, உலக அரங்கு முழுவதும் பரப்படவேண்டும்; அதற்கான முயற்சிகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் செய்யும்''என்று தெரிவித்தார்.

அடுத்து 'பாவேந்தர் பாநலம்' எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றிய டாக்டர் மா. நன்னன் அவர்கள் 'பிரெஞ்சு மொழியில் பாரதிதாசன் அவர்களது நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ரஷ்யமொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஜெர்மனியிலும் மொழிபெயர்த்து வருகிறார்கள். ஜெர்மன் நாட்டுப் பல்கலைக் கழகத்தில் பாரதிதாசன் கவிதைகளைப் பாடமாக வைத்திருக்கிறார்கள்.

'புரட்சிக்கவிஞர் அவர்களின் நூல்களை மொழிபெயர்த்து வெளியிடும் பணியில் தமிழ் வளர்ச்சி இயக்கம் விரைவில் ஈடுபட இருக்கிறது என்றும்' தெரிவித்தார்.

'பாவேந்தர் படைப்புகள்' என்னும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத்திற்கு கவிஞர் அப்துல் ரகுமான் அவர்கள் தலைமை ஏற்றார்.

'கூவிக்கும் கவிதைக்குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடு துயில்நீக்கப் பாடி வந்தநிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்'







கவிஞர் டாக்டர் தமிழண்ணல், கவிஞர் ஈரோடு தமிழன்பன், கவிஞர் முகவை இராச மாணிக்கம், கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம், கவிஞர் பொன்மணி வைரமுத்து, கவிஞர் பொன்னடியான், கவிஞர் மே.அறிவுமதி, கவிஞர் சாமி. பழனியப்பன் ஆகியோர் முறையே தமிழியக்கம், கண்ணகி புரட்சிக்காப்பியம், அழகின் சிரிப்பு, சேர தாண்டவம், தமிழச்சியின் கத்தி, எதிர்பாராதமுத்தம் இசையமுது, இருண்டவீடு, முதலிய பாவேந்தர் படைப்புகளின் சிறப்புகளைக் கவிதையாக வடித்து அளித்தனர்.

கவியரங்க நிகழ்ச்சியுடன் காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

பிற்பகல் நிகழ்ச்சியும் நாயன இசையுடன் தொடங்கியது. விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்ற செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் பாவேந்தரின் சிறப்புகளை எடுத்துரைத்தார்.

பின்னர், ''கவிதை நயத்தில் சிறந்திருப்பது பாண்டியன் பரிசா? குடும்ப விளக்கா?'' என்னும் தலைப்பில் பட்டிமன்றம் தொடங்கியது.

பட்டிமன்றத்திற்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் நடுவராகப் பொறுப்பேற்றார்கள்.

'கவிதை நயத்தில் சிறந்திருப்பது பாண்டியன் பரிசே' என்ற அணியில் டாக்டர் ஔவை நடராசன், திரு. தெ. ஞானசுந்தரம், திருமதி காந்திமதி, திரு மோசஸ் மைக்கேல் பாரடே, ஆகியோரும்—

'கவிதை நயத்தில் சிறந்திருப்பது குடும்ப விளக்கே' என்ற அணியில் திரு சிலம்பொலி செல்லப்பன், திரு தி. இராசகோபாலன், திருமதி உமையாள் முத்து, திரு த. இராமலிங்கம் ஆகியோரும் வாதாடினார்கள்

இரு அணியினரும் பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு ஆகியவற்றின் சிறப்புகளைப் போட்டி போட்டுக்கொண்டு எடுத்துரைத்தனர்.

பட்டிமன்றத்திற்கு நடுவராகப் பொறுப்பேற்றிருந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் பாரதிதாசன் நூல்கள் அனைத்தும் சிறந்தவை என்றாலும் தனிநபர் திருந்தி சமுதாயம் சீர் திருந்துவதைவிட, சமுதாய அமைப்பை மாற்றியமைக்க வேண்டி, அதை வலியுறுத்தும் 'பாண்டியன் பரிசே சிறந்தது' என்றார்.

விழா முடிவில் நடைபெற்ற மெல்லிசை நிகழ்ச்சியில் பாரதிதாசன் பாடல்களை திரு




டி.ஆர்.பாப்பா குழுவைச சேர்ந்த திரு சீர்காழி சிவ சிதம்பரம், செல்வி சசிரேகா முதலியோர் பாடினார்.

எழுச்சியும் உணர்ச்சியும் மிகுந்த நிகழ்ச்சியாக அமைந்திருந்த பாவேந்தர் பாரதிதாசன் விழா, தமிழ் மக்களுக்கு உணர்ச்சி ஊட்டும் இலக்கியத் திருவிழாவாக அமைந்திருந்தது.

—மா

ச. வே. சுப்பிரமணியன்




மா. நன்னன்




அப்துல் ரகுமான்



ஔவை நடராசன்



சிலம்பொலி செல்லப்பன்



# எங்கும் தமிழ் பரவ ஈடிலாப் பணியாற்றும்

**''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும் – சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முக்கம் செழிக்கச் செய்வீர்'' என்று கவியரசர் பாரதியார் மொழிந்ததை செயலாக்கி, பாரதம் முழுவதும் பைந்தமிழ் பரவிட அரும்பணி ஆற்றிவரும் அமைப்புதான் மைசூரிலுள்ள இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம். அதன் அரிய பணிகளை விளக்குகிறது இக்கட்டுரை.**

# இந்திய மொழிகள் நிறுவனம்


இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்கும் அடித்தளமாக அந்த நிறுவனம் திகழ்கிறது.

அங்கே இந்திய நாட்டின் எல்லாப் பகுதி மக்களையும் சந்திக்கலாம். எல்லா மொழிகளையும் பரவிட-பழங்குடி மக்களின் மொழிகளைப் பாதுகாத்திட—பணியாற்றி வரும் அந்த நிறுவனம்—

மைசூரிலுள்ள இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம் (Central Institute of Indian Languages ) என்று அழைக்கப்படும் இந்திய மொழிகளை வளர்க்கும் அறிவுக் கோயிலாகும்.

1969-ஆம் ஆண்டு இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம் மைசூரில் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நான்கு வட்டார மொழிகள் மையங்கள் 1970-ல் தொடங்கப்பட்டன.

தென்னக மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளுக்காகத் தென்னக வட்டார மொழிகள் மையம் 'மைசூரிலும், அசாம், வங்காளம், ஒரியா ஆகிய மொழிக்காகக் கிழக்கு வட்டாரமொழிகள் மையம் புவனேசுவரிலும், மராத்தி, குஜராத்தி, சிந்தி ஆகிய மொழிகளுக்காக மேற்கு வட்டார மொழிகள் மையம் புனாவிலும் உருவாக்கப்பட்டன.



1973-ல் உருது மையம் இமாசலப் பிரதேசம் சோலனிலும் தொடங்கப்பட்டன.

இவை அனைத்தும் இந்திய மொழிகள் நிறுவனத்தின் ஆளுகையில் உள்ளவையாகும். இந்தி மொழி வளர்ச்சிக்காக டில்லியில் இந்தி வளர்ச்சி இயக்ககம் என்ற அமைப்பும், ஆங்கிலம் ஏனைய அயல்நாட்டு மொழி வளர்ச்சிக்குத் தனியான நிறுவனம் ஐதராபாத்தில் அமைந்துள்ளன என்பது நாம் அறிந்த செய்திதான்.

இந்திய மொழிகள் நிறுவனம் மொத்தத்தில் இந்திய மொழிகளை வளர்க்கும் பணியினைத் தனது இலட்சிய நோக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களை இந்தியாவின் எந்தப் பகுதியில் வாழ்பவர்களாக இருந்தாலும், தமிழைக் கற்றுக் கொள்ள வழி வகுக்கும்

...ட்டங்களை வகுத் ...றையிலாக்கி வருகிறது.

...இந்தியாவின் எந்தப் பகுதி ...லாவது உயர்நிலைப் பள்ளி அல்லது மேல் நிலைப் பள்ளிகளில் ஆசிரியராக இருப்பவர்கள் தமிழைக் கற்றுக்கொள்ள இந்திய மொழிகள் நிறுவனத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாசிரியர்கள் பத்து மாதம் மைசூரில் தங்கி தமிழ் மொழியைக் கற்கின்றனர். மொழியியல் அடிப்படையில் பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தமிழ் மொழிப் பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. இப்பாடங்கள் பின்னர் தற்கால மொழி கற்பிக்கும் முறையில் தேர்ச்சி பெற்ற மொழியாசிரியர்களால் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

இந்திய மொழியியல் நிறுவனத்தில் மொழி கற்பிப்பதற்கு, அமைந்துள்ள மொழி ஆய்வகத்தில் (Language Laboratory) நவீன முறையில் மொழி கற்பிக்கும் வசதிகள் நிறைந்துள்ளன. இங்கே 'டேப்' மூலம் பாடம் கற்பிக்கப்படுகிறது. 'டேப்'பில் உள்ள பாடங்களை மாணவர்கள் தங்கள் காதுகளில் மாட்டிக் கொண்டிருக்கும் சாதனங்கள் மூலம் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். ஐயங்களை அகற்றிக் கொள்ள ஆசிரியருடனும் தொடர்பு கொள்ளலாம்.

தொலைக் காட்சி மூலமும், திரைப்படம் மூலமும் பாடங்களைக் கற்பிக்கும் முறைகளும் இங்குக் கையாளப்படுகின்றன.

இங்குப் பயிற்சி பெறவரும் ஆசிரியர்களுக்கு அவர்கள் பெற்று வரும் சம்பளத் தொகை முழுவதையும் இந்திய மொழிகள் நிறுவனம் அளிக்கின்றது. அத்துடன் உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ. 150 கூடுதலாக அளிக்கப்படுகிறது.

பத்து மாதங்கள் தமிழில் பயிற்சி பெற்றுவரும் ஆசிரியர்கள் தேர்ச்சி பெறும் நிலையில் தமிழ் மொழியை நன்றாகப் பேசும் திறனையும், படிக்கும் திறனையும் எழுதும், திறனையும் பெறுகிறார்கள். தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்குத் தமிழில் 'டி ஆசிரியர்களுக்குத் தமிழில் 'டிப்ளமோ' பட்டம் அளிக்கப்படுகிறது.

தேர்வு பெற்ற ஆசிரியர்கள் தம் பள்ளிக்குத் திரும்பிச் சென்று தாம் கற்ற மொழியை அங்குக் கற்பிக்கின்றனர். ஓரிசா, பீகார், மகாராட்டிரம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற வட இந்திய மாநிலங்களிலும், ஆந்திரா, கருநாடகம், கேரளம் போன்ற மாநிலங்களிலும் இத் திட்டத்தின்கீழ் பயின்ற ஆசிரியர்கள் தமிழைக் கற்பித்து வருகின்றனர்.

இப்படி இந்தியாவின் எங்கோ ஒரு பகுதியில்-சிற்றூரில் தமிழ் மொழி பரவி வருகிறது. இந்த அரிய சாதனைக்குக் காரணமாக விளங்குவது இந்திய மொழிகள் நிறுவனம்தான்.

மொழியியல் அறிஞரும் தலைசிறந்த கல்வியாளருமாக விளங்கும் இந்திய மொழிகள் நடுவண் நிறுவன இயக்குநர் டாக்டர் டி. பி. பட்நாயக் அவர்கள் தமது நிறுவனத்தின் பணிகளை விளக்கினார்.

''இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு எந்தெந்த வகையில் ஊக்கமளிக்க முடியுமோ அந்தந்த வகையில் இந்திய மொழிகள் நிறுவனம் பணியாற்றி வருகிறது. பழங்குடி மக்களின் மொழிகள் அழிந்து படாமல் இருக்க அவைகளுக்கு வரிவடிவத்தையும் உருவாக்கும் பொறுப்பையும் ஏற்று திறம்படச் செயல்படுத்தி வருகிறோம்'' என்றார்.



டாக்டர் டி. பி. பட்டநாயக்

இந்திய மொழிகள் நிறுவனம் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பணிகளையும் அவர் எடுத்துரைத்தார்.

தாய்மொழி மூலம் பள்ளியிலும் கல்லூரிகளிலும் பாடங்களைப் பயிலும்போது பள்ளியிறுதி வகுப்பு நிலையில், மாணவர்கள் அடையும் மொழித் திறனுக்கும் கல்லூரிப் புகுமுக வகுப்புத் தொடக்கத்தில் அவர்கள் பெற்றிருக்க வேண்டிய மொழித் திறனுக்கும் இடைப்பட்ட நிலையில் ஏதாவது இடைவெளி இருக்கிறதா, இல்லையா என்பதை அறிந்து கொள்வதற்காக இந்திய மொழிகளின் மத்திய நிறுவனம் ஓர் ஆய்வை நிகழ்த்தியது. ஆய்வின் முடிவில் இடைவெளி இருக்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவ்விடைவெளியை இணைக்கும் வகையில் 100 மணி நேர இணைப்புப் பயிற்சி (Bridge Course) ஒன்றைக் கல்லூரிப் புகுமுகத் தகுதிக்கேற்ப உருவாக்கலாம் என்று 1971-ஆம் ஆண்டு முடிவெடுத்து, பல இந்திய மொழிகளில் இப்பயிற்சியை நடத்தியது.

தமிழ் மொழிக்கும் இத்தகைய ஓர் இணைப்புப் பயிற்சியை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்



டாக்டர் இ. அண்ணாமலை



டாக்டர் மா. சு. திருமலை

## தமிழாசிரியர்களுக்கான அஞ்சல் - வானொலி வழித் தமிழ்ப் பயிற்சி

நம் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மாநில அரசுகள் அனைத்தும் பள்ளிகளுக்கென கல்வித் திட்டம், பாடத்திட்டம் ஆகியவற்றை அமைப்பதுடன் பாட நூல்களையும் வெளியிடுகின்றன. மாநில அரசுகள் வெளியிட்டுள்ள பாடத் திட்டங்களையும், பாடநூல்களையும் இந்திய மொழிகள் மத்திய நிறுவனம் மிகக் கவனத்துடன் ஆராய்ந்தபோது இவ்விரண்டிற்குமிடையே ஓர் இடைவெளி இருப்பது தெரிய வந்தது.

பள்ளிப்பாடத்திட்டத்தில் மாணவர் என்னென்ன மொழித் திறன்களை ஓராண்டு படிப்பைப் பொறுத்தவரையில் பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டிருக்கின்றனவோ, அம்மொழித் திறன்களை மாணவர் பெறும் வகையில் பாடப் புத்தகங்கள் அமையவில்லை. இவ்விடைவெளியை இணைக்கும் வகையில் பாடப்புத்தகத்திலுள்ள பாடங்களோடு புதிய சில கருத்துக்களையும் சேர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. மேலும், இன்று மொழிக் கல்விக்கும் ஏனைய பாடப் பொருள் கல்விக்குமிடையே எவ்வித வேறுபாடுமில்லாமல் இருந்து வருகிறது.

மொழிக்கல்வி மொழித்திறங்களை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். இவ்வாறு அமைவதின் மூலமாக மட்டுமே மொழிக் கல்வியின் மூலம் தம் தாய்மொழியைப் பொருளுணர்ந்து கேட்கும் திறனையும், நன்றாகப் பேசும் திறனையும், பிழையற வாசிக்கும் திறனையும், எழுதும் திறனையும் மாணவர்கள் பெறவியலும் இம்மொழித் திறன்களை வளர்க்கும் வகையிலும் பாடத்திட்டத்தோடு பாடப்புத்தகத்தை இணைக்கும் வகையிலும் ஆசிரியர்கள் செயற்படுவது இக்கட்டத்தில் மிகவும் முக்கியமானது. இதனை மனத்திற்கொண்டு மொழியாசிரியர்களுக்கு நல்லதொரு மொழிப் பயிற்சி அளிக்க இந்திய மொழிகள் மத்திய நிறுவனம் தீர்மானித்தது. அதன் விளைவே அஞ்சல்—வானொலி வழி மொழிப் பயிற்சி.

தமிழ்நாட்டிலுள்ள தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இது போன்ற ஒரு பயிற்சி தேவையா என்று இந்தியமொழிகள் மத்திய நிறுவனம் ஆராயத் தொடங்கியது. அப்போது மொழிக் கல்விப் பாடத்திட்டத்திற்கும் பாடநூற்களுக்கும் இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்த வேண்டிய தேவையையும், தாய்மொழியைக் கற்பிக்க ஆசிரியர்கள் வேண்டிய சிறப்புப் பயிற்சியின் தேவையையும், உணர்ந்தது. இதற்காகச் சென்னையிலுள்ள தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மற்றும் அகில இந்திய வானொலி நிலையம் ஆகியவைகளுடன் தொடர்பு கொண்டது. இந்நான்கு நிறுவனங்களும் கலந்துரையாடி முடிவில் எட்டாம் வகுப்புத் தமிழ் ஆசிரியர்களுக்கு இப்பயிற்சியை அளிக்கலாம் எனத் தீர்மானித்தன.

இப்பயிற்சிப் பாடங்கள் இரண்டு விதமானவை: ஒன்று, பாடப்புத்தகங்களைப் பயிற்றுவிக்கும் வழிமுறைகள் அடங்கிய பயிற்றுப் பாடத்தொகுதிகள் (Learning Packets) இரண்டு, இவற்றிற்குத் துணையான வானொலிப் பாடங்கள் ( Broadcast Lessons ) பயிற்றுப் பாடத்தொகுதிகளில் பள்ளியில் தமிழைக் கற்பிக்கும்போது ஆசிரியர் கையாள வேண்டிய முறைகளும், கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நான்கு மொழித் திறன்களையும் மாணவர்களிடம் வளர்ப்பது எப்படி என்பது பற்றிய விரிவான விளக்கங்களும், பயிற்சிகளும், தேர்வுகளும் என்னென்ன முறைகளில் அமைய வேண்டும் என்பது பற்றிய விளக்கங்களும் இடம் பெறும். இவை தவிர பாடநூலிலுள்ள ஒவ்வொரு பாடத்தையும் பற்றிய விரிவான விளக்கமும் இத்தொகுதிகளில் இடம் பெறும். பயிற்றுப் பாடத்தொகுதிகளுக்குத் துணையாக வானொலிப் பாடங்கள் அமையும்.

இவை ஆசிரியர்களுடைய பாடப்பொருள் பற்றிய அறிவை விரித்தல், கற்பிக்கும் முறைபற்றிய அறிவை விரித்தல் என்னும் குறிக்கோள்களை மனத்திற்கொண்டு எழுதப்படும். மொத்தம் 32 வானொலிப் பாடங்கள் ஒலிபரப்பப்படும். வானொலிப் பாடம் ஒலிபரப்பப்படுவதற்கு முன்னரே அது சம்பந்தப்பட்ட பயிற்றுப் பாடத்தொகுதி அஞ்சல் வழி அனுப்பப்படும்.

எட்டாம் வகுப்புத் தமிழாசிரியர்களுக்கு அஞ்சல் மற்றும் வானொலி வழித் தமிழ்ப் பயிற்சி அளிக்கலாம் என்ற முடிவைத் தொடர்ந்து பயிற்றுப் பாடத் தொகுதிகளையும் வானொலிப் பாடங்களையும் எழுவதற்காக இந்திய மொழிகளின் மத்திய நிறுவனம், தமிழ் நாடு கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம், உலகத தமழாராய்ச்சி நிறுவனம், அகில இந்திய வானொலி நிலையம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியோடு 1979-ஆம் ஆண்டு 27 நாட்கள் பணிமனை ஒன்றைச் சென்னையில் நடத்தியது.

சென்னையிலுள்ள உயர் நிலைப் பள்ளிகளிலிருந்தும், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களிலிருந்தும் 17 தமிழாசிரியர்களும், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்திலிருந்து ஓர் ஆராய்ச்சியாளரும் இப்பணிமனையில் பங்கேற்றுப் பணி செய்தனர்.

தமிழ்நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ்க் கற்பிக்கும் சுமார் 1000 தமிழாசிரியர்களுக்கு இன்று இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாசிரியர்கள் இப்பயிற்சிக்கென்று பதிவு செய்யப்பட்டவர்கள். இவர்களுக்கு எட்டாம் வகுப்புக்கான பாடப் புத்தகங்களைப் பயிற்றுவிக்கும் வழிமுறைகள் அடங்கிய பயிற்றுப் பாடத் தொகுதிகள் அஞ்சல் வழி அனுப்பப் பெறுகின்றன.

ஒவ்வொரு வாரத்திலும் வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் 2.10 முதல் 2.30 வரை இருபது நிமிடங்கள் வானொலிப் பாடங்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. இப்பயிற்சியை வெற்றியோடு முடிக்கும் ஆசிரியர்களுக்கு இந்திய மொழிகள் மத்திய நிறுவனம் ஏனைய நிறுவனங்களோடு இணைந்து சான்றிதழ் வழங்கும். இதுபோன்ற பயிற்சி ஒன்பதாம் வகுப்புத் தமிழாசிரியர்களுக்காகத் தயாராகி வருகிறது. இப்பயிற்சி, வரும் பள்ளியாண்டில் தொடங்கப் படவிருக்கிறது.

## அஞ்சல் வழி சான்றிதழ் தமிழ்க் கல்வி!

1978-ஆம் ஆண்டில் தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் துணையோடு அஞசல் வழி சான்றிதழ் தமிழ்க் கல்வி (Certificate Course in Tamil Through Correspondence) இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தில் தொடங்கப் பெற்றது. தமிழ்நாடு, கர்நாடகம், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், அரியானா, பீகார், இமாசலப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலிருந்து 176 மாணவர்கள் முதலாண்டில் சேர்ந்தனர்.

தமிழொலிகளை இனங்கண்டுகொள்ளும் திறனையும், அவற்றைப் பொருளுள்ள சொற்களில் அமைத்து உச்சரிக்கும் திறனையும், கொடுக்கப்பட்டுள்ள வாக்கிய அமைப்பிலிருந்தும், சொற்களஞ்சியத்திலிருந்தும் தமிழ் வாக்கியங்களை அமைக்கும் திறனையும் வரிசைப்படுத்தி அமைக்கப்பட்ட சிறிய தமிழ்ப் பத்திகளின் பொருளுணர்ந்து வாசிக்கும் திறனையும், சிறிய தலைப்புகளின் கீழ் தமிழில் கட்டுரை எழுதும் திறனையும் வளர்ப்பது இச்சான்றிதழ் தமிழ்க்கல்வியின் முக்கிய நோக்கங்களாகும்.

மேலே கூறிய மொழித் திறன்களைத் தமிழில் வளர்க்கும் வகையில் நூற்றுக்கு மேற்பட்ட அஞ்சல்வழிப் பாடங்கள் இந்நிறுவனத்தாரால் தயாரிக்கப்பட்டுள்ளன, இவை தவிர தமிழ்நாடு, தமிழ் இலக்கியம், தமிழர் பாண்பாடு என்ற தலைப்புகளில் பல சிறிய ஆங்கிலக் கட்டுரைகளும் தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. இக்கட்டுரைகள் தமிழக வரலாற்றையும், தமிழ் இலக்கிய வரலாற்றையும் பற்றிய மேற்போக்கான அறிவை மாணவர்கள் பெறும் வகையில் எழுதப்பட்டுள்ளன. இச்சான்றிதழ்க் கல்வி முடிவுபெறும் நிலையில் பேச்சுத் தமிழிலும், எழுத்துத் தமிழிலும் மாணவர்கள் போதிய திறமை பெறுவர்.

அஞ்சல் வழிப் பாடங்களைத் தவிர மாணவர் – ஆசிரியர் நேரடித் தொடர்பும் (Contact Programme) ஏற்பாடு செய்யப்படுகிறது. சென்ற ஆண்டில் டில்லியிலும், லக்னோவிலும், மைசூரிலும் நேரடித் தொடர்பு வகுப்புகள் நடத்தபபட்டன. தமிழ் மொழியைக் கற்கும் வேட்கையுடைய பிற மாநிலத்தவர்க்கு இவ்வஞ்சல் வழிச் சான்றிதழ் தமிழ்க் கல்வி பெருமளவில் உதவி வருகிறது.

••

மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் ஆகியவற்றின் உறுதுணையோடு 1977-ஆம் ஆண்டு இந்நிறுவனம் நடத்தியது. இப்பயிற்சி தமிழ்மொழி மூலம் பாடங்களைப் பயிலவிருக்கும் கல்லூரிப் புகுமுக மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டது. சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, நாகர்கோயில் முதலிய தமிழகத்தின் ஐந்து முக்கிய மாவட்டத் தலைநகரங்களில் உள்ள சுமார் 400 மாணவர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் ஆலோசனையை ஏற்று இவ்விணைப்புப் பயிற்சியை நடத்துவதற்காகக் கல்லூரிக் கல்வி இயக்ககம் மேலே கூறிய ஐந்து நகரங்களில் ஒவ்வொரு நகரத்திலும் ஒரு கல்லூரியையும் ஏழு விரிவுரையாளர்களையும் தேர்ந்தெடுத்து இப்பயிற்சி வெற்றி பெற உதவியது.

தமிழ் பாடமொழியாக வெற்றிபெற கல்லூரி மாணவர்களுக்கு இணைப்புப் பயிற்சி ( Tamil Bridge Course ) மிகவும் அவசியமாகும்.

### மத்திய அரசு பள்ளிகளுக்கு

மத்திய அரசு பள்ளிகளின் தலைமையின் வேண்டுகோளிற்கு இணங்கி பல தமிழ்ப் பாடப் புத்தகங்கள் இந்திய மொழிகள் நிறுவனத்தினரால்வழங்கப்பட்டுள்ளன. இப்பாடப்புத்தகங்களை உருவாக்குவதற்கு முன் தமிழைத் தாய் மொழியாகக்கற்கும் வாய்ப்பு இப்பள்ளிகளில் இல்லை. மத்திய அரசு பள்ளித் தலைமை இந்திய மொழிகளைத் தாய்மொழிகளாக கற்கும் வாய்ப்பை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதை உணர்ந்து, இந்திய மொழிகளனைத்திலும் பாடப் புத்தகங்களை உருவாக்கும் பணியை இந்நிறுவனத்திற்கு அளித்தது.

மத்திய அரசு பள்ளிகளில் பயிலும் தமிழ்க் குழந்தைகளின் பேசும் அறிவை அடிப்படையாகக் கொண்டு நான்கு நிலைகளில் பாடப்புத்தகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலுள்ள பல மத்திய அரசுப்பள்ளிகளில் இப்பாடப் புத்தகங்களின் மூலம் இன்று தமிழ் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தமிழ்மொழி வளர்ச்சிக்கென குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழ்மொழி பேசப்படாதப் பகுதிகளில் தமிழ்மொழியைக் கற்பிப்பதற்கான பல்வேறு பணிகளை இந்திய மொழிகள் நிறுவனம் திறம்படச் செயல்படுத்தி வருகிறது.

இப்பணியில் இந்தியமொழிகள் அனைத்துக்கும் இந்தியமொழிகள் நிறுவனம் செய்துவரும் பணிகள் பாராட்டுக்குரியனவாகும். பழங்குடி மக்களின் மொழிகள் அழிந்துபடாமல் இருக்க அவைகளுக்கு வரிவடிவம் அமைக்கும் பணியினை ஏற்றுச்செயல்படுத்தி வருவதும் போற்றுதற்குரிய பெரும் பணியாகும்.

இந்திய மொழிகள் நிறுவனத்தில் இதற்கு உரிய பொறுப்புகளை ஏற்று வருபவரும், இந்நிறுவனத்தின் துணை இயக்குநரும் பேராசிரியருமான டாக்டர். இ. அண்ணாமலை அவர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தாங்கள் ஆற்றிவரும் பணிகளை விளக்கும் பொழுது கூறினார் :

''ஆதிவாசிகளின் மொழிகள் காலவெள்ளத்தில் அழிந்திடாமல் காப்பாற்றும் பெரும் பொறுப்புகளை ஏற்று இருக்கின்றோம். அந்தந்த வட்டாரங்களில் உள்ள இந்திய மொழிகளின் வரி வடிவங்களையே அங்கு வழங்கி வரும் பழங்குடி மக்களின் மொழிகளுக்கு வரிவடிவமாக அமைத்துள்ளோம்.

''படகா மொழிக்கும் செளராஷ்டிர மொழிக்கும் தமிழ்வரி வடிவத்தில் எழுத்துக்களை அமைத்துக் கொடுத்துள்ளோம். தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டால் தமிழகத்தில் வழங்கிவரும் ஏனைய பழங்குடி மக்களின் மொழிகளுக்கும் நாங்கள் வரிவடிவம் அமைக்க உதவிடலாம். இந்திய மொழிகள் நிறுவனத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ் மொழி வளர்ச்சிக்காக—மொழி இயல் அடிப்படையில் பணிகளை வகுத்துச் செயல்படுத்தஎன்றும் நாங்கள் உதவியாக இருப்போம்.

இந்திய மொழிகள் நிறுவனத்தின் இன்னொரு துணைஇயக்குநரான டாக்டர் திரு மா. சு. திருமலை அவர்கள் கூறினார்'

''இந்திய மொழிகள் நிறுவனத்திற்குத் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்ககம் நிறைய ஆசிரியர்களை அனுப்ப வேண்டும். தமிழ்நாட்டிலிருந்து வரும் அந்த ஆசிரியர்கள் கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற திராவிடமொழிகளைக் கற்றுக்கொள்கிறார்கள். அவர்களுடன் மற்ற மொழிக்காரர்கள் பழகுவதால் தமிழைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பரவுகிறது.

"இன்னொரு நன்மையும் உண்டு. இந்திய மொழிகள் நிறுவனத்திற்குப் பயிற்சிக்காக ஆசிரியர்களை அனுப்புவதால் ஏற்படும் காலி இடங்களில் வேறு ஆசிரியர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க முடியும்.

''தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திற்கு இந்திய மொழிகள் நிறுவனம் உதவிகள் செய்ய முடியும். எங்களைத் தமிழ் வளர்ச்சிக்கான எல்லாப் பணிகளிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். மொழி இயல் ஆராய்ச்சிப் பணிகளுக்கு எங்களுடைய ஒத்துழைப்பும் உதவிகளும் எப்பொழுதும் உண்டு.

'தமிழ் இணைப்புப் பயிற்சியைக் கல்லூரி மாணவர்களுக்குக்குக் கற்பித்தால் கல்லூரிகளில்தமிழைப் பாடமொழியாகச் செயல்படுத்துவதில் நல்ல வெற்றியைக் காண முடியும்.

'தமிழ்நாட்டிலுள்ள தமிழ் வளர்ச்சி இயக்ககமும் எங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் வாய்ப்புகள் உள்ளன.''

துணை இயக்குநர்கள் மட்டுமல்ல, அங்கு நாம் சந்திக்கும் அனைவருமே தாங்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கான எல்லாப் பணிகளிலும் உதவிடத் தயார் என்கின்றனர்.

### மாணவர்கள் என்ன சொல்கிறார்கள்?

ஒரிசா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், ராஜஸ்தான், ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் இந்திய மொழிகள் நிறுவனத்தில் தமிழ்க் கற்றுக் கொள்ளும்மாணவர்களாக உள்ளனர். 'ஏன் தமிழை விரும்பி படிக்கின்றீர்கள்? என்று அவர்களைக் கேட்டபொழுது சொன்னார்கள்:

''இந்தியாவிலுள்ள மொழிகளில் மிகத் தொன்மையான மொழி தமிழ் மொழி. சமஸ்கிருதத்தைப் போல சிறப்பு வாய்ந்தது. தமிழின் இலக்கிய இலக்கணச் சிறப்புகளை எல்லாரும் புகழ்ந்துரைத்துள்ளனர், திராவிட மொழிகளின் தாயாக விளங்குவது தமிழ்-உலகத்தின் உயர்தனிச் செம்மொழிகளில் ஒன்றாக விளங்குகிறது. ஆகவே, தமிழை விருப்பத்துடன் கற்கின்றோம்'' -என்று அடுக்கு அடுக்காகக் காரணங்களைச் சொல்கிறார்கள்.

அந்த மாணவர்களே சொன்னார்கள்:

''நாங்கள் இங்கு ஓராண்டில் ஓரளவு தமிழைப் படித்துக் கொள்கின்றோம். இந்தத் தமிழறிவை மேலும்வளர்த்துக்கொள்ள தொடர்ந்து தமிழ்மொழியில் நல்ல பயிற்சி பெற்றுக் கொள்ள வசதியில்லையே! இப்பொழுது தான் இந்திய மொழிகள் நிறுவனத்தின் அஞ்சல் வழியாகத் தமிழைக் கற்றுக் கொள்ள வசதி செய்திருக்கிறார்கள், இவ்வஞ்சல் வழிக் கல்வியைத் தொடர்ச்சியாகப் பெற்று தமிழில் நாங்கள் நன்கு தேர்ந்திட தமிழ்நாட்டு அமைப்புகள் உதவினால் நல்லது.

"குறிப்பாக இந்தி மொழியை, நான்கு ஆண்டுகளில் அஞ்சல் மூலம் பயின்று பட்டம் பெற வாய்ப்புகள் உள்ளன. அது போன்று தமிழைப் பரப்ப அஞ்சல் வழி தமிழ்க்கல்வியைத் தொடங்கலாம். தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் இதனால்பெரும்பயனடையலாம். எங்களைப் போன்றவர்கள் மேலும் தமிழை நன்கு கற்றுக் கொள்ள முடியும்''

-இப்படி தமிழைக் கற்றுக் கொள்ள ஆர்வத்துடன் அவர்கள் கூறுவதை யார் மறுக்க முடியும்? அவர்களுடைய ஆர்வம் நமக்குப் பெருமிதத்தையே அளிக்கின்றது.

இவ்வாறு தமிழின்மீது மற்றவர்களுக்கு அரிய ஈடுபாட்டை உருவாக்கும் பெரும் பொறுப்பை இந்திய மொழிகள் நிறுவனத்தில் ஏற்று திறம்படச் செய்து வருகிறவர்கள் டாக்டர் பி. டி. பட்நாயக், டாக்டர் இ. அண்ணாமலை, டாக்டர் மா. சு. திருமலை, டாக்டர் அ. இராசாராம், டாக்டர் வ. ஞானசுந்தரம்,

இந்திய மொழிகள் நிறுவனத்தின் மொழிகள் ஆய்வகத்தில் மைசூர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஹெக்டே.



டாக்டர் கி. அரங்கன், டாக்டர் இர. பன்னீர்செல்வம், டாக்டர் கோ. சுப்பையா, திரு ந. நடராஜ பிள்ளை, திருமதி விமலா நடராஜ பிள்ளை, டாக்டர் கோ. சங்கர நாராயணன், டாக்டர் எஸ். இராஜேந்திரன், திரு என். இராம சாமி, திரு ஜி. வி. நடராஜன், திரு சி. ஒய். ஜெயபால், திரு. சாம்மோகன்லால், திரு. எம். ஆனந்தராஜ், திரு இலங்கையன் ஆகியோர் ஆவார்கள்.

''இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து இந்திய மொழிகள் நிறுவனத்திற்கு வந்து தமிழ்க் கற்றுச் செல்கிறார்களே, அதன் விளைவு என்ன? கற்றுச் சென்ற ஆசிரியர்கள் அவர்களுடைய ஊரில் தமிழைக் கற்பிக்கிறார்களா? அதன் விளைவு என்ன?'' உள்ளத்தில் எழும் ஐயப்பாட்டை வினா வடிவில் கேட்கிறோம்.

''1971 முதல் இங்கு பல மாநிலத்தவரும் தமிழ்க்கற்றுச் சென்றுள்ளார்கள். அவர்கள் தங்கள் மாநிலத்தில் எவ்வாறு தமிழ்க்கற்றுத் தருகிறார்கள் என்பதை ஆய்ந்து வர இந்திய மொழிகள் நிறுவனம் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களையும், இந்நிறுவனத்தைச் சேர்ந்த நடராஜப் பிள்ளை அவர்களையும் அனுப்பி வைத்தது.

ஏறத்தாழ ஒன்றரை மாதம் அவர்கள் ஆந்திரா, ஒரிசா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்குச் சென்று அங்கு தமிழ்க் கற்பிப்பதைப் பற்றி ஆராய்ந்து வந்துள்ளனர்'' என்று தெரிவித்தார்கள்.

**ஈடில்லாப் பணி....**

இது குறித்து, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களிடம் கேட்ட பொழுது தெரிவித்தார் :

"ஒரிசாவின் குக்கிராமங்களிலும் மத்திய பிரதேசத்தின் சிற்றூர்களிலும், ராஜஸ்தானிலும் உள்ள ஊர்களிலும் தமிழ்க் கற்பிக்கப் படுவது கண்டு மகிழ்ந்தோம்.

''சில இடங்களில் மும்மொழித் திட்டம் இல்லாததால் மாலை நேரங்களில் வகுப்பு முடிந்த பின்னர் விரும்பும் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கிறார்கள். ராஜஸ்தானில் உள்ள கொட்டாவில் இந்திய மொழிகள் நிறுவனத்தில் தமிழ் பயின்ற ஆசிரியர் முதியோர்களுக்கும் மாலை நேரத்தில் தமிழ்க் கற்பித்து வருகின்றார்.

''ஒரிசாவில் குண்பூரில் ஆசிரியராக உள்ள பிரசன்னகுமார், இந்திய மொழிகள் நிறுவனத்தில் தமிழ்க் கற்றவர். அங்குத் தமிழ்க் கற்பிப்பதுடன் தமிழ் நாவல் ஒன்றையும் ஒரியா மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

''நாங்கள் சென்ற சின்னஞ்சிறிய கிராமங்களில்கூட தமிழ் கற்பிப்பதுக் கண்டு பேருவகை அடைந்தோம். இந்திய மொழிகள் நிறுவனத்தின் மூலம் நடைபெறும் இத்தொண்டு பைந்தமிழை பாரத தேசம் எங்கும் பரவ வைக்கும் பெரும்பணியாகும்.

''அதே சமயத்தில் அங்குத் தமிழ் பயிலும் சிறுவர்களைக் கவரத் தக்க வகையில் வண்ணப் படங்களுடன் தமிழ்ப் பாடப்புத்தகங்கங்கள் இல்லாதது பெருங்குறையாக உள்ளது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் தமிழ்ப்பாடப்புத்தகங்கள் தமிழை முதன்மொழியாகக் கொண்டுள்ளவர்களுக்குத் தயாரிக்கப்பட்டுள்ளதாகும். தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு என தனி நிலையில் தமிழ்ப்பாடப் புத்தகங்கள் தயாரிக்க வேண்டியது அவசியமாகும். இம்முயற்சியில் இந்திய மொழிகள் நிறுவனமும், ஏனைய அமைப்புகளும் கவனம் செலுத்துதல் தமிழ் வளர்க்கும் திருத்தொண்டுக்கு மிக முக்கியம்''





**ராஜஸ்தான் கொட்டா (Kota) வில் உள்ள பாரதேந்து சமிதியில் நடைபெறும் தமிழ் வகுப்பு படத்தில் இந்திய மொழிகள் நிறுவனத்தைச் சேர்ந்த திரு ந. நடராஜப் பிள்ளை, பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி ஆகியோரைக் காணலாம்.**

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல தமிழ் வளர்க்கும் திருத்தொண்டில் அனைவரும் பங்கேற்று, சிறப்புடன் செயல்படுவது நமது நீங்காக்கடமையாகும்.

**—மாமூலன்**



# பார்த்தோம் படித்தோம்



**பேருதவியாக இருந்தது:**

''தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் வளர்ச்சி'' என்ற கட்டுரை எனக்குப் பயனுள்ள வகையில் இருந்தது. இத்தொழிலில் ஈடுபாடு கொண்டுள்ள எனக்கு அதிலுள்ள புள்ளி விவரங்கள் பேருதவியாக இருந்தன.

**—ஜே.ஆ. தினகரன்,**
பாளையங்கோட்டை.

**தெரிந்து கொண்டேன்!**

16-4-80 இதழில் 'தமிழ்நாட்டின் முதல் மூலிகைப் பண்ணை' என்னும் கட்டுரையைப் படித்த போதுதான், தமிழகத்தில் இப்படியொரு மூலிகைப் பண்ணை இருப்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

**—சி. மனோகரன்,**
கந்தப்பகவுண்டன்வலசு,
பெரியார் மாவட்டம்.

**அற்புதம்!**

16-4-80 இதழில் புதிய பயிர் இரகங்கள் பற்றிய கட்டுரை பயனுள்ளதாக இருந்தது. 'பறக்கும் பாம்பு' கட்டுரையும் அற்புதம்.

**—நே.மு. சேகு அப்துல்காதர்,**
புதுமடம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

**மாணவர்களுக்கு**

'நீலபச்சைப்பாசி' போன்ற உழவியல் கட்டுரைகள், உழவியல் பாடம் கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது.

**—ஜி. ஏழுமலை,**
உழவியல் ஆசிரியர், தேசூர்.

**எடுத்துக்காட்டு:**

16-4-80 இதழில் 'அங்கத்திலே ஒரு குறை இருந்தால்...' என்ற கட்டுரை, அரசின் ஆக்கப்பணிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது.

**—எம். உதயகுமார்,**
பெரியபட்டணம்,
முகவை மாவட்டம்.

**மனதைக் கவர்ந்தது!**

16-4-80 இதழில் வெளிவந்த புற்றுநோய் மருத்துவமனை, தீ விபத்து, புகை நமக்குப் பகை, ஆட்சிமொழி அளிக்கும் நகைச் சுவை நறுக்குகள் — பயன்மிக்கக் கட்டுரைகள். மாணவர் பக்கம் மனத்தைக் கவரும் பக்கமாக இருந்தது.

**—ஆர். அமுதா,**
வடுக வருட்சியூர்.

**என் ஆசை!**

இதழ்தோறும் சிறுகதை, கேள்வி-பதில், அரசாணை, கவிதைகளை வெளியிட வேண்டும் என்பதே என் ஆசை!

**—ஆர்.ஜி. துரைராஜு**
கீழ்ப்பழுவூர்,
திருச்சி மாவட்டம்.

**ஒரு யோசனை!**

'தமிழரசு' சந்தாத் தொகை ரூ. 6, 12 என்பதை ரூ. 5, 10 என்று மாற்றினால், ஏழை எளியவரும் வாங்கிப் படிக்க வசதியாக இருக்கும். ஒரு யோசனை...... புகைவண்டி, பேருந்து நிலையங்களில் 'தமிழரசு' வாசித்தீர்களா?' என்ற பலகை ஒன்றைத் தொங்க விடலாமே!

**—என். சந்திரசேகரன்,**
எம்.ஏ., நகர், சென்னை-52.

முன்பு வெளியிட்டதைப்போல இவ்வாண்டும் தேர்தல் முடிவுகளைத் தொகுத்து 'தமிழரசு' வெளியிட வேண்டும்.

**—மு. காசிவிஸ்வநாதன்,**
திருநெல்வேலி-6.

தமிழக அரசின் ஆக்கப் பணிகளை விளக்கிடும் 'தமிழரசு' எந்நாளும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய தரமான இதழாகத் திகழ்கிறது.

**—பொ. ஜெயபாலன்,**
திருச்சி-8.

## தூத்துக்குடியில் நவீன கலங்கரை விளக்கம்


நெல்லை மாவட்டம் தூத்துக்குடியில் ஒரு புதிய நவீன கலங்கரை விளக்கம் கட்டப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள பழைய கலங்கரை விளக்கம் மிகவும் பழையதாக ஆகிவிட்டதனால், அதற்குப் பதிலாக புதிய நவீன கலங்கரை விளக்கம் கட்டப்பட்டிருக்கிறது. இப்புதிய கலங்கரை விளக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒளிக்கருவி 375 மில்லி மீட்டர் ஒளிக்கதிர் ஆரம் கொண்டதாக இருக்கும்.

இந்த விளக்கு ஒரு நிமிடத்துக்கு மூன்று சுற்று வேகத்தில் சுற்றும். ஒவ்வொரு 10 நிமிட நேரத்துக்கு ஒருமுறை வெண்மையான தனி பிரகாசத்தை அளிப்பதாக இருக்கும். ஒவ்வொரு முறையும் இந்த வெளிச்சம் 0.41 வினாடிகள் இருக்கும். இந்தக் கலங்கரை விளக்கம் மின்சாரத்தின் மூலம் இயக்கப்படும். இதனுடைய வெளிச்சம் 20 லட்சம் மெழுகுவர்த்திகளின் வெளிச்சத்துக்கு சமமாகும். மோசமான கால நிலையிலும்கூட இந்த வெளிச்சம் 40 கிலோமீட்டர் தூரத்துக்கு மேல் தெரியும்.

இந்தக் கலங்கரை விளக்கம் 46 மீட்டர் உயரம் கொண்டதாக இருக்கும். இந்தக் கலங்கரை விளக்கத்துக்கு அதிகமாக வெளிச்சம் கொடுப்பதற்காக அலுமினிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டுள்ளன. கறுப்பு-வெள்ளை வண்ணங்கள், மாற்றி மாற்றி அடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் கலங்கரை விளக்கம் உலகிலுள்ள மிகவும் நவீன கலங்கரை விளக்கங்களில் ஒன்றாகும்.

தூத்துக்குடி, தமிழ்நாட்டின் கடலோரத்தில் அமைந்துள்ள ஒரு முக்கிய துறைமுகமாகும். இது ஒரு பழமையான வர்த்தக இடம். மன்னார் வளைகுடாவின் மேற்கும் பகுதியில் அமைந்துள்ள மிகப் பெரிய வர்த்தக நகரமாகும். உப்பு, பருத்தி இழை, கருவாடு, சிமெண்ட் போன்ற பொருட்கள் தூத்துக்குடியிலிருந்து ஏற்றுமதியாகின்றன. இது முதலில் ஒரு சாதாரண துறைமுகமாக இருந்தது. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் காணப்பட்ட அதிகரிப்புக்கு ஏற்ப ஈடு செய்யும் வகையில் இங்கு நவீன கப்பல்களை நிறுத்துவதற்கான நவீன வசதிகளுடன் கூடிய ஒரு புதிய துறைமுகம் கட்டப்பட்டது. இதனால் இந்தத் துறைமுகம் நாட்டின் ஒரு பெரிய நவீன துறைமுகமாக விளங்குகிறது.



# கங்கை காவிரி இணைப்பு

கங்கையைக் காவிரியுடன் இணைக்கும் பிரச்னையானது, இந்தியத் தலைவர்கள், திட்டமிடுவோர், பொறியியல் வல்லுநர்கள் ஆகியோரின் நெடு-நாளைய கனவாக இருந்து வந்திருக்கிறது. இன்று அது நடைமுறை சாத்தியமே என்று சொல்லக் கூடிய சூழ்நிலையில் நாம் இருக்கிறோம்.

அதற்கு ஆகும் செலவு பிரம்மாண்டமாக இருக்கும் என்பது உண்மை. ஆனால், அதனால் கிடைக்கும் அனுகூலங்கள் அந்தச் செலவை நியாயப்படுத்தும். இதனால் கிடைக்கும் பாசன, விசை உற்பத்திவசதிகளோடுகூட உள்நாட்டுப் போக்குவரத்து, மின்வளம் ஆகியவையும், வெப்ப தட்ப நிலைமையும் கூட, வளர்ச்சி அடையலாம்.

விவசாயம் மேலும் வளர்ச்சி அடையவும் நீர்ப்பாசன வசதிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. ஆகவே, நீர்ப் பாசனத் துறையில் ஒத்துழைப்புக்கு அண்மையில் சோவியத் ஒன்றியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த ஒப்பந்தத்தின் மூன்று கூறுகள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

### வேலையின் வேகம்

வாய்க்கால் வெட்டும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு, குறிப்பிட்ட திசையில் மண்ணைப் பறிக்க வெடிகளைப் பயன்படுத்தும் உத்திகளை அளித்து உதவ சோவியத் ஒன்றியம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இந்த முறையில் சாதாரண வெடிகள் பயன்படுத்தப்பட்ட போதிலும் அவை குறிப்பிட்ட அளவு தூரம் வரை வாய்க்காலைப் பள்ளமாக்கி, மண்ணைப் பறித்து தூர எறிந்து விடுகிறது. பின்னர் வாய்க்காலுக்கு முத்தாய்ப்பு வேலைசெய்ய வேண்டியது மட்டுமே பாக்கி இருக்கும். இந்த முறையின்மூலம் வேலை நடைபெறும் வேகம், வெடிச் சாதனங்கள் கிடைப்பதை மட்டுமே பொறுத்திருக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் இரண்டாவது கூறு, வாய்க்காலுக்கான சாதனங்களை ஆயத்தமாக உற்பத்தி செய்ய சோவியத் ஒத்துழைப்புடன் ஒரு தொழிற்சாலை நிர்மாணிப்பதாகும். இதன் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 2 லட்சம் கன மீட்டர்களாகும். வாய்க்கால் பூச்சு வேலையைத் துரிதப்படுத்த இது பயன்படும். தவிர, தண்ணீர் மண்ணினால் இழுத்துக் கொள்ளப்படுவதையும் இது தடுக்கும்.

### முதன்மை இடம்

பாறை அல்லாத அடித்தளத்தின் மீது உயரமான மண் அணை அல்லது கல் நிரப்புஅணைகளுக்கு புனை வரைவு செய்வதிலும் சோவியத் ஒன்றியம் ஒத்துழைக்கும்.

நீர் வளத்தைப் பயன்படுத்துவதில் இந்தியாவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும்இடையேபொது நிலைகள் பல உள்ளன. ஆகவே ஒத்துழைப்பின் மூலம் இருநாட்டு விஞ்ஞானிகளும் பெரிதும் பயன் அடைவார்கள்.

நதி மண்டலங்களுக்கிடையே தண்ணீரை மாற்றுவது இந்தியாவுக்குப் புதிதல்ல. இந்தியா துண்டாடப்படுவதற்கு முன், மேல் ஜீலம், மேல் சினுப், கீழ் பாரி தோப் ஆகிய நதிகளின்இணைப்பு ஆற்று நீரை நன்கு பயன்படுத்துவதற்கு உதவியது. நாடு சுதந்திரம் அடைந்த பின் மற்றும் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிரதேசத்திற்குப் பிரதேசம் மழை அளவும் நீர் வளமும் பெரிதும் வித்தியாசப்படும் இந்தியா போன்ற ஒரு நாட்டில் நதி மண்டலங்களுக்கிடையே தண்ணீர் மாற்றம் செய்வது இன்றியமையாததாகும். வட இந்தியாவையும் தென் இந்தியாவையும் வாய்க்கால் மூலம் இணைப்பதில் பிரம்மாண்டமான பொறி இயல் பிரச்னைகள் அடங்கியுள்ளன.

இத்தைய திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னால் கணிசமான அளவுஆராய்ச்சிநடத்தப்பட வேண்டும். நிலக்-காந்த ஆராய்ச்சியில் சோவியத் ஒன்றியத்துக்கும் இந்தியாவுக்கும் இடையே நடைபெறும் ஒத்துழைப்பு இதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

### முக்கியப் பிரச்னை

தண்ணீர் ஆவியாகி வீணாவதைக் கட்டுப்படுத்துவது ஒரு முக்கியப் பிரச்னையாகும். தண்ணீர் ஆவியாவதைக் குறைக்கக் கூடிய சில ரசாயனக் கலவைகள் இந்தியாவிலும் சோவியத் யூனியனிலும் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்விதமாக, இந்தியாவில் தண்ணீர் வசதியைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்குப் பெரிய முயற்சிகள் மேற்கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலை நிலவுகிறது.

இந்நிலையில் கங்கையைக் காவிரியுடன் இணைத்தல் பற்றி சிந்திக்க நிறைய வாய்ப்புகள் உருவாகி வருகின்றன.

[சோவியத் சிறப்புக் கட்டுரைகளிலிருந்து]. ●

# திருக்குறளில் உழவியல்

டாக்டர் ந. வீ. செயராமன்
தமிழ்த்துறைத் தலைவர்
வேளாண்மைப் பல்கலைக்கழகம்

திருவள்ளுவர் தந்த உலகப் பொதுமறையாகிய திருக்குறள் என்றும் பூாணர் புலராதது; நாட்செல்லுகினும் நின்றலர்ந்து தேன் பிலிற்றும் நீர்மையது; ஓதற்கு எளிதாகவும் உணர்தற்கு அரிதாகவும் வேதப் பொருள் போல விளங்கித் தோன்றும் திருக்குறளில் இல்லாத எப்பொருளும் இல்லை. இன்றைய பல் துறை அறிவியல் நுட்பங்களையும் தன்னகத்துக் கொண்ட அறிவியல் முன்னோடி நூலாகவும் திருக்குறள் திகழ்கின்றது.

### வேளாண்மையும் உழவியலும்:

வேளாண்துறை இன்று நாடெங்கும் சிறப்புற்று வளர்ந்து வரும் ஓர் அறிவியல் கலை. மண்ணியல். உழவியல், நீர்வளஇயல், வித்தியல், தாவரவியல், தாவர வினையியல், பயிர் நோயியல், நுண்ணுயிரியல், பூச்சியியல், உயிர் வேதியியல், விலங்கியல், மீன்வள இயல், வனவியல் என்றின்னோரன்ன துறைகள் பலவற்றையும் உள்ளடக்கிய அறிவியல் கலையாக வேளாண்துறை இன்று வீறுபெற்று நாளும் வளர்ந்து வருகின்றது.

### இன்றும் அன்றும்:

இன்றைய அமைப்பில், வேளாண்மை என்னும் சொல் அறிவியற் கலையின் பொதுப் பெயராகவும், உழவியல் என்னும் சொல் வேளாண் அறிவியற் கலையின் ஒரு பகுதியை விளக்கும் பெயராகவும் வழங்கப்படுகின்றன. ஆனால், திருவள்ளுவர் காலத்தில், இச்சொற்கள் இவண் குறித்த பொருண்மைகளில்ஆளப் பெறவில்லை. திருவள்ளுவர் இருவேறு சொற்களையும் தன்னூலில் ஆண்டிருப்பினும், அச் சொற்களுக்கு அவர் காலத்தில் வழங்கிய பொருண்மைகளில் மாற்றமுண்டு.

### வேளாண்மை:

விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு (81)'தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு' (212) 'வேளாண்மை என்னும் செருக்கு' (613) 'தாளாண்மை இல்லாதான் வேளாண்மை' (614) எனவரும் நான்கு இடங்களில்'வேளாண்மை' என்னும் சொல் திருக்குறளில் ஆளப்பட்டுள்ளது. நான்கிடத்தும் இச்சொல்லின் பொருண்மை நிலையை நுனித்தறிந்து நோக்கின், இல்வாழ்வாருக்கு இயல்பாக அமைய வேண்டியதும், உலக நடையறிந்து செய்யப்படுவதுமாய 'பிறருக்கு உதவி செய்யும் பண்புடைமை'யே வேளாண்மை என்னும் சொல்லால் சுட்டப்பட்டிருத்தல் அறியலாம்.

### உழவியல்:

உழவுத்தொழிற் கூறுகள் பலவற்றையும் உள்ளடக்கி நிற்கும் பொதுச் சொல்லாக, வள்ளுவர் காலத்தில், 'உழவியல்'என்னும் சொல்லேவழங்கப்பெற்றது. இதனைத் தெளிதற்குப் பின் வருவன மூன்று சான்றுகள்: (அ) 'உழவு'என்றே வள்ளுவர் தலைப்பிட்டுள்ளார். (ஆ) 'உழந்தும் உழவேதலை' (1031) எனக் குறள்களிடையும் உழவு என்பதையே உழவியற் செய்திகளை விளக்கும் பொதுச் சொல்லாக வள்ளுவர் ஆண்டுள்ளார். (இ) வேளாண்மை என்னும் சொல் உழவியற் செய்திகளை விளக்கும் பொதுச் சொல்லாக யாண்டும் ஆளப்படவில்லை. எனவே, திருவள்ளுவர் காலத்தில் உழவியற் செய்திகளை உரைக்கும் பொருண்மை நிலையில், 'உழவியல்' என்பதே பொதுச் சொல்லாக ஆளப்பட்டது.

தொழிலை உணர்த்துவதாக 'உழவியல்' என்பதும், தொழில் செய்யும் வினை முதலுக்கு அமைய வேண்டிய பண்பை உணர்த்துவதாக 'வேளாண்மை' என்பதும் பண்டு வழங்கின. இற்றை நாளில் உழவியல்' என்பது பிண்டத்தின் உறுப்புக்கூறாகவும், வேளாண்மை என்பது பிண்டப் பொருளாகவும் விளங்குகின்றன. இதனையே சுருங்கிய நிலையில், தொழிலையும் வினை முதலின் பண்பையும் உணர்த்திய சொற்கள் உறுப்பையும் உணர்த்திப் பொருள்மாறுபட்டு நின்றன எனலாம். இங்ஙனம் உழவியல், வேளாண்மை என்னும் சொற்களுக்கு அன்றும் இன்றும் வழங்கிய பொருண்மை மாறுபாட்டையும், அவற்றிடையமைத்த இயைபு நிலையையும் நுனித்தறிதல் சிறப்புடையது.

### ஐவகையும் மூவகையும்:

சுவரின்றிச் சித்திரம் எழுதுதல் இல்லை; அரங்கின்றி வட்டாடுத



இடம் இல்லை. ஓவியம் எழுதுவானுக்குக் கிழியே நிலைக்களனாயது போன்று, உழவியல் தொழிலுக்கும் நிலமே களமாயது. தொல்காப்பியர் மாயோன் மேய காடுறை உலகையும், சேயோன் மேய மைவரை உலகையும், வேந்தன் மேய தீம்புனல் உலகையும், வருணன் மேய பெருமணல் உலகையும் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லுவர். இந்நான்வகை நிலத்துக்கு மேலும் நில மற்ற பாலையையும் 'நடுவுநிலத்திணை' (தொல். பொரு. நூ 11) என்னும் பெயரால் சுட்டுவர். தொன்னூலாருக்குப் பின்வந்த பின்னூலார் பாலைக்கும் நிலமுண்டு எனப் பகுத்துரைத்தனர். பாலைக்கு நிலம் கூறும் கருத்துரை, சங்க காலத்திலேயே முகிழ்த்து இளங்கோவடிகள் காலத்தில் மலர்ந்தது எனல் பிழையன்று. எனவே, தொல்காப்பியர் பாலைக்கு நிலப்பகுப்பு செய்யவில்லை எனினும், சங்க காலத்திலேயே அவர் வகுத்த மரபு மாற்றம் பெற்றது எனக் கூறல் சாலும்.

### திருவள்ளுவர்க்கு உடன்பாடே:

நிலத்தை ஐவகையாகப் பகுத்துரைக்கும் மரபை, சங்கச் சான்றோரை அடியொற்றித் திருவள்ளுவரும் ஏற்கின்றார். நால்வகை நிலப்பெயர்களை வெளிப்படக் கூறாது விடுத்திருப்பினும், 'வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்தற்று' (78) எனப் பாலை நிலத்தைப் பாங்குற மொழிந்துள்ளார். எனவே, நிலத்தை ஐவகையாகப் பாகுபடுத்தியுரைக்கும் மரபு திருவள்ளுவருக்கு உடன்பாடாயதே என்றுணரலாம்.

### மரபியலும் உழவியலும்:

மரபியலையொட்டி நிலத்தை ஐவகைப்படுத்தியுரைப்பினும்

> 20 வயதில் அழகாக இல்லாதவரும், 30 வயதில் திடகாத்திரமாக இல்லாதவரும், 40 வயதில் செல்வந்தனாக இல்லாதவரும், 50 வயதில் விவேகம் இல்லாதவரும், ஒருபோதும் அழகாகவும், திடகாத்திரமாகவும், செல்வந்தனாகவும், விவேகியாகவும் ஆகவே முடியாது!
>
> -புளூடார்ச்



உழவியலையொட்டி நிலத்தை மூவகைப்படுத்தியுரைப்பதே வள்ளுவர்தம் கருத்து என்றறிதல் வேண்டும். பயிர் விளைதற்குரிய நன்னிலம், களர்நிலம், இழுக்கல் நிலம் என்னும் முக்கூறுகளே உழவியல் நோக்கில், வள்ளுவரால் பாகுபடுத்தி மொழியப்பட்ட நிலப்பெயர்கள் என்பது அறியத்தக்கதாம்.

### மண்ணியல்:

நன்னிலம் வளம் சான்றது. தள்ளாவிளையும் தரும் இயல்பினது. இம்மண்ணில் இயல்பை அறிதற்குத் துணையாக வள்ளுவ விஞ்ஞானி ஒரு செய்முறைப் பயிற்சியைக் காட்டுவார். மண்ணின் இயல்பை அறிய அம்மண்ணில் முளைத்தெழுந்த முளையே சான்றாகும். 'நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்' (959) என மண்ணின் தரமறிய நிகழ்த்தும் செய்முறைப் பயிற்சியை வள்ளுவர் விளக்கியுள்ளார். 'முளைத்த மாத்திரத்தானே நன்மையும் தீமையும் தெரிதலின் இலை முதலிய கூறாயினார்' எனப் பரிமேலழகர் வள்ளுவர் காட்டிய செய்முறைப் பயிற்சியை விரிவுற விளக்குவர்:

### வேதியியல் மாற்றம்

நிலமும் நீரும் தனித்தனித் தன்மைவாய்ந்த பொருள்கள். இவை ஒன்றோடொன்று இணையுங்கால் ஒருவகை வேதியியல் மாற்றம் நிகழ்தல் இயற்கை. நிலத்தோடு சேர்ந்த நீரின் தனித்தன்மை மாற்றம் பெற்று அதன் நிறமும் சுவையும் வேறுபடும் இயற்கையை—

'செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே'

எனவரும் குறுந்தொகைச் செய்யுட் கண்ணும் செம்புலப்பெயல் நீரார் பாடுதல் அறியத்தக்கது.

திருவள்ளுவரும், 'பாலொடு தேன் கலந்தற்றே' (1121) 'நன்பால் கலந்தீமையால் திரிந்தற்று' (1000) என்றாங்குக் கூறிய மாற்றங்கள் போல 'நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும்' (452) என நிலத்தியல்பால் நீரின் தன்மையும் சுவையும் மாறுபடும் வேதியியல் மாற்றத்தையும் விளக்கியுள்ளார். 'விசும்பின்கண் தன்றன்மைத்தாய நீர், நிலத்தோடு சேர்ந்தவழி நிறம், சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போல' எனப் பரிமேலழகரும் இதனைச் சிறப்புற விளக்குவர்.

### களர் நிலம்:

இரண்டாவதாக அமைந்த களர்நிலம் பயிர் விளைவுக்குப் பயனற்றது. இப்பயனற்ற களர் நிலத்தைப் 'பயவாக்களர்' (406) எனவரும் தொடரால் வள்ளுவர் கூறுவர். 'களர்' தானும் பேணற்பாடொழிந்து உயிர்கட்கும் உணவு முதலிய உதவாதது' எனப் பரிமேலழகர் களர் நிலத்தின் இயல்பை விளக்கி மொழிவர்.

களர் நிலம் பயிர் விளைவுக்கு ஏற்றதன்று என்றும், உப்பு விளைதற்கே பயன்படுவது என்றும் பிற்கால நீதி நூலாசிரியர் கூறுவர். 'களர் நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர் விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்' எனவரும் கூற்று இதனைத் தெளிவுறுத்தும்.

களர்நிலம் பயிர் விளைவுக்கு ஏற்றதன்று எனப் பண்டைக் கால முதல் ஒதுக்கப்பட்டிருப்பினும், இருபதாம் நூற்றாண்டின் வேளாண்மை அறிவியல் இப்பழங் கோட்பாட்டைப் பொய்யாக்கி விட்டது. கழிவு நீரில் மீன் வளர்த்து உண்ணலாம், மாட்டுச் சாணத்தில் எரிவாயு தயாரித்துப் பயன்படுத்தலாம் என்ற கண்டுபிடிப்புக்கள் போல, களர் நிலத்திலும் உரிய செய்முறைக்குப் பின்னர் நெல் விளைக்கலாம், என இன்றைய வேளாண்மை அறிவியலார் கண்டுரைத்துள்ளனர் என்பதும் ஈண்டு விண்டுரைக்கத்தக்கது.

### இழுக்கல் நிலம்:

மூன்றாவதாகச் சுட்டப்படுவது இழுக்கல் நிலம். இதனை 'வழுக்குதலையுடைய சேற்று நிலம்' எனப் பரிமேலழகர் விளக்கியுரைப்பர். இந்நிலத்து இயங்குவார்கட்கு ஊன்றுகோலின் துணை இன்றியமையாதது. பயிர் விளைக்கும் நோக்கில் இந்நிலத்தில் பயன்பாடு பற்றிய குறிப்பு வள்ளுவத்தில் இடம் பெற்றில்லை.

பயிர் விளைவுக்கு நிலத்தைப் போன்று நீரும் முதன்மையுடையதே. நீர்வளத்திற்கு முதன்மையாய மேகம் மழை பொழிந்து பயிர் விளைவுக்கு இன்றியமையாதது விளங்கும் சிறப்பியல்பு ... 'வான் சிறப்பு' என்னும் ... வள்ளுவர் வண்ண ... யுள்ளார். வானம் ... உலகம் வாழ்கிறது; ... நிலை பெறுகின்றன; உண்ணுதற்குத் துணையாய விளை பொருளைப் பெருக்கத் துணையாவதோடு தானும் அமிழ்தமாக இருந்து உலகத்து உயிர்களை ஊட்டி வளர்ப்பது மழை.

மழையில்லை என்றால் உழவருக்கு நிலத்தில் வேலையில்லை; அவர்கள் ஏர் பிடித்து உழார், 'ஏரின் உழாஅர் உழவர் (14) எனவரும் குறட்பா இதனைக் கூறும். 'வானோக்கி வாழும் உலகெல்லாம்' (542) என வரும் தொடரால் பயிர், உயிர் ஆகியவற்றின் நல்வாழ்வுக்கு மழையே முதன்மையானது என வள்ளுவர் விளக்குவர். 'மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்' என இளங்கோவடிகள் சிலம்பின் தொடக்கத்தில் மழை வணக்கம் செய்திருப்பதும் இச்சிறப்பை உணர்த்தும் கட்டளைக் கல்லாகும்.

### மழை இல்லாத் துன்பம் :

'மழை வளங்கரப்பின் வான் பேரச்சம்' எனவரும் செங்குட்டுவனின் அச்சக் குறிப்பு மழையின்மையால் உயிருக்கு விளையும் துன்ப நிலையை விளக்கிக் காட்டும். மழையில்லையெனில் 'பயிரேயன்றி பசும்புல்லின் தலையும் காண்பது அரிது' (16) 'நெடுங்கடலும் தன்னியல்பு குன்றும்' (17) 'வானோர்க்குச் சிறப்போடு பூசனை செல்லாது' (18), தானம் தவமிரண்டும் தங்கா' (19).

மழையில்லாத உலகின் இயக்கம் மன்னுயிர்க்குத் துன்பம் தரவல்லது., 'துளியின்மை ஞாலத்திற்கு ஏற்று' (557) என்றும், 'உறை கோடி ஒல்லாது வானம் பெயல்' (559) என்றும் வரும் வள்ளுவத் தொடர்கள் மழையின்மையால் உயிர்கட்கு விளையும் துன்பங்களை எடுத்தியம்புவன. 'மாரி வறங்கூர்ந்தனையது' (1010) எனவரும் தொடரும் இக்கருத்தை விளக்குவதே.

### மிகுதியான மழை:

மழையில்லாதது துன்பம் தருதல் போல, மிகுதியாகப் பொழியும் மழையும் துன்பம் தரவல்லதே. 'காஞ்சும் கெடுத்தது; பேஞ்சும் கெடுத்தது' (காய்ந்தும் கெடுத்தது; பெய்தும் கெடுத்தது) எனவரும் பழமொழித் தொடர்



இவ்வுண்மையை விளக்கி எழுந்[illegible]

### நிலவியலும் நீரியலும்:

வளமான மண்ணும் அளவான நீரும் உழவியலுக்கு இன்றியமையாத இருகண்கள் போன்றவை. உணவென்று சிறப்பித்துச் சொல்வது நிலத்தையும் நீரையுமே. இவ்விரண்டையும் ஒரு வழிக்கூட்டியவர்கள் இவ்வுலகில் உடம்பையும் உயிரையும் படைத்தவர் என்ற பெருமைக்கு உரியோர்.

உண்டி முதற்றே உணவின்
பிண்டம்
உணவெனப் படுவது நிலத்
தோடு நீரே
நீரும் நிலனும் புணரியோ
ரீண்டு
உடம்பு முயிரும் படைத்தசி
னோரே

(புறம். 18)

எனவரும் புறப்பாடல் இக்கருத்தை விளக்கி நிற்றல் அறியலாம்.

உழவியலுக்கு மட்டுமின்றி, அரசியலுக்கும் இன்றியமையாத அரணாக விளங்கும் சிறப்பு நீருக்கும் மண்ணுக்கும் உண்டு. 'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்காடும் உடையது அரண்'(742) எனவரும் குறட்பா நீரரண், நிலவரண் ஆகியவற்றோடு மலையரண்; காட்டரண் ஆகியவற்றையும் கூட்டி நால்வகை அரண்களைத் தொகுத்துரைக்கின்றது.

### உழவியல்: ஐம்பெருங்கூறுகள்

அரசியலில் அரசுக்கு அங்கமாக ஐம்பெருங்குழு விளங்கியது போன்று, உழவியலில் உழவின் அங்கமாகவும் ஐம்பெருங்கூறுகள் விளங்குகின்றன.

ஏரினும் நன்றால் எருவிடுதல்
கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு
(1038)

எனவரும் உழவுக் குறள் உழவியலின் ஐம்பெருங் கூறுகளை ஒருசேரக் கூறும் சிறப்பு வாய்ந்தது. பயிருக்கு உழுவதைவிட எருப்பெய்தல் நன்று. இவ்விரண்டும் செய்து களைகட்ட பின்னர் அதனைக் காத்தல் அதற்கு நீர்கால்யாத்தலினும் நன்று என்பது இக்குறட்பாவின் திரண்ட பொருளுரை. இக்குறளின் விளக்குவுரையில் உழுதல், எருப்பெய்தல், களை கட்டல், நீர் கால்யாத்தல், காத்தல், என்றும் முறையாலாய இவ்வைந்தும் வேண்டுமென்பதாம்' எனப்பரிமேலழகர் வள்ளுவர் காலத்தில் வழங்கிய ஐவகை உழவியல் செயல் முறைகளின் பெயரையும் முறை வைப்பையும் எண்ணிக்கையும் இனிதுறச் சுட்டுவர்.

### உழுதல்:

ஐவகை உழவியல் முறைகளில் முதலாவதாய் அமைந்தது உழுதல் தொழில். 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' (1032) 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' (1033) 'உழவினார் கைம்மடங்கின் இல்லை' (136) எனவரும் தொடர்கள் உழுவார் பெருமையை உரைக்கும் உயர்மொழிகள். அகல உழுதல், ஆழ உழுதல் என்னும் இருவகை உழு முறைகளில் அகல உழுதலினும் ஆழ உழுதலே இன்றியமையாதது.

### உழுகருவி :

உழுகின்ற கருவியாக வள்ளுவர் ஏரினைக் கூறுவர். 'சுழன்றும் ஏர்ப் பின்னதுலகம்' (1031), 'ஏரின் உழாஅர் உழவர்' (14) எனவரும் தொடர்களில் உழவுக் கருவியாகிய ஏர் சுட்டப்பெறுதல் காணலாம். இவ்வுழு கருவியில் இரும்பாலாகிய கொழுவும், மரத்தாலாகிய நுகத்தடியும் அமைந்திருக்கும். கொழு, மண்ணைக் கிளறவும் நுகத்தடி, மாடுகள் பூட்டவும் பயன்படும், ஏர் என்பதற்கு மேழி, நாஞ்சில், கலப்பை முதலாய பிற பெயர்களும் வழங்கின.

அம்புசென் றிறுத்த அரும்புண்
யானை
தூம்புடைத் தடக்கை
வாயோடு துமிந்து
நாஞ்சி லொப்ப நிலமிசைப்
புரள

எனவரும் குறுங்கோழியூர் கிழார் பாடலில் நாஞ்சில் என்னும்பெயர் சுட்டப்பெறுதலையும், இதனைக் கலப்பை; எனப் பழைய உரையாசிரியர் கூறியிருப்பதும் அறியத்தக்கது. 'மேழிச்செல்வம் கோழை படாது' எனவரும் பழமொழியின் மேழி என்னும் பெயராட்சியையும் காணலாம்.

யானையின் துளையையுடைய பெருங்கை, வாயுடன் துணித்து வீழ்ந்தமைக்கு 'நாஞ்சிலொப்ப' எனக்குறுங்கோழியூர் கிழார் (புறம் 19) உவமை கூறியுள்ளார். இவ்வுவமையால் நாஞ்சிலின் வடிவம் துணிக்கப்பட்ட யானையின் பெருங்கையும் வாயும போன்று விளங்கியது என உவமைச் சிறப்போடு கூறப்படுதல் அறியலாம்.

'தொடிப்புழுதி கஃசா உணக்கின்' (1037) எனவரும் தொடர் உழும் முறையை நமக்குத் தெள்ளிதின் விளக்கும். தொடி கஃசு என்பன பண்டைக்கால அளவுப் பெயர்கள். ஒருபலப் புழுதி கால்பலப் புழுதியாக மாறும் அளவு உழுது காய விடுதல் வேண்டும் என்பது வள்ளுவர் காட்டும் உழவியல் முறை.

எரு இடுதல் இன்றியமையாதது. இதனை 'ஏரினும் நன்றால் எருவிடுதல்' (1038) என எழில் பெற வள்ளுவர் விளக்குவர்.

தலைவன் தலைவியரிடைத் தோன்றிய காதல் பயிருக்கும்கூட எருவிடுதல் இன்றியமையாதது! ஊரவர் தலைமக்களைப் பற்றி இணைத்துப் பேசும் அலர், இக்காதல் பயிருக்கு உரிய உரமாகும். 'ஊரவர் கௌவை எருவாக' (1147) எனவரும் தொடரால் வள்ளுவர் இக்கருத்தை விளக்குவர். பயிர் வளர எருவிடுதல் இன்றியமையாதது என்பதை இக்குறிப்பாலும் அறியலாம்.

வளரும் பயிருக்குக்கேடுபயப்பது களை. களையை நீக்கினாலன்றி வளரும் பயிர் வளமான பயிராக அமையாது. 'கட்டபின்' (1938) எனவரும் குறிப்புத் தொடரால் பயிருக்கு இடை வளரும் களையை நீக்க வேண்டிய இன்றியமையாமையை வள்ளுவர் விளக்குவர். பயிரை நன்றாகவளர்க்க உழவனும் சமுதாயத்தை நன்கு வளர்க்க மன்னவனும் களையெடுத்தல் வேண்டும். இந்த இரு கருத்துக்களையும்ஒரே குறளில் இணைத்துக் 'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட்டதனோடு நேர்' (550) என மொழிவர் வள்ளுவர்.

'வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று' (718) என வரும் தொடர் டாத்தி பாத்தியாகப் பகுக்கப்பட்டு அதனுள் நீர்சொரியும் முறையை விளக்கி நின்றது. பயிர் வளர்ச்சிக்கு எருவிடுதலும் நீர் பாய்ச்சுதலும் வேண்டும் என்பதைக் காதல் பயிர் மேல்வைத்து 'ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல் நீராக நீளுமிந் நோய்' (1174) எனக் கூறுவர் 'வள்ளுவர்

இங்ஙனம் முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் இடையமைந்த இணைப்புப்பாலமாய், விஞ்ஞான அறிவியல்கருத்துக்களை வழங்கும் வைப்புக் களஞ்சியமாய் எக்காலத்திற்கும் பொருந்தும் ஏற்றமிக்க பொருளுரை கூறும் கலைப்பொருட்கருவூலமாய்த் திகழ்கின்றது திருக்குறள். ●

## பணமும் பாராட்டும்



சர்க்கஸ் நடந்துகொண்டிருந்தது ஒரு பயில்வான் எடை தூக்கும் காட்சி. இரண்டு பேர் சுமந்துவந்த இரும்புத்தடியொன்றை வளைத்துக் காட்டப்போவதாக அறிவித்தான் பயில்வான். எல்லோரும் கைத்தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

அவன் அந்த இரும்புத் தடியை, சொன்னது போலவே வளைத்துக்காட்டினான்.

இந்தக் காட்சியை வியந்து பார்த்துக் கொண்டிருந்த முரட்டு மீசைக்காரன் ஒருவன், சர்க்கஸ் முடிந்ததும் அந்தப் பயில்வானைத் தனியே அழைத்தான். இங்கே உனக்கு எவ்வளவு சம்பளம் தருகிறார்கள்?'' என்று விசாரித்தான்.

''மாதம் ஆயிரம் ரூபாய்'' என்றான் பயில்வான்.

''ப்பூ, இதானா? இன்று இரவே என்னோடு வா. ஒரு சிறு கம்பியை வளைக்கவேண்டும். பத்து நிமிஷ வேலை. இரண்டாயிரம் தருகிறேன்!'' என்றுகூறி பயில்வானை அழைத்துப்போனான் மீசைக்காரன்.

அந்த நள்ளிரவில் அவர்கள் இருவரும் ஒரு பெரிய மாளிகையின் முன்னால் போய் நின்றார்கள். பின்பக்க ஜன்னலைக்காட்டி அந்த மீசைக்காரன் சொன்னான்: ''அந்த ஜன்னலில் இரண்டு கம்பிகளை வளைத்துக் கொடு. அவ்வளவுதான் வேலை. இந்தா, அட்வான்ஸ் ஆயிரம்!''


''இந்தக் கம்பியை இங்கே என்னால் வளைக்க முடியாதே!'' என்றான் பயில்வான்.

''அவ்வளவு தடியான இரும்புக் கம்பியை சர்க்கசில் வளைத்த உனக்கு இதுவா கஷ்டம்?''

''அங்கே வளைத்தேன் என்றால், சுற்றிலும் நூற்றுக்கணக்கானோர் இருந்து கைதட்டி என்னை உற்சாகப்படுத்தினார்கள். இங்கேகூட பத்துப்பேராவது இருந்து கைதட்டுவார்களானால், இதை என்னால் வளைத்துவிட முடியும்!'' என்றான் பயில்வான்!

அதைக் கேட்டதும் —பணம் சாதிக்காததைப் பாராட்டுரை சாதிக்கும் என்று, புரியாத அந்த மீசைக்காரனுக்குத் தூக்கி வாரிப்போட்டது!

## இறைச்சிக் கோழி



வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த சென்னை நந்தனத்தில் உள்ள கோழி இன ஆராய்ச்சி நிலையத்தில் இந்திய வேளாண்மைத் துறை ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன், ஒரு மகத்தான இறைச்சிக் கோழி உற்பத்தித் திட்டம் 1970-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இம்மாதிரியான கேந்திரங்கள் ஐசட் நகர், பெங்களூர், புவனேஸ்வர் ஆகிய நகரங்களிலும் வேளாண்மைக் கழகத்தாரால் துவக்கப்பட்டு, ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன.

ஐசட் நகரிலுள்ள இந்தியக் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி நிலையம் இத்திட்டத்தில் இணைந்து செயல்படுவதோடு அல்லாமல், ஆராய்ச்சியினை முன்னணியிலிருந்து நடத்திச் செல்லும் பொறுப்பினையும் ஏற்றுள்ளது. இவ்வாராய்ச்சியில் பங்கு பெற 1976-ஆம் ஆண்டு மேலும் கேப் ஸ்டாக் (சிக்கிம்), அகோலா, லூதியானா ஆகிய மூன்று இடங்களும் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

இவ்வாராய்ச்சியின் மூலம் ''இறைச்சிக்''கோழி இனங்களில் ஆய்வு செய்யப்பட்டு சிறப்புக் கலப்பினங்கள் உருவாகி வருகின்றன. உருவாக்கப்பட்ட கலப்பினங்கள் எட்டு வாரத்திற்குள் 2..5 கி. தீனித் திறனுடன், 1.2 கி. எடை அளவிற்கு வளரும் திறனும் பெற்றுள்ளது. மத்திய அரசு நடத்தி வரும் நடுவர் கோழி ஆய்வு நிலையங்களில் (ராண்டம் சாம்பிக் டெண்டு யூனிட்டுகள்), தற்போது இக்கோழிகளின் உற்பத்தித் திறன்களை ஆய்வு செய்து வருகிறார்கள்.

விரைவில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பலனளிக்கும் வகையில் இக்கோழிகளை வினியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இம்மாதிரி வியாபாரத்திற்குரிய கோழிகளை (கமர்ஷியல் சிக்கன்) உற்பத்தி செய்வதில் பொதுவாக மேலை நாட்டுத்தனியார் நிறுவனங்களே முன்னணியில் நிற்கின்றன. வேளாண்மைத் துறை ஆராய்ச்சிக் கழகத்தாரால் உருவாக்கப்பட்ட இத்திட்டத்தினால் இம்மாதிரியான கோழிகள் நம் நாட்டிலேயே உருவாக்கப்படுகின்றன! ●

—டாக்டர் வி. உலகநாதன்
இணைப் பேராசிரியர்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.

## காசநோய் முத்திரை வில்லைகள் விற்பனை

### தமிழகம் முதலிடம்

இந்திய காசநோய்த் தடுப்புக் கழகத்தின் 41வது ஆண்டுப் பொதுக்கூட்டம் புதுடில்லியில் நடந்தது. இந்திய மக்கள் நல்வாழ்வுத்துறையின் டைரக்டர் ஜெனரல் டாக்டர் பி. சங்கரன் அவர்கள் பேசுகையில், காசநோய்த் தடுப்புத் துறையில் வல்லுநர்கள் கிடைப்பது மிகவும் கடினமாக இருப்பதாகவும், இதற்குக் காரணம் மருத்துவக் கல்வி போதனையில் காசநோய் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பது நாளுக்கு நாள் குறைந்து வருவதாகவும், மருத்துவ மாணவர் பலருக்கு இந்நோயின் அடிப்படைக் கருத்துக்கள்கூட போதிக்கப்படுவதில்லையென்றும் தெரிவித்தார்.

இந்திய காசநோய்த் தடுப்புக் கழகத்தின் தலைவர் திரு எஸ். ரெங்கநாதன் ஐ.சி.எஸ்., (ஓய்வு) எம்.பி; பேசுகையில், தமிழ்நாடு காசநோய்த் தடுப்புக் கழகத்தின் அரும்பணிகளைப் பாராட்டி, இவ்வாண்டில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் அதிகப்படியான அளவுக்கு சுமார் ரூ. 10 இலட்சத்துக்குக் காசநோய் முத்திரை வில்லைகளை விற்பனை செய்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித்து, முதல் பரிசாக தமிழ்நாட்டுக்குச் சுழற் கேடயம் ஒன்றை வழங்கினார்.

காசநோய்த் தடுப்புப் பணியின் எல்லா அம்சங்களில் சிறந்த தொண்டாற்றியமைக்காகத் தகுதிச் சான்றிதழ் ஒன்றும் தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டது.

காசநோய் முத்திரை வில்லைகள் விற்பனையில் தமிழ்நாடு 1967 முதல் 1970 வரை தொடர்ந்து 9 ஆண்டுகள் முதலிடம் வகித்து சுழற்கேடயம் பெற்றதோடு, 1979-1980 ஆண்டுகளிலும் முதலிடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ●

க்ஷயரோகம் நாட்டில் ஒரு பெரிய பொதுச்சுகாதாரப் பிரச்னையாக இருந்து வருகிறது. இதனால் ஆண்டுக்கு ஐந்து முதல் ஆறு இலட்சம் மக்கள் மரணமடைகிறார்கள். சுமார் 90 இலட்சம் முதல் ஒரு கோடி நபர்கள் வரை க்ஷயரோகத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் சுமார் 25 இலட்சம் பேர் இந்த நோயைப் பரவச் செய்ததற்கான தொற்று நோய்க்காரர்களாக இருக்கிறார்கள்.

# கோழிகளின் மூச்சுக்குழல் நோய்!

நம்நாட்டில் கோழிப் பண்ணைகள் மிகப் பெரிய அளவில் வளர்ச்சி அடைந்து கொண்டு வருகின்றன. நாம் இப்பொழுது தீவிர கோழி வளர்ப்பு முறையைக் கையாளுவதால், நோய்கள் முக்கியமாக சுவாசக் குழல் நோய்கள் வெகு வேகமாகப் பரவக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. சுவாச நோய்களினால் ஏற்படும் பொருள் நட்டம் தீவிரக் கோழி வளர்ப்போருக்கும் குஞ்சு பொரிப்பாளருக்கும் பெரும் கவலை தரும் சிக்கலாகவே வளர்ந்து விட்டிருக்கிறது.

சுவாச நோய்களினால் ஏற்படும் இழப்பை இரு வகையாகக் கொள்ளலாம். ஒன்று, கோழிகள் இந்நோய்களினால் இறந்துவிடுவது. மற்றது, நோயினால் ஏற்படும் உற்பத்திக் குறைவுகள், குறைவாக முட்டை இடுதல், குறைந்த எடை முதலியன.

மேலும், சுவாச நோய் தாக்கியதால் கோழிகள் தங்கள் நோய் எதிர்ப்புச் சக்தியினை இழக்கின்றன. ஆகவே, கோழிகளைத் தாக்கும் சுவாச நோய்களைப் பற்றிய சில அவசியமான தகவல்களைத் தெரிந்து வைத்திருப்பது கோழி வளர்ப்போருக்கு அவசியமானது நன்மை பயக்கக்கூடியதுமாகும.

கோழிகளைத் தாக்கும் சுவாச நோய்களில் முக்கியமான சிலவற்றையும், அவற்றின் தன்மைகளையும், அவற்றால் ஏற்படும் விளைவுகளையும், தடுப்புமுறைகளையும் அறிவோம்.

மூச்சுக்குழல் வீக்கத் தொற்று நோய்— அண்மைக் காலத்தில் தோன்றிய சுவாச நோய்களில் இது ஒன்றாகும். இந்நோய் மிக விரைவாகவும், எளிதுலும் தொற்றிக் கொள்ளக்கூடியதுமாகும். இது ஒருவித நச்சுக் கிருமியால் உண்டாகிறது. பெரும்பாலும் 10 வாரங்களுக்கு உட்பட்ட கோழிக் குஞ்சுகளையே இது தாக்கும்.

இந்நோய் கண்ட குஞ்சுகள் சுவாசிக்க மிகச் சிரமப்படும். வாயைத் திறந்து சிரமத்துடன் சுவாசிக்கும். இரத்தம் கலந்த கோழை, நோய் கண்ட கோழிகளில் காணப்படும். நோய்கண்ட கோழிகளிலிருந்து இந்நோய் சுவாசக் குழாய் வழியாகவும், பண்ணையில் வேலை செய்யும் ஆட்கள் மூலமாகவும் மற்றும் அங்குக் கையாளப்படும் சாமான்களின் வாயிலாகவும் பரவக் கூடியது. சுவாசிக்கும்பொழுது கோழி கழுத்தை நீட்டிக் கொள்ளும். முட்டைப் பருவக் கோழிகளின் முட்டைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் விரைவில் குறையும்.

**தடுப்பு முறைகள்** : 1. வளர்ப்புக் குஞ்சுகளை வாங்கும்போது, இந்நோய் கண்டிராத பண்ணைகளிலிருந்து வாங்குதல். 2. நோய் கண்ட கோழிகளைத் தனியாகப் பிரித்து வைத்து மருந்துகள் கொடுத்தல். 3. தடுப்பு ஊசி போடுதல்.

**கிளை மூச்சுக்குழல் வீக்கத் தோற்று நோய்:**

நச்சுக் கிருமியால் ஏற்படும் இந்த நோய் குறிப்பாக 1 முதல் 2 வார வயதான கோழிக் குஞ்சுகளைப் பிடிக்கும். அலகுகளிலிருந்து நீர் கசிதல், மூச்சுத் திணறல், கண்களிலிருந்து நீர் கசிதல் முதலியன இதன் அறிகுறிகளாகும். நோய் கண்ட கோழிகள் வாயைத் திறந்து மிக்க சிரமத்துடன் 'கர்கர்' என்ற சப்தத்துடன் மூச்சு விடுகின்றன. பெரிய கோழிகளில் முட்டை உற்பத்திக் குறைவது, முட்டை ஓடுகள் சரியான உருவத்தில் இல்லாதது, மெல்லிய ஓடுகளுடைய முட்டைகள் ஆகியவைகள் இந்நோயின் முக்கிய அறிகுறிகளாகும். திடீரென்று முட்டைகளின் எண்ணிக்கை 80 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகக் குறைந்து விடுவதுண்டு.


இந்த நோய் மிகவும் சீக்கிரமாகப் பரவும் தன்மை உடையதால், நோய் பீடிக்கப்பட்ட குஞ்சுகளை மற்ற பறவைகளிலிருந்து உடனே பிரிக்க வேண்டும். நோயற்ற, தெரிந்த இடங்களிலிருந்து வளர்ப்புக் குஞ்சுகளை வாங்கினால் இந்நோய் வராமல் தடுக்கலாம்.

குஞ்சுகள் முதல் பெரிய கோழிகள் வரை 'மைகோபிளாஸ்மா' என்ற ஒருவகை கிருமிகளால் இந்த நோய் உண்டாகிறது. மேலும், நுண்ணுயிர், நச்சுக்கிருமி இவைகளும்கூடச் சேர்ந்து பாதிக்கும். இந்த நோய், எல்லாக் கோழிப் பண்ணைகளிலும் மிகப் பரவலாகத் தோன்றி அதிக நட்டத்தை ஏற்படுத்துகிறது.


**எஸ். விசுவநாதன்,**
**ஆர். இராமகிருட்டிணன்**
**நோயியல் துறை,**
**சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி,**





## வீதியின் இரு மருங்கும் மரம் நடுங்கள்

உடல் இளைத்தல், சோர்வு, குறைந்த முட்டையிடுதல், மூக்கு ஒழுகுதல் போன்ற அடையாளங்கள் இந்நோயால் காணப்படுகின்றன. இறந்த கோழிகளின் காற்றுப் பைகள், நுரையீரல், காற்றுக் குழாய் ஆகியவைகளில் இரத்தத் தேக்கம் ஏற்பட்டு, காற்றுப் பைகளில் சீழ்கட்டி நிரம்பியிருக்கும். நோய் கண்ட கோழிகளை ஆண்டிபயாடிக் மருந்தைக் கொண்டு குணப்படுத்த முடியும்.

இந்த நோய் பெரிய கோழியிலிருந்து முட்டை மூலமாகக் குஞ்சுகளுக்குப் பரவுகிறது. ஆகையினால் முட்டைகளை எரித்ரோமைசின் அல்லது 'டைலான்' கரைசலில் கழுவி அடைகாப்பது, தடுக்கும் வழியில் முக்கியமானதாகும். மருத்துவரின் உதவியுடன் கோழிகளின் இரத்தத்தைப் பரிசோதித்து இந்நோய் உள்ளதா என்பதை அறியலாம். பொதுச் சுகாதார முறைகளைக் கடைப்பிடித்தல் நோயற்ற பண்ணைகளிலிருந்து குஞ்சுகள் வாங்குதல் ஆகியவை நோயைத் தவிர்க்க உதவுகின்றன.

**கோழி அம்மை** : இந்த நச்சுக் கிருமி எல்லாக் கோழிகளையும் பாதிக்கும். பாதிக்கப்பட்ட கோழிகளின் தொண்டையிலும் மூச்சுக் குழலிலும் ஏற்படும் ரணங்களினால் கோழிகள் மரணமடைகின்றன. இந்த நோயைத் தடுப்பதற்காகத் தடுப்பு ஊசி போட வேண்டும்.

**வெள்ளைக் கழிச்சல் நோய்:**

இந்த நோய் ஒருவகை நச்சுக் கிருமியால் ஏற்படுகிறது. கோழிகளில் அதிக சேதத்தை ஏற்படுத்தும் ஒருவித கொடிய நோய் இது. இந்த நோய் கண்ட கோழிகள் தொண்டையில் சளி அடைப்பதால் மூச்சுவிட முடியாமல் சிரமப்பட்டு இறந்து விடுகின்றன. இந்த நோய் வராமல் தடுப்பதற்குத் தடுப்பு ஊசி போட வேண்டும்.

குஞ்சுகளில் நிமோனியா என்பது ஒருவகைக் காளான் மூலம் ஏற்படுகிறது. இது அதிக சேதத்தை விளைவிக்கிறது. மூச்சுத் திணறுதல், மூக்கிலிருந்து நீர் வடிதல் ஆகியவைகளை இதனால் குஞ்சுகளிடம் காண்கிறோம். பீடிக்கப்பட்ட குஞ்சுகள் இறந்துவிடுகின்றன. இறந்த குஞ்சுகளில் மஞ்சள் கலந்த வெள்ளைக் கட்டிகளை மூச்சுக்குழல், நுரையீரல் ஆகியவற்றில் பார்க்கலாம்.

இவ்வியாதியைத் தடுப்பதற்கு குஞ்சுப் பெட்டிகள் காற்றோட்டமாகவும், ஈரமில்லாமலும் இருக்க வேண்டும்.

**சளிநோய்:**

இந்தத் தொத்து நோய் ஹேமோபைலஸ் கேலினோரம் என்ற நுண்ணுயிரினால் உண்டாகிறது. எல்லா வயதுக் கோழிகளும் பாதிக்கப்படுகின்றது. இதன் முக்கிய அடையாளங்கள் மூக்கிலிருந்தும், கண்களிலிருந்தும் நீர் ஒழுகுதல், மூச்சுத் திணறுதல் ஆகியவைகள். நோயைத் தடுப்பதற்குப் பொதுச் சுகாதார முறைகளைக் கடைப்பிடித்தலும், பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு ஆண்டிபயாடிக்ஸ் கொடுத்தலும் உதவும்.

**புழுக்களினால் ஏற்படும் சுவாச நோய்:**

சின்கமஸ்ட்ரகியா என்னும் ஒரு வகை சிவப்பு நிறமுடைய உருண்டைப் புழு மூச்சுக்குழாயில் வசிக்கும். இதனால் சுவாச குழாயில் அடைப்பு, மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. பாதிக்கப்பட்ட கோழிகள் இறக்கின்றன. கோழிகளில் வாயைத் திறந்து கொண்டு சுவாசித்தல், தலையை அசைத்து மூச்சுக் குழலிலுள்ள தடையை நீக்க முயற்சித்தல் ஆகியவைகளைக் காணலாம்.

புழுக்களை அகற்ற சிகிச்சை (பிபரோசின் தயாரிப்புகள்) செய்து தவிர்க்கலாம்.

**வைட்டமின் 'ஏ' சத்துக்குறைவு:**

வைட்டமின் 'ஏ' சத்துக் குறைவு ஏற்பட்டால் ஏற்படும் பல நோய்களில் மூச்சுக் குழல் நோயும் ஒன்றாகும். மூக்கிலிருந்தும் கண்களிலிருந்தும் நீர் ஒழுகுதல், கண்களின் இமைகள் ஒன்றுக்கொன்று ஒட்டிக் கொள்ளுதல், வெள்ளையான சீழ் கட்டுதல் இவைகளை இந்நோய்கண்ட கோழிகளிடம் காணலாம். இதன் விளைவாகக் கண்கள் உபயோகமில்லாமல் போகின்றன. கோழிகளில் தீனியைத் தின்ன முடியாமல் இறத்தல் ஏற்படுகிறது. ஆகையினால் இதைத் தவிர்க்க தீனிகளில் வைட்டமின் 'ஏ' சத்து உள்ள மருந்துகளைக் கலக்க வேண்டும்.

பொதுவாக, சுவாச நோய்களைத் தடுக்க சுகாதார முறைகளை அனுசரித்தல், தெரிந்த நல்ல முறைகளைக் கடைப்பிடிக்கும் இடங்களிலிருந்து குஞ்சுகளை வாங்குதல், மேலும், அவ்வப்பொழுது தொற்று நோய்களுக்குத் தடுப்பு ஊசி போடுதல், புழுக்கள், பேன் இவைகளுக்குச் சிகிச்சை செய்தல் முதலியவைகளைப் பின்பற்ற வேண்டும். ●

நான் துன்புறக்கூடிய அளவு எனக்கு எவ்விதக் குறையுமில்லை. எனினும் காலில் அணிவதற்குச் செருப்பு இல்லையே என்ற எண்ணம் மட்டும் என் மனத்தை உள்ளூர அரித்துக் கொண்டிருந்தது. ஒருநாள் இவ்வித எண்ணத்தோடு நான் கூ..பாவிலுள்ள பள்ளி வாயிலினுள் நுழைந்தபொழுது அங்கு காலற்ற ஒருவனைக் கண்டேன். கண்டதுதான் தாமதம். எனக்குக் கால்களைத் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்தினேன்.

—வா.அ.

## வாழ்வு

வாழ்க்கையில் இரண்டு கொலைகள் நடக்கின்றன. ஒன்று-உங்கள் உள்ளத்து ஆசை நிறைவேறாத போது; மற்றொன்று உங்கள் ஆசை நிறைவேறும்போது!

—பெர்னாட்ஷா.

வாழ்க்கை, வானவில்லாக நீண்டகாலம் இருப்பதை விட—கண நேரம் கண்ணைப் பறித்து மறையும் மின்னலாக இருப்பது நல்லது.

—ராஜாஜி.

வாழ்க்கை என்பது போராட்டம்; வாழ்க்கை என்பதுவேள்வி:வாழ்க்கை என்பது கடல். புண்ணில்லாத போராட்டம் இல்லை. தீ இல்லாத வேள்வி இல்லை. புயல் இல்லாத கடல் இல்லை!

—விக்டர் ஹியூகோ.

வாழ்க்கை என்பது ஒரு ஏணி. நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மேலேயோ அல்லது கீழேயோ கொண்டு செல்கிறது!

—ரோகர் பாப்ஸன்.

நீங்கள் உயிர் வாழ்வதற்காகச் சாப்பிடுங்கள், சாப்பிடுவதற்காக உயிர் வாழாதீர்கள்!

—சாக்ரடீஸ்.

மனிதன் விரும்புவது ஒன்றும், நடப்பதுவேறொன்றுமாக இருக்கலாம். அதனால் வாழ்க்கையே முடிந்து விட்டதாக யாரும் கருதி விடக்கூடாது!

—கரிபால்டி.



# தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகள்

கலை உணர்வு மனிதனுக்கு இயல்பாக அமைந்த சிறந்த பண்புகளில் ஒன்றாக விளங்குகிறது. அது அவனுக்கு உயர்வும் உன்னதமும் கொடுக்கும் பெருமையுடையது. உள்ளத்தில் ஊறும் உணர்ச்சிப் பெருக்கைப் பலவிதமான கலைகளின் வாயிலாகப் பிறருக்குப் புலப்படுத்திக் காட்ட மனிதன் விரும்புகிறான். அது ஆடலாகவும், பாடலாகவும் வெளிப்படுகிறது. திறமையுடன் ஆடிப்பாடுவதில் இன்பம் பொங்கி பிறரைக் கவர்கிறது. ஆகையினால் ஆடலைக் காணவும், பாடலைக் கேட்கவும் மனிதன் ஆவலுடன் விரைகிறான். அவை மனத்துக்கு இதமாக அமைந்து இன்பத்தை ஊட்டுகின்றன. அவற்றில் செம்மையும் சீர்மையும் இருப்பதனால் கலைகளாக மதிக்கப்படுகின்றன. பலவகையான கலைகள் பல வழிகளில் தோன்றி இன்று மிகவும் வளர்ச்சியுற்று விளங்குகின்றன.

தொடக்கத்தில் மனிதன் தன் வாழ்வை இயற்கையுடன் பின்னிப் பலவிதமான கலைகளைப் பிறப்பித்துள்ளான். அவை எளிமையாகவும் இனிமையாகவும் அமைந்துள்ளன. விதிமுறைகளைக் கருதாது இன்ப உணர்வையே அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளன. உணர்ச்சியைப் புலப்படுத்தும் நோக்கமே பெருநிலையாக அவற்றில் காணப்படும். இயற்கையான உணர்வுகளை இயல்பாக விளக்கும் எளிய கலைகளாக அவை விளங்கின. அவற்றை நாட்டுப்புறக் கலைகள். என்று நாகரிக மக்கள் கூறினர்.

''நாட்டுப்புறக் கலைகள் உயிரோட்டமுடைய உணர்ச்சி உந்தல்களாக விளங்குகின்றன. இன்பமும் துன்பமும் இணைந்த வாழ்வில் எத்தனை விதமான உணர்வுகளோ ஏற்பட வாய்ப்புள்ளது. அத்தனையும் கலைச் செல்வங்களாக வெளியிடப்படுகின்றன. அவற்றை நாட்டு மக்கள் மனங்


டாக்டர் ஏ. என். பெருமாள்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.


களிக்க கண்டும் கேட்டும் மகிழ்கின்றனர். அத்தகைய கலைகள் கால ஓட்டத்தில் கரைந்துவிடாது காப்பாற்றிய பெருமை நாட்டுப்புற மக்களையே சேரும். நாகரிக வாழ்வின் அலை வீச்சு நாட்டுப்புறக் கலைகளை நசுக்க முடியாது. தவிப்பதிலிருந்து அவற்றிலுள்ள உயிர்த்துடிப்பின் உண்மைத் தன்மையை அறியலாம். அங்கங்கே சில கலைகள் மங்கி மறைந்து விட்டதாகத் தோன்றினாலும் அவற்றின் மாற்றுருவக் கலைகள் மலர்ந்து விளங்குவதைக் காணாமல் இருக்க முடியவில்லை.

நாட்டுப்புறக் கலைகள் சுதந்திரமாக வளர்ந்து செழித்தவை. அவைகளுக்கு உரிமையான வேக எழுச்சியும் தனித்த இயக்கமும் உள்ளன. அவை எதையும் குறிப்பிட்ட நோக்கத்துக்கு வற்புறுத்த ஒருபோதும் முயல்வதில்லை. மக்களுக்கு மிக நெருக்கமான உறவுகளுடன் கலை நிகழ்ச்சிகள் அமைகின்றன. வாழ்க்கையோடு தொடர்புடைய செயல்களையும், மனத்தில் எழும் உணர்ச்சிகளையும் உள்ளடக்கி கலையலங்கார எளிமை கொண்டு உயிர்த் துடிப்புடன் நாட்டுப்புறக் கலைகள் நடைபெறுகின்றன. பொதுவாக இத்தகைய கலைகள் மக்களிடமுள்ள வீரம், காதல், தொழில், சமயக் கொள்கைகள் போன்றவற்றை விளக்கும் சாதனங்களாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாகக் கலைஞனுக்கும், கண்டு களிப்போருக்கும் இடையிலிருக்கும் தூரம் மிகமிகக் குறைவாகவே உள்ளது. கலை நிகழ்ச்சி நடைபெறும் பொழுதும் இருசாரரும் உணர்ச்சிக் கலப்பில் ஒன்றி விடுகின்றனர் ஆகையினால் ஒரு வகையான ஒற்றுமை நிலவி மக்கள் அனைவரும் பின்னிப்பிணைந்து மகிழ்கின்றனர் வாழ்க்கை மலர்ச்சிக்கு நாட்டுப்புறக் கலைகள் பெருந்துணை புரிகின்றன எனறு உறுதியாகக் கூறலாம்.

இத்தகைய கலைகளைச் சமயங்களே பெரிதும் ஊட்டி வளர்த்துள்ளன. கோயில் விழாக்களிலும் சமயச் சார்புடைய சடங்குகளிலும் கலை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. பல கலைகளுக்கும் பக்தி உணர்வுக்கும் நெருக்கமான உறவு காணப்படுகிறது. ஆகையினால் மக்கள் கலைகளைப் புனிதமாகக் கருதி ஏற்றுள்ளனர். இறையருளுக்காகவும், குறை தீர்வுக்காகவும் வேண்டுதலாகக் கலை நிகழ்ச்சிகளை மக்கள் நடத்துவதைக் காணலாம்.

பலவிதமான நாட்டுப்புறக் கலைகள் பரம்பரை பரம்பரையாகத் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகின்றன. அவற்றில் விதவிதமான நம்பிக்கைகள் அடங்கியுள்ளன. காரண காரியங்களைக் கற்பித்து அவற்றுக்குத் தக்க வேறுபாடுகளைக் கொண்டு நிகழ்ச்சிகள் நடத்தப் பெறுகின்றன.

தமிழ்நாடு, நாட்டுப்புறக் கலைகளின் களஞ்சியமாகக் காணப்படுகிறது. நாடளாவிய கலைகளும் இடத்துக்கு இடம் மாறுபடும் கலைகளும் இங்கு உள்ளன. அவற்றுக்குப் பொதுவான நோக்கம் இருப்பதுடன் குறிப்பிட்ட சிறப்பு நோக்கங்களும் அமைந்துள்ளன. தனித்தனிக் கலைகளின் இயல்புகளையும், இயக்கங்களையும் கண்டு உணர்வது நன்மை பயக்கும்.

### கரக ஆட்டம்

'கரகம்' என்ற சொல் கமண்டலம், ஆலங்கட்டி, நீர்த்துளி, கங்கை, பூங்குடம் ஆகியபொருள்களில் பயன்படுத்தப் பெறுகிறது, மலர்களால் அலங்காரம் செய்யப் பெற்ற ஒரு குடத்தைத் தலையில் வைத்து ஆடும் ஆட்டத்துக்குக் கரக ஆட்டம் என்று பெயர் கொடுக்கப் பெற்றுள்ளது மிகப் பொருத்தமே. தென்மாவட்டங்களில் 'கும்பாட்டம்' என்றும் இதனைக் கூறுவர்.

திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கரக ஆட்டம் மிகப் பரவலாக நடத்தப்படும். இப்பொழுது தமிழ்நாட்டில் பல இடங்களில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது. மாரியம்மன் திருவிழாவில் பெருவழக்காக இது ஆடப்படுகிறது. குடம் நீரால் நிரப்பப்பெற்று இருப்பதைக் காணலாம். இந்தத் தண்ணீர் மாரி அல்லது ஏழு புண்ணிய நதிகளைக் குறிப்பதாக நம்புகின்றனர். இத்தகைய ஆட்டத்தில் குடங்கள் பூக்களாலும் வேப்பிலையாலும் ஒப்பனை செய்யப்பட்டி



## தாழ்வு

தாழ்வு வந்தால் அது உனக்குப் பிரியமானதென்று காட்டிக் கொள். உயர்வு வந்தால் அது உனக்குச் சர்வசாதாரணம் போல் காட்டிக்கொள். அதுதான் அறிவுடைமை.

—ரூஸோ.

எல்லாம் போய், தாழ்ந்து விட்டோமே என்று கவலைப்படவேண்டாம். எல்லாமும் போய்விடவில்லை. எவராலும் வெல்ல முடியாத உள்ளம் இருக்கிறதே! அதைக் கொண்டு எதையும் சாதித்து விடலாம்.

—மில்டன்.

தாழ்வு கண்டு துக்கப்படுகிறவர்களே! பொறுமையாயிருங்கள். சூரியன் மேகங்களுக்குப் பின்னே மறைந்திருக்கிறான். அந்த மேகங்கள் அஞ்சத் தக்கவையல்ல!

—லாங்ஃபெல்லோ.

தாழ்வு இன்னதென்று தெரியாத வாலிபன் காட்டுமிராண்டி, உயர்வு இன்னதென்று தெரியாத கிழவன் முட்டாள்!

—கால்டன்.

தாழ்வு என்பது கேவலமானதல்ல; ஏணியின் உச்சிப் படியை அடைய வேண்டுமோனால் தாழ்ந்திருக்கும் அதன் அடிப்படியில் தான் முதலில் காலை வைத்தாக வேண்டும். வாழ்க்கையும் அவ்வாறே!

—பித்தகோரஸ்.

ருக்கும். வளத்தின் அறிகுறி யாகக் கரகம் எடுத்து அம்மன் கொண்டாடிகள் ஆடுவர்.

தொழில்முறை கரக ஆட்டம் சிறிது மாறுபட்டு அமையும். குடத்துள் அரிசி நிறைக்கப்பட்டிருக்கும். மலரால் அழகு செய்யப்பட்ட குடத்தின் உச்சியில் ஒரு கிளியின் உருவம் செருகப்பட்டிருக்கும். ஆண்களோ அல்லது பெண்களோ நன்கு பயிற்சிபெற்று ஆடுவர். குடத்தைக் கையால் பிடிக்காது தலையில் நிலைநிறுத்தி இசைக் கருவிகளின் தாளத்துக்கு தக்கவாறு ஆடுவர். வேக நிலையில் சுழன்று சுழன்று ஆடுவது வியப்புறும் காட்சியாக அமையும். பெரும்பாலும் வெண்கலக் குடத்தையே பயன்படுத்துவர்.

நையாண்டி மேளத்தின் துணையுடன் கரக ஆட்டம் மிகவும் சிறப்பாக நடைபெறும். இசை படிப்படியாக உயர்ந்து உச்சக் கட்டத்தை அடைந்து திடீரென நிறுத்தப்படும். அதற்குத் தக்கவாறு ஆட்டமும் விறுவிறுப் படைந்து உணர்ச்சிக் கொந்தளிப்பைப் பெருக்கி திடீரென நிற்கும். வேகமாகச் சுழன்று ஆடிய ஆட்டக்காரர் எப்படி 'பட்டென' ஆட்டத்தை நிறுத்தி அசைவற்று நின்றார் என்பதை வியப்புடன் நோக்கி ஒரு கணம் செயலற்று மக்கள் கூட்டம் நிற்கும். மறு கணம் கரவொலி அந்த இடத்தை அதிரச் செய்யும். அவர்கள் ஆட்டத்துடன் தம்மை மறந்து ஒன்றிய நிலையை, இந்த இடத்தில் மிகத்தெளிவாக உணரலாம். ஆட்டம் அம்மன் கோயில் முகப்பில் திறந்தவெளியில் நடக்கும். மக்கள் சுற்றி நின்று சுவைத்து மகிழ்வர். பரிசுகள், பணம் ஆகியவற்றை ஆட்டக்காரருக்குக் கொடுத்து ஊக்கப்படுத்துவர்.

சில இடங்களில் ஆட்டத்துக்கு இடைநடுவே பல வித்தைகளை வியப்புறும்படி ஆட்டக்காரர் செய்து காட்டுவார். தரையில் வீசிய காசைக் கைக்கொண்டு வேமாக எடுக்கும்போது தலையிலுள்ள குடம் நழுவாதவாறு தாங்குவது அருமையான காட்சியாக அமையும். குடத்துக்கு மேல் சிறுசிறு குடங்களை அடுக்கிச் சமன்படுத்தி ஆடுவதும் உண்டு. குடத்தை இறக்கித் தலையில் ஓர் உலக்கையை நிறுத்தி அதன் உச்சியில் தீச்சட்டி வைத்து சமன்செய்து ஆடுவது தனித் திறமையாகத் தோன்றும். தலைமுடியால் தீப்பந்தத்தைக் கட்டிச் சுழன்று ஆடும் வேகம் அனைவரையும் கவரும்.

கரகத்தைத் தலையில் வைத்துக் கொண்டு நிறுத்தப்பட்ட இரண்டு ஏணிகளில் கால்களை வைத்து சமண நிலையில் நிற்பது அனைவரையும் வியப்படையச் செய்யும். கரகம் இன்றி ஏணியின் ஊடே நுழைந்து மேலேறிக் கீழிறங்குவதும் உண்டு. ஒரு குடத்தைக் கவிழ்த்து அதன்மேல் நின்று கரகத்துடன் ஆடுவதையும் பார்க்கலாம்.

தற்காலத்தில் பெண்களே இறுக்கமான ஆடைகள் அணிந்து கரக ஆட்டம் ஆடுகிறார்கள். சில சமயம் இன்னொரு பெண்ணும் இணைந்து ஆடுவதைக்காணலாம். ஆட்டத்தின் இடையில் வித்தைகள் காட்டும்போது, கலை உணர்வு குன்றிவிடும் நிலை தோன்றுகிறது. மக்களின் ஒன்றிய உணர்வு சிதறிவிடுகிறது. ஆகையினால் ஆட்டத்துக்கு நடுவில் வித்தை காட்டுவதைக் கலைஞர்கள் தவிர்ப்பதே நல்லதாகப்



படுகிறது. ஆட்டம் முடிந்தபின் இத்தகைய வித்தைகளைக் காட்டி தங்கள் திறமைகளைப் புலப் படுத்தலாம்.

''கரக ஆட்டத்தின் கூறுகள் சிலப்பதிகாரக் காலத்திலேயே இருந்துள்ளதாகக் கருதலாம். மாதவி ஆடிய பதினொரு ஆடல்களில் ஒன்று 'குடக்கூத்து' என்று சொல்லப்படுகிறது. அது கண்ணன் ஆடிய கூத்தாகும். பாணசூரன் கண்ணனின் பேரனான அநிருத்தனைச் சிறை செய்துவிடுகிறான். அவனை விடுவிப்பதற்காக மண்ணாலும் வெண்கலத்தாலும் ஆன குடங்களைத் தலையில் வைத்து சோநகரத் தெருவில் ஆடுகிறான். ஆறு வகையான விநோதக் கூத்துக்களில் ஒன்றாகக் குடம் குறிப்பிடப்படுகிறது. நாட்டுப்புறச் 'சாமியாடிகள்' குடத்தைத் தலையில் தாங்கி ஆவேசமுற்று ஆடுவதை இன்றும் பல ஆலயங்களில் பார்க்கலாம்.

''கரகமெடுத்து ஆடுவோர் சில பாடல்களைப் பாடி மக்களைக் கவர்வதும் உண்டு. பாடல்கள் நாட்டார் இசையமைப்பில் இருக்கும். ஒன்று முதல் பத்துவரை எண்கள் அமைந்த ஒரு பாடலைக் கேட்கலாம்:

ஒண்ணாங் கரகமாடி எங்க
முத்துமாரி
ஒசந்த கரகமாடி எங்க முத்துமாரி
ரெண்டாங் கரகமாடி எங்க
முத்துமாரி
இரத்தினக் கரகமாடி எங்க
முத்துமாரி

இவ்வாறு பத்து வரையிலும் சிலசில சொற்களை மாற்றி மாற்றிப் பாடுவர். பாட்டின் மொழி, பொருள், இசை ஆகிய அனைத்தும் எளிமையாக இருக்கும். ஆனால், சுவை மிக இனிமையாக அமைந்து நாட்டுப்புற மக்களைக் கவரும்.

''இன்று தெய்வ ஆவேசமாகவும், தொழில் முறையாகவும் இத்தகைய ஆட்டம் பல இடங்களில் நடைபெறுகிறது. இதன் தொடக்கம் எவ்வாறு ஏற்பட்டிருக்கும் என்று சிந்திக்கலாம். முன் காலத்தில் குடிதண்ணீர் எடுப்பதற்குத் தொலைதூரம் செல்ல வேண்டிய நிலை இருந்திருக்கும். நீர் நிறைந்த குடங்களைத் தலையில் சுமந்து வந்திருப்பார்கள். பழக்கத்தின் காரணமாகக் கைகொண்டு பிடிக்காமல் சுமக்கும் திறமை ஏற்பட்டிருக்கும். கையை வீசி நடப்பதில் ஒரு கலைக் கூற்றினை மனிதன் உணர்ந்திருக்கலாம். இத்தகைய நிலையில் பெண்களின் நடை சிறப்பாக அமைந்திருக்கும். பின் கலைத் திறனைப் பெருக்கி ஆட்டத்துக்கு உருக் கொடுத்திருக்கலாம்.

மாரியம்மனுடன் நம்பிக்கையின் அடிப்படையில் நீர்நிறைந்த குடம் இணைக்கப்பட்டவுடன் ஆட்டத்தில் சமய உணர்வு கலந்திருக்கும். சமய கட்டுக்கும் அடங்காது தன் தனித்திறமையை வெளிக்காட்ட கலைஞன் விரும்பியபோது கரக ஆட்டம் தொழில் முறைக் கலையாகப் பிரிந்து வளர்ந்திருக்க வேண்டும். நாட்டுப்புற விழாக்களே கரக ஆட்டத்துக்குப் பெரிதும் ஆதரவு கொடுத்து வளர்த்து வருகிறது. இன்றும் அதனை மக்கள் மிகவும் விரும்புகிறார்கள். இரவில் நெடு நேரம்வரைக் கண்விழித்து பெருங் கூட்டமாகக் கூடிக் கரக ஆட்டத்தைக் கண்டு களிப்பதில் அதன் சிறப்பு அடங்கியுள்ளது.



## காவடியாட்டம்

முருகப் பெருமானை வழிபடும் முறையாகக் காவடி எடுத்து ஆடும் வழக்கம் தமிழ்நாட்டில் பெருவழக்காக உள்ளது. இடும்பாசுரன் மலையைத் தூக்குவதன் அறிகுறியாக இந்த ஆட்டம் நடத்தப் பெறுவதாகக் கூறுவர். குன்றுதோறும் ஆடும் முருகக் கடவுளுக்கு மலைகளின் மேல் கோயில் அமைத்து வணங்குவர். காவடியைச் சுமந்து ஆட்ட பாட்டத்தோடு பக்தர்கள் மலையேறிச் செல்வது கண்கொள்ளாக் கலைக்காட்சியாகத் தோன்றும்.

காவடி ஒரு குறுத்தடியினால் ஆனது. அதன் இரு முனைகளையும் இணைந்து மேல்நோக்க ஒரு வளைவான அமைப்பாகக் கட்டியிருப்பர். அதனை மயில் பீலி, மலர்ச்சரம் ஆகியவற்றால் ஒப்பனை செய்திருப்பர். நடுப் பகுதியில் முருகனின் படத்தை வைத்திருப்பதையும் காணலாம். பலவித காணிக்கைப் பொருட்களும் இருபுறமும் கட்டித்தொங்க விட்டிருக்கும். அலங்கரிக்கப் பெற்ற காவடி அழகின் கொலு விருப்பாகத் தோன்றும்.

வாத்திய இசைக்குத் தக்கவாறு காவடியாட்டம் நடைபெறும். நையாண்டி மேளமும் இதற்கு உதவும். தெய்வ ஆவேசமுற்ற ஒருவர் காவடியைத் தூக்கி இசைக்குத் தக்கவாறு ஆடியசைந்து மேலேறுவார். முருகனைச் சிறப்பிக்கும் காவடிச் சிந்து பாடல்களும் பாடப்படும். உடன் செல்வோர் அனைவரும் 'வேல் வேல் முருகனுக்கு அரோகரா' என்று கூறியவாறு இணைந்து நடப்பர். காவடியெடுக்கும் சிலர் உதட்டிலும் கன்னத்திலும் சிறிய வேலால் அலகு குத்தியிருப்பர். காவடியெடுப்பதற்கு முன் அவர்கள் பலவிதமான நோன்புகள் நோற்பது வழக்கம். இத்தகைய ஆடற் காட்சியில் பக்தி உணர்வே மேலோங்கிக் காணப்படும்.

இன்று பல இடங்களில் தொழில் முறையாகக் காவடியாட்டம் நடைபெறுகிறது. கலைச் சிறப்புத் ததும்ப பல உத்திகளைக் கையாண்டு ஆடும் கலைஞர்கள் மக்களைப் பெரிதும் கவர்கின்றனர். முதலில் காவடியைத் தோளில்தாங்கி மெதுவாக ஆடத் தொடங்குவர். பின் இசையின் வேகம் கூடக் கூட ஆட்டத்தின் வேகமும் கூடும். தோளிலிருந்து காவடியைப் பின் கழுத்துக்கு மாற்றி முன்னும் பின்னுமாக அரைவட்ட முறையில் ஆடச் செய்வர். கைகொண்டு காவடியைப்பிடிப்பதே இல்லை, கழுத்துடன் இணைக்கப்பட்டு காவடி அசைவது போன்று தோன்றும். காந்தத்துடன் ஒட்டிய இரும்புத் துண்டு போன்று உடம்போடு ஒட்டியவாறு காவடி ஆடி அசைந்தும் சுற்றிச் சுழன்றும் உறவாடும் மூக்கு நுனி, தலையுச்சி, மார்பு, நெற்றி, முதுகு ஆகிய பல பகுதிகளில் நிலை நிறுத்தப்படும். காவடியாட்டக் காட்சிகள். ஆட்டக்காரரின் திண்மையைப் புலப்படுத்தும். உடலை வளைத்தும் திருப்பியும் காவடியை நகரச் செய்து உடம்பின் பல பாகங்களில் அதனைச் சமனப் படுத்தி நிற்கச் செய்வது இக் கலையின் நுட்பப் பகுதியாக மதிக்கப்படும். காலில் சலங்கை கட்டி இசைக்குத் தக்கவாறு தாளவொலி எழுப்பி ஆடுவர்.

காவு தடியே 'காவடியாகி' இருக்க வேண்டும். 'காவுதல்' என்பது கட்டித் தொங்கவிட்டுச் சுமத்தல் என்று பொருள்படும். ஒரு கம்பின் இரு முனைகளிலும் தண்ணீர் சேத்தும் தோண்டிகளைக் கட்டித்தொங்க விட்டிருப்பதைப் பல இடங்களில் காணலாம். அதனைக் 'காவட்டுத் தோண்டி' என்றே கூறுவர். இவ்வாறு காவடித் தண்டின் மூலம் பொருட்களைச் சுமப்பதை ஆந்திரா, மைசூர், ஒரிசா, போன்ற மாநிலங்களில் இன்றும் காணலாம். ஆனால் அந்த இடங்களில் கலையாக வளராத காவடி தமிழ்நாட்டில் ஒரு சிறந்த நாட்டுப்புறக் கலையாக வளர்ந்துள்ளது.

முருகன் கோயில்கள் பெரும்பாலும் மலைகளின் மீது இருப்பதினால் பக்தர்கள் படையல் பொருட்களையும் தங்களுக்கு வேண்டியவற்றையும் சுமந்து மலையேற வேண்டிய நிலையுள்ளது. அவற்றை ஒரு கழியின் இரு முனைகளிலும் உறிபோன்று கட்டித் தொங்கவிட்டுத் தோளில் அதைத் தாங்கி நடப்பது மிகவும் எளிதாக அமைந்திருக்கும். காவு தடியைக் கையால் பிடிக்க வேண்டிய தேவை இல்லை. சமனப் படுத்தி விட்டால் கையை வீசியவாறு மலையில் இலகுவாக ஏறலாம்.

அவர்கள் முருகனை வழிபடும் ஒரே நோக்கத்துடன் செல்வதனால்நடைக் களைப்பைப் போக்க முருகனின் புகழ்பாடும் பக்திப் பாடல்களைப் பாடியவாறு நடந்



திருப்பர். இதிலிருந்து பல வழிநடைப் பாடல்கள், காவடிச் சிந்துகள் இயற்றப் பெற்றிருக்க வேண்டும். பாடல்களின் இசை மயக்கத்தால் ஆடியிருப்பர். பின்னர், ஆட்டத்தைப் பிறர் சுவைத்து மகிழ்வதற்காகப் பல விதமான கலை உத்திகளைப் பயன்படுத்தி இருப்பர்.

சமயவுணர்வு மனிதனையும் கலையுணர்வையும் கட்டுப்படுத்தும் இயல்பு உடையது. அதிலிருந்து விடுபட்டு தங்கள் கலைத் திறனைக் காட்ட சிலர் விரும்பி இருப்பர். அதிலிருந்து தொழில் முறைக் காவடியாட்டக் கலை வளர்ந்திருக்க வேண்டும். இன்றைய நிலையில் இறைவழிபாடாகவும், கலை எழில் கோலமாகவும் காவடியாட்டம் தமிழ்நாட்டில் வளர்ந்துள்ளது. ஒன்று, சமயச் சார்புடையது. அடுத்தது, கலையழுத்தம் உடையது. இரண்டும் ஆலய விழாக்களில் நடைபெற்று நாட்டு மக்களை மகிழ்விக்கின்றன.

காவடியாட்டம் 'வள்ளித் திருமணம்' போன்ற நாடகங்களிலும் ஆடப்பட்டுள்ளது. அந்தக் காட்சி நடைபெறும்போது மக்கள் ஆட்டத்துடன் ஒன்றி நடிகருடன் முருகனது அருளை வேண்டி 'அரோகரா' ஒலியை எழுப்பிப் பக்திப் பெருக்கில் மூழ்கித் தழைத்திருக்கின்றனர். சில இடங்களில் காவடிக் காட்சி மேடையில் நடைபெறும்போது கற்பூர ஆராதனை செய்த நிகழ்ச்சிகளும் நடந்துள்ளது. மக்களின் உணர்ச்சியும் ஈடுபாடும் இதனால் நன்கு புலப்படும். நாட்டுப்புற மக்கள் நடைபெறும் காட்சிகளுள் ஒன்றிக் கலக்கும் இயல்புடையவர்கள் என்பதை இதனால் அறியலாம். (தொடரும்)



# உறைவிந்து மூலம் பால் பெருக்கம்

இந்தியா ஒரு விவசாய நாடு கால்நடை வளர்ப்பு வேளாண்மையின் உறுதுணையாகவுள்ளது. நம் நாட்டின் பசுவின் பால் கொடுக்கும் அளவு குறைவாகவுள்ளது.

தமிழ்நாட்டில் மாடுகள் 204 கிலோ பாலும், எருமைகள் 364 கிலோ பாலும் ஒரு ஈற்றுக்கு அளிக்கின்றன. மேலை நாடுகளிலுள்ள பசுக்கள் 2,900 கிலோவிலிருந்து 3,700 கிலோ வரையில் பால் அளிக்கின்றன. பால் உற்பத்தியில் நல்ல பாரம்பரியமுள்ள அயல்நாட்டுக் காளைகளைக் கொண்டு நம் நாட்டுப் பசுக்களுக்குச் செயற்கைக் கருத்தரிப்பு மூலம் உயர்ந்த இனக் கன்றுகளை பெற்று, நம் நாட்டின் பால் 'உற்பத்தியைக் குறுகிய காலத்தில் அதிகரிக்க முடியும் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.


இரா. சுப்பிரமணியன்,
இணைப் பேராசிரியர்,
கால்நடைப் பராமரிப்புத் துறை,
தமிழ்நாடு வேளாண்மை
பல்கலைக் கழகம்,
கோவை-3.

உயர் இனக் காளைகளிடமிருந்து கிடைக்கும் விந்துவை விஞ்ஞான ரீதியில் பெருக்கி, திரவ நிலையிலிருக்கும் விந்துவை 5° சி. வெப்ப நிலையில் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பிறகு 3 அல்லது 4 நாட்கள் வரையில்தான் உபயோகப்படுத்த முடியும். ஆனால், இப்படித் தயார் செய்த விந்தில் அறுபது சதவிகிதம்தான் உபயோகிக்க முடிகின்றது. ஏனெனில் திரவ விந்தின் தரம் நாட்கள் அதிகமாவதால் வெகுவாகக் குறைந்துவிடுகிறது.

விஞ்ஞானிகள் திரவ நிலையிலுள்ள விந்தின் குறைபாட்டை நீண்டகாலமாகச் சிந்தித்து அதன் ஆயுட்காலத்தை அதிகரிக்க வழிமுறைகளைக் கண்டறிய முற்பட்டனர். விந்திலுள்ள உயிர் அணுக்கள் நீண்ட நாள் கெடாமலிருக்க வெப்பத்தை 0°சி. கீழ் கொண்டு செல்வதனால் அதை ஒரு பொடியாகச் செய்து அதன் மூலம் அதன் வாழ்நாளை நீடிப்பதற்கு முதலில் முயற்சி செய்தார்கள். இம்முறையில் உயிர் அணுக்கள் அந்தக் குளிர்ச்சியைத் தாங்க முடியாத நிலையில் செயலற்றுவிட்டது.

பிறகு, கிளசரால் என்ற ஒரு இரசாயனத்தை விந்துடன் கலந்து பார்க்கும்பொழுது வெப்ப 0° சி. கீழ் சென்றாலும் விந்து அழிந்து விடாமல பாதுகாக்கப்படுகின்றது என்று கண்டுபிடித்தார்கள். அதற்குப் பிறகுதான் உறைவந்து செய்யும் முறை உருவாயிற்று.

முதலில் உறை விந்தானது கெட்டியான கரியமில வாயுவில் 79° சி.—இல் பாதுகாக்கப் பெற்றது. பின் திரவ நிலையிலுள்ள நைட்ரஜன் -196°சி. வெப்பத்தை அடைந்து தண்ணீர்போல் தோற்றமளிக்கும் பொழுது அதற்குள் உறை விந்தைப் பரவலாக உபயோகிக்கப் பெற்றது. உறை விந்தை ஒரு மில்லி அல்லது 0.5 மில்லி அளவுள்ள குளிர்பானங்கள் உறிஞ்சும் குழாய்களில் அடைத்துப் பிறகு அது திரவ நிலையிலுள்ள நைட்ரஜன் குப்பிகளில் பாதுகாக்கப்படுகிறது.



அந்தக் குழாய்களைச் சிறிது சூடான 35° சி. தண்ணீரில் 30 வினாடி வைப்பதால், உறை நிலையிலுள்ள விந்து மீண்டும் திரவ நிலையை அடைந்து ஆண் உயிர் அணுக்கள் நடமாட ஆரம்பிக்கும். இந்த நிலையை அடைந்த பிறகு இதைச் சினைக்கு வரும் மாட்டிற்குச் செயற்கை இனவிருத்தி செய்யும் கருவி மூலமாக கர்ப்பப்பையில் செலுத்தப்படுகிறது.

உறை விந்தானது திரவ நிலையிலுள்ள விந்தைக் காட்டிலும் மிகவும் சிறந்ததெனக் கருதப்படுகின்றது. உறை விந்தைப் பல ஆண்டுகள் ஆண் உயிர் அணுக்கள் சக்தி கெடாமல் வைத்திருக்கலாம். சில சமயங்களில் உயர்ரகக் காளைகள் இறந்துவிட்டாலும் உறை நிலை குளிர்பதன முறை மூலம் வைக்கப்பட்ட அதன் ஆண் கரு உயிர்களைத் தருவித்து செயற்கைக் கருத்தரிப்பு மூலம் கன்றுகளைப் பெறலாம். மேலும், உயர் ரகக் காளைகள் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்தாலும் உறைநிலை குளிர் மூலம் பக்குவப்படுத்திய ஆண் கரு உயிர்களைத் தருவித்து உயர்ந்த கன்றுகளைப் பெற முடியும்.

இதனால், காளைகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட விந்தானது சேதாரம் இல்லாமல் முழுமையாக உபயோகிக்கப்படுகிறது. மேலும், காளை பசு சேர்க்கையினால் பரவும் நோய்களைத் தடுக்கலாம். உறை விந்தானது சிறிய குழாய்களில் அடைத்துப் பெறுவதால் அதைக் கொண்டு செல்லும் குப்பிகளில் அதிக இடம் தேவையில்லை. காளைகள் கோமாரி நோய்வாய்ப்பட்டு இருக்கும்பொழுது விந்தின் தரம் குறைந்து காணப்படும். நோய் வரும் முன் சேகரிக்கப்பட்ட உறைவிந்தானதுகருத்தரிப்புக்குத் தக்க சமயத்தில் உதவும். இதைத் திரவ நிலையிலுள்ள நைட்ரஜன் குப்பிகளில் . வைக்கப்படுவதால் விந்தினுடைய தரமோ, பாதுகாக்கப்படும் முறையோ அல்லது அதை உபயோகிப்பதோ பாதிக்கப்படுவதில்லை. காளையினுடைய பாரம்பரியத் திறனை அதன் கன்றுகள் மூலம் அறிந்து கொள்ள உறை விந்து மிகவும் பயனுள்ளதாகயிருக்கின்றது.

நம் நாட்டில் பரவலாகச் செயற்கைக் கருத்தரிப்பு ஊசி மூலம் எருமைகள் எளிதில் கர்ப்பம் அடைவதில்லை, என்ற எண்ணம் எருமைகளை வளர்க்கும் விவசாயிகளிடம் ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு முக்கியக் காரணம் எருமைக்கிடாக்கள் மூலம் பெரும் திரவ நிலையில் சேகரிக்கப்பட்ட விந்தானது மிகவும் கூடிய சீக்கிரத்தில் 2-3 நாட்களுக்குள் தரம் குறைந்துவிடுகிறது.

குறிப்பாக, கோடைக் காலங்களில் விந்திலுள்ள உயிரணுக்கள் மிகவும் குறைந்து காணப்படுவதுடன், 48 மணிநேரத்திற்குள் அனைத்தும் இறந்துவிடுவதால் எருமைகளுக்குச் செயற்கை முறையில் கருத்தரிக்க ஊசி போடும்பொழுது உபயோகப்படுத்தும் திரவ நிலையிலுள்ள விந்து உயர்ந்த தரத்தில் கிடைப்பது அரிது.

இதனால் எருமை விந்தை உறைநிலை விந்துவாக மாற்றினால் எக்காலங்களிலும், எப்பொழுதும் உயர்ந்த நிலையில் தரம் 'கெடாமல் வைத்திருந்து, எருமைகளைக் கருத்தரிக்கச் செய்தால் உயர் இனக் கன்றுகளைத் தொடர்ந்து பெற முடியும்.

செயற்கைக் கருத்தரிப்புமுறையில், எருமைகளுக்கு உறை நிலை விந்துவை உபயோகிப்பதன் மூலமாக, எருமைகளை எளிதில் கருத்தரிக்கச் செய்ய முடியும் என்று தெளிவுபடுத்தலாம்.

உறை விந்தின் மேற்கூறிய பலன்களையும், அனுகூலங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது நமது நாட்டில் உறை விந்தைப் பரவலாக உபயோகிப்பதன் மூலம்தான் நாம் பால் உற்பத்தியை, பசு, எருமை மூலம் பன்மடங்கு அதிகரிக்கச் செய்ய முடியும் என்று திட்டவட்டமாகக் கூறலாம். ●



# பார்வைகள்



நாட்டில் சுமார் 90 இலட்சம் பார்வையற்றவர்கள் இருக்கிறார்கள். 4 கோடியே 50 இலட்சம் மக்கள் ஏதாவது ஒரு விதத்தில் பார்வைக் கோளாறு உடையவர்களாக இருக்கிறார்கள். இவர்களின் சத்துணவுப் பற்றாக்குறை காரணமாகவும், காயங்கள் காரணமாகவும் தங்களது கண்பார்வை இழந்த சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் பார்வையற்ற குழந்தைகளும் இந்த எண்ணிக்கையில் அடங்குவர்.

# காணோம்

இலட்சாதிபதி ஒருவர் வீட்டுத் திருமணம். ஒரு சிறுமியின் கழுத்தில் கிடந்த ஐந்து பவுன் சங்கிலி காணாமல் போயிற்று. அதுபற்றித் திருமணத்திற்கு வந்துள்ள சீமான்கள் ஒவ்வொருவரையும் விசாரிப்பது சரிப்படாது என்பதால் அந்தச் சிறுமியின் தந்தை பின்வருமாறு அறிவித்தார்:

''என் மகளின் ஐந்து பவுன் செயின், கீழே அறுந்து விழுந்திருக்கக்கூடும். அதைக் கண்டெடுத்தவர்கள், அதுபற்றி விசாரிக்கப்போனால் நம்மைத் தவறாக நினைப்பார்களோ என்ற கூச்சத்தில் இருக்கலாம். இந்தத் திருமணக் கூட்டத்தில் அதை யார் கண்டெடுத்திருந்தாலும் கவலையில்லை. இதோ இந்த வெள்ளித்தட்டை மேசைமேல் வைக்கிறேன். ஐந்து நிமிடம் விளக்கு அணைக்கப்படும். அதை எடுத்த கனவான் இதில் வைத்துவிட்டால் போதுமானது. எந்த வகையிலும் அதை எடுத்தவரைப் பற்றி அறிய நான் முயலவேமாட்டேன்!''

—இப்படிக் கூறிவிட்டு மேசைமேல் வெள்ளித் தட்டை வைத்தார் அவர். விளக்கு அணைக்கப்பட்டு, ஐந்து நிமிடம் கழித்துப் போடப்பட்டபோது......

அந்த வெள்ளித் தட்டையும் காணோம்!



**மாணவர் பக்கம்**

# பலி ஆடு

**பி. வி. கிரி**

திருவள்ளூருக்கு அருகிலுள்ள திருவாலங்காட்டில், சங்கரின் மாமா வீடு இருந்தது. அங்குள்ள ஒரு கிராமத்தில் மாரியம்மன் கோவில் இருந்தது. ஆடி மாதத்தில் அங்கு உற்சவம் நடக்கும்.

அவ்வூர்த் திருவிழா பிரசித்தி பெற்றது. விழாவின்போது அக்கம் பக்கத்திலிருந்து திரளாக மக்கள் வருவார்கள்.

திருவிழாவுக்கு ஒரு நாள் முன்பதாகவே, தன் பெற்றோர்களுடன் ஊருக்கு வந்து விட்டான் சங்கர்.

எப்போதும் இல்லாமல், மாமா வீட்டு முன்பு அழகிய கறுப்பு நிற ஆடு ஒன்று கட்டப்பட்டிருந்ததைக் கண்டான். அது 'மேமே' என்று கத்திக் கொண்டு அவனைப் பார்த்தது. அவனும் அதைத் தடவிக் கொடுத்துவிட்டு உள்ளே நுழைந்தான்.

திருவிழாவை முன்னிட்டு மாரியம்மன் கோவில் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சரம் சரமாகப் பூக்கள் தொங்கின. வண்ண மின் விளக்குகள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. ஒரு பக்கம் மேளவாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. பெரியவர்களும் குழந்தைகளும் அங்கே போவதும் வருவதுமாய் இருந்தனர். கோயிலின் உள்ளே, மாரியம்மன் ஜெகஜ்ஜோதியாய்க் காட்சியளித்தாள். தூண்டாமணி விளக்கின் ஒளியில், அம்மன் முகம் பளிச்செனத் தெரிந்தது. பூ மணம் எங்கும் கமகமத்துக் கொண்டிருந்தது.

சங்கரின் மாமா வீட்டில் அன்று ஒரே குதூகலம்! காரணம் அன்றைய உற்சவத்தை அவர் தானே நடத்துகிறார்? அன்று இரவு தெருக்கூத்து நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. சிறுவர்களுக்கெல்லாம் கேட்க வேண்டுமா என்ன? ஒரே கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

உற்சவத்தன்று காலை அம்மனுக்கு ஆட்டுக்கிடா ஒன்றைப் பலி இடப்போவதாக சங்கரின் மாமா பேசிக் கொண்டிருந்தார்.

'இது எங்களுடைய நீண்ட நாளைய பிரார்த்தனை' என்றும் அவர் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் சொன்னதை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான் சங்கர்.

மகிழ்ச்சியுடன் ஊருக்கு வந்த சங்கருக்கு, இதைக் கேட்டதுமே திக்கென்றது. ''ஐயோ பாவம்! ஒன்றும் அறியாத ஆட்டையா வெட்டப் போகிறார்கள்?'' என்று அவன் மனம் வேதனை அடைந்தது. அதனால், அன்று இரவு அவன் சரியாகக் கூடச் சாப்பிடவில்லை.' உயிர்ப்பலியே கூடாது' என்று சட்டமே இருப்பது, சங்கரின் மாமாவுக்குத் தெரியாது போலிருக்கிறது!

கோயில் முன்பு, தெருவிளக்கு வெளிச்சத்தில் சிறுவர்கள் எல்லாம் ஆடிக்கொண்டிருந்தார்கள். சங்கரின் நண்பர்கள், தன்னுடன் விளையாட வரும்படி அவனை அழைத்தார்கள். ஆனால், சங்கர், பிறகு வருவதாகக்கூறி, நேரே ஆட்டைப் பார்க்கப் போய் விட்டான்.

விளக்கு வெளிச்சத்தில் கறுப்பு நிற ஆடு, பளபளவென மின்னிக் கொண்டிருந்தது. சங்கரைப் பார்த்ததும் அது 'மே மே' என்று கத்தியது. அதற்குப் பசி என்று உணர்ந்த சங்கர், இலை தழைகளைக் கொண்டுவந்து போட்டான். அதை அன்புடன் தடவியும் கொடுத்தான்.

''இன்று மகிழ்ச்சியாய் இருக்கிற இந்த ஆட்டுக்கு, நாளை காலையில் சாகப் போவது தெரியுமா?'' என்று சங்கர் மேலும் கவலை அடைந்தான்.

மறுநாள் காலை!

சங்கரின் மாமா வீட்டில், எல்லோரும் குளித்துவிட்டுப் புத்தாடை அணிந்து கொண்டார்கள். கோயில் முன்பு, மேளவாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. ஆட்டைக் குளிப்பாட்டி, மஞ்சள் குங்குமம் எல்லாம் இட்டாகி விட்டது. பாவம்! ஆடு ஒன்றும் புரியாமல் 'மேமே' என்று கத்திக் கொண்டிருந்தது. சங்கர் அதைப் பரிதாபமாகப் பார்த்தான்.

அதோ! அங்கே வருவது யார்?

கையில் வெட்டுக் கத்தியுடன் கறுப்பான ஒரு ஆள் வந்துகொண்டிருந்தான்! அவன், கிருதா மீசையுடன் பார்க்கப் பயங்கரமாய்க் காட்சியளித்தான். ஆடு அவனைப் பார்த்தது. அவனும் ஆட்டைப் பார்த்தான். சங்கர், இதையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

''ஜீவ இம்சை செய்யாதே!'' என்று காந்தி தாத்தா நேரில் வந்து சொல்வது போலவும், ''எல்லா உயிர்களிடத்திலும் அன்பாயிரு'' என்று புத்தர் உபதேசிப்பது போலவும் அன்று இரவு கனவு கண்டது, அவன் கண்முன் அப்போது காட்சியளித்தது. உடனே ஆட்டைப் போய்ச் சேர்த்துக் கட்டிக் கொண்டான்.

அதைக் கண்ட அவன் மாமா கோபத்துடன், ''விளையாடாம, இங்கென்னடா வேலை? ஆடு வெட்டற இடத்திலே நிற்காதே.. போ, போ!'' என்று விரட்டினார்.



திருவிழாவை முன்னிட்டு சங்கரின் மாமா வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் பலர் வந்தருந்தார்கள். அவர்கள், ''மத்தியானம் கறி சாப்பாட்டுடன் விருந்து தடபுடலாக இருக்கும் போலிருக்கிறது'' என்று பேசிக் கொண்டார்கள்!

நேரம் ஆகியது!

ஆட்டை இழுத்துக் கொண்டு போய், கோயிலுக்கு அருகிலுள்ள ஒரு குடிசைப் பக்கத்தில் கட்டினான் அந்த முரடன். அவனுக்குத் தெரியாமல் கூடவே சங்கரும் போனான்.

ஆடு, இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டிருந்தது. சங்கரைத் தேடுகிறதோ? முரடன் ஒரு பக்கம் உட்கார்ந்துகொண்டு பெரிய வெட்டுக் கத்தியைத் தீட்டிக் கொண்டிருந்தான்.

சங்கரைப் பார்த்ததும் ஆடு துள்ளியது. அன்புடன் அதைத் தடவிக் கொடுத்தான். அப்போது அதன் முகத்தைப் பார்த்தான். கண்களைப் பார்த்தான். கண்களில் கண்ணீர் வருவது போலத் தெரிந்தது அவனுக்கு. ஆடு அழுகிறதோ என்று அவன் எண்ணினான். அதைப் பார்த்த அவனுக்கும் அழுகை வந்து விட்டது. யாருக்கும் தெரியாமல் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

அப்போது, அந்தப் பக்கமாக வந்த சங்கரின் அப்பா, ''ஏண்டா இங்கே நிக்கறே..போய் விளையாடு'' என்று சொல்லிவிட்டுக் கோயிலுக்குள் நுழைந்தார்.

உடனே முரடனும் ''போ! போ!'' என்று சங்கரை விரட்டினான்.

''நேரமாச்சு.... நேரமாச்சு!'' என்று கத்திக் கொண்டே போனார் சங்கரின் மாமா.

''எல்லாம் ரெடி. ஒரேவெட்டு ....'' என்றான் முரடன். அதைக் கேட்டு சங்கரின் மனம் திக்கென்றது.

சங்கர் தாமதிக்கவில்லை. காலியாய்க் கிடந்த அந்தக் குடிசைக்குள் போய் ஒளிந்து கொண்டான். கூரை ஓலைச் சந்தின் வழியே வெளியே பார்த்தான்.

மஞ்சள் குங்குமத்துடன் ஆடு அழகாய்க் காட்சியளித்தது.

''இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்த ஆட்டை வெட்டி விடுவார்கள். ஆடு செத்துப் போய்விடும். ஒரே ரத்தமாய்க் காட்சியளிக்கும்'' சங்கர் மனம் வேதனை அடைந்தது. அப்போது அவன் கண்முன், பாடபுத்தகத்தில் வந்த காந்திதாத்தாவும், கௌதம புத்தரும் தோன்றுவது போல இருந்தது.

அப்போது முரடன், கத்தியை ஒரு பக்கம் வைத்துவிட்டு, அருகிலிருந்த பெட்டிக் கடைக்குச் சென்றிருந்தான்.

கோவிலுக்கு முன்னே வாத்தியங்கள் முழங்கின. எங்கும் ஒரே ஆரவாரம். பறை ஒலியும், நாதஸ்வரமும், கூட்டத்தின் ஆரவாரமும் காதைச் செவிடாக்கியது.

அந்தச் சமயத்தில்—


''ஆட்டைக் காணவில்லை!'' ஆட்டைக் காணவில்லை!'' என்று ஒருவன் கத்தினான்.

''என்ன? ஆட்டைக் காணவில்லையா?'' சங்கரின் மாமா கேட்டுக்கொண்டே ஓடிவந்தார். முரடனும் பெட்டிக் கடையிலிருந்து ஓட்டமும் நடையுமாக வந்தான்.

திருவிழாவில், பலி ஆடுகாணாதது பெரும் பரபரப்பை உண்டாக்கி விட்டது.

எல்லாரும் போனதும், குடிசைக்குள்ளிருந்து மெல்ல வெளியே வந்து நிம்மதியாக மூச்சுவிட்டான் சங்கர்.

ஆமாம், ஆட்டை அவிழ்த்து விட்டது யாராய் இருக்கும்? ●



# மலர்கள்

ஸ்ரீஜா

வாசம் உள்ள மலர்களாம்
வண்டு மொய்க்கும் மலர்களாம்
வீசும் தென்றல் காற்றிலே
விளங்கு கின்ற மலர்களாம்.

சிவப்பு மஞ்சள் மலர்களாம்
சிரிக்கும் முல்லை மலர்களாம்
உவந்து பெண்டிர் சூடிடும்
உயர்ந்த ரோஜா மலர்களாம்

பூசைக் குகந்த மலர்களாம்
பூத்துக் குலுங்கும் மலர்களாம்
ஆசை கொண்டு கழுத்திலே
அணிந்து கொள்ளும் மலர்களாம்.

மலரைப் போல முகமெல்லாம்
மலர்ந் திருக்க வேண்டுமே
சிலரைப் போல முகத்தினைச்
சிடு சிடுத்தல் நல்லதோ?

# இளம் நடிகன்



## விளையும் பயிர்

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பார்கள். அந்த வகையில் குழந்தைப் பருவத்திலேயே சிலருக்குத் திறமை வெளிப்படுகிறது.

சென்னை புளியந்தோப்பைச் சேர்ந்த வி.கருணாநிதி என்ற பதின்மூன்று வயதுச் சிறுவன் நடிப்புத் துறையில் சிறந்து விளங்குகிறான். மாநகராட்சிப் பள்ளியில் எட்டாவது படிக்கும் இச்சிறுவன், பள்ளி நாடகங்களில் நடித்துப் பாராட்டுதல்கள் பெற்றுள்ளான். இவரது தந்தை திரு எம்.ஆர் வெங்கடேசன், பி அண்டு சி மில்லில் பணியாற்றுகிறார். நாடக ஆர்வம் உள்ளவர்.

தந்தை பெரியார் பற்றிய வில்லுப் பாட்டு நிகழ்ச்சி ஒன்றையும், தன் சக மாணவர்களுடன் நடத்திப் பாராட்டுப் பெற்றுள்ள இச்சிறுவன், சரித்திர நாடகங்களிலும் நடித்துள்ளான்.

1979 ஆம் ஆண்டில், சென்னை பூங்காநகரில் நடந்த பாவேந்தர் பாரதிதாசன் விழாவில், அவரது பாடல்களை மிக நன்றாகப் பாடிய இம்மாணவன், பாராட்டு மட்டுமல்ல, தம் படிப்புக்கும் கூட உதவி பெற்றுள்ளான். அதாவது அவ்வாண்டு, இம்மாணவன் படிப்புச் செலவை ஒரு அன்பர் ஏற்றுக் கொண்டாராம்.

வருங்கால நடிகனை வாழ்த்துவோம்!

# கேள்விக்கு என்ன பதில்?

1. உலகின் முதல் விண்வெளிப்பயணி (பெண்) யார்?
2. 'ஆயிரம் ஏரி நாடு' என்று அழைக்கப்படும் நாடு எது?
3. உலகிலேயே முதன் முதலில் எவரெஸ்டில் ஏறிய பெண் யார்?
4. உலகிலேயே முதன் முதலில் வட துருவம் சென்றவர் யார்?
5. 'வங்கத்தின் துயரம்' என்று அழைக்கப்படுவது எது?
6. 'ரோஜாச் சிவப்பு நகர்' என்று அழைக்கப்படும் நகரம் எது?
7. அதிகாலை அமைதி நாடு எது?
8. 'சாம்ராஜ்ய நகரம்' எனறு அழைக்கப்படும் நகரம் எது?
9. வெள்ளை யானைகள் அதிகமாக உள்ள நாடு எது?
10. முதன் முதலில் உலக அழகிப் பட்டம் பெற்ற இந்தியப் பெண் யார்?

விடைகள்......

1. வாலண்டினா தெரஷ்காவா.
2. பின்லாந்து
3. ஜங்கோ டாபி (ஜப்பான்)
4. ராபர்ட் பியரி
5. தாமோதர் நதி
6. ஜெய்ப்பூர்
7. கொரியா
8. நியூயார்க்
9. தாய்லாந்து
10. ரீடாபரியா

—தொகுத்தவர்: பி. தமிழரசி, பட்டுக்கோட்டை.

# தெரிந்து கொண்டால் நல்லது!

* தமிழ்மொழியிலுள்ள எழுத்துக்கள் மொத்தம் 247. அதைப் போல ஆங்கிலத்தில் 26. இத்தாலியில் 20, இலத்தீனில் 22, கிரேக்கத்தில் 24, ஜெர்மனியில் 26, பிரஞ்சில் 26, ஸ்பானியத்தில் 27, அரபியில் 28, துருக்கியில் 28, பாரசீகத்தில் 31, சமஸ்கிருதத்தில் 48, சீன மொழியில் 214.
* பாங்காங் நகரில் ஒரு சிவன்கோயில் உள்ளது. அங்கு மார்கழித்திங்களில் பத்து நாள் விழா நடைபெறும். அப்போது 'தாய்' மொழியில் எழுதப்பட்டுள்ள திருவெம்பாவை படிக்கப்படும்.

∴ ஸ்வீடனில் சாப்பாடு முடிந்ததும், குழந்தைகள் பெற்றோர் முன் னின்று நன்றி கூறி வணங்குவது வழக்கம்!

* இங்கிலாந்துப் பாராளுமன்றத்தி லுள்ள பேர் பெற்ற மணிக்கூண்டு 'பிக்பென்'. இதன் நான்கு பக்கங்களும் 23 அடிச் சதுரமுள்ளது. இதன் நிமிடக் கை 14 அடி நீளமானது. நேரம் குறித்து அடிக்கும் மணியோ 13½ டன் எடையுள்ளது.

அறிவு, அழகு, நல்லொழுக்கம் இவைகளின் ஒற்றுமையே கல்வி; இம் மூன்றிலும் மிகச் சிறந்தது நல்லொழுக்கமே. நம்மால் இயன்ற அளவு நல்லொழுக்கத்தில் நின்றால் நம் வாழ்விலும், பிறர் வாழ்விலும் நமக்குத் தெரியாமலேயே பல அற்புதங்கள் நிகழும்.

—ஹெலன் கெல்லர்.




## திருவள்ளுவரும காரல்மார்க்சும்

[ஆசிரியர்: டாக்டர் ம. பொ. சிவஞானம், வெளியீடு: பூங்கொடி பதிப்பகம், 22, வி, எஸ். வி. கோயில் தெரு, சென்னை-4, விலை ரூ. 6.]

ஒன்றே முக்கால் அடியால் உலகை அளந்தவர் திருவள்ளுவர். அவரது அருமை பெருமைகளையெல்லாம் தொகுத்துத் தரும் பெட்டகமே டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்களின் இந்நூல்.

"வள்ளுவரின் புகழ் வளர்ந்த வரலாறு' என்னும் கட்டுரையில் விடுதலைப் போர்க் களத்திலே தேசபக்தர்களின் அரசியல் வேத நூலாக விளங்கியது திருக்குறள்" என்று கோடிட்டுக் காட்டி, இத்தகு சிறப்பு வாய்ந்த திருக்குறளை தமிழர் மறக்க முடியுமா? மறந்தால் வாழ்வு உண்டா? வாழ்ந்தாலும் அது தமிழ்ப் பண்போடு கூடிய வாழ்வாகுமா? என்று நம்மையெல்லாம் சிந்திக்க வைக்கிறார் இந்நூலின் ஆசிரியர்.

இந்நூலில் 16 கட்டுரைகள் உள்ளன. வள்ளுவர்-கார்ல் மார்க்ஸ் இருபெரும் அறிஞர்களிடையே கருத்து ஒற்றுமை இருந்ததை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். 'வள்ளுவரை ரசிக்கிறோம்; மதிக்கிறோமா?' என்ற கட்டுரை சிந்திக்கத் தூண்டுகிறது.

## உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?

[தொகுத்தோர்: ச. வே. சுப்பிரமணியன், ந. கடிகாசலம் வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-20, விலை ரூ. 6.]

தமிழ் எழுத்தாளர்கள் தமிழகம் மட்டுமல்ல, கடல் கடந்தும் இருக்கிறார்கள்; 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் நாம் அறிந்து கொள்ள வேண்டாமா?

தமிழகம், இந்தியப் பிற மாநிலங்கள், உலக நாடுகள்-இங்கெல்லாம் வாழுகின்ற தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிய பயனுள்ள விவரங்கள், முகவரிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. எழுத்தாளர்கள் தொடர்பு கொள்ள மட்டுமல்ல, பல்வேறு தமிழ் அமைப்புகளும், எழுத்தாளர்களோடு தொடர்பு கொள்ளவும் இவ்வரிய தொகுப்பு நூல் மிகவும் பயன்படும்.

—பி.வி.ஜி.

## சென்னை மாநகர்

[ஆசிரியர் மா. சு. சம்பந்தன் வெளியீடு : தமிழர் பதிப்பகம், 243 (81) லிங்க செட்டித் தெரு சென்னை 600 001. விலை ரூ.10]

சென்னைப்பட்டினம் என்னும் ஊர் சிற்றூராக—பேரூராக—நகரமாக - மாநகராக - பெரு நகராக - கடந்த காலத்திலிருந்து எப்படி வளர்ந்துள்ளது என்பதை - 350 ஆண்டுக் காலப் போக்கை, வளர்ச்சியை, வரலாற்றை விளக்குகிறது.'சென்னை மாநகர்' என்ற இந்நூல்.

இளந் தலைமுறையினருக்குப் பயனுள்ள பல விவரங்களைத் தொகுத்து வழங்கியுள்ள இந்நூலாசிரியருக்குத் தமிழ்கூறும் நல்லுலகு கடமைப்பட்டுள்ளது. இந்நூலைப் படிக்கும் பொழுது இதுபோன்று தமிழ்நாட்டின் புகழ் வாய்ந்த ஊர்கள் அனைத்துக்கும் நூல்கள் வர வேண்டும் என்ற எண்ணமே தலை தூக்கி நிற்கின்றது.

ஒவ்வொரு பள்ளியிலும், கல்லூரிகளிலும் இந்நூல் இடம் பெறத்தக்க தகுதி படைத்தது. சென்னை மாநகர் நூலின் முகப்பு மட்டும் கண்ணைக் கவரும் வண்ணத்தில் அமைந்திருக்கலாம்.

ஆனாலும், இந்நூலின் சிறப்பியல்புகளை விரிக்கின் பெருகும். சுருக்கின் மிகும். அத்தகைய சிறப்புடையது என்பதை இந்நூலைப் படிப்பவர் அனைவரும் உணருவர்.

-[illegible]லன்

## குறைகள் களைவோம்!

"வெளிநாட்டிலிருந்து வந்து நம் நாட்டைச் சுற்றிப் பார்த்த சிலர், இங்குள்ள சில முக்கியக் குறைபாடுகளாக இரண்டு செய்திகளைச் சொன்னார்கள்:


'எங்கள் நாட்டில் சாதாரண அளவிலோ, பெரிய அளவிலோ எப்படி வீடு கட்டினாலும், அதில் பாதுகாப்பானதாகவும், சுத்தமானதாகவும், ரகசியமானதாகவும் கழிவறை கட்ட நாங்கள் தவறுவதில்லை. இதில் நாங்கள் பெரிதும் கவனம் செலுத்துகிறோம். அங்கே ரகசியமாகச் செய்யப்படுகிற அந்தக் காரியம் இங்கே நிறைய இடங்களில் திறந்த வெளியிலேயே நடப்பதைப் பார்த்தோம். இது தவறு. இப்படிப்பட்ட பழக்கத்தால் நிறைய நோய் நொடிகள் பரவக்கூடும். நாங்கள் அங்கே, திறந்த-காற்றோட்டமுள்ள இடத்தில் சாப்பிடுவதை விரும்புவோம். இங்கோ, இடுக்கிலோ-இருட்டிலோ உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். இதுவும் சுகாதாரக் கேடு விளைவிப்பதாகும்' என்று இரண்டு விஷயங்களை அவர்கள் குறிப்பிட்டார்கள்

'நாங்கள் ரகசியமாகச் செய்வதை இங்கு பகிரங்கமாகச் செய்கிறார்கள். அங்கு பகிரங்கமாகச் செய்வதை இங்கே ரகசியமாகச் செய்கிறார்கள்' என்று அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறைபாடுகளை நீக்க நாம் அவசியம் பாடுபட்டாக வேண்டும்.

வீடானாலும், பள்ளிக் கூடமானாலும், வேறு எதற்கான கட்டிடமானாலும் கழிவறை அமைப்பதிலே வசதியான இடம் அமைப்பதில் யாரும் சிக்கனம் காட்டக்கூடாது. குழந்தைகளை நடைபாதையிலோ, சாலை ஓரத்திலோ விட்டுப் பழக்கும் அந்தத் தீய பழக்கம் தவிர்க்கப் பட நாமெல்லாம் பாடுபட்டாக வேண்டும். அப்போதுதான் நோயற்ற வாழ்வு வாழமுடியும்!

(அரசு தலைமைச் செயலாளர் வே. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் பூவிருந்தவல்லியில் 19.4.80 அன்று நடைபெற்ற சமுதாயப் பணிவார நிறைவு விழாவில் பேசியது.)

**வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை**
**உயர்ந்த தரம்! நியாயமான விலை!!**
**அத்தேவைகளைச்சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்**
**டான்சியின் இணையற்ற சேவை.**



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—
தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்—படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!
டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
1, [illegible], சென்னை-600 014
தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI


# வெறி நோய்

விலங்கினங்கள் மூலம் மனிதர்களுக்குப் பரவும் நோய்கள் பல உள்ளன. அவைகளில் பெரும்பாலான நோய்களை மருத்துவ முறை கொண்டோ அல்லது நல்ல சுகாதாரத் தடுப்பு முறைகள் கொண்டோ தடுத்து விடலாம். ஆனால், வெறி நோயானது மிகவும் கொடிய தொற்று நோயாகும். இந்நோயானது வைரஸ் அல்லது நச்சுக் கிருமியினால் உண்டாகிறது. வெப்பம் மற்றும் தொற்றுத் தடை அல்லது நச்சுத் தடைக் காப்பு மருந்துகள் மூலம் இக்கிருமிகளை எளிதில் கொன்று விடலாம். இந்நச்சுக் கிருமியானது நரம்புத் திசுக்கள் மற்றும் நரம்பு மண்டலம் ஆகியவைகளின்பால் பிரத்தியேக நாட்டம் கொண்டவையாகும். இந்நோயானது நாய், ஆடு, மாடுகளைப் பாதிப்பதுடன் மனிதர்களின் உயிரைப் போக்கும் நோயாகும். கால்நடைகளில் இந்நோயினை ''வெறிநோய்''(ரேபீஸ்) என்றும், மனிதர்களில் இந்நோயினை 'நீர் வெறுப்பு நோய்' (ஹைட்ரோ போபியா) என்றும் வழங்கப்படுகிறது.

இந்நோயினை உண்டாக்கும் நச்சுக் கிருமியானது நாய், நரி, குருதியுறிஞ்சும் வௌவால் மற்றும் பல வன விலங்குகள் மூலம் கால்நடைகளுக்கும் மற்றும் மனிதர்களுக்கும் பரவுகிறது. மேலும், வன விலங்குகளின் உமிழ் நீர் படுவதாலும் இந்நோய் பரவுகிறது. இந்நோயானது கீழ்க்காணும் விழுக்காடு அளவில் கால்நடைகளிலும் மற்றும் மனிதர்களிலும காணப்படுவதுடன் பிரத்தியேகமாக மனிதர்களுக்கு 99 சதவீதம் நாய்க் கடியின் மூலம் தான் பரவுகிறது. அதோடு காற்று மூலமாகவும் இந்நோய் மனிதர்களுக்கு நோய் கண்ட குருதியுறுஞ்சும் வௌவால்களிலிருந்து பரவியதற்கான ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

நாய்களில் 80 சதம்; பசுக்களில் 10 சதம்; குதிரை, ஆடுகள் பன்றிகளில் 5சதம்; இந்நோயானது வாம்பையர் என்ற குருதி உறிஞ்சும் வௌவால்கள் மூலமாக



உலக நாடுகள் பலவற்றிற்கும் பறந்து செல்லும் ஆற்றல் அமைந்த காரணத்தால் வெறி நோயானது கடல் கடந்து பரவ ஏதுவாகின்றது. இவ்வாறே வனவிலங்குகள் மூலமாக இந்நோய் கால்நடைகளுக்கும், மனிதர்களுக்கும் பரவுகிறது. அவ்வாறே நோய்கண்ட கால்நடை மற்றும் வனவிலங்குகளின் உமிழ் நீரில் இந்நச்சுக் கிருமி இருக்கின்றபடியால் உடல் காயங்களில் பட்டு இந்நச்சுக் கிருமிகள் உடலுக்குள் செலுத்தப் படுகிறது.

இந்நச்சுக் கிருமிகள் உடலில் சென்றபின் நுண்மப் பெருக்க நிலையை அடைந்து நோயின் அறிகுறிகள் தெரிய 25 நாட்கள் முதல் 6 மாதங்கள் வரை தேவைப் படுகிறது. முதலில் இந்நச்சுக் கிருமியானது புறப்பரப்பு நரம்பு மூலம் மத்திய நரம்பு மண்டலத்தினை அடைகின்றது. பின் உமிழ் நீர்ச் சுரப்பியினை அடைந்து உமிழ் நீர்ச்சுரப்பினை அதிகமாகச் சுரக்கச் செய்து இந்நச்சுக்கிருமியும் அதிக அளவில் வெளியாகின்றது. இந்நச்சுக் கிருமிகள் மூளையில் எரிச்சலை உண்டு பண்ணுவதுடன் உடல் வெப்பத்தை அதிகப் படுத்தி அடிக்கடி சிறுநீர் கழிப்கின்றது. பின் சுவாச உறுப்புகள் முடக்குவாதத்தினால் பாதிக்கப் படுவதால் நோய்கண்ட விலங்கு இறந்துவிடுகின்றது. இந்நோயின் அறிகுறிகள் வெளிப்படுவதற்கு 3 முதல் 5 நாட்கள் முன்னதாகவே பாதிக்கப்பட்ட கால்நடைகளின் உமிழ் நீரில் இந்நச்சுக் கிருமிகள் வெளியேற்றப்படுகின்றது. மனிதர்களில் இந்நோய் பெருமளவில் குழந்தைகளைப் பாதிக்கிறது. ஏனெனில், குழந்தைகள் சாதாரணமாக நாய்களிடம் நெருங்கி விளையாடும் தன்மையே காரணமாகும்.

நாயிடத்துத்தோன்றும்நோய் அறிகுறிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். (1) ஊமை வெறி நோய் வகை (2) சீற்றங் கொண்ட வெறி நோய் வகை ஆகும்.

**ஊமை வகை:**

இவ்வகை வெறிநோயினால் பாதிக்கப்பட்ட நாய்கள் ஓய்வின்றிக் காணப்படுவதுடன் உறக்கமற்று இருளடைந்த பகுதியில் சென்று மறைந்துகொள்ளும். பின் கீழ்தாடை, நாவு,


**டாக்டர் இரா. செயக்குமார்,**
**உதவிப் பேராசிரியர்,**
**சென்னைக் கால்நடை**
**மருத்துவக் கல்லூரி.**


## முதல் வங்கி !

உலகில் முதன் முதலாக வங்கி தோன்றியது இங்கிலாந்தில் தான். 'பாங்க் ஆப் இங்கிலாந்து' என்பது அதன் பெயர். அந்த வங்கி தோன்றிய ஆண்டு 1694. அந்த வங்கியை நிறுவியவர் ஸ்காட்லாந்தைச்சேர்ந்த வில்லியம் பார்ட்டர்சன என்ற கடற் கொள்ளைக்காரர்!

தொண்டை, குரல்வளை ஆகிய உறுப்புகள் முடக்குவாதத்தினால், பாதிக்கப்பட்டு பாதி திறந்த வாயுடன் உமிழ் நீர் வழியக் காணப்படும். இக்காட்சியானது நாய் வளர்ப்பவரின் பார்வையில் எலும்பு அல்லது வேறு விளையாட்டுப்பொருள்கள் நாயின் பற்களுக்கு இடையே அகப்பட்டுக் கொண்டு தவிப்பது போன்று தோற்றம் அளிக்கும். பின்பு முடக்குவாதத்தினால் பெருமளவில் பாதிக்கப்பட்டு இந்நோய் கண்ட நாயானது இறந்து விடும்.

**சீற்றங்கொண்ட வெறிநோய் வகை:**

இவ்வகை நோயினால் பாதிக்கப்பட்ட நாய்களின் அன்றாடத் தன்மைகள் வேறுபட்டு காணப்படுவதுடன் தன் உரிமையாளரையே அடையாளங்கண்டு கொள்ள இயலாது கடிக்க முயலும். பின் காரணமின்றி குரைக்கும். கிளர்ச்சியுற்ற நிலையில் தனது கழிவுப் பொருள்களையே உண்ணத் தலைப்படும். பறக்கும் பூச்சிகளைக் கடிக்க முயலும். மற்றைய விலங்குகளைத் துரத்திச் சென்று கடிக்கும். இதனுடன் கற்கள், கட்டை மற்றைய பொருட்களைக் கடிக்கும். பின் சிவந்த அகல விழிகளுடன் காணப்படும். தொண்டை மற்றும் குரல் வளை முடக்குவாதத்தினால் பெருமளவில் பாதிக்கப்படுவதனால் குரல் ஒலி மாற்றமடையும். கீழ்த்தாடை தாழ்ந்து, நாவானது நீலவண்ணத்தில் உருமாறி வெளியில் தொங்கும். முடக்குவாதமானது பின்கால் பகுதிகளில் ஆரம்பித்து முடிவில் தலைபாகம் வரையிலும் சென்று பாதிக்கும். இவ்வாறு பாதிக்கப்பட்ட நாய்கள் எந்தவிதத் தீவனமும் உண்ணாது நீர் அருந்த நாட்டமுள்ளவைகளாகத் தோன்றும். ஆனால், குரல்வளை மற்றும் தொண்டை ஆகிய உறுப்புகள் முடக்குவாதத்தினால் பாதிக்கப்படுவதனால் நீர் அருந்த முடியாமல் அவதியுறும்.

**மனிதனில் தோன்றும் நோயின் அறிகுறிகள்:**

மனிதர்களி[illegible] கிருமியானது மூளை[illegible]ண்டு பண்ணுவதுடன் [illegible]வளை தொண்டை ஆகிய உறுப்[illegible]களை முடக்குவாதத்தினால் பாதிக்கச் செய்து நீர் அருந்த இயலாமல் செய்வதனால் இந்நோய்க்கு "நீர் வெறுப்பு நோய்" என்று வழங்கலாயிற்று. மனிதர்களில் இந்நோயினால் ஏற்படும் நோய் அறிகுறிகள் தெளிவாகத் தெரிய ஆரம்பித்தவுடன் சாவிலிருந்து



இம்மனிதர்களைக் காப்பாற்றுவது இயலாத காரியமாகும். அதோடு இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தாம் நிச்சயம் இறந்து விடுவோம் என்று தெளிவாக முன்னதாகவே தெரிந்து விடுவதால் இவர்களின் மனநிலை மிகவும் பாதிக்கப்படுகிறது.

**நோயினைக் கண்டறியும் முறைகள்:**

*நோயின் அறிகுறிகளைக் கொண்டும், பின் நாய்க்கடி ஏற்பட்ட விதத்தினைக் கேட்டறிந்தும் தெரிந்து கொள்ளலாம்.


*இறந்த நாயின் மூளையினைப் பழுதுபடாமல் உடனடியாக எடுத்து மூளையின் பின்புறமுள்ள 'இப்போ கேம்பஸ் மேஜர்' என்ற பகுதியினைப் பிரித்தெடுத்து அதை 50சதம் கிளிசரால்சலைன் அல்லது பொட்டாசியம் டைகுரோமேட் கலவையில் வைத்து சென்னை மருத்துவக் கல்லூரி அல்லது கூனூர் ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பி வைத்து, வெறிநோய் நச்சுக் கிருமியினால் திசுக்களில் உண்டாகும் நச்சுக் கிருமி உட்கொண்ட நுண்ணிய பொருட்களை நுண்ணோக்காடியின் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம்.

*மற்றொரு பிரத்தியேக மின் காந்த அலையுதிர் மூலம் வண்ண ஒளி கோலுகிற முறையினால் நச்சுக்கிருமி உட்கொண்ட நுண்ணிய பொருட்களை நோய்கண்ட நாய், கால்நடைகள் மற்றும் மனிதர்களுடைய கண் விழி வெண் படலத்தின் திசுக்கள் பாதிக்கப்பட்ட ஆடிகள் மூலம் கண்டறியலாம்.

*ஆய்வுக்கூட சிறு விலங்கான வெள்ளை எலியின் மூளையில் பாதிக்கப்பட்ட நாயின் மூளையினை ஊசி மூலம் செலுத்தி நோயினைக் கண்டறியலாம். இம்முறையில் நோய்கண்டு அறிதலை பிரத்தியேகமாக கூனூர் ஆய்வுக் கூடத்தில் மேற்கொண்டு வருகிறார்கள்.

**மருத்துவ முறையில் நோய்த் தடுப்பு**

நோய் கண்ட நாய் அல்லது மற்றைய விலங்குகளினால் கடிபட்ட பாகத்தினை 20 சதவிகித சோப்புக் கலவையினால் சுத்தமாகக் கழுவி சுத்தப்படுத்துவோமானால், கடிபட்ட பகுதிகளில் உள்ள நச்சுக்கிருமிகளை நீக்கி விடலாம். பின் 2 சதவிகித






# படிக்கப்பழகுவோம்

* நூல் நிலையம் இல்லாத வீடு, உயிர் இல்லாத உடம்பு போன்றது.

—தாமஸ் ஆல்வா எடிசன்.

* சில புத்தகங்களைச் சுவைத்துப் பார்க்க வேண்டும்; சிலவற்றை அப்படியே விழுங்கிவிட வேண்டும்; சிலவற்றை மட்டும் நன்கு சுவைத்துச் சீரணம் செய்ய வேண்டும்.

—பேக்கன்.

* எந்த ஒரு வீட்டில் நூல் நிலையம் இருக்கிறதோ, அந்த வீட்டில்தான் ஆத்மா இருக்கிறது.

—பிளாட்டோ.

* புத்தகத்தைப் போல் வீட்டை அலங்கரிக்கும் அழகான பொருள் உலகில் கிடையாது.

—சிட்னி ஸ்மித்.

* நூல்கள் இல்லாத இல்லம், பல கணிகள் இல்லாதீ ஒரு அறையைப் போன்றதாகும்.

—ஆசிரியர் மேன்.

* எனது நூலகமே எனக்குப் போதிய பெருஞ்செல்வமாகும்.

—ஷேக்ஸ்பியர்.

பென்சால் கோனியம்குளோரைடு நைட்ரிக் அமிலம், கார்பாலிக் அமிலம், இரும்பு குளோரைடு அல்லது வெள்ளி குளோரைடு ஆகிய வேதியப் பொருட்களைக் கொண்டு கழுவ வேண்டும். இச்சிகிச்சையானது நாய் கடித்த அரை மணிக்குள்ளாகச் செய்யப்பட வேண்டியவையாகும். பழைய காலங்களில் அப்பகுதியைப் பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் சுடுவதும் உண்டு.

**குணமாக்கும் விதம்:**

கடித்த வெறி நாயினைப் பிடித்து கால்நடை மருத்துவரின் உதவியுடன் 10 நாட்களுக்கு ஒரு தனியான இடத்தில் அடைத்து வைத்து கவனமாகக் கவனித்து வரவேண்டும். இந்நாயின் நோய் அறிகுறிக்ள் தெளிவாகத் தெரிந்தாலோ அல்லது இந்த 10 நாட்களுக்குள் இறந்து விட்டாலோ கடிபட்ட கால்நடைக்கோ அல்லது மனிதருக்கோ உடனடியாக வெறிநோய் தடுப்பூசிப் போட வேண்டும். அவ்வாறு நம் கவனிப்பில் உள்ள நாய் சாகவில்லை என்றால் அந்நாயினைக் கொன்று அதன் மூளையினை எடுத்து இந்நச்சுக் கிருமியினைக் கண்டறியும் முறைகளைப் பயன்படுத்தி நோயினைக் கண்டறிந்தபின் தடுப்பூசி போடுவதும் நன்று. அதோடு நாய்க்கடி அதிக அளவில் தலை, முகம் கழுத்துப் பாகங்களில் இருக்குமாயின் கடிபட்ட இடத்தில் உடனடியாக நோய்த் தடுப்புச் சக்தி கொண்ட ஊனீர் கொண்டு தடுப்புச் சக்தியை ஐண்டு பண்ணிய பின்பு தடுப்பூசிப், போட வேண்டும்.



**பொதுவான தடுப்பு முறைகள்:**

எல்லா நாய் வளர்ப்பவர்களும் நகர அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுத்தான நாய் வளர்க்க வேண்டும். அவ்வாறு நாய் வளர்ப்பவர்கள் 6 மாத வயதிற்கு மேல் உள்ள எல்லா நாய்கட்கும் வெறிநோய்த் தடுப்பூசி போட்டு அதற்கான அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு நகராட்சியும், ஊராட்சி மற்றும் பெரு நகர அதிகாரிகளும் நாய்களுக்கு 'லைசன்ஸ்' வழங்க வேண்டும். அவ்வாறு 'லைசன்ஸ்' பெற்று நாய் வளர்க்காதவர்களுக்கு அபராதம் விதிப்பதுடன் 'லைசன்ஸ்' இல்லாது தெருவில் திரியும் நாய்களைப் பிடித்துச்சென்று கொன்றுவிடுவது நல்லது.

பொதுவாக, வெறி நோய் கண்ட நாயினால் கடிபட்ட நாயினையோ அல்லது கால்நடைகளையோ கொன்று விடுவது தான் நல்லது. ஏனெனில், கடிபட்ட கால்நடைகளுக்குத் தடுப்பூசி போட்டு நோய் எதிர்ப்புச் சக்தியினை உண்டு பண்ணுவதற்குள் கடிபட்ட நாயின் உடலில் இந்நச்சுக் கிருமியானது மூளையினைச் சென்று திசுக்களில் மாற்றத்தினை ஏற்படுத்தி விடுகிறது. மிக முக்கியமாக தலையில் கடி ஏற்படின் இது உண்மையாகும். கடிபடுவதற்கு முன்னதாகவே தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளாயிருந்தாலும் அக்கால்நடை அல்லது நாயினுக்குத் தடுப்பூசி போட்டு விடுவதுதான் நல்லது.

**தடுப்பூசியின் அளவும் தடுப்பூசி போட வேண்டிய கால அளவும்:**

| | மில்லி அளவு | நாட்களுக்கு |
|---|---|---|
| நாய், பூனை | 2 | 7 |
| செம்மறி மற்றும் வெள்ளாடு | 4 | 7 |
| பசு, எருமை, எருது மற்றும் குதிரை | 10 | 14 |
| ஒட்டகம், யானை | 30 | 14 |

மேற்கூறியவாறு நாய் வளர்ப்போரும், கால்நடை வளர்க்கும் விவசாயப் பெருங்குடிமக்களும் தங்கள் கால்நடைகளை வெறி நோயின் பிடியிலிருந்து காப்பதால் தங்கள் நாய், கால்நடைச் செல்வங்களுக்கு மட்டுமின்றி தங்கள் உயிரினையும் பாதுகாத்துக் கொள்ள ஏதுவாகும். ●

# வெண்படை

டாக்டர் அ. ம. பசியூத்தின் அகமது
தமிழ்நாடு அரசு மருத்துவ அலுவலர்
தலைமைச் செயலகம்

தோலுக்கு நிறத்தைத்தரும் நிறமிகளில் மிகவும் முக்கியமானது மெலோனின் (Melonin) எனும் நிறமிகள் ஆகும். இவை சில இடங்களில்குறையும்போதும் முழுவதும் மறையும்போதும் தோலின் நிறம் மாறுபடுகிறது. இதனைத்தான் வெண்படை (Vitiligo (or) Leucoderma) என்கிறோம்.

நம் நாட்டில் இதனைப் பல பெயர்களில் வழங்குகின்றனர். தென்னக மக்கள் வெண்படை, வெண்குட்டம் என்றும், வட நூலார் சுவேத குட்டம் என்றும், இந்தியில் 'கோர்' (Korh) என்றும், புலேரி (Phuleri) சுஃபேத் தாக் (Suped dagh) என்றும் குறிப்பிடுகின்றனர்.

பொதுவாக, குறிப்பிட்ட காரணம் இல்லாமல் உடலின்நிறமிகள் குறையும் தன்மையை வெண்படை என்று கூறலாம்.

சித்த மருத்துவ நூலின்படி முக்குற்றங்களில் (வாதம், பித்தம், கபம்) கபத்தின் தன்மை உடலில் மிகுந்து பித்தம் தன்னிலை மாறும்போது உடலில் நிறமிகள் மாறும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

**வகைகள் :**

நிறமிகள் மிகவும் குறையும் போது தோல் மிகவும் வெளுத்து பாலின் நிறத்தைப் பெறுகின்றது இதனை அதன் நிறத்தன்மையின் படி பலவிதமாகப் பெயரிட்டு அழைத்து வந்தனர். அவற்றில் வாதமென்றும், பித்த வெண்குட்டம் என்றும், கப வெண்குட்டம் என்றும், கலப்பு வெண்குட்டம் என்றும் பாகுபடுத்தி விளக்கினார்.

மேல்நாட்டு மருத்துவ ஏடுகளில் 1. நன்றாகப் பரவியவை (Localised) 2. புள்ளிகளுடன் காணப்படுபவை (Scattered or Confluent ) 3. இது சிறு கொப்பளவகையாகவும், நீர்வட்டம் (Oval) வட்டம் (round) பல கோணம் உள்ளவை (irregular) என்றும்.

4. வைபொதுவாகஇரண்டு புறமும் ஒரே மாதிரியாக இல்லாமல் தனித்தனியாகவே அதிகம் காணப்படுகின்றன ஆயினும் சிலரின் வலதுபுறம் உள்ளது போலவே இடது புறமும் (Symmentrical) காணப்படுவதுண்டு.

5. இந்நோய் காணப்படும் பருவமடைந்த பெண்களில் வீட்டு விலக்குக் காலங்களில் வெண்மை நிறம் மாறி சிவப்பாகவோ அல்லது ரோஜாப் பூவின் நிறத்தையோ அடைவதும் உண்டு.

6. இந்நோயால் தோல் சளிச் சவ்வு (mucous membrane) அல்லது ரோமம் ஆகியவைகள் தனித்தனியாகவோ அல்லது சேர்ந்தோ பாதிக்கப்படுவதுண்டு.

இயற்கையாக உள்ள தோல் தாங்கக்கூடிய அளவு சூரிய வெப்பத்தை, புள்ளிகள் குறைந்த (வெண்படை) தோல் தாங்கும் தன்மை மிகவும் குறைந்துள்ளது.

இயற்கையாக உள்ள தோலின் வெளியாகும் வியர்வையைவிட பாதிக்கப்பட்ட வியர்வை அதிகமாக வெளிப்படுகிறது. பொதுவாக, வெண் படையை மூன்று விதமாகப் பிரித்து மருத்துவம் செய்கின்றனர்.

குறிப்பிட்ட இடங்களில்காணப்படும் வெண்படை :

தோலின் மேல் பாகத்தில் சில இடங்களில் மட்டும் நிறமிகள் குறைந்து, தோல் ரோமம் ஜனன உறுப்பிகள் ஆகிய இடங்களில் காணப்படல், இவற்றில்தோலும் சளிச்சவ்வும் ( mucocutal ) இணையும் இடங்களில் அதிகமாகக் காணப்படுகிறது.

இந்தப் பிரிவில் உடல் முழுவதும் பரவலாகக் காணப்படும்.



உடலில் புறவெளி ( exposed areas) பாகங்களில் உதாரணமாக முகம், கழுத்து ரோமம், உடலின் மடிப்பு பாகங்கள் ( Body folds ) வெளித்துவாரங்கள் (external oritices) பதிதாக ஏற்பட்ட அடிபட்ட இடங்கள், நாபி (தொப்புள்) பிறப்புறுப்புக்கள், சளிச்சவ்வு சிலநோயாளிகளிடம் இவ்வகையில் எது உண்மையான தோல் என்று அறிய முடியாத அளவுக்கு இந்நோய் பரவலாகக் காணப்படும்.

முற்றுடல் வெளுப்பு இந்தப் பிரிவில் உடலில் தோன்றும் எல்லா வெளித் தோலிலும் இது பாதிப்பு ஏற்படுத்தி முற்றுடல் வெளுப்ப ஏற்பட்டு இருக்கும்.

இவ்வகை நிறமாற்றம் ஏற்படுதல் ஏற்பட சரியான காரணங்களை அறிய இயலாவிடினும் இது சில குடும்பங்களில் பரம்பரையாகவும் வருவதைப் பார்க்க முடிகிறது.

**காரணங்கள்:**

நிறமாற்றங்களுக்கும் நிறமிகளின் குறைவுக்கும் இன்னும் சரியான காரணங்களை அறிய முடியாவிடினும், இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் உடற்கூறுகளையும், உடல் தத்துவங்களையும் நோக்கும் இடத்து சில வழிகள் காணக்கிடக்கின்றன.

இந்நிறமாற்றம் சாதாரணமாகத் தோலின் நிறம் கருமையாய் உள்ளவர்களிடம் அதிகம் காணப்படுகிறது. அதிலும் 10 முதல் 30 வயதுள்ளவர்களிடம் மிக அதிகமாகக் காணப்படுகிறது.

மேலும், இரத்தத்தின் பிரிவுகளில் 'A' 'AB' பிரிவு இரத்தம் உள்ளவர்களிடமும் அதிகம் இந்நோய் காணப்படுகிறது.

வேறுபல நோய்களின் குறிகளில் இதைப் போன்ற வெண்படைகளும் ஏற்படுவதுண்டு, தீப்பட்ட காயம், மேகநோய்புண்கள் தொழுநோய் ஆகியவற்றில் ஏற்படும் படைகளும் இதேபோன்று காணப்படுகின்றன.



நோய்க்கான காரணங்களைப் பகுத்துப்'பார்க்கின் உணவு மாறுபாடு, நாளமில்லா சுரப்பிகளில் மாறுபாடு நரம்பு சம்பந்தமான மாறுபாடுகள் ஆகியவை அதிக ஆதிக்கம் செலுத்துகின்றன.

**உணவு:**

நாம் அன்றாடம் உண்ணும் உணவில் சில சத்துக் குறைபாடுகளிலும், வேறு சில உணவுகள் மிகுதியாக சேர்ப்பதாலும் இந்நோய் அதிகம் காணப்படுகிறது.

டம் நிறமிகளைக் குறைத்து இதனை ஏற்படுத்திவிடுகிறது.

நாளமில்லா சுரப்பிகளில்பிட்டியூட்டரி, தைராய்ட் பால் சுரப்பிகள் (Gonads). ஆகியவற்றின் மாறுபாடுகளிலும் இது ஏற்படக்கூடும்.

மேலும், நாம் அன்றாடம் பயன்படுத்தும் சில பொருள்களின் உராய்வினாலும் சிலருக்கு இந்நோய் கண்டுள்ளது. உதாரணம்: ரப்பர், நைலான், போன்றவைகள்.

நமது உணவில் ஏற்படும் சில நச்சுத் தன்மையினாலும் குடலில் சேர்ந்து இந்நோய் ஏற்படலாம்.

முழு விவரமும் முதலில் தெரிவிப்பது மருத்துவர்களின் கடமையாகும். இதன் நிறமாற்றத்தால் பலர் மனநோய்க்குட்பட்டுச் சாதாரணமான நோயை மிகக கொடிய நோய் என்று எண்ணி மனமுடைந்து விடுகின்றனர். அவர்களுக்கு மருந்தைவிட மருத்துவ அறிவுரைதான் மிக அவசியம் ஆகும். இதனை ஓர் நோய் என்பதைவிட தோலின் நிறமாறுபாடு என்ற அளவில் கொண்டால் பின்னால் அவர்களுக்கு மருத்துவத்தின் முழுப் பல்னும் கிடைக்கும்.

வெண்படையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேறு ஏதாவது



அந்தப் புதிய தம்பதிகள் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு சொறி நாய், வாலை ஆட்டியபடி அவன் பின்னாலேயே தொடர்ந்து வந்தபடியே இருந்தது.

மனைவி கேலியாகக் கேட்டாள்: ''அதென்ன உங்களுக்கு உறவா?''

உடனடியாக அவன் அதற்கு இப்படிப் பதில் சொன்னான்: ''ஆமாம், கல்யாணத்திற்குப் பிறகு!''

உணவில் தாமிரசத்து (Cupro minerals) குறைந்தால் இந்நோய் காண்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளனர். ஆயினும் தாமிரச் சத்துதான் காரணம் என்று துணிந்து கூறவும் முடிவதில்லை.

மேலும் உணவில் தேவையான விட்டமின் 'பி' காம்பிளக்ஸ்-அளவு மாறுபட்டுள்ளவைகளை உண்பவர்களிலும் இது பரவலாகக் காணப்படுகிறது. நாம் உண்ணும் உணவில் உள்ள 'பேன்டோதெனக் ஆசிட்' (Pantothenic Acid) குறைவினாலும் இந்நோய் அதிகம் காணப்படுகிறது.

நாம் உண்ணும் உணவில் விட்டமின் 'சி'' அதிகமாகப்பயன்படுத்துகிறோம். குறிப்பாக பெண்கள் புளிப்புச் சுவையை அதிகமாக விரும்பி புளி, எலுமிச்சை, ஆரஞ்சு, நாரத்தை போன்றவைகளை உட்கொள்கின்றனர். நம் நாட்டில் சிறு குழந்தைகளுக்கு விடமின் 'சி' சேர்ந்த ஆகாரங்களையும்மருந்து (Tonic) களையும் மிக அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இந்த விடமின் 'சி' உடலுக்கு நிறம் தரும் மெலானின் நிறமிகளை குறைக்கும் தன்மை உடையது. நன்றாகப் படித்தவர்களும் அளவுக்கு அதிகமான விடமின் 'சி' கொடுப்பதைத் தற்கால நாகரீகமாகக் கொண்டு கொடுப்பதால் இது எளிதில் குழந்தைகளி

சில பெண்கள் அளவுக்கு அதிகமாக அலங்காரப் பொருள்கள் பயன்படுத்துவதால் முக்கியமாக பலவித வண்ணப்பூச்சுக்கள் கண்களைச் சுற்றிப் போடுவதால், அவற்றின் அழற்சியினால் கண்களைச் சுற்றி தோல் நிறமிகள் குறைவதும் உண்டு.

**மருத்துவம்:**

இந்நோய் பாதிக்கப்பட்டவர்களிடம் இந்நோயைப் பற்றிய



நோய்க் கிருமிகளால் வேறு ஏதாவது தொல்லைகள் உள்ளனவென்று முதலில் அறிதல் அவசியம். புறக் கிருமிகளின் தாக்குதலால் (Septic toet) பல், லசுனம் (Tonsils) தொண்டை, காது முதலியன சோதித்தல் அவசியம் ஆகும்.

**உணவே மருந்து:**

சித்த மருத்துவத்தில் ஓர் பழமொழி உண்டு, ''உணவே மருந்து, மருந்தே உணவு' என்பதாகும்அது. மாறுபாடு கொண்ட உணவை உட்கொள்வதாலும், 'மிகினும் குறையினும்' நோய் செய்யும் என்பதனை அறிந்து உணவு முறைகளை மாற்றி அமைத்தல் அவசியம்.

இந்நோயினால்பாதிக்கப்பட்டவர்களுக்கு, தாமிரச்சத்துள்ள உணவுகளையும், விட்டமின் பி. காம்பிளெக்ஸ் உள்ள உணவு வகைகளையும் அதிகமாகச்சேர்த்தல் அவசியம் ஆகும்.

விட்டமின் 'சி'அதிகமாக உள்ள காய்கறி வகைகளையும் பழங்களையும் அறவே சிலநாட்களுக்கு நீக்குதல் அவசியம். அவற்றில் சிறப்பாக எலுமிச்சை, ஆரஞ்சு, புளி போன்ற இன்னபிற.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக செப்பு (தாமி

# சுவேத குஷ்டம்

வெண்படையைச் சித்த மருத்துவப் பழைய ஏடுகளில், இந்நோய் வரும் காரணம், இதன் இயல், தன்மை, வகைகள், தீரும் தீராதவை, மருத்துவம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்நோய் ஒருவரிடம் இருந்து மற்றவருக்குப் பரவும் தன்மையற்றது. பார்வைக்கு மிகவும் அருவருப்பைத் தருவதால் இதைப் பார்த்ததும் பலர் ஒதுங்குகின்றனர்.

தமிழ் மருத்துவ நூல்களில் தோல் நோய் 'குட்டம்' எனும் தலைப்பில் கூறப்பட்டுள்ளது. தற்காலத்தில் வழங்கப்படும் தொழுநோய் வரையுள்ள அனைத்துத் தோல் நோய்களையும்'18 வகைக்குட்டம்' என்று பிரித்துக் கணித்துள்ளனர் நம் முன்னோர். இதில் ஆயுர்வேதமும் இதே போன்று குறிப்பிடுகின்றது.

வெண்டை என்பதற்குச் 'சுவேதம்' என்றும், வெண்படையச்'சுவேத குட்டம்' என்றும் வழங்கினர். நம்மில் பலர் இன்னும் வெண்படையைத் தொழுநோய் என்று தவறாக எண்ணம் கொண்டுள்ளனர்.

இந்நோய் நமது இதிகாசக் காலங்களிலும் இருந்துள்ளது. 'பாண்டு' என்றால் வெண்மை. மகாபாரதத்தில் பாண்டு மன்னன் முற்றுடல் வெளுப்பு ( Albanism ) இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நமது தோல் பலவித நிறமிகளின் சேர்க்கையால் நிறம் பெற்றுள்ளது. சாதாரணமாக 'மெலோனின்' எனும் நிறமிகள் நமது தோலின் நிறத்தைக் கொடுக்கின்றன. இந்த நிறமிகள் சில காரணங்களால் ஓரிடத்தில் மையம் கொண்டு அதிக கருமை, சிவப்புப் புள்ளிகள் ஏற்பட்டு மச்சம் ஏற்படுகின்றன. இன்னும் சில காரணங்களால் நிறமிகள் குறைந்தும் மறைந்தும் வெண்திட்டுக்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு ஏற்படும் திட்டுக்கள் வெண்படைச் சுவேதக் குட்டம்தான் என்று அழைக்கப்படுகிறது.

ஐரோப்பியாவில் கண்டெடுக்கப்பட்ட மிகப் பழைமையான மருத்துவத்தைப் பற்றிய ஏட்டில் இரண்டு விதமான தோல் நோய்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் முதல்வகை உடலில் தோன்றும் தடிப்புகளும் கட்டிகளும்-இவை தீர்க்க முடியும் என்றும் இரண்டாம் வகை தோலின் நிறமாற்றம் ஏற்படல் என்றும் ''இது மருத்துவத்தால் தீர்க்க முடியும்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்துக்களின் வேத நூல்களில் ஒன்றான **அதர்வணவேதம்**இந்நோயைச்'சுவேத **குஷ்டம்' என்றும்** குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நோய் தமிழகத்தில் தென் மாநிலங்களைக் காட்டிலும் சென்னை, ஆந்திராவில் மிக அதிகமாகக் காணப்படுகிறது. உலக மக்கள் தொகையில் 1% இந்நோய் காணப்படுகிறது. ஜப்பானில் 1.64% அமெரிக்காவில் 1%ரஷ்யாவில் 0.14%இங்கிலாந்தில் 2.024%சுவிட்ஜர்லாந்தில் 0.39%எகிப்தில் 1.0%ஆனால், இந்தியாவில் 4% க்கு மேல் காணப்படுகிறது. ●

ரம்) பாத்திரங்களைப் பயன்படுத்துதல் நல்லது. குடிக்கும் தண்ணீரையும், தாமிரப்பாத்திரங்களில் வைத்துக் குடித்தல் நல்ல பலன் தரும்.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அடிக்கடி மலம் சோதித்துக் கிருமிகள் உள்ளனவா என்று கணித்து கிருமிகள் இருப்பின் அதற்கான மருத்துவத்தையும் செய்தல் நலம் பயக்கும். ஏனெனில், தோலின் நிறத்திற்கு முக்கியமாக மெலானின் நிறமிகளுக்கான சத்துக்கள் உணவுப் பாதையில்தான் கிரகிக்கப்படுகின்றன.

சித்த மருத்துவர்கள் பல நூற்றாண்டுகளாக இந்நோயைக்குணமாக்கப் பொருட்டு அதிகமாகப் பயன்படுத்திய மூலிகைகளில். 'கார்போகி அரிசி, அல்லது சப்பங்கி விதை என்று சொல்லப்படும் விதைகள் ஆகும். அதனை மேலே பூசுவதற்கும். உள்ளுக்கு சாப்பிடுவதற்கும் பயன்படுத்தி வந்தனர். சாதாரணமாக இந்த விதைகளைத் தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தலைக்குத் தடவி வருவதும் உண்டு. இதனை நல்ல மணமூட்டி பொருளாகவும் தலைமுடியைக் கருக்கச் செய்யும் தைலமாகவும் பயன்படுத்தி வருகின்றனர். அதன் தாவர இயல் பெயர் ( Psorelia Corylifolia ) இந்த விதைகளில் ஓர் நிறமற்ற எண்ணெய் உள்ளது 13.2 சதம் எண்ணெய் கிடைக்கும். இதில் இருந்து பிரித்து எடுக்கும் சத்துக்கு சோரலின் என்று பெயர். இது தற்கால நவீன மருத்துவர்களால் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

நம் முன்னோர்கள் இதில் இருந்து குழித்தைலம், சூரணம், கடார்த்தைலம் எடுத்து, இந்நோயைக் குணப்படுத்தினர்.

இம்மருந்துவத்தில் தனியாக வெளிப்பூச்சு மட்டும் பயன்படுத்துவது அல்லது உள்மருந்துகள் மட்டும் கொடுப்பதால் ஏற்படும் பலனைவிட வெளிப்பூச்சுடன், உள்மருந்து சேர்த்துக்கொடுக்கும் போது நிறமிகள் வேகமாக உற்பத்தியாவதைக் காணமுடிகிறது.


வயது முதிர்ந்தவர்களைவிட குழந்தைகளுக்கு மருத்துவம் செய்யும்போது இந்நோய் சீக்கிரம் குணம் அடைகிறது, நிறம் மாறுபடுகிறது.

இப்படைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவம் செய்து கொள்ள நல்லபொறுமை தேவைப்படுகிறது. சிலருக்கு 6 மாதத்தில் இருந்து ஓராண்டு வரைகூட மருத்துவம் தேவைப்படுவதுண்டு. ●



# எங்கே அவன்?

கவிஞர் வைரமுத்து



முதலாம் பார்வை விதையானது!
இரண்டாம் பார்வை மழையானது!
நெஞ்சம் முழுதும் நிலமானது;
காதல் முளைத்துப் பயிரானது!

விளைச்சல் இங்கே
விதைத்தவன் எங்கே?

இதயம் முழுதும் கொப்புளங்கள்!
இரண்டு கண்களில் உப்பளங்கள்!
காதலன் செய்த சத்தியங்கள்,
நோயினை வளர்க்கும் வைத்தியங்கள்!

விளைச்சல் இங்கே
விதைத்தவன் எங்கே?

மரணம் கண்டுநான் அஞ்சவில்லை;
மரணமும் என்னைக் கெஞ்சவில்லை.
தவறியும் விழிகள் துஞ்சவில்லை;
தலையணைக் குள்ளே பஞ்சு இல்லை.

விளைச்சல் இங்கே
விதைத்தவன் எங்கே?

கம்பிகள் மட்டுமா சாளரங்கள்?
கம்புகள் மட்டுமா சாமரங்கள்?
கயிறுகள் மட்டுமா தோரணங்கள்?
கனவுகள் மட்டுமா என்வரங்கள்?

விளைச்சல் இங்கே
விதைத்தவன் எங்கே?

# வராத தட்சணை

அலுவலகத்துக்குப் புறப்படும் போது-திரும்பி வருகிறவரை நினைத்து நினைத்து அழுவது போல ஏதாவது கோகிலாவைச் சொல்லியாக வேண்டும்; இல்லாவிட்டால் தலை வெடித்துப் போகும் சோமுவுக்கு. அவள் மீது அவன் அப்படி வார்த்தை வெடிகளை வீசுவதைக் காதாரக் கேட்டாக வேண்டும்; இல்லாவிட்டால் நெஞ்சு வெடித்துப் போகும் அவனுடைய தாயார் அகிலாண்டத்துக்கு!

எல்லாப் பொழுதின் துவக்கமும், அந்த வீட்டில் வலதுகாலை எடுத்து வைத்துப் படியேறிய கடந்த மூன்று மாதமாய் அப்படித்தான் அமைந்து கொண்டிருந்தது கோகிலாவுக்கு. இன்றைய பொழுதின் துவக்கம் மட்டும் அதற்கு விதிவிலக்கா?

அடிப் பிரதட்சம் செய்கிறவளைப்போல, ஆவி பறக்கும் காபியோடு அவன் அறைக்குள் நுழைந்தாள் கோகிலா. பார்வையில், தேவையில்லாத மிரட்சி தேங்கியிருந்தது. நெஞ்சு 'டப் டப்'பென்று மேலேயே அடித்துக் கொண்டது. ''கா....பிங்க!''

ஜன்னலுக்கு வெளியே பயணம் போய்க்கொண்டிருந்த பார்வையை இழுத்து வேகமாக அவள் பக்கம் திருப்பினான் சோமு. ''என்னங்க? காபிங்களா? வைங்க!.. காதுல விழலே? வைங்க இப்படி!'' காலருகே கிடந்த ஸ்டூலை ஃபுட்பால் ஆடினான் அவன். அந்த நாலுகால் மரம், அவளுடைய இரண்டு காலில் போய் மோதி நின்றது. 'டொக்!'

வலித்திருக்கலாம். முகச்சுளிப்போடு தன் வேதனையை அடக்கிக்கொண்டாள் கோகிலா. லேசாகத் தளும்பி கையை நனைத்த காபியைக்கூட துடைத்துக் கொள்ளாமல், முந்தானையால் டம்ளரின் உடம்பைமட்டும் கவனமாகத் துவட்டி விட்டு அந்த ஸ்டூலை நிமிர்த்தி அதன் மேல் வைத்தாள் அவள். 'குபுகுபு'வென்று வியர்க்க ஆரம்பித்தது.

''ஏன் சனியனே, ஒன்பதே முக்காலுக்கு நான் ஆபீசுக்குப் பொறப்படுவேன்னு ஒனக்குத் தெரியுமில்லே? பேன்ட்-ஷர்ட்டெல்லாம் ஏன் எடுத்து வெக்கலே? என்னகேடு காலம் ஒனக்கு? ஒரு நாளைப் பார்த்தாப்ல டெய்லி எனக்கு என்னவெல்லாம் செய்யணும்னு ஒனக்கு ட்யூஷனா வெக்கணும்?..'' வெடுக்கென்று எழுந்தான் சோமு.

''இல்லிங்க...இன்னிக்கி விரதம்கிறதால...வீடு வாசல்லாம் கழுவ வேண்டியிருந்திச்சி! அப்புறம்... அத்தையோட துணிமணிங்களையெல்லாம் தொவச்சி உலர்த்திட்டு...'' மிடறு விழுங்கினாள் கோகிலா. பயம் நெஞ்சை அடைத்தது.

''சாக்குப் போக்குக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே! ஒவ்வொருத்தி,புருஷனுக்குச் சட்டையும் மாட்டி பட்டனும் போட்டு விட்டு அழகு பார்த்து அனுப்பறுளுங்க. ச்சேச்சே! எனக்குன்னு வந்து சேர்ந்தியே!''சோமு தலையிலடித்துக் கொண்டான்.

அவளுக்கு வலித்தது அந்த அடி. ''நீங்க.. காபி சாப்பிடுங்க. இதோ ஒரு நிமிஷத்துல...'' காட்ரெஜ் பீரோவைத் திறக்கப் போனாள் கோகிலா.





''போ..தும் போடி! இங்கிதம் தெரியாத ஒண்ணெ கட்டிகிட்டதுக்கு இதுவும் வேணும்..எனக்கு இன்னமும் வேணும். மொ,தல்ல போ இங்கேருந்து. ஒம் மொகத்துல முழிச்சிட்டு ஆபீசுக்குப் போனாலே எனக்கு வேலை ஆவாது!'' காபியை எடுத்து ஒரே வாயாக ஊற்றிக் கொண்ட சோமு, கோகிலாவின் முகத்தில் இடிக்காத குறையாகக் காலி டம்ளரை நீட்டினான். பார்வையில் நெருப்பு.

வாங்கிக்கொண்டு, குனிந்த தலை நிமிர்த்தவும் தெம்பில்லாதவளாக அவள் திரும்பினாள். மறுபடியும் அடிப்பிரதட்சம். உடம்பே கனப்பது போலிருந்தது. பதறியது.

''என்கிட்ட சொன்னா, டிரஸ்சுங்களெ நான் எடுத்து வெச்சிட மாட்டேனாடா கண்ணு!'' என்றவாறே முகம் நிறைந்த புன்னகையோடு எதிர்ப்பட்டாள் அகிலாண்டம்-சோமுவின் தாய்!

பிறந்த தேதி, கிழமை, திதி, யோகம், கரணம், லக்னம், ராசி, நட்சத்திரம், நாழிகை, வேளை, வருஷம், திசாபுத்தி என்றெல்லாம் ஆரம்பித்து...கோகிலாவுக்கும் சோமுவுக்கும் சகலபொருத்தங்களும் கைகோத்துக்கொண்டிருப்பதாக ஜோஸியர் சொல்லிவிட்ட பிறகுதான் நடந்தது திருமணம்.

அப்படியிருந்தும் - அவள் எலியாகப் பதுங்கவும், அவன் பூனையாகச் சீறவும் ஒரே ஒரு காரணம் தான் இருந்தது.

## உங்களுக்குத் தெரியுமா?

ஐம்பெருங் காப்பியங்கள் என்னென்ன என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஐஞ்சிறு காப்பியங்களைத்தெரியுமோ?

இவையேஅவை:

சூளாமணி
நீலகேசி
உதயணகுமாரகாவியம்
யசோதரகாவியம்
நாககுமார காவியம்

கோகிலா வீட்டில்—அவளுக்குப் பத்துப் பவுன் நகை போடுவது; பத்தாயிரம் ரூபாய் பணம் தருவது-அல்லது ஒரு ஸ்கூட்டர்; கல்யாணச் செலவை ஏற்பது என்று பேச்சு.

ஏதோ தைரியத்தில், எல்லாவற்றுக்கும் ''சரி'' சொல்லிவிட்டார் கோகிலாவின் தந்தை. ஏற்கெனவே ஐந்தாறு வரன் வந்து, ஏதேதோ பொருத்தமில்லாமல் போய், எல்லாப் பொருத்தத்தோடும் இப்படியொரு வரன் வாய்க்கிறதென்றால்...!

மாட்டை விற்று, வீட்டை விற்று...பத்துப்பவுன் நகைபோடவும், கல்யாணச் செலவுக்கும், துணிமணிகளுக்கும்தான் அவரால் பணம் பண்ண முடிந்தது. ஸ்கூட்டர், அல்லது பத்தாயிரம்? யாரிடமெல்லாமோ பல்லைக் காட்டினார்; அவர்கள் பதிலுக்குக் காட்டி விட்டார்கள்.

'ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை நடத்த வேண்டும்' என்கிற வார்த்தை ஜாலம் நினைவு வந்தது. ''கல்யாணத்தன்னிக்குத் தந்துருவேன்'' என்றார்.

கல்யாணம் வந்தது.

''சாந்தியன்னிக்குத் தந்துடறேன்'' என்றார்.

அதுவும் வந்தது. கோகிலாவின் தந்தையைத் தேடிப்பிடிக்க வேண்டியதாயிற்று. திருதிருவென்று விழிக்கத்தான் அவரால் முடிந்தது!

எந்தச் சிறப்பும் இல்லாமலே அவள் அவன் மனைவியாக மட்டுமே விடிந்தாள். ''ஆறு மாதம் டைம். கேட்டது வரலேன்னா...ஒங்க பொண்ணு... மடிப்புக் கலையாமெ ஒங்கவீட்டுக்கே வந்துருவா!'' என்ற மிரட்டலோடு அனுப்பி வைக்கப் பட்டார் அவர். அந்த வீட்டில் கோகிலா எல்லாவற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டாள்.

அவளுடைய தவிப்புக்கு இது மூன்றாவது மாதம்!

உலகப்பட விழாவில் பிரெஞ்சு மொழியில் வந்த படம்—இப்பொழுது ஆங்கிலத்தில் மொழி மாற்றமாகி, 'ஜில்'லென்று மறு விஜயம் செய்து இப்போது அந்த ஆபீஸில்விமர்சனமாகிக்கொண்டிருந்தது. ஆளுக்கொரு சீனைப் பற்றி அந்தரங்கமாகப் பேசினார்கள். பெரிதாகச் சிரித்தார்கள். சில பெண் சிப்பந்திகள் முறைத்தார்கள்.

யாரும் அந்தப் படத்தின் கதையை முழுசாகப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை!

வேலையின்மீது சோமுவுக்கு இருந்த கவனம், அந்த வெட்கங்கெட்ட விமர்சனத்தால் அவ்வப்போது அறுந்தது. பேனாவை மூடிவைத்து விட்டு நிமிர்ந்தான்.

அவன் பார்வையை சுமித்ரா அடைத்தாள். கொஞ்சநாளாகவே அவன் நினைவையும் அடைக்கத் துடித்துக் கொண்டிருப்பவள் அவள்!

''என்ன சார், நீங்க அந்தப் படம் பார்த்தாச்சா?'' அவன் பேனாவை எடுத்துத் திறந்து திறந்து மூடினாள் அவள்.

சோமுவின் பார்வை அவளது கைக் கடிகாரத்தில் இறங்கியது.

வெளுத்துப்போன டயலோடு அவள் கட்டியிருந்த ஒரு கடிகாரத்தைப் பார்த்துச் சிரித்து, ''வேற வாங்கிக்கப்படாதா?''



பி.எல்.ராஜேந்திரன்

என்று அவன் ஒருமுறை அவளைக் கேட்க—''ஒய் கான்ட் யூ பிரஸெண்ட் மி?'' என்று அவள் திருப்பிக் கேட்டு, அவனையே வாங்கி வரப்பண்ணி, ஒரு நட்சத்திர ஹோட்டலில் ஏ. ஸி. டைனிங் ஹாலில் விருந்தோடு கட்டிக்கொண்ட கடிகாரம் அது! ஃபாரின்! இது மட்டுமா..?

''என்ன சோமு சார், 'ஊரே பேசும் அந்தப் படத்தை நீங்க பார்த்தாச்சான்னேன்?'' அவன் கவனத்தை எழுப்பினாள் சுமித்ரா.

''ஊம்? உம், உம். பார்க்கலே!'' சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு தலையைக் கவிழ்த்தபடி சோமு கேட்டான் ''நாளைக்குப் பார்க்கலாமா?''

''ரிசர்வ் பண்ணுங்க. அரைநாள் லீவு போடுங்க!'' ஒரு மாதிரியாகச் சிரித்துவிட்டுத் தனது நாற்காலிக்கு மின்னினாள் சுமித்ரா.

'இதல்லவா இங்கிதம்!' சோமுவின் நினைப்பிலும் கோகிலா சபிக்கப்பட்டாள். 'சனியன்! இந்தச் சிரிப்பைக்கூட கத்துக் கலியே!'

ஆபத்பாந்தவனாக அங்கே அவதரித்தான் ஆபீஸ் பையன் பிச்சாண்டி.

இன்னும் இருபது நாட்களுக்கு அந்தப் படத்திற்கு ரிசர்வேஷன் முடிந்து விட்டதாம். இரண்டு ரூபாய் டிக்கெட்—பத்துப் பதினைந்து, ரூபாய் வரை, பிளாக்கில் போகிறதாம். அவன் சொன்னான்.

அவனிடமே ஒரு இருபது ரூபாய் நோட்டைத் தந்தான் சோமு. ''எப்பிடியாச்சும்ரெண்டு டிக்கட் எடுத்து வெச்சிரு. நாளை காலேல பத்தரைக்கெல்லாம் தியேட்டருக்கு வந்துர்றேன்!'' கடைசி ரோ, கடைசி சீட் முடியுதா பார்!

இரண்டு மணிநேரம் தன்னோடு தியேட்டரில் இருக்க ஆசைப்படுகிற சுமித்ராவே வாழ்க்கை முழுதும் நம்மோடு இருக்க நேர்ந்தால்......?

சோமுவின் கனவில் கோகிலா ஒதுக்கப்பட்டாள். சுமித்ரா, உடம்பெல்லாம் பவுனாகப் படுக்கை ஏறினாள். ஜொலித்தாள், இருபத்தைந்து பைசா மோருக்குக்கூட நூறு ரூபாய் நோட்டுக்குச் சில்லரை கேட்கப்படுகிறது மோர்க்காரியிடம்... அந்தத் தெருவே பொறாமையோடு அவர்கள் வீட்டைப் பார்க்கிறது..ஒரு லட்சம்வரதட்சிணை..ஒரு கார்.. நூறு பவுன் நகைகள்...ஆபட்ஸ்பரியில் திருமணம்....தாஜ்கொரமாண்டலில் வரவேற்பு....

இரவெல்லாம் தூக்கமில்லாமல் நெளிந்து, எழுந்தபோது புது மனிதனாக எழுந்தான் சோமு. 'கோகிலாவை மனைவி அந்தஸ்திலிருந்து இறக்கி, அந்த அந்தஸ்தை சுமித்ராவுக்குத் தந்து விடுவது. இன்று படம் பார்க்கிற போதே இதற்கு உடன்படும் அளவுக்கு அவளைக் கரைத்து விடுவது!'

ஒன்பதுக்கே அலுவலகத்திற்குப் புறப்பட்டான் சோமு. பேண்ட், ஷர்ட், சீப்பு, கண்ணாடி எண்ணெய், பவுடர், டிஃபன் எல்லாம் அவன் கேட்காமலே தயாராக எடுத்து வைக்கப்பட்டிருந்தன. இருந்தாலும்?

''இன்னிக்கி... ஒங்களுக்குப் பிறந்த நாளாம். அத்தை சொன்னாங்க. சாய்ங்காலம் சீக்கிரம் வந்துருங்க. நாம எல்லாருமா.... கோயிலுக்குப் போயிட்டு வரலாம்!'' பயந்து பயந்து இதைச் சொன்னாள் கோகிலா.

''நீ கெட்ட கேட்டுக்கு அது ஒண்ணுதான் குறைச்சல்........'' என்று தொடங்கி வழக்கம்போல் அவளை அர்ச்சித்துவிட்டு மாடிப் படிகளில் வழுக்கி, வீட்டைவிட்டு வெளியே பாய்ந்தான் சோமு.

அந்தத் தியேட்டரின் முதல் கேட்டிலேயே பிச்சாண்டியின் சுருள்முடித் தலை தெரிந்தது. அவனைச் சுற்றி ஒரு கூட்டம்.

''அட, ரெண்டுதாம்பா இருந்தது. தீர்ந்து போச்சு!'' என்று கத்தியபடி, அந்தக் கூட்டத்தை விட்டுப் பிய்த்துக் கொண்டு வெளிப்பட்ட அவன் எதிரே போய் நின்றான் சோமு.

வியர்வை ஒழுகிய பிச்சாண்டியின் முகம் விகாரமாகியது. ''ஒரு டிக்கிட்டு இருவத்தி அஞ்சுருவான்னு கேட்டானுங்க. அதான் சார்...! பொறுங்க சார். இன்னம் டைம் இருக்கே! இதோ வாங்கியார்றேன்!'' கியூவுக்கு ஓடினான் அவன்.

அப்சரஸாக ஆட்டோவில் வந்து சோமுவின் முன்னால் இறங்கினாள் சுமித்ரா. 'ஏன் சார், என்னமோ மாதிரி இருக்கிங்க?''

''ஒண்ணுமில்லே; கொஞ்சம் பொறு!'' கியூவைப் பார்த்தபடி நகத்தைக் கடித்தான் சோமு. நகக்கண்ணில் இரத்தக் கசிவு.

''இன்னம் டிக்கட்டே வாங்கலியா? மை காட்! நேத்தே அந்த ரகு, 'விசா' பார்க்கலாம்னான்.

# தவறு எங்கே?

அந்தப் பெண்மணி கடைக்காரருக்குப் போன் பண்ணினாள்:

''என் மகனை இரண்டு பவுண்டு வெண்ணெய் வாங்கி வரும்படி அங்கு அனுப்பியிருக்கிறேன். வழக்கம்போல் ஒன்றரைப் பவுண்டு எடைபோட்டு அனுப்பி ஏமாற்றி விடாமல் இரண்டு பவுண்டு சரியாக எடைபோட்டுக் கொடுத்தனுப்புங்கள்!''



சற்றே கோபத்தோடு கடைக்காரர் சொன்னார்:

''நாங்கள் எடைபோடுவதில் எந்தத் தவறும் கிடையாதம்மா. இனி உங்கள் பிள்ளையை வெண்ணெய் வாங்க இங்கு அனுப்பும்போது மட்டும், தயவு செய்து வீட்டில் அவனை எடை போட்டுக் கொண்டு அனுப்புங்கள். வாங்கிக் கொண்டு வீடு திரும்பியதும் ஒரு தடவை எடைபோடுங்கள்! தவறு எங்கே என்பது புரியும்!''




# மாடி ரயில்

சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையே புதிதாக ''மாடிரெயில்'' விடப்பட்டுள்ளது. ரெயில்வே இணை அமைச்சர் திரு. ஜாபர்செரீப் 'பச்சைக்கொடி காட்டித் துவக்கிவைத்தார்.

இதனையொட்டி சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் 26.4.80 அன்று காலை நடைபெற்ற விழாவுக்கு தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு. ஐ.ஜே.நாயுடு தலைமை வகித்து உரையாற்றினார். தென் மண்டல ரயில்வே துறையின் பொது மேலாளர் திரு டி.எம். தாமஸ் வரவேற்றார்.

மத்திய இணை அமைச்சர் திரு. ஜாபர்செரீப் பேசுகையில், 'ரயிலில் பயணம் செய்கிற மக்களின் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது. ரயில் பயணம் செய்யும் மக்களுக்குத் தேவையான வசதிகளையும் வாய்ப்புக்களையும் செய்து கொடுப்பது ரயில்வே துறையின் பொறுப்பாகும். பொது மக்களும் பத்திரிகைகளும் ரயில்வே துறையின் வளர்ச்சிக்காக நல்ல யோசனைகளை வழங்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

தென்மண்டல ரயில்வே துறையின் மேலாளர் எம். என்.பிரசாத் நன்றி கூறினார்.

இந்தியாவில் பம்பாய்-புனாவுக்கும், பம்பாய் - சூரத்திற்கும் இடையே மட்டும் இந்திய ரயில்வே மாடி ரயிலை விட்டிருக்கிறது. தென் மாநிலத்தில் முதல் முறையாக ,சென்னை-பெங்களூருக்கு இடையே இப்போது விடப்பட்டுள்ளது. சென்னைக்கும் பெங்களூருக்கும் புதிதாக விடப்பட்டிருக்கும் பிருந்தாவனம் விரைவு (மாடிரயில்) ரயிலில் புதிதாக் 5 இணைப்புப்பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.

முன்பு இருந்த ரயில் பெட்டிகள் ஒவ்வொன்றிலும் 110 பயணிகள்தான் உட்கார்ந்து செல்ல இயலும். ஆனால் இப்போது விடப்பட்டுள்ள மாடி ரயில்பெட்டி ஒவ்வொன்றிலும் 148 பயணிகள் உட்கார்ந்து செல்ல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மொத்தத்தில் பயணிகளுக்கு இந்த ரயில் பெரும் பேறாகத் திகழ்கிறது.

போயும் போயும் ஒங்களை நம்பினேனே! ச்சே!'' பக்கத்தில் நின்றவர்களெல்லாம் பார்க்கிறபடி சலித்துக் கொண்டாள் சுமித்ரா.

'என்னது, ரகு' கூப்பிட்டானா? தவித்துப் போனான் சோமு. எல்லோருக்கும் முன்னால் அவளைப் போல் பேச அவனுக்கு நா எழவில்லை.

கடிகாரத்தைப் பார்த்தாள் சுமித்ரா. கைக்குட்டையால் நெற்றியை ஒற்றிக் கொண்டாள். மறுபடியும்போய் ஆட்டோவில் ஏறிக்கொண்டு அவனை அருவெறுப்போடு பார்த்தாள். சிரித்தபடி புறப்பட்டது ஆட்டோ.

'இந்த ஒரு சாதாரண விஷயத்தைக் கூட பொறுக்காத இவளையா நாம் வாழ்க்கை முழுவதும்..ச்சே!' தன் நெஞ்சில் தானே உதைத்துக் கொண்டான் சோமு. 'எவ்வளவு கேவலப்படுத்தினாலும் நம்மேல் பரிவு காட்டும் அவள் ஆவாளா இவள். அவளுக்கு ஒரு மூக்குத்திகூடப் பண்ணிப் போடலே; இவளுக்கு எவ்வளவு பண்ணீருப்போம்!...இருந்தும்...! கோகிலா எங்கே இவள் எங்கே!'

நிமிஷத்துக்கு நிமிஷம் கோகிலா அவனுள் விசுவரூபம் எடுத்துக் கொண்டிருந்தாள். வரவேற்புக் கரம்நீட்டி வசீகரச் சிரிப்பைச் சிந்தினாள்.

பிச்சாண்டி, அழமாட்டாக் குறையாக சோமுவின் முன்னால் வந்து நின்றான். ''கெடைக்கலேங்க சார்!'' கைநிறையப் பணத்தைக் காட்டினான்.

''வெரிகுட். தேங்க்யூடா பிச்சே!'' அதில் இரண்டு பத்து ரூபாய்த் தாள்களை மட்டும் எடுத்துக் கொண்டு ஆட்டோவோ, டாக்சியோ வெறும் உடம்போடு வருகிறதா என்று தேடினான் சோமு. 'வரதட்சிணையாவது மண்ணாவது. வரதட்சிணை வராத தட்சிணையாவே இருக்கட்டும். மணி கேன்யோர்ன்! கோகிலாவாட்டம் ஒரு மனைவி கிடைப்பாளா! அம்மா கெடக்கா! இன்னைய பகலை வீட்லயே கழிக்கிறது.....சாய்ங்காலம் அவளோட கோயிலுக்குப் போறது...

விருட்டென்று திரும்பி ஓட்டமாய் ஓடிய சோமுவை அதிசயமாகப் பார்த்துக் கொண்டு விறைத்துப் போய் நின்றான் பிச்சாண்டி.

எதிரே, பாரகன் தியேட்டர் வாசலில் நின்றிருந்த சுமித்ரா நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். தன் சினேகிதி கோகிலாவுக்காகத் தான் நடத்திய நாடகத்தின் முதல் காட்சியிலேயே வெற்றிக் கண்டு விட்டபெருமிதம், அவள் சும்பிரத்தில் தென்பட்டது! 'பிச்சாண்டிக்கு ஏதாவது தந்தாக வேண்டுமே!' கைப்பையைத் துழாவினாள் சுமித்ரா!

# மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



## ...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லே, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேளை தவருத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி. இதர டிட்டர்ஜெண்ட் வில்லே, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை. காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.

நீங்களே கண்டுகொள்வீர்கள்

இதை வெளுத்தது வேறுவித டிட்டர்ஜெண்ட் பார்



இதை வெளுத்தது ஸூப்பர் ரின்




அதிக வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-RIN.35-2317 TM




# வீட்டுத் தோட்டத்தில் தென்னை!

அன்றாட வாழ்விற்குத் தேங்காய் மிகத் தேவையான ஒரு உணவுப்பொருளாக ஆகிவிட்டது. நன்கு பராமரிக்கப்பட்ட தென்னை மூன்று தலைமுறைகளுக்குப் பலன் தரக் கூடியது. ஆண்டொன்றுக்கு அதிக பட்சம் 100 தேங்காய்கள் வரை சுலபமாகத் தரவல்லது.

அதிக இலைகளுடன், பருமனான அடிப்பாகம் உள்ள தென்னங்கன்றுகளையே தேர்ந்தெடுங்கள். வேளாண்மைத் துறை கிடங்குகளில் குறைந்த விலையில், தரமான தென்னங்கன்றுகளைப் பெறலாம்.

வீட்டுத்தோட்டத்தில் 'இருபது அடி' இடைவெளியில், காம்பவுண்டு சுவருக்கு 5 அடி தள்ளி கன்றுகளை நடலாம்.

உங்கள் தோட்டத்தில் கன்றுகளை நடும் முன்பு, மூன்றுமாதங்களுக்கு முன்பே 3'X3'X3' அளவுள்ள குழிகள் வெட்டி ஆறப்போட வேண்டும்.

குழிகளில், ஒரு அடி உயரம் வரை அடி மட்டத்தில் தோண்டப்பட்ட மண்ணோடு 2 கூடை சாம்பல் கலந்து போடலாம். கடினமான செம்புறை நிலங்களில் கன்றுகள் நடுமுன் சாப்பாட்டு உப்பை இடுவதால் மண் இளக்கமடைந்து வேர்கள் எளிதில் பரவும். மற்ற மண்களுக்கு இது அவசியமில்லை. கன்று நடும் குழியின் நடுவில் பி. எச். சி. 10 சதத்தூள் ¼ கிலோ தூவி விடுங்கள்.

குழியில் இரண்டு அடி ஆழத்தில், நெற்று மேல்பாகம் சற்றுத் தெரியும்படி நட்டு, சுற்றிலும் மண்ணை நன்கு மிதித்துவிடுங்கள். கோடைக் காலத்தில் வெயில் அதிகம் தாக்காமலிருக்க சுற்றிலும் பனை ஓலைகளை வைத்து மறைக்கலாம்.

ஓராண்டு வரை ஒருநாள்விட்டு ஒருநாள் நீர் பாய்ச்சுங்கள். பிறகு மூன்று ஆண்டுகள் வரை வாரம் இரு முறையும், காய்ப்பின்போது வாரம் ஒரு முறையும் நீர் பாய்ச்சுங்கள்.

மரத்தின் அடிப்பாகத்தில் 3 அடி முதல் 5 அடி சுற்றளவுக்கு, ஒரு அடி ஆழக்குழி வெட்டி உரமிடுங்கள்.

(அ) இளங்கன்றுக்கு நட்ட முதலாண்டு உரமிடத் தேவையில்லை.

(ஆ) நட்ட இரண்டாம் ஆண்டு மரம் ஒன்றுக்கு 0.750 கிராம் யூரியா, 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ், 25 கிலோ தழைகள் ஆகியவற்றை இடவும்.

(இ) மூன்று ஆண்டுகளுக்கு மேல் 1,250 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் பாஸ்பேட், 2 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றைக் கலந்து இடவும். இத்துடன் 50 கிலோ தழை இடவும்.

கரையான் காணப்பட்டால் பி. எச். சி. 10 சதம் தூவி ஒழியுங்கள், கருவண்டுகள் காணப்பட்டால், குத்தூசி மூலம் குத்தி வெளியிலெடுத்து, அத் துவாரத்தில் பி. எச். சி. 10 சதம் தூளை மணலுடன் சரியளவு கலந்து நிரப்புங்கள். சிவப்புக் கூன் வண்டுகள் தாக்கினால், தாக்கப்பட்ட துவாரங்களை அடைத்து விட்டு தாக்கிய பகுதிக்குச் சற்று மேலே துவாரம் செய்து பைரக்கோன் அல்லது செவின் மருந்தை தண்ணீரில் கரைத்து ஊற்றி துவாரங்களை மூடவும். அல்லது துவாரங்களில் செல்பாஸ் மாத்திரையிட்டு மூடவும். இலைகளைச் சேதப்படுத்தும் கருந்தலைப் புழுவை டி. டி. டீ. 0.2 சத மருந்தடித்தோ, ஒட்டுண்ணிகளை வெளியிட்டோ ஒழியுங்கள்.


குருத்து, இலை அழுகல் நோயால் பாதிக்கக்கூடும். அழுகிய பகுதிகளை வெட்டி எரிந்துவிட்டு பைடலான் மருந்து தெளியுங்கள்.

பாளை வெடித்த ஆறு மாதங்களில் தாகம் தீர்க்கும் சுவையான இளநீர்க் காய்கள் பறிக்கலாம். 9-10 மாதங்களில் முற்றிய நல்ல தேங்காய்கள் பறிக்கலாம்.

ஆண்டுதோறும் ஆறு தடவைகளில் ஏறத்தாழ 100 தேங்காய்கள் வரை ஒரு மரத்தில் பறிக்க இயலும்.

எளிமையான இந்த முறைகளைச் சற்று கவனமுடன் கையாண்டால் தென்னை பலன் தரும் கற்பகத் தருவாக அமையும். ●

# இந்தியச் சுற்றுலா!



1980-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 71,775. கடந்த ஆண்டு இதே காலத்தில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 64,574தான். இது 11.2 சதவிகித உயர்வைக் காட்டுகிறது. இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைவிட இது 2300 அதிகமாகும்.

இவ்வாண்டு ஜனவரி முதல் மார்ச் வரை வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2,12,456 ஆகும். கடந்த ஆண்டு இதே காலத்தில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,97,040 ஆகும். இது 7.7 சதவிகித உயர்வைக் காட்டுகிறது.

85332

தமிழ் வளர்த்த பெரியார்கள்:

# பேராசிரியர் சுந்தரம் பிள்ளை



"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழி
லொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிடநல்
திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும்
இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும்
தமிழணங்கே! உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே!"

—அரசு விழாக்களிலே எல்லாம் இந்த தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படுவதனைக் காண்கிறோம். 'இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்பது போல அதனைக் கேட்டின்புறுகிறோம்.

பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை அவர்களின் எழுத்தோவியமான 'மனோன்மணீயத்திலே' கண்டெடுத்த முத்து இது.

தமிழ் வளர்த்த பெரியார்களில், குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பெருமை உடையவரான பெ. சுந்தரம்பிள்ளை அவர்களின் 125-ஆவது நாள் விழா 4.5.1980-ல் நாடெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது இன்று. இந்நாளில் அவரை நினைவு கூர்வது ஒவ்வொரு தமிழ் மகனின் கடமையுமாகும். முறுவல் முகமும், முண்டாசுத் தலையும், கறுப்புக் கோட்டணிந்த கம்பீர உடம்புமாய் நம்மில் பலர் அவரைப் படத்திலே பார்த்திருக்கிறோம். அவரது பாட்டு வளத்தைப் பாடத்திலே படித்திருக்கிறோம். ஆனால் அத் தமிழ்ப்பெரியாரின் வாழ்க்கை வரலாறு?.........

இதோ அது—

19-ஆம் நூற்றாண்டிலே உருவாக்கப்பட்ட உயர்தமிழ்க் கவிதை நாடக நூல்களிலே தலைசிறந்தது எனச் சிறப்புற்ற நூலாகும் மனோன்மணீயம்.

பாண்டிய மன்னன் சீவகனின் மகளான மனோன்மணியின் கதையை முதலும் முடிவுமாகக் கொண்ட இந் நூலிது. ஆங்கிலப் புலமை மிக்கவரான லிட்டன் பிரபு எழுதிய 'இரகசிய வழி'யின் (The Secret way) தழுவல் ஆகும் எனக் கூறப்பட்டாலும் - இனிய தமிழ் மணங்கமழ இந்த நூலைப் படைத்த பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை அவர்கள், பிறப்பினாலே கேரளத்திலுள்ள ஆலப்புழையினைச் சேர்ந்தவராவார்.

பல களங்களைத் தன்னுள் அடக்கிய ஐந்துஅங்கங்கள் உடைய மனோன்மணியத்தை 4,502 அடிகளாலே அடிக்கரும்பென நமக்களித்திட்ட இவர், கி.பி. 1865-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4ஆம் நாளன்று, பெருமாள் பிள்ளை என்பாரின் மகனாகப் பிறந்து மாண்புற்றவர்.

தமிழிலே மட்டுமின்றி, ஆங்கிலத்திலும் அருந்திறன் கொண்டிருந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள், தத்துவத் துறையிலே எம்.ஏ. பட்டம் பெற்றவர். திருவனந்தபுரம் அரசினர் கல்லூரியில் பேராசிரியராகப் பணி புரிந்து நனிசிறந்தவர்.

'மனோன்மணீயம்' தவிர, வேறு சில ஆராய்ச்சி நூல்களையும் இயற்றிப் பெருமை கொண்ட இவர் 1897ல் மறைந்தார்.

இன்று அவர் நம்மிடையே இல்லாவிட்டாலும் அவர்தம் ஆற்றலைப் புலப்படுத்திடும் அன்னாரின் எழுத்தோவியங்கள், தமிழுள்ள வரை தலைதூக்கி நின்று புகழ் கூறுமன்றோ!

—இல. இராசேந்திரன்.

## சுந்தரப் பெருங்கவிஞன்!

பழநிபாரதி

ஆலப் புழையில் அவதரித்த
அறிஞன் நற்றமிழ்ச் சுந்தரனார்!
சீலம் நிறைந்த செந்தமிழன்
செந்தமிழ் வளர்த்த தமிழாசான்!

சிந்தை இனித்திடும் சிவகாமி
சரிதம் சொன்ன பேராசான்!
செந்தமிழ் மொழியில் மேனாட்டுச்
செல்வம் கொணர்ந்த சீராளன்!

நித்தம் இந்நாள் நாம்பாடும்
'நீராரும்' எனும் தமிழ் வாழ்த்தை
இத்தமிழ் நாட்டுக் கீந்தவனாம்
எங்கள் சுந்தரப் பெருங்கவிஞன்!

மனோன் மணீய நாடகத்தை
மகிழ்ந்து போற்றத் தந்தவனாம்
தினமும் அந்தத் தமிழறிஞன்
சீர்த்தியின் போற்றிப் புகழ்ந்திடுவோமே!

ஆசிரியரும் வெளியிடுபவரும : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.